# தமிழகத்தில்
# மனித உரிமைகள்-2010



மக்கள் கண்காணிப்பகம்

# தமிழகத்தில் மனித உரிமைகள்–2010

வெளியீடு

மக்கள் கண்காணிப்பகம்

*6, வல்லபாய் சாலை, சொக்கிகுளம், மதுரை--625 002*

| | |
|---|---|
| நூல் | : **தமிழகத்தில் மனித உரிமைகள் 2010** |
| முதல் பதிப்பு | : செப்டம்பர் 2011 |
| வெளியீடு | : மக்கள் கண்காணிப்பகம், |
| | 6 வல்லபாய் சாலை, |
| | சொக்கிகுளம், மதுரை-625002 |
| தொலைபேசி | : 0452-2539520 |
| தொலைநகலி | : 0452-2531874 |
| மின்னஞ்சல் | : info@pwtn.org |
| அச்சுக்கோர்ப்பு | : முரளி, ஜனார்த்தனன் |
| அட்டை வடிவமைப்பு | : ஜெயராமன் |
| ஆலோசனை | : சி.சே. இராசன், கா. கணேசன் |
| தொகுப்பு | : மீனாட்சி |
| நூல் வடிவம் | : சி. பன்னீர் செல்வம் |
| அச்சகம் | : ஆண்டோ ஆர்ட் கிராப்ட், சிவகாசி |
| நன்கொடை | : ரூ. 150/- |

இந்நூலில் காணப்பெறும் நிகழ்வுகள் அனைத்தும் மக்கள் கண்காணிப்பகத்தின் கள ஆய்வில் கண்ட வழக்குகளே. இவை 2010ஆம் ஆண்டில் தமிழகத்தில் நடந்த மனித உரிமை மீறல்களின் மொத்தத் தொகுப்பல்ல.

# பதிப்புரை

தமிழகத்தில் நடைபெறும் மனித உரிமை மீறல்களைக் கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து கண்காணித்து வரும் மக்கள் கண்காணிப்பகம். இம்மீறல்களுக்கு அரசு பொறுப்பேற்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது; சட்ட ரீதியாகத் தலையீடு செய்வதில் மிகுந்த நம்பிக்கையுடைய மக்கள் கண்காணிப்பகம் மனித உரிமைப் பாதுகாப்பிற்கென்று சட்டபூர்வமாக நிறுவப்பட்டுள்ள மாநில மற்றும் தேசிய மனித உரிமை ஆணையங்களையும் அணுகி நடந்தேறிய மீறல் களுக்குத் தீர்வு காணவும் முயல்கிறது. இவ்வறிக்கையில் தரப்பட்டுள்ள மீறல் வழக்குகளும் தேசிய மற்றும் மாநில மனித உரிமை ஆணையங்களுக்கு ஏற்கெனவே புகார்களாக அனுப்பப்பட்டவை மட்டுமின்றி, கள ஆய்வு செய்யப்பட்ட ஒவ்வொரு வழக்கும் உரிய மாவட்ட ஆட்சியருக்கும் மாவட்ட காவல்துறைத் தலைவர்க்கும் அனுப்பப்பட்டவை.

இவ்வறிக்கையில் தரப்பட்டிருக்கும் வழக்குகள் அனைத்துமே மக்கள் கண்காணிப்பக மண்டல மனித உரிமைக் கண்காணிப் பாளர்களின் நேரடி கள ஆய்வின் முடிவில் தயாரிக்கப்பட்டவை.

மீறல்கள் எனும் வன்முறைகளால் பாதிக்கப்பட்டோர், மீறலை நிகழ்த்தியோராகக் கருதப்பட்டோர், சாட்சியங்கள், அரசு தரப்பினர் ஆகியோரிடம் முழுமையான விசாரணை நடத்திய பின்னரே முடிவுக்கு கொண்டு வரப்பட்ட வழக்குகள் இவை. மீண்டும் மீண்டும் பல்வேறு முறை யில் விசாரணை செய்த பின்னர், ஒருங்கிணைப்பாளர்களால் சரிபார்க்கப் பட்டுத் தொகுக்கப்பட்டவை.

இவ்வறிக்கையில் தரப்பட்டிருக்கும் மீறல் நிகழ்வுகள் அனைத்தும் மக்கள் கண்காணிப்பகத்தின் கண்காணிப்புத் துறையின் மண்டல ஒருங்கிணைப் பாளர்களால், நேரடியாகவும், ஊடக வழியாகவும், சேகரிக்கப்பட்டவை.

அ) காவல் சித்திரவதை, ஆ) தலித்துகள் மீதான வன்முறை, இ) பெண்கள் மீதான வன்முறை, ஈ) வகுப்பறை வன்முறைகள், உ) பலவகை மீறல்கள் எனும் ஐந்து பெருந்தலைப்புகளில் இவ்வறிக்கை தொகுக்கப் பட்டுள்ளது. மேற்கண்ட தலைப்புகளில் நடைபெற்றதாகத் தொகுக்கப்பட்ட வன்முறைகள் மட்டுமே தமிழகத்தில் நடந்துள்ளதாக மக்கள் கண்காணிப்பகம் கருதவில்லை. இன்னும் நிறையவே நிகழ்ந்துள்ளன.

இம்மீறல்கள் பற்றி அறிய விரும்புவோர், மக்கள் கண்காணிப்பக வலைத்தளமான www.peopleswatch.org-யைப் பார்த்து அறிய முடியும்.

இத்தொகுப்புக்கு உதவிய மக்கள் கண்காணிப்பகத்தின் தமிழ்நாடு மனித உரிமைப் பிரிவின் இயக்குனர் சி.சே.இராசன் அவர்களுக்கும் கண்காணிப்புப் பிரிவின் ஒருங்கிணைப்பாளர் கா.கணேசன் அவர்களுக்கும், திருமிகு. பழனியம்மாள் அவர்களுக்கும், தலையீட்டுக்குத் துணை நின்ற வழக்குரைஞர் களுக்கு, மூத்த சட்ட உதவியாளர்களுக்கு குறிப்பாக இத்தொகுப்பை முழுமைப்படுத்த உதவிய திருமதி. மீனாட்சி ஆகியோருக்கு நன்றியைத் தெரிவிக்கிறோம்; அறிக்கை முழுவதும் படித்து திருத்தம் செய்த கவிஞர். பன்னீர் செல்வம் அவர்களுக்கும நன்றி. கண்காணிப்பு, தலையீடு, மறுவாழ்வு என்ற மனித உரிமைப் பாதுகாப்பு பரிமாணங்களுக்கு என்றும் எப்போதும் பின்புலமாய் நிற்கும் மக்கள் கண்காணிப்பக இயக்குநர் திரு. ஹென்றி திபேன் அவர்களுக்கு மிக்க நன்றி. கணிப்பொறிப் பிரிவு ஜெயராமன், முரளி, ஜனார்த்தனன் ஆகியோருக்கும் அச்சிட்ட ஆண்டோ ஆர்ட் கிராப்ட் அந்தோணி ராஜுக்கும் நன்றி.

பதிப்புத்துறை,
மக்கள் கண்காணிப்பகம்,
மதுரை -2

முனைவர், **இ.தேவசகாயம்**

**கள ஆய்வில் துணை நின்றோர்:**

திருமிகு. **எஸ். பழனியம்மாள்**, தலைமை அலுவலகம்

திரு. **சு.கணேசன்**, திருநெல்வேலி மண்டலம்

திரு. **ஓ. ஆனந்தகுமார்**, சிவகங்கை மண்டலம்

திரு. **சே.பாஸ்கர்**, வேலூர் மண்டலம்

திரு. **ஆ.ஜெயராமன்**, விழுப்புரம் மண்டலம்

திரு. **இ.சதீஸ்ராஜ்குமார்**, மதுரை மண்டலம்

திரு. **க.பா. செந்தில்ராஜா**, சேலம் மண்டலம்

திரு. **ஜி. திருமுகம்**, நாகப்பட்டினம் மண்டலம்

திரு. **சி. பிரபாகர்**, திருச்சி மண்டலம்

திரு. **கி. முனியராஜ்**, தலைமை அலுவலகம்

திரு. **மா. அய்யப்பன்**, தலைமை அலுவலகம்

மற்றும் **மனித உரிமைக்கான குடிமக்கள் இயக்கத்தின்** பகுதிப் பொறுப்பாளர்கள்

# உள்ளடக்கம்


1. காவல் சித்திரவதை

| | |
|---|---|
| - காவல் சித்திரவதை | 01-05 |
| - காவல் மரணங்கள் | 05-06 |
| - பொய் வழக்குகள் | 06-09 |
| - மீனவர் மீதான சித்திரவதைகள் | 09-10 |
| - காவல் துறையால் பாதிக்கப்பட்ட பெண்கள் | 11 |
| - கண்டறிந்தவைகள் | 12-15 |
| 2. தலித்துக்கள் மீதான வன்முறைகள் | 16-31 |
| - கண்டறிந்தவைகள் | 32-39 |
| 3, பெண்கள் மீதான வன்முறைகள் | |
| - வரதட்சணை கொடுமைகள் | 40-47 |
| - வரதட்சணை மரணங்கள் | 47-51 |
| - பாலியல் சீண்டல்கள், கேலிகள் | 51-61 |
| - குடும்ப வன்முறைகள் | 61-79 |
| - கண்டறிந்தவைகள், பரிந்துரைகள் | 80-87 |
| 4. வகுப்பறை வன்முறைகள் | 88-102 |
| - கண்டறிந்தவைகள், பரிந்துரைகள் | 103-107 |
| 5. பலவகை மீறல்கள் | 108-117 |

# காவல் சித்திரவதை

## மாற்றுத்திறனாளி முரளிதரன் என்பவரைத் தாக்கிய போலீஸ்

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தாலுகா, மருதங்கோடு குன்றுவிளையைச் சேர்ந்தவர் முரளிதரன். இவர் ஒர் மாற்றுத்திறனாளி இவர் மாற்றுத் திறனாளிகளுக்கு சமூகப்பணி செய்து வருகிறார். இந்நிலையில் தக்கலை நகராட்சிக்குபட்ட வணிக வளாகத்தில் கட்டப்பட்டுள்ள கடைகளில் மாற்றுத் திறனாளிகளுக்கு உரிய ஒதுக்கீடு வேண்டும் என விண்ணப்பித்துள்ளார். ஆனால் அதிகாரிகள் மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கவில்லை. எனவே இவர் மாற்றுத் திறனாளி சிலரை அழைத்து உறுப்பினர்களுக்குத் தகுதி இருந்தும் நகராட்சி நிர்வாகம் இடமளிக்க மறுக்கிறது என தர்ணாப் போராட்டம் நடத்தியுள்ளார். நகராட்சி நிர்வாகம் காவல்துறைக்கு தகவல் தெரிவித்து காவல் துறையினர் முரளிதரன் உட்பட மாற்றுத் திறனாளிகள் அனைவரையும் அடித்து அப்புறப்படுத்தி அவர்கள் மீது வழக்கு பதிவு செய்துள்ளனர்.

## மனித உரிமை காப்பாளர்கள் மீது போலீஸ் தடியடி

சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், தலைவாசல் கிராமத்தில் உள்ள கலை அறிவியல் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரி உள்ளது. பாலிடெக்னிக் கல்லூரியில் பயிலும் மாணவர்கள் வினோத்குமார், மணி, பிரதாப், கோபாலகிருஷ்ணன் ஆகியோர் கல்லூரிப் பேருந்தில் பயணம் செய்யும் போது விபத்தில் இறந்துள்ளனர். இறந்த மாணவர்களுக்கு இழப்பீட்டை கல்லூரி நிர்வாகம் வழங்கக் கோரி மற்ற வகுப்பு மாணவர்கள் வகுப்பு புறக்கணிப்பு செய்துள்ளனர். இச்சம்பவத்தில் கல்லூரி 3 நாள் தொடர்ந்து விடுமுறை விடப்பட்டுள்ளது. மீண்டும் 02.09.2010 அன்று கல்லூரி திறந்தவுடன் ஆயிரக்கணக்கான மாணவர்கள் சாலை மறியலில் ஈடுபட்டுள்ளனர். அப்போது காவல் துறையினர் சம்பவ இடத்திற்குச் சென்று மாணவர்கள் மீது தடியடி நடத்திக் கூட்டத்தைக் கலைத்துள்ளனர். இச்சம்பவத்தில் மனித உரிமை ஆர்வலர் ராமு, மற்றும் மாணவர்கள் காயமடைந்துள்ளனர்.

## காவல் உதவி ஆய்வாளர் மீது புகார் அளித்தவர் மீது கஞ்சா வழக்கு

கடலூர் மாவட்டம், பண்ருட்டி தாலுகா, முத்தாண்டி குப்பம் பகுதியில் வசிப்பவர் வேல்முருகன். கடந்த 6 மாதத்திற்கு முன்பு முத்தாண்டி குப்பம் காவல் உதவி ஆய்வாளர் மீது தலித்துக்களுக்கு விரோதமாக செயல்படுகிறார் என மேல் அதிகாரிகளுக்கு புகார் அனுப்பியுள்ளார். இதனை மனதில் வைத்துக் கொண்டு உதவி ஆய்வாளர் அவர்கள் அப்பாசாமி மகன் விஜி, மனைவி ஆகியோர்களிடம் பொய் புகார் வாங்கிக் கொண்டு வேல்முருகனை கைது செய்து கஞ்சா வழக்கில் வழக்குப் பதிவு செய்து கடுமையாகத் தாக்கி சித்திரவதை செய்துள்ளார். காவல்துறையினரின் கடும் சித்திரவதையால் பாதிப்புக்குள்ளான வேல்முருகன் கடலூர் அரசு மருத்துமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளார். அதன் பிறகு காவல் உயர் அதிகாரிகளுக்கு காவல்துறை சித்திரவதை குறித்து புகார் அனுப்பி நடவடிக்கை எடுக்குமாறுக் கேட்டுள்ளார்.

சென்னை மாவட்டம், பல்லாவரம், திரிசூலம் பெரியார் நகர் 1/39 முக்கன்னி அம்மன் கோவில் தெரு அனந்தன் மனைவி பிரேமா மீது பொய் புகார் கொடுத்ததன் அடிப்படையில் அவர் 31.01.2010 அன்று காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அதனால் கர்ப்பிணியான பிரேமாவின் கருக்கலைந்து பாதிக்கப்பட்டுள்ளார்.

## இளைஞரைக் காவல்துறையினர் அடித்துச் சித்திரவதை

விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் தாலுகா, சூளாங்குறிச்சி அஞ்சல் பள்ளிட்டு வடக்குத் தெருவில் வசிப்பவர் சுந்தரமூர்த்தி. இவரது தந்தை அய்யாசாமி துபாயில் வேலை செய்து வருகிறார். அதனால் தாய் ஜீவாவுடன் வசித்து வந்துள்ளார். ஊர்ப் பிரச்சினைக் காரணமாக ஊர்க்காரர்கள் கொடுத்த புகாரின் அடிப்படையில் சுந்தரமூர்த்தியை காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று காவல் ஆய்வாளர் கடுமையாக அடித்து சுந்தரமூர்த்தியின் முதுகு, தோள்பட்டை போன்ற பகுதிகளில் காயம் ஏற்படும் அளவிற்குத் துன்புறுத்தியுள்ளனர். கால்களை நீட்டச் சொல்லி அடித்ததில் சுந்தரமூர்த்தி அலறி துடித்துள்ளார். பின்பு அவரை போட்டோ எடுத்தும், கைரேகை எடுத்தும் இனிமேல் இதுபோல் தகராறு செய்தால் பொய் வழக்குப் போடுவோம். இனி ஊருக்குள் வரக் கூடாது என எழுதி வாங்கி அனுப்பியுள்ளனர்.

## மாட்டுவண்டி தொழிலாளர்களைச் சிதைக்கும் காவல் துறையினர்

காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுகுன்றம் தாலுகா, கல்பாக்கம் இணையாளர்குப்பம் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் ராஜாராம், இளங்கோ, சம்பத், சண்முகம், சிட்டிபாபு, கிருஷ்ணன், ரமேஸ், திருமலை செங்கேணி, ஸ்ரீராமு, தாமு இவர்கள் ஏழை வன்னிய சமுதாயம் மற்றும் பிற சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் அன்றாடம் பிழைப்புக்காக மாட்டு வண்டிகளில் ஆற்று ஓடைகளில் மணல் எடுத்து கிடைக்கும் வருமானத்தில் மாடுகளுக்குத் தீவனம் கொடுத்து மீதமுள்ள பணத்தில் குடும்பம் நடத்துகின்றனர். ஆனால் கல்பாக்கம் காவல்

துறையினர் பெரும் அரசியல்வாதிகளின் மணல் குவாரி கொள்ளையைக் கண்டு கொள்ளாமல் இது போன்ற சிறு தொழிலாளர்களை கைது செய்து தொழில் செய்ய விடாமல் மாட்டு வண்டிகளை முடக்கி வைத்தும் ரூ.3000/-, 5000/- என அபராதம் விதிப்பதோடு, சாதி குறித்தும் இழிவாகப் பேசுவதும், அடிப்பதும் போன்ற சித்திரவதைகளில் ஈடுபட்டுள்ளனர். ஆனால் இயந்திரங்களை கொண்டு குறிப்பிட்ட அளவுகளுக்கு மேல் மணல் எடுக்கக் கூடாது என்று சட்டம் இருந்தும் அரசியல்வாதிகளும் அரசுத்துறை அதிகாரிகளும் அரசின் விதிமுறைகளை மீறி மணல் அள்ளுகின்றனர். இதைக் காவல் துறையினர் கண்டு கொள்வது இல்லை.

## இராணுவ வீரரை தாக்கிய காவல் துறையினர்

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தாலுகா குடும்பன் கிராமத்தைச் சேர்ந்தவர் நாகப்பன். இவர் இராணுவத்தில் பணியாற்றுகிறார். இவர் கடந்த 23.06.2010அன்று ஜோலார்பேட்டை ரயில் நிலையத்தில் டிக்கெட் முன்பதிவிற்காக வரிசையில் நின்றுள்ளார். அப்போது இராமமூர்த்தி என்ற காவலரும் டிக்கெட் முன்பதிவிதற்காக வரிசையில் நின்றிந்தார். அப்போது வரிசையில் முன் பின் செல்வது தொடர்பாக நாகப்பனுக்கும் இராமமூர்த்திக்கும் வாக்குவாதம் முற்றி ஒருவருக்கொருவர் கைகலப்பு ஏற்பட்டுள்ளது. அதனால் காவலர் இராம மூர்த்தி வேறு ஒரு காவலரை அழைத்து நாகப்பனை ஆட்டோவில் ஏற்றி காவல் நிலையத் திற்குக் கொண்டு சென்று வழக்கப் போட முயற்சித்துள்ளார். அதன் பின் இராணுவத்தைச் சேர்ந்த உயரதிகாரிகள் இரு தரப்பினரையும் சமசரம் செய்து வைத்துள்ளனர்.

## காவலர்கள் தொந்தரவால் படிப்பைத் துறந்த மாணவன்

விருதுநகர் மாவட்டம், விருதுநகர் தாலுகா, கலைஞர் நகர் பகுதியில் சுமார் 20 குடும்பங்கள் காட்டு நாயக்கர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் வசிக்கிறார்கள். விருதுநகர் மாவட்டத்தில் எங்கு திருட்டு நடந்தாலும் காவல் துறையினர் கலைஞர் நகருக்கு வந்து அங்குள்ள இளைஞர்களை பிடித்துச்செல்வது வழக்கம். பின்னர் அவர்கள் மீது பொய் வழக்கு போடுவதும் அடித்துத் சித்திரவதை செய்வதும் வழக்கம். இக்கிராமத்தில் வசிப்பவர் சோணையா இவரது மகன் சக்திவேல் இவர் 5ம் வகுப்பு முதல் 11 முதல் வகுப்பு வரை மதுரை நாகமலை புதுக்கோட்டை ஜெயராஜ் அன்ன பாக்கியம் மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப் பள்ளியில் படித்து வந்துள்ளார். தற்போது தினமும் காவல் துறையினர் கலைஞர் நகருக்குச் சென்று எல்லா வீடுகளிலும் சோதனை என்ற பெயரில் வீட்டில் உள்ள ஆண்கள் பெண்கள் அனைவரையும் அடித்துச் சித்திரவதை செய்து கைது செய்யும் நடவடிக்கைகளில் காவல் துறையினர் இருந்ததால் பல குடும்பத்தினர் தற்போது கிராமத்தை விட்டு வெளியேறி வெவ்வேறு இடங்களில் தஞ்சம் அடைந்துள்ளனர். அவ்வாறு தஞ்சம் அடைந்தவர்களில் மாணவர் சக்திவேலும் ஒருவர். காவல்துறை இது போன்ற வீண்பழி சுமத்தும் நடவடிக் கையால் மாணவனின் கல்வி பாதிக்கப்பட்டு ஓடி ஒளிய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

## நிவாரணம் கேட்ட மக்களைக் கைது செய்த காவல்துறை

கடலூர் மாவட்டம், நெய்வேலியில் நெய்வேலி லிக்னேட் கார்ப்ரேஷன் உள்ளது. 2006ம் ஆண்டு நில விஸ்தரிப்பு தொடர்பாக நிறுவனம், விவசாய சங்கபிரதிநிதிகள், அரசுத்துறை அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகள் ஆகியோர் அடங்கிய குழுவிடம் பேச்சுவார்த்தையின் மூலம் நிலம் வழங்கும் கம்மாபுரம் விவசாய மக்களுக்கு ஏக்கருக்கு 5 லட்சம், போர் போட நிதி, வீட்டுமனை, இலவச மின்சார இணைப்பு போன்றவற்றை வழங்கவேண்டும் என ஒப்பந்தம் இடப்பட்டு உள்ளது. அதனால் பொது மக்களுக்கு உரிய எந்தவித நிவாரணத்தையும் வழங்காமல் மக்களின் நிலத்தை ஆக்கிரமிப்பதும் மின்சாரத்தை துண்டிப்பது பணிகளை மேற்கொண்டனர். உடனே மக்கள் தாசில்தாரிடம் புகார் கொடுத்துள்ளனர். பின் நீதிமன்றத்தில் வழங்க வேண்டும் என உத்தரவு போடப்படுகிறது. ஆனால் காவல் துறை 9 பேர்களை கைது செய்துள்ளது.

## வழக்கறிஞரை குடிபோதையில் தாக்கிய போலீஸ்

திருச்சி மாவட்டம், திருச்சி தாலுகா, செந்தண்ணீர்புரம் முத்துமணியுடன் கதவு எண் *9/c*-ல் வசிப்பவர் ஹன்ஸ் இவர் வழக்கறிஞராக உள்ளார். இவரது நண்பர் சிவகுருநாதன் இவர் சுப்பிரமணியபுரம் முதலைத்தெருவில் வசித்து வருபவர். இருவரும் கடந்த 05.03.2010 அன்று ஓர் வழக்கு சம்பந்தமாக பேசிவிட்டு நள்ளிரவு 12.30 மணி அளவில் வீடு திரும்பும் போது சுப்பிரமணியபுரம் டி.வி.எஸ் டோல்கேட் அருகில் இரண்டு பேரும் இரு சக்கர வாகனத்தை நிறுத்தி பேசிக் கொண்டிருந்தனர். அப்போது அங்கே *TN 45-0958* என்ற எண் கொண்ட வாகனத்தில் காவலர் ஒருவர் மதுபோதையில் சென்று அவர்களிடம் விசாரித் துள்ளார். அதற்கு ஹனீஸ் அவரை வழக்கறிஞர் என்று கூறியவுடன் ‘வக்கீல்னா என்ன நீ பெரிய மயிரா’ என்று கெட்ட வார்த்தைகளில் கூறி லத்திக் கம்பால் அடித்துள்ளார். உடனே அவரது நண்பர் சிவகுருநாதன் அவரது இருசக்கர வாகனத்தில் காவல் நிலையத்தில் புகார் செய்ய சென்றுள்ளார். உடனே மது போதையில் இருந்த காவலர் வழக்கறிஞர் ஹனீஸை அடித்து மிரட்டி சுமோவில் ஏற்றி பொன்மலை காவல் நிலையத்திற்கு கொண்டு சென்றுள்ளார். அங்கு இருந்த காவல்துறை அதிகாரியிடம் வழக்கறிஞர் ஹனீஸ் நடந்த சம்பவங்களைக் கூறியுள்ளார். அங்கிருந்த காவல்துறை அதிகாரி குமரவேல் மதுபோதையில் இருந்த காவலரைத் திட்டிவிட்டு வழக்கறிஞர் ஹனீஸிடம் மன்னிப்புக் கேட்டுள்ளார். காவல்துறை நடவடிக்கை எடுக்காததால் வழக்கறிஞர்கள் ஹனீஸ் மற்றும் சிவகுருநாதன் இருவரும் திருச்சி அரசு பொது மருத்துவமனையில் உள்நோயாளியாகச் சேர்த்து சிகிச்சை பெற்றுள் ளனர். மற்ற காவல் உயர் அதிகாரிகளுக்குப் புகார் அனுப்பியுள்ளனர்.

## நடைபாதை வியாபாரிகள் மீது காவல் துறையினர் தாக்குதல்

புதுவை மாநிலம், முத்தியால்பேட்டை, ரங்கவிலாஸ் தோட்டம், புதுத் தெரு முகவரியில் வசிக்கும் கன்னியப்பன் என்பவரின் மகன்களான சந்துரு, சரவணன், சசிக்குமார் ஆகியோர் புதுவை மிஷின் வீதியில் நடைபாதையில் வியாபாரம் செய்து வருகின்றனர். மேலும் *DYFI*ல் உறுப்பினராகவும், பொறுப்பாளராகவும் உள்ளனர். இந்நிலையில் கடந்த 4.11.2010 அன்று சந்துரு சகோதரர்களுக்குள் நடந்த வாய்த்தகராறை மையமாக வைத்து பெரியகடை

போக்குவரத்துக் காவல் துறை உதவி ஆய்வாளர் சண்முகம் அவர்கள், வியாபாரிகளான சந்துரு மற்றும் அவரது 2 சகோதரர்களையும் பொது இடத்தில் வைத்துக் கடுமையாகத் தாக்கியும் பொய் வழக்குப் பதிவு செய்தும் சிறையில் அடைத்துள்ளனர்.

### சட்டக் கல்லூரி மாணவனைச் சித்திரவதை செய்த காவல் துறையினர்

காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் தாலுகா, சாஸ்திரி தெரு என்ற முகவரியில் வசிக்கும் தலித் சமூகத்தைச் சேர்ந்த சபாபதி என்பவரின் மகன் அசோக்குமார். இவர் சட்டக் கல்லூரி மாணவன். கடந்த 17.08.2010 அன்று பேருந்தில் பயணம் செய்துள்ளார். இடம் பிடிப்பதில் சக பயணிகளுடன் அசோக்குமாருக்குத் தகராறு ஏற்பட்டுள்ளது. இதனால் பேருந்து ஓட்டுனர் பேருந்தைக் காவல் நிலையத்துக்குக் கொண்டு சென்றுள்ளார். திருக்கழுக்குன்றம் காவல் துறையினர் அசோக்குமாரை சட்டக் கல்லூரியில் மாணவன் என்று சொன்னதால் கடுமையாகத் தாக்கியுள்ளார். இதனால் பாதிப்படைந்த மாணவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

## காவல்நிலைய மரணங்கள்

### போலீஸ் விசாரணைக்கு சென்றவர் இறப்பு

தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் தாலுகா வெள்ளாரம் கிராமத்தில் வசிப்பவர் சுப்பையா (எ) தர்மர் இவரின் தந்தை காசிலிங்க நாயக்கருடன் பிறந்தவர்கள் மொத்தம் ஒன்பது பேர் இதில் கடைசியாக பிறந்தவர் வெங்கட்ராம நாயக்கர். இவர் கிராம நிர்வாக அலுவலராக வேலை பார்த்து தற்போது ஓய்வு பெற்றுள்ளார். காசிலிங்க நாயக்கரின் தந்தைக்கு சொந்தமான நிலம் மற்றும் சொத்துக்கள் வாரிசுகளான ஒன்பது பேருக்கும் பாத்தியமானது. வெங்கட்ராமன் அரசு அதிகாரியாக இருந்து ஓய்வுப் பெற்றவர் என்பதால் அவரது செல்வாக் கினை பயன்படுத்தி சகோதரர்களுக்கு சொத்தை வழங்காமல் மோசடி செய்துள்ளார். எனவே சுப்பையா (எ) தர்மருக்கும் அவரது சித்தப்பா வெங்கட்ராம நாயருக்கும் மோதல் வரவே காவல் நிலையத்தில் புகார் கொடுக்க காவல் துறையினர் அழைப்பின் பேரில் சுப்பையா (எ) தர்மர் ஒட்டப்பிடாரம் காவல் நிலையத்திற்கு விசாரணைக்கு சென்றுள்ளார்.. அங்கே விசாரணையின் போது நெஞ்சு வலி ஏற்பட்டு மயங்கி கீழே விழுந்துள்ளார். பின் காவலர்கள் மருத்துவ மனைக்குக் கொண்டு சென்றிருக்கிறார்கள். ஆனால் மருத்துவமனைக்குச் செல்லும் முன்பே சுப்பையா(எ)தர்மர் இறந்துள்ளார்.

### விசாரணைக்கு அழைத்து செல்லும் வழியில் ஜான் மோசஸ் அடித்துக் கொலை

விருதுநகர் மாவட்டம், அருப்புக் கோட்டை வட்டம், காளையார் கரிசல்குளம் கிராமத்தைச் சேர்ந்த ராஜமாணிக்கம் என்பவரின் மகன் ஜான் மோசஸ். இவர் இரண்டு சக்கர வாகனத்தை திருடியதாக விசாரணைக்கு அழைத்துச் சென்றக் காவலர்கள் காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லாமல் வேறு இடத்திற்கு அழைத்துச் சென்று அடித்துச் சித்திரவதை செய்துக்

கொலை செய்துள்ளனர். அதன்பின்பு காவலர்கள் பிடிக்கச் சென்றபோது காவலர்களை தாக்கிவிட்டு ஓடும்போது கீழே விழுந்து தலையில் அடிபட்டு ஜான்மோசஸ் இறந்து விட்டதாக ஜான்மோசஸின் பெற்றோருக்குத் தகவல் கொடுத்துள்ளனர். இதன் அடிப்படையில் மக்கள் கண்காணிப்பகம் கள ஆய்வு செய்து இவ்வழக்கு சிபிசிஐடி விசாரணைக்கு உத்திரவிடப்பட்டு தற்போது இச்சம்பவத்திற்கு காரணமான எஸ்.பி.சி.ஐ.டி பூரண சந்திரன் மீது வழக்கு பதிவு செய்யபட்டுள்ளது.

### காவலர் சித்திரவதையால் அந்தோணி தற்கொலை

வேலூர் மாவட்டம், ஆம்பூர் வட்டம், உதயேந்திரம் பகுதியைச் சேர்ந்த அந்தோனி, த.பெ. மைக்கேல் (லேட்) என்பவரைக் கடந்த 5.8.2010 அன்று கார்பெண்டர் வேலை செய்து கொண்டு இருந்தபோது ஒரு கொலை வழக்கு விசாரணைக்காக காலை சுமார் 11.00 மணியளவில் வாணியம்பாடி கிராமிய காவல் நிலையத்தினர் அழைத்துச் சென்றுள்ளனர். அவருடன் அந்தோனியின் நண்பர் சுரேஷ், த.பெ. ஆல்பர்ட் என்பவரும் சென்றுள்ளார். இருவரையும் விசாரணை செய்துள்ளனர். மாலை 6.00 மணியளவில் சுரேஷ் என்பவரை வீட்டிற்கு அனுப்பியுள்ளனர். அந்தோனியை மட்டும் காவல்நிலையத்தில் வைத்து விசாரணை என்ற பெயரில் கொடூரமாகச் சித்திரவதை செய்து உடல் நலம் குன்றவே மறுநாள் காலை விசாரணைக்கு வரச் சொல்லி அவரது நண்பர் சுரேஷை அழைத்து உடன் அனுப்பி வைத்துள்ளனர். பலத்த காயங்களுடன் வீட்டிற்குச் சென்ற அந்தோனி அவமானம் தாங்காமலும் அடுத்த நாள் விசாரணைக்கு செல்ல வேண்டியுள்ளதை நினைத்தும் 6.8.2010 அன்று வீட்டில் தூக்குப் போட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

## பொய் வழக்குகள்

### மனித உரிமைக்கான குடிமக்கள் இயக்கத்தின் மாவட்ட அமைப்பாளர் மீது பொய் வழக்கு

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் ஒன்றியம் புலியூர்நத்தம் ஊராட்சியின் நிர்வாகச் செயல்பாடுகளில் ஊழல்கள் பெருமளவு நடைபெற்று வந்தது குறித்து கிடைத்த தகவல்கள் ஊழல்களை ஊர்ஜிதம் செய்தன. மாவட்ட அமைப்பாளர் *NREGS* திட்டப்பணிகளைக் கூறாய்வு செய்தபோது இறந்து விட்டார். சத்துணவு ஊழியர், பெயர்களிலும் ஒரு நபர் பெயரிலேயே இரண்டு அட்டைகள் போடுவதன் மூலமாகவும் ஒரு வேலைக்கே வராத நபர்கள் பெயர்களிலும் வேலை அட்டை பெறாதவர்கள் பெயரிலும் போலி வருகைப் பட்டியல் தயாரித்து மோசடி செய்யப் பட்டதை உறுதி செய்யும் ஆதாரங்கள் சிக்கின. இதனை மாவட்ட ஆட்சியர் கவனத்திற்குக் கொண்டு சென்ற காரணத்தால் நத்தம் ஊராட்சித் தலைவர் மற்றும் துணைத் தலைவர் பஞ்சாயத்துக் குழாயை அவர்களே உடைத்துவிட்டு மனித உரிமைக்கான குடிமக்கள் இயக்கத்தின் மாவட்ட அமைப்பாளர் ரா. நாராயணசாமி மேல் பொய் வழக்குப் பதிவு செய்தனர்.

## தாம்பரம், கண்ணகி நகரை சேர்ந்த இளைஞர்கள் மீது காவல்துறைப் பொய் வழக்கு

காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் தாலுகா, துரைப்பாக்கம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட கண்ணகி நகரைச் சேர்ந்தவர்கள் திரு. உதயா (26),சுரேஷ் (25), சிவா (25). கூலி வேலை செய்து குடும்பத்தைக் காபாற்றி வருகின்றனர். கடந்த 13.07.2010 அன்று துரைப்பாக்கம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு. கண்ணன் மற்றும் காவலர்கள் சுப்பிரமணி, நாகராஜ், ஆனந்தராஜ் ஆகியோர் நள்ளிரவில் இவர்களுடைய வீடுகளில் புகுந்து மேற்கண்ட நபர்களை வீட்டிலிருந்து வெளியே இழுத்து வந்து அடித்து சித்திரவதை செய்து, பல்வேறு குற்றங்களில் ஈடுபட்டதாக பொய் வழக்குப் போட்டு புழல் சிறையில் அடைத்துள்ளனர். துரைப்பாக்கம் காவல் துறையினரின் மனித உரிமை மீறல்கள் குறித்து பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் சார்பாக உயர் அதிகாரிகளுக்கு புகார் அனுப்பப்பட்டுள்ளது.

## காவல்துறை பொய்வழக்கு

நாமக்கல் மாவட்டம், நாமகிரிபேட்டையை அடுத்த குள்ளாண்டிக்கோட்டில் வசித்து வருபவர் கருப்பன் இவர் கடந்த 5 வருடங்களாக பட்டணத்தார் என்பவர் காட்டில் கூலிக்கு வேலை செய்து வருகிறார். கடந்த 10 நாட்களுக்கு முன்பு அவரது உறவினர் வீட்டில் நடந்த பூப்புனித நீராட்டு விழாவிற்கு சென்றவர் வேலைக்கு செல்லவில்லை. 10 நாட்களுக்கு பிறகு வீடு திரும்பியவரை உடனே பட்டணத்தாரின் ஆட்கள் கட்டாயப்படுத்தி வேலைக்கு அழைத்துச் சென்றவர்கள் திடீரென கருப்பன் இறந்து விட்டதாகக் தகவல் தெரிவித்துள்ளனர். உடனே காவல் துறையினர் சம்பவ இடத்திற்கு சென்று பிரேதத்தை பரிசோதனை செய்ய சேலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பும் பணியில் ஈடுப்பட்டுள்ளனர். அப்போது அங்கு கூடிய பொதுமக்களைக் காவல்துறையினர் லத்திக் கம்புகளால் அடித்து விரட்டி 14 நபர்கள் மீது பொய் வழக்கு போட்டுக் கைது செய்து சிறையிலடைத்துள்ளனர்.

## திருட்டு வழக்குகளுக்கு குறவர் சமூகத்தினர் மீது பொய் வழக்கு புனையும் காவல்துறையின் அராஜகப் போக்கு

விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் வட்டம், திருவெண்ணெய்நல்லூர் கூட்டுறவு வங்கியில் சுமார் 2 கோடி மதிப்புள்ள தங்க நகைகள் ஜுன் மாதம் திருடுபோய் விட்டது. இத்திருட்டு தொடர்பாக குற்றவாளியைப் பிடிக்க கடலூர், விழுப்புரம் மாவட்டக் காவல் துறையினருக்கு டி.ஐ.ஜி மாசாணமுத்து உத்தரவு அளித்துள்ளார். இதன் அடிப்படையில் இரண்டு மாவட்டக் காவல் துறையினர் குறவர் சமுதாய மக்கள்தான் திருடியிருப்பார்கள் எனக் கருதி குறவர் சமுதாயத்தைச் சேர்ந்த (1) ரவி (36), த.பெ. கலியன், (2) தண்டபாணி (43), த.பெ. கலியன், (3) ரமேஷ் (32), த.பெ. கலியன், (4) கொளந்தி (30), த.பெ. மாயவன், (5) ஆனந்த ஒளி (24), த.பெ. மாயவன், (6) விஜயகுமார் (23), த.பெ. ராமலிங்கம், (7) சுந்தரமூர்த்தி (30), த.பெ. கலியபெருமாள், (8) ஜெயராமன் (30), த.பெ. முனுசாமி, (9) பாலா, த.பெ. முனுசாமி ஆகியோர்களைக் கைது செய்து விசாரணை என்ற பெயரில் அடித்து சித்திரவதை செய்துள்ளனர்.

## இஸ்லாமியர் மீது திருட்டு வழக்கு

விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் தாலுகா, மேல்சிறுவள்ளூர் அஞ்சல், உலகலப்பாடி கிராமம் 47-ஏ, பள்ளிவாசல் தெரு என்ற முகவரியில் வசித்து வருபவர் ஹீரோ பாட்சா. இஸ்லாமிய சமுதாயத்தைச் சேர்ந்தவர். கடந்த 15.7.2010 அன்று கணேசன் என்பவருடைய பணம் ரூ 30,000 திருடு போயுள்ளது. பணம் திருடு போன அன்று வேறு ஒரு காரணத்திற்காக ஹீரோ பாட்சாவும், கணேசனும் சந்தித்துள்ளனர். கணேசன் பணம் திருடு போனது குறித்து காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார். அதனால் கடந்த 23.7.2010 காலை 8.00 மணி யளவில் வடபொன்பரப்பி காவல் நிலையத்தைச் சேர்ந்த காவலர் ஒருவர் ஹீரோ பாட்சாவின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களை காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றுள்ளார்கள். அங்கு ஹீரோ பாட்சாவின் குடும்பத்தாரிடம் விசாரித்துவிட்டு அனுப்பிவிட்டார்கள். ஆனால் பாட்சாவை மட்டும் காவல் நிலையத்தில் வைத்து அடித்து கடுமையாக சித்திரவதை செய்துள்ளார்கள். இது குறித்து காவல்துறை உயர் அதிகாரிகளுக்கு புகார் கொடுத்தும் எந்த நடவடிக்கையும் எடுக்க வில்லை. செய்யாத குற்றத்திற்காக ஹீரோ பாட்சா கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார்.

## வேலூர் வடக்குக் காவல் துறையினர் பழி வாங்கும் நோக்கத்தோடு மனித உரிமைக் காப்பாளர்கள் (சிறுபான்மையினர்) மீது பொய் வழக்கு

வேலூர் மாவட்ட முஸ்லிம் முன்னேற்றக் கழகத்தினர் வழிபாட்டு உரிமையை மீட்டெடுக்கும் வகையில், தொடர்ந்து ஜனநாயக ரீதியான போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். குறிப்பாக வேலூர் வடக்குக் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட கோட்டை மசூதிப் பிரச்சினையில் த.மு.மு.க. போராட்டத்தை தீவிரப்படுத்தவே அதை பொறுத்துக் கொள்ளாத வேலூர் வடக்குக் காவல் துறையினர் தொடர்ந்து த.மு.மு.க. பொறுப்பாளர்கள் மீது பகை வளர்த்து வந்துள்ளனர். இந்நிலையில் கடந்த 10.7.2010 அன்று ஒரு வழக்கு விசாரணை தொடர்பாகத் தகவல் கேட்கச் சென்ற த.மு.மு.க. நிர்வாகிகள் திரு.ஜாகிர் உசேன், திரு.சையத்பாஷா, திரு.அமின் ஆகியோரைக் காவல் நிலையத்துக்குள் கட்டாயப்படுத்தி அமரச் செய்து எவ்வித காரணமும் இன்றி, ஆல்வின் என்பவரிடமிருந்து பொய்யாகப் புகார் மனுவை பெற்று ஆய்வாளர் மற்றும் உதவி ஆய்வாளர் கோவிந்தசாமி ஆகியோர் உடனுக்குடன் அதிவிரைவாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து த.மு.மு.க. நிர்வாகிகளை அவமானப்படுத்தும் நோக்கத்தில் அவதூறான செய்திகளை பத்திரிக்கை செய்தியாகக் கொடுத்து மேற்கண்ட நபர்களை ரிமாண்ட் செய்துள்ளனர்.

## மனித உரிமைக்கான குடிமக்கள் இயக்கத்தின் மாவட்ட அமைப்பாளர் மீது பொய் வழக்கு

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் ஒன்றியம், புலியூர்நத்தம் ஊராட்சியின் நிர்வாகச் செயல்பாடுகளில் ஊழல்கள் பெருமளவு நடைபெற்று வந்தது குறித்து கிடைத்த தகவல்கள் ஊழல்களை ஊர்ஜிதம் செய்தன. மாவட்ட அமைப்பாளர் மத்திய ஊரக வேலை வாய்ப்புத் திட்டப்பணிகளைக் கூறாய்வு செய்தபோது இறந்து விட்டார். சத்துணவு ஊழியர், பெயர்களிலும்

ஒரு நபர் பெயரிலேயே இரண்டு அட்டைகள் போடுவதன் மூலமாகவும் ஒரு வேலைக்கே வராத நபர்கள் பெயர்களிலும் வேலை அட்டை பெறாதவர்கள் பெயரிலும் போலி வருகைப் பட்டியல் தயாரித்து மோசடி செய்யப்பட்டதை உறுதி செய்யும் ஆதாரங்கள் சிக்கின. இதனை மாவட்ட ஆட்சியர் கவனத்திற்குக் கொண்டு சென்ற காரணத்தால் நத்தம் ஊராட்சித் தலைவர் மற்றும் துணைத் தலைவர் பஞ்சாயத்துக் குழாயை அவர்களே உடைத்துவிட்டு மனித உரிமைக்கான குடிமக்கள் இயக்கத்தின் மாவட்ட அமைப்பாளர் ரா. நாராயணசாமி மேல் பொய் வழக்குப் பதிவு செய்தனர்.

# மீனவர் மீதான சித்திரவதைகள்

## மீனவர் மீது தொடர்ந்து பொய் வழக்கு போடும் காவல்துறை இலங்கை கடற்படை, தமிழக மீனவரைச் சுட்டுக் கொலை

நாகப்பட்டிணம் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், தலை ஞாயிறு காவல் எல்லைக்குட்பட்ட வெள்ளப்பள்ளம் மீனவர் காலனியைச் சேர்ந்தவர் செல்லப்பன். இவரதுப் படகை இலங்கைக் கடற்படையினர் சேதப்படுத்தியதோடு அவரை நிர்வாணப்படுத்தி சித்திரவதை செய்து இலங்கை கடற்படையினர் சுட்டுக் கொலை செய்துள்ளனர். தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் தொடர்ந்து கோடியக்கரைக்கு சற்று கிழக்கே 10 கி.மீ. தொலைவில் மீன் பிடித்துக் கொண்டிருக்கும் பொழுது, லத்தியால் அடிப்பதும், பனிக்கட்டியின் மீது முட்டி போட வைப்பதும், ஜட்டிகளுக்குள் பனிக்கட்டிகளை கொட்டுவதும், நிர்வாணப்படுத்தி நீரில் அதிக நேரம் மிதக்க விடுவதும், பெல்ட், சட்டம் போன்றவைகளால் அடித்து சித்திரவதை செய்வதும், விலையுயர்ந்த மீன்களை கடலில் வீசி எறிவதும், நகைகளைப் பறித்துக் கொள்வதும் போன்ற வேலைகளையும் சித்திரவதைகளையும் செய்து வருவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

## மீனவர்கள் மீது இலங்கை கடற்படை தாக்குதல்

நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் தாலுகா, டாட்டா நகரில் வசித்து வருபவர் பைரவன் இவரும் இவருடன் செல்வமணி, சக்திவேல் தண்டபாணி, இடும்பன் ஆகிய ஐந்து பேரும் சண்முகம் என்பவரின் மீன்பிடி விசைப்படகில் 06.02.2010 அன்று 12.30 மணி அளவில் நாகையிலிருந்து புறப்பட்டு கோடியக்கரைக்கு தென்கிழக்கே 5 மைல் கல் தொலை வில் மீன் பிடித்து வந்துள்ளனர். மறுநாள் 7ம் தேதி, 8ம் தேதி காலை 8 மணி அளவில் இரு வலை மூலம் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது அவர்களை நோக்கி இலங்கை கடற்படை கப்பல் விரைந்து வந்துள்ளது. அருகே வந்ததும் அதிலிருந்த 6 இலங்கை கடற்படை வீரர்கள் கையில் இரும்பு பைப், ரப்பர் தடி, இரும்பு வயர் ஆகியவற்றுடன் இவர்கள் படகில் இறங்கி 5 தமிழக மீனவர்களையும் கண்மூடித்தனமாகத் தாக்கியுள்ளனர். வலைகளை அறுத்து கடலில் போட்டுள்ளனர். மீன்கள் முழுவதையும் எடுத்துக் கொண்டுள்ளனர். சுமார் 2 மணி நேரம் கொடூரமாக சித்திரவதை செய்துள்ளனர். உட்கார கூட முடியாமல் மயங்கி கிடந்தனர். நீண்ட நேரத்திற்கு பிறகு படகை திருப்பி கொண்டு வந்துள்ளனர். உடல் முழுவதும் காயங்களோடு தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர். இது வரை எங்கும் புகார் செய்யவில்லை.

## தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படை தாக்குதல்

நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் தாலுகா, அக்கரைப்பேட்டை மீனவ கிராமத்தை சேர்ந்தவர் விஜய். இவர் கடந்த 14.04.2010 அன்று ராஜமாணிக்கம் என்பவரது படகில் செல்வ நாதன், கற்பகசெல்வன் கதிர்வேல் ஆகிய நால்வரும் மீன்பிடிக்க கோடியக்கரைக்கு கிழக்கே சுமார் 10 கீ.மி. தொலைவில் மீன் பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது இலங்கை கடற்படை கப்பல் இவர்களின் படகை சுற்றி வளைத்து கடுமையாகத் தாக்கியிருக்கின்றனர். உடலில் கை, கால் முதுகு தொடை போன்ற பகுதிகளில் அடித்து சித்திரவதை செய்ததில் வலியால் எழுந்து நடக்க முடியாமல் படகிலே அவதியுற்றிருக்கின்றனர். இவர்கள் வைத்திருந்த மீன்கள் வலைகள், திசை காட்டும் கருவி போன்ற பொருட்களை இலங்கை கடற்படையினர் எடுத்துச் சென்றிருக்கின்றனர் அதன் பின்னர் நான்கு தமிழக மீனவர்களும் தப்பித்தோம் பிழைத்தோம் என்று தங்களது படகில் திரும்பியுள்ளனர். பின்னர் தமிழக கடற்படையினரிடம் நடந்த சம்பவங்களை கூறியுள்ளனர். தமிழக கடற்படையினரும் நடவடிக்கை எடுப்பதாகக் கூறியுள்ளனர்.

## இலங்கை கடற்படையால் தமிழக மீனவர்கள் சித்திரவதை

நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் தாலுகா அக்கரைப் பேட்டை, டாட்டா நகர் மீனவ கிராமத்தைச் சேர்ந்தவர் வினோத் இவரும் இவருடன் இதே கிராமத்தை சேர்ந்த ராகவன் செல்லஞ்செட்டி, நடுக்காட்டின் ஆகிய நான்கு நபர்களும் கடந்த 02.04.2010 அன்று கோடியக் கரைக்கு கிழக்கே 20 கீ.மீ. தொலைவில் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது திடீரென இலங்கை கடற்படை கப்பல் வேகமாக அருகில் வந்துள்ளது. அதிலிருந்து இலங்கை கடற்படை வீரர்கள் சுமார் 20 பேர் இவர்களின் படகை சூழந்து இரும்பு பைப் கம்பு வைத்து நால்வரையும் அடித்து உதைத்தனர். நால்வரின் முதுகு, தொடை, நெற்றி இருகைகள் போன்ற பகுதிகளில் அடித்து கொடுங்காயங்கள் ஏற்படுத்தியிருக்கின்றனர். பின்னர் படகில் இருந்த மீன்கள் வலை, திசை காட்டும் கருவி, ஆழம் காட்டும் கருவி போன்ற பொருட்களை எடுத்துச் சென்றுள்ளனர். அதன்பிறகு தமிழக மீனவர்கள் தப்பி பிழைத்து கரை திரும்பி இந்திய கடற்படையிடம் புகார் தெரிவித்துள்ளனர்.

## மீனவர் மீது தொடர்ந்து பொய் வழக்கு போடும் காவல்துறை

சென்னை மாவட்டம், காசிமேடு, சிங்காரவேலர் 4வது தெருவில் வசித்து வருபவர் சண்முகம். இவர் மீனவர் சமுதாயத்தைச் சேர்ந்தவர். இவர் காசிமேடு பகுதியைச் சேர்ந்த செரிக்குப்பன் என்பவரது மீன் படகில் நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் டிரைவராக வேலை பார்த்துள்ளார். திடீரென செரிகுப்பனை காவல் துறையினர் தேட அவர் தலைமறைவாகியுள்ளார். பின்பு ஒரு நாள் விசாரணை என்று அழைத்துச் சென்று சண்முகம் மீது வழக்கு பதிவு செய்துள்ளனர். நீதிமன்றத்திற்குச் சென்றபிறகு தான் சண்முகம் மீது காவல் துறையினரை வெட்டியதாக வழக்கு பதிவு செய்துள்ள விபரமே அவருக்கு தெரிய வந்துள்ளது. மீண்டும் செரிக்குப்பன் குயின் மேரி என்ற பெண்ணைத் தாக்கியதாக வழக்கு பதிவு செய்துள்ளனர். அவ்வழக்கிலும் சண்முகம் மீது பொய் வழக்கு பதிவு செய்துள்ளனர். இவர் மீனவர் என்பதாலும் செரிக்குப்பன் என்பவருடன் இருப்பதாலும் இவர் மீது வேண்டும் என்றே பொய் வழக்கினை காவல் துறையினர் பதிவு செய்துள்ளனர்.

# காவல்துறையால் பாதிக்கப்பட்ட பெண்கள்

## இளம் பெண்ணை காவல்துறையினர் நள்ளிரவில் தாக்கிய சம்பவம்

புதுவை மாநிலம், பாகூர் கிராமம் ஏரிக்கரை தெரு என்ற முகவரியில் வசிக்கும் அருள் என்பவரின் மனைவி செல்வி. இவர் இந்து குறவர் சமுதாயத்தைச் சார்ந்தவர். இவரது உறவினர் ரவி என்பவரை கடலூர் மாவட்ட காவல் துறையினர் கடுமையான தாக்கிக் கொலை செய்துவிட்டனர். மேலும் 05.09.2010 ரவியின் கரும காரியத்திற்குச் சென்ற அருள் (24)யை காவல் துறையினர் கடத்திச் சென்றுள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக செல்வி அனைத்து மாவட்ட அரசு அதிகாரிகளுக்கும் புகார் அனுப்பியுள்ளார். இதனால் கோபம் அடைந்த திருவண்ணாமலை காவல் நிலைய ஆய்வாளர் நள்ளிரவில் செல்வியின் வீட்டிற்கு சென்று அருள் இருக்கும் இடம் தெரியும் என வெள்ளை பேப்பரில் கையெழுத்து போடும்படி கூறி அடித்து சித்திரவதை செய்துள்ளார். இச்சம்பவம் தொடர்பாக செல்வி அனைத்து அரசு அதிகாரிகளுக்கும் புகார் அளித்துள்ளார். வழக்கு விசாரணையில் உள்ளது.

## விசாரணைக்கு சென்ற பெண்ணை அடித்து சித்திரவதை செய்த போலீசார்

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை தாலுகா, திருப்பாக்கோட்டை லலிதா அவரது கணவரின் கொடுமை தாங்க முடியாமல் குழந்தைகளுடன் தற்கொலைக்கு முயன்று குழந்தைகள் இறந்து விட லலிதா மட்டும் உயிர் பிழைத்துள்ளார். இந்நிலையில் புரோக்கர் மூலம் முன் பணம் பெற்றுக்கொண்டு சென்னைக்கு சமையல் வேலைக்கு சென்றள்ளார். அங்கும் பிரச்சினை ஏற்படவே திரும்பி ஊருக்கு சென்றுள்ளார். அதனால் முன் பணம் கொடுத்த புரோக்கர் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவே காவல்துறையினர் லலிதாவை மிகக் கடமையாகத் தாக்கி சித்திரவதை செய்துள்ளனர்.

## காவலர் ஆசைக்கு இணக்க மறுத்த புலம் பெயர்ந்த இலங்கை தமிழ் பெண்ணை கஞ்சா வழக்கில் சிறையிலடைப்பு

இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் தாலுகா, மண்டபம் அகதிகள் முகாமில் புலம் பெயர்ந்த இலங்கை தமிழ் பெண் மலர் ராணி (44). மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வரும் அவரது கணவர் முருகனை ஒரு வழக்கிற்காக கைது செய்யும் நோக்கில் காவலர் திருமலை அவரது வீட்டிற்கு சென்றுள்ளார். அங்கு மலர் ராணி தனிமையில் இருப்பதை அறிந்து 23.07.2010 அன்று நள்ளிரவு சுமார் 1.30 மணியளவில் குடிபோதையில் உள்ள திருமலை, மலர்ராணியின் ஆடைகளை கிழித்து பாலியல் பலாத்கார முயற்சியில் ஈடுபடவே மலர்ராணி கத்திக் கூச்சல் போட்டுள்ளார். அதனால் காவலர் திருமலை தப்பித்துச் சென்றுள்ளார். அதனால் ஆத்திரமடைந்தக் காவலர் திருமலை மலர் ராணி மீது கஞ்சா வழக்கப் போட்டு கைது செய்துள்ளார்.

# கண்டறிந்தவைகள்

## 1. காவல் நிலையச் சித்திரவதை மற்றும் காவல் நிலைய மரணங்கள்:

1) தமிழ்நாட்டில் கடந்த 2010 ஆம் ஆண்டில் மட்டும் காவல் நிலைய மரணங்கள் அரங்கேறியுள்ளன. உதாரணமாக குற்றவியல் நடைமுறைத் திருத்தச் சட்டம் பிரிவு 176 (1) *(a)*ன் கீழ் முதல் வழக்காக மேலூர் ரமேஷ் காவல் நிலைய மரண சம்பவத்தை மேலூர் குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்கள் விசாரித்து அதன் அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார். அதன் தொடர்ச்சியாக இதுவரை நடைபெற்றுள்ள காவல் நிலைய மரணங்களுக்கு மேற்படி சட்டப்பிரிவின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணை செய்து வருகிறார்கள் என்பது எங்கள் கள ஆய்வின் மூலம் கண்டறியப்படுகிறது.

2) விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டம், காளையார் கரிசல்குளம் கிராமத்தைச் சேர்ந்த ராஜமாணிக்கம் என்பவரின் மகன் ஜான் மோசஸ் என்பவரை இரண்டு சக்கர வாகனத்தைத் திருடியதாக அருப்புக்கோட்டை காவல்நிலையக் காவலர் பூரணசந்திரன் விசாரணை என்ற பெயரில் அடித்துச் சித்திரவதை செய்ததால் சம்பவ இடத்திலேயே ஆள் இறந்து விட்டார் என்பது தெரிய வருகிறது. இது தொடர்பாக மதுரை உயர்நீதிமன்றத்தில் ரிட்மனு தாக்கல் செய்து சி.பி.சி.ஐ.டி. விசாரணை கோரி அளித்த மனுவின் கீழ் தற்போது அவ்வழக்கு சி.பி.சி.ஐ.டி.க்கு மாற்றம் செய்யப்பட்டு மேற்படி காவலர் பூரணசந்திரன் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுத் தற்காலிப் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்பது கள ஆய்வின் மூலம் கண்டறியப்படுகிறது.

3) தமிழ்நாட்டில் மதுரை, கோயமுத்தூர், தேனி, விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் சிற்ப வேலை செய்து வரும் கல் ஒட்டர் இன மக்களைக் காவல் துறையினர், எங்கு திருட்டு நடந்தாலும் மேற்படி திருட்டு வழக்குகளை, குறிப்பிட்ட பகுதிகளிலுள்ள கல் ஒட்டர் சமூகத்தினர் மீது பொய் வழக்காகப் பதிவு செய்து அவர்கள் வாழ்வாதாரத்தைக் கேள்விக்குறியாக்குகின்றனர் என்பதைக் கண்டறிய முடிகிறது.

4) விசாரணை என்ற பெயரில் காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்படுபவர்கள் காவல்துறையினரால் அடித்து சித்திரவதை செய்யப்பட்டு அதில் சிலர் சித்திரவதையின் கொடுமை தாங்கமுடியாமல் உயிரிழக்க நேர்ந்து விடுகிறது. விசாரணை என்ற பெயரில் சித்திரவதை செய்யப்படும் நபர்களின் உடல் மிகக் கொடூரமான முறையில் சிதைக்கப்பட்டு உயிருக்கு ஆபத்தான நிலையில் காவல்

நிலையத்திலிருந்து வெளியேற்றப்படுகிறார்கள். (அ) பெற்றோர் மற்றும் உறவினர்களிடம் நல்ல நிலையில் அனுப்புவதாக ஒப்புக் கொள்ளும்படி மிரட்டிக் கையொப்பம் பெற்றுக் கொண்டு அனுப்பி வைக்கப்படுகிறார்கள். அவ்வாறு பாதிக்கப்பட்டவர்கள் சிகிச்சை பலனின்றி இறந்துள்ளனர். இந்நிலையில் அவர்களுடைய மரணங்கள் காவல்நிலைய மரணங்களாக வழக்குப் பதியப்படாமல் சந்தேக மரணங்களாக (174 *Cr.P.C* ன் கீழ்) வழக்குப் பதிவு செய்யப்பட்டு வழக்கு முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது.

5) பெரும்பாலான காவல் நிலைய மரணங்கள் இரவு நேரங்களிலேயே நடைபெறுகின்றன. பெரும்பாலான இரவுப் பணிக் காவலர்கள் பணி நேரங்களில் மது போதையில் உள்ளனர். அத்தகைய நேரங்களில் அவர்களிடம் புகார் கொடுத்தால் ஆத்திரத்தில் புகார் கொடுத்தவரை எரிச்சலூட்டியும், குற்றம் சாட்டப்பட்டவரைக் கொடூரமாகத் தாக்கியும் கொலை செய்கின்றனர். சில சம்பவங்களில் புகார் கொடுக்கச் சென்றவர் மீதே காவல் துறையினர் வழக்குப் பதிவு செய்து சித்திரவதை செய்கின்றனர் என்பது எங்கள் அறிக்கையின் வாயிலாகக் கண்டறியப்படுகிறது.

6) பெண்கள், காவல் நிலையங்களுக்கு புகார் கொடுக்கச் சென்றால் அவர்களிடம் உரிய முறையில் விசாரணை செய்யாமல் அலைக்கழித்தும், மற்றும் அலட்சியப்படுத்தியும் அவர்களுடைய நடத்தையை இழிவுப்படுத்திப் பேசியும் வருவதால், பெண்கள் காவல் நிலையத்துக்குப் புகார் செய்ய வருவதற்கே தயங்கும் அவல நிலை இப்போதும் இருந்து வருகிறது.

## மோதல் சாவுகள்:

1) தமிழ்நாட்டில் கடந்த 2010ல் மட்டும் நடந்துள்ள 5 போலி மோதல் சம்பவங்களில் அசோக்குமார், திண்டுக்கல் பாண்டி மற்றும் வேலு, முருகன் என்ற கல்லுமண்டையன் மற்றும் கவியரசு, நாகராஜன், குமார் ஆகிய 7 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

2) மேற்கண்ட போலி மோதல் மரணங்களில் இறந்தவர்களின் குடும்பத்தினர்கள் கொடுத்த புகாரின் கீழ் இதுவரை எந்தவொரு காவல் நிலையத்திலும் அச்சம்பவத்தில் ஈடுபட்ட காவல்துறையினர் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட வில்லை என்பது தெரிய வருகிறது.

3) நடந்து முடிந்த 5 மோதல் சம்பவங்களிலும் தேசிய மனித உரிமை ஆணையத்தின் வழிகாட்டுதல்களைத் தமிழகக் காவல் துறையினர் பின்பற்றவில்லை என்பது தெரிய வருகிறது. மேற்படி சம்பவத்தில் ஈடுபடும் காவல் துறையினர் மீது இந்தியத் தண்டனைச் சட்டம் 302ன் கீழ் வழக்குப் பதிவு செய்ய வேண்டும் என்று மேற்படி

வழிகாட்டுதல் கூறுகிறது. ஆனால் இதுவரை காவல் துறையினர் மீது பிரிவு 302ன் கீழ் எந்த வழக்கும் பதிவு செய்யப்படவில்லை என்பது தெள்ளத்தெளிவாகிறது.

4) குற்றவியல் நடைமுறைத் திருத்தச் சட்டம் பிரிவு *176(1)(a)* ஒரு நபர் போலீஸ் காவலில் இறக்க நேரிடும்போது அவ்வழக்கைக் குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்கள் விசாரிக்க வேண்டும் என்று கூறுகிறது. இப்பிரிவு காவல் நிலைய மரணங்களுக்கு மட்டும் பொருந்தும் என்பதில்லை. போலி மோதல் மரணங்களுக்கும் மேற்படி சட்டப் பிரிவானது பொருந்தும். ஆனால் அவ்வாறு நிகழும் போலி மோதல் சம்பவங்களில் இந்த முறை பின்பற்றப்படுவதில்லை என்பது தெரிய வருகிறது.

5) விசாரணைக் கைதி ஒருவரைப் போலி மோதல் என்ற பெயரில் கொலை செய்ய வேண்டும் என்று தமிழக அரசு திட்டமிட்டால் அதற்கென்று தனியாக ஒரு போலீஸ் அதிகாரியைத் தமிழகக் காவல் துறையினரே உருவாக்குகிறார்கள். உதாரணமாக காவல் துறைத் துணை ஆணையாளர் திரு. வெள்ளத்துரை என்பவரை “என்கவுண்டர் ஸ்பெஷலிஸ்ட்” என்று அடையாளப்படுத்துகிறார்கள். இவர் சென்னையில் வீரமணி, மேட்டூரில் வீரப்பன், மதுரையில் முருகன் என்ற கல்லுமண்டையன் மற்றும் கவியரசு ஆகியோரைப் போலி என்கவுண்டரில் கொலை செய்திருப்பதை அவருக்கு அளித்துள்ள மேற்படி பட்டத்தின் மூலமே காவல்துறை ஒத்துக் கொள்கிறது. எந்த அரசு வந்தாலும் இவர் மீது நடவடிக்கை எடுப்பதில்லை என்பது கண்கூடாகத் தெரிகிறது.

## (2) சிறை மரணங்கள்

1) சிறைச் சாலைகளில் சிறைக் கைதிகளுக்கு வழங்கப்படும் உணவில் ஒரு விதமான ரசாயனங்கள் சேர்க்கப்படுவதால் ஆண்களுக்குப் பலகீனமும் பெண்களுக்கு மாதவிடாய்க் கோளாறுகளும் ஏற்படுகின்றன என்பது தெரிய வருகிறது. அந்த உணவின் மீது மாநில அரசு உணவுத் தரத்தைக் குறித்து சரியாக ஆய்வு மேற்கொள்ளவில்லை என்பதும் தெரிய வருகிறது.

2) சிறை மரணங்கள் ஏற்படுவதில் காவல் துறையினருக்கும் பங்கு உண்டு என்றும் இந்த இரு துறையினரின் கூட்டுச் செயலால் அவ்வாறு ஏற்படுகின்ற மரணங்கள் பொது மக்களின் பார்வையில் தற்செயலாக நடந்த சம்பவங்களாகச் சித்தரிக்கப்படுகின்றன என்பது தெரிய வருகிறது.

3) சிறைச்சாலையினுள் ஆயுள் தண்டனைக் கைதிகள் இறப்பு எண்ணிக்கை அதிகமாக உள்ளன. ஆனால் அவை தற்கொலைகளாகச் சித்தரிக்கப்படுகிறது. சிறைச் சாலைக்குள் சிறைக் கைதிகளின் உயிருக்கு உத்தரவாதமற்ற நிலை இருப்பது இதன் மூலம் கண்டறிய முடிகிறது.

4) காவல் நிலையத்தில் மிகக் கடுமையாகச் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்ட வர்களை, முழுமையான மருத்துவ சிகிச்சை மேற்கொள்ளாமல் சிறைச் சாலையில் அனுமதிக்கிறார்கள். சிறையில் போதுமான மருத்துவ சிகிச்சைக்கான உபகரணங்கள் இல்லாமல் அத்தகைய கைதிகள் இறக்க நேரிடுகிறது. இதன் மூலம் சிறைச்சாலையில் அனுமதிக்கப்படும் கைதிகள் முறையான பரிசோதனைக்குப் பின்பு அனுமதிக்கப்படுவது இல்லை எனவும் தெரிய வருகிறது.

5) காவல் விசாரணைக்குப் பின்பு கைதிகள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டும், மருத்துவச் சான்றிதழ் பெற்றும் சிறைக்குள் அனுமதிக்கப்பட வேண்டும். விசாரணைக் கைதிகள் கொடுங்காயத்துடன் இருந்தாலும் நீதிமன்றத்தில் அவற்றை பதிவு செய்வதில்லை. மேலும் காவல் துறையினர் அரசு மருத்துவமனைகளிலும் காயங்கள் எதுவும் இல்லை என்று இலகுவாகப் பொய்ச் சான்றிதழ் பெற்றுக் கொள்கிறார்கள். இந்நிலையில் கைதிகளை எவ்வித மருத்துவ சிகிச்சைக்கும் உட்படுத்தாமல் சிறையில் அனுமதிக்கப்படுவதால் சிறை மரணம் நேரிடுகிறது.

6) சில வழக்குகளில் மருத்துவச் சான்றுக்காகக் காவல்துறையினர் சம்மந்தப்பட்ட கைதிக்குப் பதிலாக வேறு ஒரு நபரை பரிசோதனைக்கு உட்படுத்தி போலி மருத்துவ சான்றைப் பெறுவதற்காக ஆள் மாறாட்டம் செய்துள்ளனர். இதுவும் சிறை மரணத்திற்குக் காரணமாக அமைகிறது.

...ஶ...

# தலித்துகள் மீதான வன்முறைகள்

## கட்டாய வேலை செய்ய சொல்லி தலித் குடும்பத்தினர் சித்திரவதை

கரூர் மாவட்டம், பசுபதிபாளையம் , அடுக்குமாடிக் குடியிருப்பில் வசித்து வரும் சக்திவேல் அவரது மகன் ஸ்ரீ ராகவேந்திராவை வேலைக்கு அனுப்புவதாகச் சொல்லி கவுண்டர் சாதியைச் சேர்ந்த முருகேஷ் கவுண்டரிடம் முன் பணம் பெற்றுள்ளார். ஆனால் சக்திவேல் அவரது மகனால் வேலை செய்ய முடியவில்லை என்று பாதி பணத்தைக் கொடுத்துவிட்டு மீதிப் பணத்தைத் தருவதாகக் கூறியுள்ளார். அதற்கு முருகேஷ் சக்திவேலின் மகனைக் கட்டாயமாக வேலை செய்யச் சொல்ல வேண்டும் என்று சாதிப் பெயரைச் சொல்லி சக்திவேலை இழிவுப்படுத்தி அடித்து சித்திரவதை செய்துள்ளார். இது குறித்து காவல்துறை அதிகாரிகளுக்கு புகார் அனுப்பப்பட்டுள்ளது.

## இருளர் சமூகத்தினரைத் தாக்கிய ஆதிக்க சாதியினர் மீது காவல்துறை நடவடிக்கை எடுக்க மறுப்பு

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், வீர நாயக்கன் குளத்தெருவில் வசித்து வருபவர் முத்து (43) த/பெ. கன்னி. இவர் இருளர் சமூகத்தைச் சேர்ந்தவர். இவர் தனது மனைவி சின்னப்பொன்னுவுடன் ரவி என்பவரது தோட்டத்தில் வேலை செய்து வந்துள்ளார். ரவி என்பவரது தோட்டத்தில் கரும்பு வெட்டிக் கொண்டிருந்தபோது அதே ஊரைச் சேர்ந்த செட்டியார் சாதியைச் சேர்ந்த மனோகரன் த/பெ. ஏகநாதன் என்பவர் கரும்பு வெட்டும் இடத்தில் கறவை மாட்டை மேய்ச்சலுக்காகக் கட்டியுள்ளார். அப்போது முத்து மனோகரனிடம் கரும்பை எல்லாம் எடுத்த பிறகு மாட்டைக் கட்டுங்கள் இல்லையென்றால் மாடு கரும்பை எல்லாம் நாசமாக்கி விடும் என்று கூறியுள்ளார். அதற்கு மனோகரன் வில்லிப் பயலுக்கு இவ்வளவு திமிரா என்று மாட்டை அப்படித் தான் கட்டுவேன் என்று கூறி சட்டைக் காலரை தூக்கிப் பிடித்து கழுத்தை நெறித்துள்ளார். உடனே தோட்ட முதலாளி ரவி அங்கு சென்று மனோகரனைத் தடுத்துள் ளார். அதன் பின்பு அன்று பிற்பகல் 3 மணியளவில் கவுண்டர் சாதியை சேர்ந்த ரவி என்பவர் மனோகரனை அழைத்துக் கொண்டு சென்று மனோகரனும் ரவியும் சேர்ந்துக் கொண்டு

முத்துவையும் முத்துவின் மனைவி சின்னப் பொன்னுவையும் தாக்கியுள்ளார். அப்போது சின்னப் பொன்னுவின் சேலையை உருவி அவமானப்படுத்தியுள்ளனர் அருகிலிருந்தவர்கள் இச்சம்பவத்தை அறிந்து விலக்கி விட்டுள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக 22.08.2009 அன்று வெள்ளி மேடுப்பேட்டை காவல் நிலையத்திற்குச் சென்று முத்து, இருளர் சங்கத் தலைவர் இளங்கோவன், துணைத்தலைவர் மலர் ஆகியோர் சார்பு ஆய்வாளர் சித்தார்த் தனிடம் புகார் கொடுத்துள்ளனர். அன்று இரவே மனோகரன் மற்றும் ரவியை காவலர்கள் கைது செய்துள்ளனர். முத்து அளித்த புகாருக்கு முதல் தகவல் அறிக்கையைப் பதிவு செய்யாமல் 22.08.2009 அன்று வரை காலை, மாலை என்று முத்துவை காவலர்கள் அலைய வைத்துவிட்டு கவுண்டர்களுக்கு ஆதரவாக திண்டிவனம் துணைக் கண்காணிப் பாளர் விசாரணைக்கு ஆதரவாக திண்டிவனம் துணைக் கண்காணிப்பாளர் விசாரணைக்கு வருமாறு கூறி தோட்ட முதலாளி ரவியின் மூலம் மிரட்டி வழக்கை வாபஸ் பெற செய்துள்ளனர். மீண்டும் இது குறித்து விழுப்புரம் சரக நீதி மற்றும் மனித உரிமை பிரிவு துணைக் கண்காணிப்பாளருக்கு 28.03.2009 அன்று இருளர் சங்கத்தினர் மூலம் புகார் அனுப்பப்பட்டுள்ளது.

## தலித் மக்கள் சுடுகாட்டை ஆதிக்க சாதியினர் ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி

திருச்சி மாவட்டம், மணச்சநல்லூர் தாலுகா, சிறுகனூர் பாளையத்தில் தலித் மக்கள் 200 குடும்பங்களும் ரெட்டியார் சமுதாயத்தினர் 300 குடும்பத்தினர்களும் வசித்து வருகின்றனர். தலித் மக்கள் தங்கள் ஊருக்கு அருகே உள்ள சுடுகாட்டை காலம் காலமாக பயன்படுத்தி வந்துள்ளனர். மேற்கண்ட சுடுகாட்டை முன்னாள் தமிழக அமைச்சர் நேருவின் தம்பி ராமஜெயம் பின்னணியில் ரெட்டியார் சமுதாயத்தினர் ஆக்கிரமிக்க முயற்சி எடுத்துள்ளனர். மேற்கண்ட சம்பவத்தினைத் தொடர்ந்து தலித்மக்கள் தீண்டாமை ஒழிப்பு முன்னணி அமைப்பினரோடு இணைந்து அமைச்சர் நேருவை நேரில் சந்தித்து முறையிட்டுள்ளனர். உடனே அமைச்சரும் நடவடிக்கை எடுக்கிறேன் என்று கூறியிருக்கிறார். அதன் பின்னே ஆதிக்க சாதியினர் நிலம் ஆக்கிரமிப்பைக் கைவிட்டிருக்கின்றனர். தலித் மக்களின் போராட்டங்களுக்கு பிறகு நிலம் காப்பற்றப்பட்டிருக்கிறது.

## காதல் திருமணம் செய்ததால் இழிவுப்படுத்தப்படுதல்

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தாலுகா பாம்பூர் சேர்ந்தவர் சுரேஷ். இவர் பண்டார சாதியைச் சேர்ந்தவர். இவர் ஆசைத்தம்பி நாயக்கர் என்பவரின் மகள் ஆனந்த லெட்சுமி என்பவரைக் காதலித்து திருமணம் செய்து வேறு ஊருக்கு அழைத்துச் சென்று தனியாக வாழ்ந்து வருகிறார்கள். மேற்கண்ட சம்பவத்தினால் நாயக்கர் சாதியினர் 11.03.2010 அன்று பண்டார சாதியினர் வசிக்கும் வீடுகளுக்கு முன்பு சென்று வேஷ்டியை அவிழ்த்து நிர்வாணமாக நின்று கொண்டு பண்டார சாதிப் பெண்களைப் பார்த்து அவமானமாகப் பேசித் தாக்க முயற்சித்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பாகக் காவல் துறையினரிடம் புகார் கொடுத்து இது வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

## காவல் துறையில் புகார் கொடுத்த தலித்துக்கள் மீது ஆதிக்க சாதியினர் கடுமையான தாக்குதல்

இராமநாதபுரம் மாவட்டம், கமுதி தாலுகா, பெருநாழி அருந்ததியர் காலனியில் வசிப்பவர் ராம்கி என்பவருக்கும் பெருநாழி தேவர் சமுதாயத்தைச் சேர்ந்த சோலைத்தேவருக்கும் பிரச்சினை ஏற்பட்டதில் ராம்கியை சோலைத் தேவர் சாதியைச் சொல்லி இழிவாகத் திட்டியும், அடித்தும் காயப்படுத்தியுள்ளார். இச்சம்பவத்திற்காக அருந்ததியர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் பெருநாழி காவல் நிலையத்தில் தேவர் சாதியினர் மீது புகார் கொடுத்துள்ளனர். இதனால் ஆத்திரம் அடைந்த தேவர் சாதியினர் 16.01.2010 அன்று மதியம் சுமார் 3 மணி அளவில் பெருநாழி வேல்சாமிதேவர் மகன் பிரபு, நாகசுந்தரம் மகன் இராமர், திருமால் தேவர் மகன் முனீஸ்வரன், இருளாண்டி மகன் மணிகண்டன், முத்துராமன் மகன் லெட்சுமணன், மேலும் பலர், கம்பு, உருட்டுக் கட்டை, கத்தி, அரிவாள் போன்ற ஆயுதங்களோடு அருந்ததியர் காலனியில் புகுந்து வீடுகளை அடித்து நொறுக்கியும், கதவுகளை உடைத்தும் ‘சக்கிலிய தாயோழிகளே இவ்வளவு திமிரா போலீஸீல கம்பளைண்ட் குடுக்கறீங்க இதோட ஒழிஞ்சு போங்க ஊரைவிட்டு ஓடுங்க’ என்று தாக்குதல் நடத்தியுள்ளனர். இது குறித்து காவல் துறையில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனாலும் தலித் மக்கள் உயிருக்கு அஞ்சி வாழ வேண்டிய நிலை தான் உள்ளது.

## தலித் மீது கொலை வெறி தாக்குதல்

இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் தாலுகா, மீசல் கிராமம் அருந்ததியர் வகுப்பைச் சேர்ந்த மாயன் மகன் சுந்தராஜன். கடலாடி தாலுகா, சிக்கல் என்ற ஊரில் வெல்டிங் ஒர்க்ஷாப் வைத்துள்ளார். அதே கிராமத்தைச் சேர்ந்தவர் பணம் கொடுத்து கேட் மற்றும் சன்னல்ஆர்டர் கொடுத்த நிலையில் சுந்தராஜன் செய்து கொடுத்துவிட்டார். அதன்பிறகு முன் பணம் கொடுக்காமல் கிரில் கேட் செய்யச் சொல்லியபோது சுந்தராஜன் ராடு வாங்க முன் பணம் கேட்டுள்ளார். ஆனால் போஸ் பணம் கொடுக்கவில்லை. இதனால் அவர் கேட்ட கிரில் கேட்டை சுந்தராஜன் செய்யவில்லை. ஒரு தேவன் சொல்லி ஒரு சக்கிலியன் கேட் செய்து தர மறுக்கிறானா என சாதியைச் சொல்லி இழிவாகத்திட்டி செருப்பால் அடித்து இடது கையில் வெட்டி கொலை செய்ய முயன்றுள்ளார்.

## தலித் பெரியவரைச் சாதி சொல்லி இழிவாகத் திட்டிய சாதி இந்து

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தாலுகா, நாயனார் கோவில் ஒன்றியம் கிளியூர் நடுக்குடியிருப்பில் தலித் சமூகத்தைச் சேர்ந்த இருளாண்டி மகன் மாசாணம் என்பவர் சாதி இந்துவான முருகனுக்கு கடன் கொடுத்துள்ளார். கொடுத்த பணத்தை திருப்பிக் கேட்ட போது முருகனும், அவரது குடும்பத்தாரும் மாசாணத்தை சாதிப் பெயரைச் சொல்லி இழிவுப்படுத்தி கொலை செய்வதாக மிரட்டியுள்ளனர். இதுக் குறித்து மாசாணம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே உள்ள கேணிக்கரை காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார். நடவடிக்கை எடுக்காத நிலையில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் உள்ள மனித

உரிமைப் பிரிவில் விசாரணை செய்துள்ளார்கள். அதன் பின்பு மக்கள் கண்காணிப்பகம் சார்பாக தாழ்த்தப்பட்டோர், மனித உரிமை ஆணையங்களுக்கு புகார்கள் அனுப்பப்பட்டது. அதன் அடிப்படையில் மக்கள் கண்காணிப்பக இயக்குநர், மாநில தாழ்த்தப்பட்டோர் ஆணையம் அவர்களின் உத்தரவின் பெயரில் தான் 18.10.2010 மு.த.சு.எண். 415/2000 சட்டப்பிரிவுகள் *294 506 (1) 3 (1)(x )SC/ST- 1989*-ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

## புகார் கொடுக்கச் சென்ற தலித் வாலிபரை சித்திரவதை செய்து பொய் வழக்கு

விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் தாலுகா, வடக்குமலையடிப்பட்டி தலித் வகுப்பைச் சேர்ந்த புளுகண்டி மகன் கருப்புசாமி. ஆடு மேய்க்கும் தொழில் செய்து வருகிறார். அவருடைய ஆடு திருடு போனதாகப் பாண்டியன் நகர் கிருஷ்ணம்மாள் மீது இராசபாளையம் வடக்கு காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார். ஆனால் காவல்துறையினர் கிருஷ்ணம்மாளிடம் பணம் வாங்கிக் கொண்டு கருப்புச்சாமியை அடித்து சித்திரவதை செய்து வெளியில் சொல்லாமலிருக்க கருப்புசாமி மீது கு. எண். 158/2010இன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

## நாமக்கல் மாவட்டத்தில் கொத்தடிமை

தர்மபுரி மாவட்டம், பாகனஹள்ளி கிராமத்தைச் சார்ந்த சுமித்ரா மற்றும் சரோஜா குடும்பத்தினர் தனது கணவர் மற்றும் குழந்தைகளுடன் கடந்த 4 வருடங்களுக்கு முன்பு நாமக்கல் மாவட்டத்தைச் சார்ந்த சக்தி சரவணா சேம்பர் உரிமையாளர் முருகேசன் என்பவரிடம் ரூ.20,000/- அட்வான்ஸ் வாங்கி கொண்டு வேலைக்குச் சேர்ந்துள்ளனர். செங்கல் சூளையில் குடும்பத்துடன் தங்கி காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை வேலை செய்துள்ளனர். அவர்கள் வேலை செய்த சம்பளப் பணத்தில் பாதி பிடித்தம் செய்து கொண்டு மீதி மட்டும் வரவு வைக்காமலேயே முருகேசன் கொடுத்து வந்துள்ளார். மேலும் வெற்று பாண்டு பேப்பரில் கையெழுத்து வாங்கி வைத்துக் கொண்டு தொடர்ந்து மிரட்டியும் வந்துள்ளார். இச்சம்பவம் அறிந்து நாமக்கல் மாவட்ட மனித உரிமைக்கான குடிமக்கள் இயக்கத்தை சேர்ந்த தன லெட்சுமி மற்றும் உறுப்பினர்கள் ஆகியோர் நேரில் விசாரணை செய்து 16.11.2010 அன்று மாவட்ட ஆட்சியருக்கு புகார் அனுப்பியதன் அடிப்படையில் சுமித்ரா மற்றும் சரோஜா ஆகியோரது குடும்பத்தினரை உடனடியாக மீட்டு வந்துள்ளனர். தர்மபுரி மாவட்ட ஆட்சியர் இவர்களின் குடும்பத்திற்கு நிவாரணத் தொகை வழங்கியுள்ளார்.

## தலித் இளைஞரை சாதி இந்துக்கள் வெட்டிப்படுகொலை

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தாலுகா, திருப்புவனம் ஒன்றியம், கொந்தகை இந்து-பள்ளர் சாதியைச் சேர்ந்த இராமயைா மகன் ஹரி கிருஷ்ணன் என்பவர் 2009-ம் ஆண்டு தியாகி இமானுவேல் சேகரன் நினைவு நாளில் சிறப்பாக விழா நடத்தியதால் சாதி இந்துக்கள் 29.08.2010 இரவு சுமார் 7.30 மணியளவில் ஹரி கிருஷ்ணனையும் அவரது நண்பர் விஜயனையும் சாதி இந்துக்கள் ஏற்பாடு செய்த கார்த்திக் என்பவர் மூலம் பேச்சு கொடுத்து

தென்னந்தோப்பிற்குள் அழைத்துச் சென்று கொடூரமான முறையில் வெட்டிக் கொலை செய்து ஹரி கிருஷ்ணனின் உடலைக் கிணற்றில் வீசியுள்ளனர். திருப்புவனம் காவல் நிலைய ஆய்வாளர் உண்மையானக் குற்றவாளியை கைது செய்யாமல் தலித் மக்கள் 20 பேர் மீது பொய் வழக்கு போட்டு சித்திரவதை செய்துள்ளார்கள்.

## கோவிலுக்குள் நுழைந்த தலித் பெரியவர் மீது ஆதிக்க சாதியினர் தாக்குதல்

விருதுநகர் மாவட்டம், அருப்புகோட்டை வட்டம், புலியூரான் அருகே உள்ள தென்பாலை இந்து-பள்ளர் சாதியைச் சேர்ந்த கருப்பனூர் மகன் மாரியப்பன் என்பவர் திருச்சுழி மாரியம்மன் கோவிலுக்கு சாமி கும்பிடச் சென்றபோது, திருச்சுழியில் ஹோட்டல் நடத்தி வருகின்ற இந்து மறவர் சாதியைச் சேர்ந்த கருப்பு என்பவர் 'பள்ளப் பயலுகள் எல்லாம் எவ்வளவு தைரியமிருந்தால் கோவிலுக்குள் வருவீங்க' எனக் கூறி மாரியப்பன் தலையில் கல்லால் அடித்து காயம் ஏற்படுத்தியுள்ளார். பாதிக்கப்பட்டவர் புகார் கொடுத்தும் திருச்சுழி காவல் துறையினர் நடவடிக்கை எடுக்க மறுத்துள்ளனர்.

## தலித் விவசாயி கருப்பையாவை சாதியைச் சொல்லி இழிவாகத்திட்டி கொடூரமாகத் தாக்கிய சாதி இந்துக்கள்

இராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை தாலுகா, காரங்காட்டைச் சேர்ந்த தலித் கருப்பையா தனது சொந்த நிலத்தில் விவசாயம் செய்து வந்துள்ளார். இந்நிலையில் அவரது நிலத்தைச் சுற்றியுள்ள வயல்களில் சாதி இந்துக்கள் தொடர்ந்து சாதியைக் காரணம் காட்டி அவர் வரப்பு வழியாக நடந்து செல்வதற்கு தடுத்து வந்துள்ளார்கள். கடந்த 08.11.2010 அன்று சாதி இந்துக்களான பெருமாள் அவரது மகன் பெரியசாமி, அவரது மனைவி குஞ்சரம் மற்றும் அவர்களது உறவினர்கள் வரப்புப் பிரச்சினையில் கருப்பையாவைச் சாதியைச் சொல்லி இழிவாகத் திட்டி தாக்க முயற்சித்துள்ளனர். கருப்பையா அங்கிருந்து தப்பி உயிருக்குப் பயந்து ஓடியுள்ளார். இச்சம்பவம் தொடர்பாக இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் உட்பட பல உயர் அதிகாரிகளுக்கு 10.11.2010 அன்று புகார் அனுப்பப்பட்டுள்ளது.

## பழங்குடி பெண் மீது வன்முறை

விழுப்புரம் மாவட்டம், சின்னதச்சர் கிராமம், குளத்தங்கரை தெருவில் வசிக்கும் எழுமலை மனைவி அஞ்சாலாட்சி. இவர் இந்து-இருளர் வகுப்பைச் சார்ந்தவர். இவருக்கு இரண்டு ஆண் குழந்தையும் 1 பெண் குழந்தையும் உள்ளது. கணவர் மனைவி இருவரும் விறகு வெட்டி வாழ்ந்து வந்துள்ளனர். 09.08.2009 அன்று இரவு 1 மணியளவில் அஞ்சாலட்சி வீட்டிற்கு முன்பு குழந்தைகளுடன் தூங்கி கொண்டிருக்கும் போது அதே பகுதியைச் சார்ந்த சின்னராசு கவுண்டர் மகன் லட்சுமணன் அஞ்சாலட்சியைக் கட்டிபிடித்து ஜாக்கெட்டை கிழித்து பாலியல் பலாத்காரம் செய்ய முயன்றுள்ளார். அஞ்சாலாட்சி சத்தம் போடவே அருகில் படுத்திருந்த கணவர் ஓடிவந்து லட்சுமணனைத் தடுத்துள்ளார். உடனே லட்சுமணன் ஓடிப்போய் தோட்டத்திற்கு சென்று கொடுவாய் கத்தியை எடுத்து வந்து எழுமலையையும் அவரது.

மனைவியையும் கொலை செய்து விடுவதாக மிரட்டி அஞ்சலாட்சியை வன்புணர்ச்சிக்கு இழுத்துச் சென்றுள்ளார். அஞ்சலாட்சி லட்சுமணனிடம் இருந்து தப்பித்து கணவனுடன் பெரிய தச்சூர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்துள்ளார். காவல் நிலையத்தில் காவல் நிலைய குற்ற எண் 122/09 நாள் 10.08.2009 இதச பிரிவுகள் *294 (6) 323, 506*-இன் கீழ் மற்றும் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமைத் தடுப்பு சட்டம் 1989 பிரிவு 3 (1) (ஒ)-இன் கீழ் வழக்கு பதிவு செய்து லட்சுமணை கைது செய்துள்ளனர்.

## துப்பரவு தொழிலாளி விஷ வாயு தாக்கி மரணம்

திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் காவல் நிலையத்திற்கு உட்பட்ட பாண்டமங்களம் புதுக்காலனி சேர்ந்த பழனி என்பவரின் மகன் சுந்தர்ராஜ், லெட்சுமணன் என்பவரது நிறுவனத்தில் செப்டிக் டேங்க் சுத்தம் செய்யும் வேலை செய்து வந்துள்ளனர். கடந்த 21.06.2010 அன்று மதியம் 1.30 மணியளவில் பழனி மற்றும் சுந்தர்ராஜன் ஆகிய இருவரும் வேலை செய்து கொண்டிருந்த போது விஷ வாயு தாக்கி இருவரும் மரணம் அடைந்துள்ளனர். பாதுகாப்பு உபகரணங்கள் ஏதும் இல்லாமல் செப்டிக் டேங்க் சுத்தம் செய்யும் தொழிலில் பழனி மற்றும் சுந்தராஜனை ஈடுபடுத்திய லெட்சுமணன் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

## அருந்ததியர் இளைஞன் அடித்துச் சித்திரவதை

கரூர் மாவட்டம், வட்டம், தாயுப்பட்டி கூலி நாயக்கனூர் காலனியைச் சேர்ந்த முத்துச்சாமி மகன் மாறன். இவர் சொந்தமாக மினி டெம்போ ஓட்டி வருகிறார். இவர் சொந்த வண்டி வாங்குவதற்கு முன்பு, நகுல்சாமி கவுண்டரிடம் வேன் டிரைவராகப் பணி செய்து வந்தார். அப்போது முன் பணமாக ரூ. 12,000 பெற்று இருந்தார். அதில் 10000 ரூபாய் திருப்பிக் கொடுத்து விட்டார். மீதம் உள்ள ரூ. 2000 மட்டும் திருப்பிக் கொடுக்க வேண்டியிருந்தது. அதனால் நகுல்சாமி கவுண்டர் மாறனை எந்த இடத்தில் பார்த்தாலும் மிகக் கேலவமாகத் திட்டியுள்ளார். இந்நிலையில் 27.07.2010 அன்று மதியம் 1.30 மணியளவில் நகுல்சாமி மாறனை போன்செய்து வரச்சொல்லி தெருவில் வைத்து ‘சக்கிலிய நாயே, தேவடியா பயலே’ எனக் கேவலமாகத் திட்டி அடித்து உள்ளார். இது குறித்து மாறன் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார். காவல் துறையினர் நகுல்சாமி மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

## தலித் இளைஞர்களுக்கு உழைப்புக்கேற்ற கூலி வழங்காமல் ஏமாற்றிய சம்பவம்

தர்மபுரி மாவட்டம், கடத்தூர் காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட புதுப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த 5 இளைஞர்களான மாதேஷ் த/பெ. நாகன், திருமலை த/பெ ராமன், மூர்த்தி தபெ. நாகன், அழகேசன் த/பெ. ஈஸ்வரன் ஆகியோர்கள் ஆதி திராவிடர் சமூகத்தை சேர்ந்தவர்கள். கடந்த 17.11.2010 முதல் 24.12.2010 வரை தர்மபுரி மாவட்டம், பாப்பிரெட்டிபட்டி தாலுகா, கடத்தூரைச் சேர்ந்த வஸந்த் என்பவரின் மூலம் கட்டிட சென்டிரிங் பணிக்கு நாள் சம்பளம் 300ரூ. எனப்பேசி சிவகங்கை மாவட்டத்திலும், மதுரையிலும் வேலை செய்துள்ளனர். ஆனால் வஸந்த் பேசிய படி சம்பளப் பணத்தை முழுமையாக தராமல் ஏமாற்றியுள்ளனர்.

## தலித்துக்குச் சொந்தமான நிலத்தை ஆக்கிரமிப்பு செய்ய அடியாட்களுடன் சென்று தாக்குதல்

கடலூர் மாவட்டம், விருத்தாச்சலம் சிறு நெசலூர் என்.மே. நாராயணசாமி இவர் திருச்சியிலிருந்து சென்னை செல்லும் நெஞ்சாலை அருகே கழியால் வீடு கட்டி மரக்கன்று களை வைத்து பராமரித்து வந்துள்ளார். இந்நிலையில் 08.04.2011 அன்று உடையார் சாதியை சேர்ந்த வேல்முருகன், ஓம் பிரகாஷ், பன்னீர் செல்வம் உள்ளிட்ட நபர்கள் கும்பலாகச் சென்று நாராயண சாமியின் வீட்டை உடைத்து மரக்கன்றுகளைப் பிடுங்கி எரிந்து விட்டு அந்த இடத்தில் குடியிருக்கக் கூடாது என மிரட்டியதோடு நாராயணசாமி, அவருடைய அண்ணன் மஞ்ச முத்து, அம்மா மஞ்சாயி ஆகிய மூவரையும் உருட்டுக் கட்டையால் தாக்கி சாதிப் பெயரைச் சொல்லி இழிவுப்படுத்தியுள்ளனர். மேலும் இனிமேல் அந்த இடத்தில் குடியிருந்தால் கொலை செய்து விடுவதாகவும் மிரட்டிச் சென்றுள்ளனர்.

## மயான பிரச்சினையில் தலித் குடும்பத்தினர் ஊரை விட்டு வெளியேற்றம்

கடலூர் மாவட்டம், திட்டக்குடி தாலுகா, தெய்வாசல் கிராமத்தில் ஆதி திராவிடர் குடியிருப்பில் மேல்பாதி, கீழ்பாதி என்ற என இரு வழிப்பாதையில் பன்னீர் என்பவருக்கு சொந்தமான இடம் உள்ளது. ஊர்மக்கள் மயானத்திற்குச் செல்லும் போது இடைஞ்சல் உள்ளதால் ஒரு தரப்பினர் மரங்களை வெட்டியுள்ளனர். எனவே இரு தரப்பினருக்கும் மோதல் ஏற்பட வட்டாச்சியர் தலைமையில் சமாதானக் கூட்டம் நடந்துள்ளது. பன்னீர் தனது நிலத்தை அளந்து எடுத்துக் கொள்ள முடிவு செய்யப்பட்டது. அதன் அடிப்படையில் மரங்கள் பன்னீருடைய இடத்தில்தான் உள்ளன என்பதால் பாதைக்கு தனது இடத்தை தர மறுத்திருக்கிறார். எனவே உயர் சாதியினர் தாழ்த்தப்பட்ட சமூகத்தை சேர்ந்த பன்னீரின் உறவினர்களான 7 குடும்பத்தினரை அடித்துத் தாக்கி விரட்டியுள்ளனர். உயிருக்கு பயந்து 7 குடும்பத்தினர்களும் ஊரை விட்டு வெளியேறி உறவினர் கிராமங்களில் தஞ்சம் அடைந்துள்ளனர். இது குறித்துக் காவல் துறை நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

## தலித் பெண்ணைக் காதலித்து திருமணம் செய்ய மறுக்கும் சாதி இந்து

கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், மாணிக்கம்பட்டு, இந்து, ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த சக்கரவர்த்தி மகள் தமிழ்ச் செல்வி. கடலூர் கே.என்.சி. கல்லூரியில் பி.ஏ, இரண்டாம் ஆண்டு படித்து வந்துள்ளார். அதே போல கடலூர் அரசுக் கலைக் கல்லூரியில் எக்னாமிக்ஸ் பாடப்பிரிவில் படித்து வந்த சிறுவத்தூர் இந்து-வன்னியர் சமூகத்தைச் சேர்ந்த ஆறுமுகம் மகன் அசோக். தமிழ்ச் செல்வியும், அசோக்கும் காதலித்து வந்துள்ளார்கள். கடந்த ஒரு வருடமாக மிகவும் நெருக்கமாகப் பழகி வந்த நிலையில் 26.02.2010 அன்று இரவு சுமார் 7 மணியளவில் தமிழ்ச்செல்வி செல்போன் மூலமாக தொடர்புக் கொண்டு அவரைத் திருமணம் செய்து கொள்ளுமாறு கேட்டுள்ளார். அதற்கு அசோக் மறுக்கவே உடலாலும்,

மனதாலும் பாதிக்கப்பட்ட தமிழ்ச்செல்வி அவரது உடலில் மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்து தற்கொலைக்கு முயற்சித்துள்ளார். தற்கொலை செய்வதை பார்த்த சிலர் தமிழ்ச் செல்வியை காப்பாற்றி பண்ருட்டி அரசு மருத்துவமனையில் சேர்த்து முதலுதவி செய்துள்ளனர். பின்னர் பாண்டிச்சேரி அரசு மருத்துவமனையில் தமிழ்ச்செல்வியை சேர்த்துள்ளார்கள். காயங்களுடன் சிகிச்சையிலிருந்தவரிடம் வாக்குமூலம் பெற்ற காவல் துறையினர் வழக்குப் பதிவு செய்துள்ளனர். இதனால் பாதிப்பை ஏற்படுத்திய அசோக் நீதிமன்றத்தில் சரணடைந்துள்ளார்.

## இரு தரப்பினரிடையே மோதல்

திண்டுக்கல் மாவட்டம், 14 மேலக்கோட்டை (அம்பாத்துறை) பகுதியில் தலித் சமூகத்தினரும், பிற்படுத்தப்பட்ட சமூகத்தினரும் வசித்து வருகின்றனர். 07.03.2010 அன்று பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த சண்முகம் என்பவர் இறந்து விட்டதால் அவரைப் புதைத்து விட்டு திருப்பும் போது தலித் சமூகத்தினருக்கும், பிற்படுத்தப்பட்ட இளைஞர் களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டுள்ளது. யாரோ அளித்த தகவலின் பேரில் காவலர்கள் அங்கு சென்றதால் பிரச்சினை பெரிய அளவில் ஏற்படாமல் தடுக்கப்பட்டது. காவலர்களிடம் ஊருக்குள்அவர்களாகவே பேசி சமாதானம் செய்து கொள்வதாகவும், வழக்கு வேண்டாம் என்றும் ஊர் தரப்பினர் கூறியுள்ளனர். ஆனால் தலித் சமூகத்தினர் இப்பேச்சு வார்த்தைக்குச் செல்லவில்லை. இதனால் ஆத்திரமடைந்த பிறப்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த செந்தில் என்பவர் தலித் சமூகத்தினரின் குடியிருப்புகளுக்குச் சென்று பேச்சு வார்த்தைக்கு அழைத்தால் வர மாட்டீங்களா என்று சாதியைச் சொல்லித் திட்டி மிரட்டியுள்ளார் அதனால் மீண்டும் இரு தரப்பினரிடையே பிரச்சினை ஆரம்பானது. இரு தரப்பினரும் மோதிக் கொண்டதில் பிறப்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த செந்தில், குமரேசன், கலைமணி, சிவஞானம் ஆகியோரும் தலித் சமூகத்தைச் சேர்ந்த முத்துச்செல்வி, காமாட்சி, கணேசன் ஆகியோரும் காயமடைந்தனர். பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த காயமடைந்த நபர்கள் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளனர். திமுக ஒன்றிய செயலாளர் முரளிதரன் இரு தரப்பினரையும் அழைத்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். பாதிக்கப்பட்ட தலித் சமூகத்தினர் சார்பாக எந்தவித நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை. அதனால் விடுதலை சிறுத்தைகள் அமைப்பினர் தலித் சமூகத்தைச் சேர்ந்த பாதிக்கப்பட்டவர்களான முத்துச் செல்வி , காமாட்சி, கணேசன் ஆகியோர் சார்பாக காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளனர். காயம் பட்டவர்கள் அரசு மருத்துவமனையில் மருத்துவ சிகிச்சைப் பெற்றுள்ளனர்.

## கோவில் திருவிழாவில் தலித்துகள் பங்கேற்க தடை

திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில், வீரணாபுரம் பகுதியில் தாழ்த்தப்பட்ட பள்ளர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் வசித்து வருகின்றனர். வீரணாபுரத்தில் இருந்து 1 கி.மீ தூரத்தில் பிள்ளையார்குளத்தில் வட பத்திரகாளியம்மன் கோவில் உள்ளது. அந்த கோவில் பள்ளர் சமூகத்தினருக்கும், தேவர் சமூகத்தினருக்கும் சொந்தமானது ஒவ்வொரு ஆண்டும் இரு

தரப்பினரிடமும் வரி வசூல் செய்யப்படும். 2006 ஆம் ஆண்டு இந்தக் கோவில் திருவிழாவின் போது தாழ்த்தப்பட்ட பள்ளர் சமூகத்தைச் சேர்ந்த இளைஞர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களின் படத்தை கொண்ட பனியன் அணிந்து சென்றுள்ளார். அதனால் தேவர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் அந்த இளைஞரைத் தாக்கியுள்ளனர். அதன் பின்பு காவல் சார்பு ஆய்வாளர் இரு தரப்பினரையும் சமாதானம் செய்து வைத்துள்ளார். மீண்டும் 2007-ஆம் ஆண்டு திருவிழாவில் தாழ்த்தப்பட்ட மக்கள் பங்கேற்றனர். அதன்பின்பு அவர்கள் திருவிழாவில் பங்கேற்க தடை விதிக்கப்பட்டது இது குறித்து சங்கரன்கோவில் காவல் துணைக் கண்காணிப் பாளிடம் புகார் கொடுக்கப்பட்டுள்ளது. மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இவ்வழக்கை விசாரித்து திருவிழாவில் பங்கேற்க இரு தரப்பினருக்கும் சம உரிமை உண்டு. இதை எதிர்த்து தேவர் சாதியினர் சங்கரன்கோவில் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளனர். தாழ்த்தப்பட்ட மக்கள் ஸ்டே ஆர்டர் வாங்கியுள்ளனர். இந்நிலையில் 2009ஆம் ஆண்டு உத்தபுரம் பிரச்சினை ஏற்பட்டபோது புளியங்குடி காவல் துணைக் கண்காணிப்பாளர் மயில்வாகனன் வீரணாபுரத்தில் உள்ள தாழ்த்தப்பட்ட இளைஞர்களை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கைது செய்துள்ளார். உடனே தாழ்த்தப்பட்ட பொதுமக்கள் கைது செய்தவர்களை அழைத்துச் செல்லக் கூடாது என மறியலில் ஈடுபட்டுள்ளனர். அதனால் ஆத்திரமடைந்த காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் அவர்கள் குலசரபேரி செங்கல் சூளைக்கு தீ வைக்கப்பட்டதற்கு தாழ்த்தப்பட்ட மக்கள்தான் காரணம் என்று அவர்கள் மீது பொய் வழக்கு போட்டுள்ளார். இவ்வாறு தேவர் சாதியினராலும் அவர்களுக்கு ஆதரவாக செயல்படும் காவல் துறையின ராலும் தாழ்த்தப்பட்ட மக்கள் பல்வேறு பிரச்சினைகளை சந்தித்துக் வருகின்றனர்.

## புகார் கொடுக்கச் சென்ற தலித் வாலிபரைச் சித்திரவதை செய்து சிறையில் அடைப்பு

சிவகங்கை மாவட்டம், சாக்கூர், ஏரிவயல் பகுதியில் வசிக்கும் தலித் சமூகத்தைச் சேர்ந்த காளிமுத்து மகன் முனியசாமி. 6.10.2010 அன்று இரவு சுமார் 10.30 மணியளவில் அவரது ஊரான சாக்கூருக்கு காளையார்கோவிலிலிருந்து சூராணம் சென்ற அரசுப் பேருந்தில் சென்று வலையம்பட்டி பேருந்து நிறுத்தத்தில் இறங்கியுள்ளார். ஏரிவயல் செல்லும் பேருந்து வந்தபோது முனியாண்டி பஸ்சை நிறுத்த சைகை காட்டியபோது நடத்துனர் பஸ்சை நிறுத்தாமல் செல்லவே, பஸ்சிலிருந்த முனியசாமி ஏரிவயலுக்கு இதுதான் கடைசி பஸ் என்று கூறி பஸ்சை நிறுத்துமாறு கூறவே நடத்துனர் கண்ணன் பஸ்சை நிறுத்த முடியாது என்றும், முனியசாமியைப் பார்த்து சாதியைச் சொல்லி இழிவாகப் பேசி அடிக்க முயற்சி செய்துள்ளார். அப்போது பஸ்சில் பயணம் செய்த புஷ்பம், ராசாக்கண்ணு ஆகியோர் நடத்துனரிடமிருந்து முனுசாமியைப் பாதுகாத்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக முனியசாமி 7.10.2010 அன்று காளையார்கோவில் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்துள்ளார். முனியசாமியைக் காவல் நிலையத்தில் உட்கார வைத்துவிட்டு நடத்துனர் சாதி இந்து என்பதால் அவரை வரவழைத்து அவரிடம் ஒரு புகார் வாங்கிக் கொண்டு சார்பு ஆய்வாளர் கங்கைநாதப் பாண்டியன் அவரது சொந்த சாதிக்காரரான நடத்துனர் மீது புகார் கொடுத்ததற்காக

முனியசாமியைக் கொடூரமான முறையில் சித்திரவதை செய்து இ.த.ச. 294(b), 506(ii) ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்து சிறையில் அடைத்துள்ளார். பிணையில் வெளி வந்த முனியசாமி, காளையார்கோவில் சார்பு ஆய்வாளர் கங்கைநாதப் பாண்டியன் செய்த மனித உரிமை மீறலுக்கு மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட உயர் அதிகாரிகளுக்கு பதிவுத் தபால் மூலம் புகார் அனுப்பியுள்ளார். முறையான விசாரணையோ, நடவடிக்கையோ இல்லாத நிலையில் பாதிக்கப்பட்டவர் தனி நபர் வழக்காக சிவகங்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

## தலித் சமூகத்தினரைக் காவல் துறையினர் அடித்துச் சித்திரவதை

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், சீர்காழி நகரக் காவல் எல்லைக்குட்பட்ட திட்டை, தென்னங்குடி, சீர்காழி போன்ற ஊர்களில் உள்ள விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தோழர்கள், கடையில் வேலை பார்த்த ஒரு தலித் பெண்ணைப் பாலியல் பலாத்காரம் செய்து, அதனை வெப்சைட்டில் வெளியிட்ட கடை உரிமையாளர் மீது புகார் கொடுக்க காவல் துறையினர் கடை உரிமையாளரிடம் கையூட்டுப் பெற்றுக் கொண்டு நடவடிக்கை எடுக்க வில்லை. அதனால் காவல்துறையை எதிர்த்து 5.10.2010 அன்று ஆர்ப்பாட்டம் நடத்தி யுள்ளனர். அதற்காக அன்று இரவு சீர்காழி காவல் துறையினர் வீடு, வீடாக சென்று அவர்களைப் பிடித்து எந்த விசாரணையும் மேற்கொள்ளாமல் அடித்து பல்வேறு காயங்களை ஏற்படுத்தி காவல்நிலையத்தில் சட்ட விரோதக் காவலில் வைத்து, பல்வேறு சித்திரவதைகளைச் செய்து வந்தனர். இதில் நடராஜன், சங்கர், ராஜ்குமார், மகேந்திரன், கிருஷ்ணமூர்த்தி மற்றும் பலர் கொடூரமாகத் தாக்கப்பட்டு இரத்தக்காயங்களுடன் பல்வேறு உடல் உறுப்புகள் சிதைந்துள்ளதாகத் தெரிகிறது.

## தலித் பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு நெருக்கடி

விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டத்தில் உள்ள 48 கிராம ஊராட்சிகளில் புல்வாய்ப்பட்டி, முத்துச்சாமிபுரம், ரெங்கப்பநாயக்கன்பட்டி, ரெட்டியப்பட்டி, கடையம்பட்டி, சங்கர்நத்தம், சிறுகுளம், என்.வெங்கடேசபுரம் ஆகிய தனித் தொகுதி ஊராட்சிகளில் அருந்ததியர் பஞ்சாயத்துத் தலைவர்களாக இருக்கும் புல்வாய்ப்பட்டி, ரெங்கப்பநாயக்கன்பட்டி, சங்கர்நத்தம் ஆகிய பஞ்சாயத்துக்களில் சாதி இந்துக்கள் பஞ்சாயத்து அலுவலகத்திற்குள் நுழைய விடாமல் தடுத்துள்ளனர். இதனால் 4 ஆண்டுகள் பஞ்சாயத்து வளர்ச்சிப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன. பொதுமக்கள் வளர்ச்சிப் பணிக்கு ஒத்துழைப்பு கொடுக்க மறுத்து வருகிறார்கள். தேர்தலில் முறையாகத் தேர்வு செய்தவர்கள்தான் பஞ்சாயத்துத் தலைவராக இருக்கிறார்கள். ஆனால் மக்கள் புரிந்து கொள்ளாமல் உள்ளனர். அரசு இதைக்குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என தலித் பஞ்சாயத்துத் தலைவர்கள் புகார் அனுப்பியுள்ளார்கள்.

## ஜெபம் செய்ய வந்த பாதிரியார் மற்றும் அருந்ததியர் பெண்களை ஆதிக்க சாதியினர் தாக்குதல்

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், நல்லாம்பட்டியில் உள்ள கதவு எண்-82, பட்டத்தரசி அம்மன் தெருவில் வசிக்கும் இந்து, அருந்ததியர் வகுப்பைச் சேர்ந்த சம்பூர்ணம் என்பவரது வீட்டில், பாதிரியார் பிரபு என்பவரிடம் இவர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க குடும்ப ஜெபம் செய்ய வந்து ஜெபம் செய்துகொண்டு இருந்தார். அப்போது அங்கு அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்த கவிதா, ராமாத்தாள், மாரியம்மாள், மல்லிகா, துரைசாமி ஆகியோரும் ஜெபத்தில் கலந்துக் கொண்டுள்ளனர். இவர்கள் எல்லாம் கிறிஸ்துவ மதத்திற்கு மாறிவிட்டால் தங்கள் விவசாய நிலங்களில் கூலி வேலை செய்ய யாரும் வரமாட்டார்கள் என்பதற்காக ஆதிக்க சாதியைச் சேர்ந்தவர்கள் ஜெபத்தில் கலந்துக் கொண்டவர்களையும், ஜெபம் நடத்த வந்த பாதிரியார் பிரபுவையும் மிக மோசமாகத் திட்டியும், தாக்குதல் நடத்தியும், கொலை மிரட்டல் விட்டதுடன் பாதிக்கப்பட்டவர்களை மருத்துவமனைக்கு செல்ல அனுமதிக்கவில்லை. அதன்பிறகு சம்பூரணத்தின் மகன் வந்த பிறகு ஈரோடு அரசு மருத்தவமனையில் சிகிச்சை எடுத்துள்ளார்கள். இது குறித்து மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்து எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதன்பிறகு மக்கள் கண்காணிப்பகம் தலையிட்டதின் பேரில் காவலர்கள் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

## தலித் இளம் பெண் கிணற்றில் விழுந்து தற்கொலை

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தாலுக்கா, நாகதாசம்பட்டி ஆதி திராவிடர் காலனியைச் சேர்ந்த மாதையன், நீலா என்பவர்களின் இரண்டாவது மகள் குஷ்பு கௌரி என்பவர் நூல் மில்லில் கடந்த 3 வருடகாலமாக தினக் கூலியாக வேலை செய்து வந்துள்ளார். இதே கிராமத்தைச் சேர்ந்த 7 பெண்கள் வேலைக்கு சென்று வருகின்றனர். இந்நிலையில் கடந்த 10.12.2010 அன்று வேலைக்குச் சென்ற குஷ்பு கொளரியை காணவில்லை என்று பாப்பாரப்பட்டி காவல் நிலையத்தில்அவரது பெற்றோர் புகார் அளித்துள்ளனர். அதன்பிறகு 12.12.2010 அன்று நாகதாசம் பட்டியைச் சேர்ந்த நாராயணன் என்பவருக்கு சொந்தமான கிணற்றில் பிணமாக மிதந்துள்ளார் என்ற தகவல் அவரது பெற்றோருக்குக் கிடைத்துள்ளது. அதன்பிறகு அப்பிரேதத்தை காவல்துறையினர் எடுத்து பெண்ணாகரம் அரசு மருத்துவ மனையில் பிரேத பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. இதில் இப்பெண் பாலியல் வன்புணர்ச்சி செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார் என்பது அறியமுடிந்தது. இது குறித்து அனைத்து அரசு அதிகாரிகளுக்கும் புகார் செய்யப்பட்டு வழக்கு பதிவுசெய்யப்பட்டது. தற்போது குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு பிணையில் உள்ளார்கள். வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

## விடுதியில் தலித் மாணவன் பரத் தற்கொலை

கடலூர் மாவட்டம், திட்டக்குடி தாலுகா, எரப்பாவூர் கிராமம் என்ற முகவரியில் வசிக்கும் நாராயணசாமி என்பவரின் மகன் பரத் (15) என்பவர் பெண்ணாடம் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்பு விடுதியில் தங்கிப் படித்து வந்துள்ளார். விடுதியில் நடக்கும் தவறுகளை மாணவர் அமைப்புடன் இணைந்து தட்டிக் கேட்டுள்ளான். இந்நிலையில்

2.9.2010 அன்று வீட்டிலிருந்து கிளம்பிப் பள்ளிக்குச் சென்றுள்ளார். அன்றே மாணவர் விடுதியில் பரத் மர்மமான முறையில் இறந்துள்ளார். இது குறித்து மக்கள் கண்காணிப்பகம் தலையீடு செய்து பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக புகார்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் இவ்வழக்கு நீதிமன்ற நடவடிக்கைக்கு உடப்படுத்தப்பட்டுள்ளது.

## அருந்ததியர் பெண் மீது காவல் சித்திரவதை

வேலூர் மாவட்டம், அரக்கோணம் வட்டம், மாங்காட்டுச்சேரி அருந்ததியர்பாளையம் காலனியைச் சேர்ந்தவர் திருமதி. ஜெயா, க/பெ. ஏசப்பா, இவர் இந்து அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்தவர். இவர் கடந்த 13.12.10 அன்று அவர் மகன் தொடர்பான பிரச்சனையை புகாராக எழுதி தக்கோளம் காவல் நிலையம் சென்று புகார் மனு *SI* சுகுணா அவர்களிடம் அளித்துள்ளார். மேற்க்கண்ட புகாரின் அடிப்படையில் கடந்த 16.12.2010 அன்று தக்கோளம் காவல் நிலையம் சென்ற ஜெயாவை ஊர் மக்கள் / உறவினர் முன்னிலையில் சாதிப்பெயர் சொல்லி பூட்ஸ் காலாலும், லத்தியாலும் *SI* சுகுணா, அடித்துள்ளார். காயம் அடைந்த ஜெயா அரக்கோணம் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சைப் பெற்று வந்துள்ளார். தற்போது இவ்வழக்கு மக்கள் கண்காணிப்பகத்தின் தலையீட்டின் பேரில் நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

## தலித் மக்கள் மீது சாதிய வன்கொடுமை தாக்குதல்

வேலூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், 102 ரெட்டியூர் கிராமத்தில் ஊரில் ரெட்டி, முதலியார், வன்னியர் என 300 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இங்கு காலனி குடும்பங்கள் மொத்தமே 33 குடும்பங்கள் உள்ளது. இங்கு காலம் காலமாக நடக்கும் திருவிழாவில் தலித்துகள் கோவிலில் நுழைய அனுமதி மறுக்கப்பட்டு வருகின்றது. இந்நிலையில் காலனி மக்கள் ஒன்று சேர்ந்து தனித் தனியாக திருவிழா நடத்தலாம் என்று ஊர் கூட்டத்தில் முடிவு செய்து அதன்படி ஊரில் உள்ள ரெட்டியார்களிடமும் கூறியுள்ளார்கள். அதற்கு பின்பு அவர்களும் ஊர்க்கூட்டம் நடத்தியுள்ளனர். அதில் காலனி சார்பாக பலர் கலந்து கொண்டுள்ளார்கள். அதில் இரண்டு தரப்பும் திருவிழா செய்வது என்றும் ஒரு மணி நேரம் முன்னதாக ஒரு சமூகத்தினரும், பின்னதாக ஒரு சமூகத்தினரும் கரகத்தைக் கொண்டு செல்லலாம் என்று முடிவு செய்துள்ளார்கள். அதன் படி கடந்த 13.7.2010 அன்று அதிகாலை சுமார் 2.00 மணியளவில் கரகம் எடுத்து மெயின் ரோடு வழியாகக் கொண்டு வந்துள்ளார்கள். அப்போது காலனி மக்கள் கரகம் எடுத்துக்கொண்டு வரும்போது சங்கர், வைரமணி, சீனி, த.பெ. முனிசாமி ரெட்டி ஆகியோர் ‘ஏண்டா, பறையன் எங்கள் தெருவுக்குள் வரக்கூடாது என்று சொல்லியிருக்கோம்ல, பறத்தாயோளிகளே ஏண்டா இந்தப் பக்கம் கரகத்தைக் கொண்டு வருகிறீங்க?’ என்று கேட்டுத் தகராறு செய்து தலித் சமூகத்தைச் சேர்ந்தவர்களை அடித்தும், பொருட்களை சேதப்படுத்தியும் உள்ளனர். உடனே அங்கு பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த ஆலங்காயம் காவல்துறையினர் சண்டையை விலக்கி விட்டு இரண்டு தரப்பிலும் வழக்குப் பதிவு செய்து, ரெட்டியார் தரப்பில் 3 பேரைக் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர். இந்த மோதலில் பாதிக்கப்பட்ட காலனி மக்கள் 7நபர்கள்

வாணியம்பாடிஅரசு மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்த போது காவல்துறையினர் அவர்களை கைது செய்ய சென்றுள்ளனர். அப்போது இதனை அறிந்த விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, சமூக சமத்துவப் படை போன்ற தலித் அமைப்புகள் சாதி இந்துக்கள் மீது நடவடிக்கையும், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யச் சொல்லி சாலை மறியல் செய்துள்ளனர். இந்த போராட்டத்திற்குப் பின்புதான் காவல்துறையினர் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

## ராஜேந்திரன் மீது சாதிய வன்கொடுமை

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், கேளூர் புதிய காலனியைச் சேர்ந்தவர் திரு ராஜேந்திரன், இந்து, பறையர் காலனியைச் சேர்ந்தவர். இவர் போளூர் பஸ் ஸ்டாப்பில் உன்ன முனியாண்டி விலாஸ் ஓட்டலில் மாஸ்டராகப் பணி புரிந்து வருகிறார். அதே பகுதியில் உள்ள கண்ணன் கவுண்டர் தெருவில் வசித்து வந்த மாயாண்டி (ஏ) சிவக்குமார். த.பெ. இராஜாக்கண்ணு (லேட்) என்பவர் ஓட்டலில் சாப்பிட சென்று தகராறு செய்துள்ளனர். இவர்களை சாதிய ரீதியாக இழிவுபடுத்தியுள்ளனர். கடந்த 2.9.2010 அன்று போளூர் பஸ் ஸ்டாப் அருகில் பொது இடத்தில் மதியம் 12.30 மணியளவில் அடியாட்களுடன் சென்ற மாயாண்டி ராஜேந்திரனை சாதீய ரீதியாக இழிவுபடுத்தி கொடூரமாகத் தாக்கியுள்ளார். இவ்வழக்கில் மக்கள் கண்காணிப்பகம் தலையிட்டு தேசிய மற்றும் மாநில ஆணையங் களுக்கு புகார் அனுப்பியதின் விளைவாக தேசிய மனித உரிமை ஆணையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு தற்போது விசாரணை நடைபெற்றுக் கொண்டு வருகின்றது. *(NHRC 384, 22, 39, 2011, 04.05.11)*

## வழக்கை வாபஸ் பெற இருளரின் வீடு எரிப்பு

விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை தாலுகா, டி. குளத்தூர், அஞ்சல், தெற்குத் தெரு என்ற முகவரியில் வசிக்கும் பாவாடை மகன் வேலு என்கின்ற இருளர் சமூகத்தைச் சேர்ந்த நபரை அதே பகுதியில் வசிக்கும் பழனிச்சாமி கவுண்டர் மகன் கோவிந்தன் கவுண்டர் என்ற ஆதிக்க சாதியைச் சேர்ந்த நபர் கடந்த 2007ம் ஆண்டு வேலுவின் தந்தை பாவாடையைத் தாக்கிய வழக்கை வாபஸ் பெற வேண்டி வேலுவைக் கடந்த 13.10.2010 அன்று சாதியைச் சொல்லி பொது இடத்தில் கடுமையாகத் தாக்கியும் மேலும் 15.10.2010 அன்று வேலுவின் வீட்டை எரித்தும் உள்ளனர்.

## திருடன் என்று கூறி தலித் வாலிபர் மீது தாக்குதல்

கடலூர் மாவட்டம், ஆலப்பாக்கம் அஞ்சல், கீழ் பூவாணிகுப்பம் கிராமம் என்ற முகவரியில் வசிக்கும் கந்தசாமி (37) என்ற தலித் சமூகத்தைச் சேர்ந்தவரை 25.8.2010 அன்று கடலூர் லாரன்ஸ் சாலை பகுதியில் டீ குடித்துக் கொண்டிருக்கும்போது ராஜு பெயிண்ட் ஸ்டோர் கடையில் பணிபுரியும் சுமார் 6 பேர்கள் கந்தசாமியைச் சூழ்ந்து கொண்டு அவர்களுடைய கடையில் திருடியதாக சரமாரியாகத் தாக்கியுள்ளனர். இதனால் கந்தசாமிக்குக் பலத்த காயம்

ஏற்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக மக்கள் கண்காணிப்பகம் தொடர் சட்டத் தலையீடு செய்து தற்பொழுது எதிரிகள் மீது தீண்டாமை வன் கொடுமை வழக்குப் பதிவு செய்யப் பட்டுள்ளது. கந்தசாமி, மாவட்ட நிர்வாகத்திடமிருந்து முதல் கட்டமாக ரூ.6,000 நஷ்ட ஈடு பணம் வாங்கியுள்ளார். வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

## தலித் ஆட்டோ டிரைவரை ஆதிக்க சாதியினர் அடித்துச் சித்திரவதை

கடலூர் மாவட்டம், பன்ருட்டி வட்டம், பன்ருட்டி திருவள்ளுவர் நகரில் வசிக்கும் தலித் சமூகத்தைச் சேர்ந்த கந்தசாமி., த.பெ. தவமணி என்பவர் ஆட்டோ ஓட்டுநராகவும் மற்றும் உரியையாளர் சங்கத்தின் தலைவராகவும் பணி புரிந்து வருகிறார். இவர் கடந்த 10.6.2010 அன்று அவரது ஆட்டோவில் பயணியை ஏற்றிக் கொண்டு வன்னியர் சமூகத்தைச் சேர்ந்த ராமதாஸ் என்பவரின் பழக்கடையில் ஆட்டோவில் வந்த பயணி பழம் வாங்கிக் கொண்டு மீண்டும் ஆட்டோ எடுத்துக்கொண்டு செல்லும்போது ராமதாஸ் மகன் அரிகரசுதன் ஆட்டோவை மறித்துப் பழம் வாங்கியவன் பணம் கொடுக்காமல் வந்தவரை ஏன் அழைத்துக் கொண்டு சென்றாய் என்று சாதீய ரீதியாக இழிவாகத் திட்டியும், ஆயுதங்களைக் கொண்டு தாக்கியதில் கந்தசாமி மயக்கமடைந்துள்ளார். அதன் பிறகு அவர் கடலூர் அரசு மருத்துவ மனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டு வந்தபோது பன்ருட்டி காவல் நிலையத்தைச் சேர்ந்த காவலர்கள் விசாரணை எதுவும் செய்யாமல் பாதிக்கப்பட்டவர் மீதே பொய் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. தற்போது பன்ருட்டி காவல் நிலைய ஆய்வாளர் தொடர்ந்து கந்தசாமியை மிரட்டிக் கொண்டு வருகிறார்.

## தலித் பெண் காமாட்சியை நயினார் சமூகத்தைச் சேர்ந்த கணவரிடமிருந்து பிரித்து சித்திரவதை

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், பெரிய காலூர் கிராமத்தைச் சேர்ந்தவர் முனுசாமி. இவர் ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர். இவர் மகள் காமாட்சியைக் கலசபாக்கம் மேலத் தெருவில் வசிக்கும் நயினார் சமூத்தைச் சேர்ந்த வடிவேலு மகன் லட்சுமிநாராயணன். காமாட்சியும், லெட்சுமி நாராயணனும் சுமார் 4 ஆண்டுகாலமாகக் காதலித்து வந்தனர். காமாட்சியின் வீட்டில் மாப்பிள்ளை பார்க்க ஆரம்பித்தனர். இதை அறிந்த காமாட்சியும் லட்சுமி நாராயணனும் திருவண்ணாமலை வடவீதி சுப்பிரமணியர் கோவிலில் கடந்த 27.5.2010 அன்று திருமணம் செய்து கொண்டனர். இதை அறிந்ததும் லட்சுமி நாராயணனுடைய தந்தை வடிவேல் என்பவரும் அவர் மனைவி ராஜகுமாரியும் அண்ணன் சத்தியமூர்த்தி, தம்பி ஜெய்சங்கர் மற்றும் உறவினர்கள் அனைவரும் காமாட்சியை அடித்து வலுக்கட்டாயமாக தாலியை அறுத்து காமாட்சியின் கணவரான லட்சுமி நாராயணனைச் சட்ட விரோதமாகக் கடத்தி வைத்திருக்கின்றனர். காமாட்சி தனது கணவரைக் கடத்தியது சம்மந்தமாக கடந்த 28.5.2010 அன்ற சேத்துபட்டு காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததின் அடிப்படையில் *CSR 208/2010* போடப்பட்டு இரு குடும்பத்தையும் அழைத்து சமாதானம் செய்து மீண்டும் சேர்த்து வைத்துள்ளார்கள். அதன்பிறகு வீட்டிற்கு வந்தவர் மீண்டும் அவரது பெற்றோர் அழைத்து

சென்று வீட்டிற்கு வரவிடாமலும், அவருடைய மன நிலையை மாற்றி வேறொரு பெண்ணை திருமணம் செய்துவைக்க முயற்சித்துள்ளனர். இதில் மக்கள் கண்காணிப்பகம் தலையிட்டு உண்மைகளை கண்டறிந்து பாதிக்கப்பட்டவரின் சார்பாக புகார்கள் கொடுக்கப்பட்டது.

## ஊனமுற்ற தலித் சமூகத்தினரை ஆதிக்க சமூகத்தினர் சாதியைச் சொல்லித் திட்டியும், செருப்பால் அடித்தும் சித்திரவதை

திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் வட்டம், மணக்குண்டு அஞ்சல், மருது மகன் பரமானந்தம் (ஊனமுற்றோர்) என்பவரை மேற்படி முகவரியைச் சேர்ந்த குடியானத் தெரு இராஜேந்திரன் மகன் மணிகண்டன், சசிக்குமார் மற்றும் தமிழ் செல்வன் மகன் அரவிந்தன் ஆகியோர் நெடுஞ்சாலைத் துறை புறம்போக்கு நிலத்தில் சிறிய பெட்டிக் கடை வைத்ததில் கோபமூண்ட மேற்கண்ட நபர்கள் பரமானந்தம் என்பவரைப் 'பள்ள நாயே' என்ற சாதியைச் சொல்லித் திட்டியும், செருப்புக் காலால் அடித்தும், கட்டை, கத்தி போன்ற கொடூர ஆயுதங்களால் தாக்கியும் பல்வேறு சித்திரவதைகளைச் செய்துள்ளனர். இச்சம்பவம் குறிட்து அரசு அதிகாரிகளிடம் பல்வேறு புகார் மனுக்கள் கொடுட்தும் காவல் துறையினரும் இது நாள் வரை எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

## தலித் மாணவன் மீது சாதி இந்து கொலை வெறித் தாக்குதல்

திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டம், கோவிந்தக்குடி அஞ்சல், குரங்குப் பேட்டை, காலனித் தெருவில் வசிக்கும் பாலுவின் மகன் கருணாகரன் (10) பள்ளர் சாதியைச் சார்ந்தவன். இதே ஊரைச் சேர்ந்த சப்பாணி மகன் மருதை (15) முத்துராஜா சாதியைச் சேர்ந்தவன். மருதைக்குச் சொந்தமான இடத்தில் உள்ள நவாப்பழ மரத்தில் கீழே கிடந்த நவாப் பழங்களைப் பொறுக்கி கருணாகரன் சாப்பிட்டுள்ளான். இதைப் பார்த்து மருதை காசு கேட்டுள்ளான். என் அம்மாவிடம் வாங்கித் தருகிறேன் என்று கூறியுள்ளான் கருணாகரன். இதை மறுத்த மருதை 31.8.10 அன்று மாலை 5.30 மணியளவில் மருதை கையில் வைத்திருந்த பசுமாட்டின் கயிற்றின் நுனியைக் கருணாகரனின் கழுத்தில் சுருக்கிக் கயிறு போட்டு மாட்டை அடித்து விரட்டி உள்ளான். பசுமாடு வேகமாக ஓட அதன் நுனிக் கயிற்றைப் பிடித்து 100 அடி தூரம் கரடு முரடான முள்ளில் கருணாகரனை இழுத்துச் சென்றுள்ளது மாடு. இதைக் கண்ட ஊர்ப் பொது மக்கள் மாட்டைப் பிடித்து நிறுத்தி கருணாகரனை திருச்சி அரசுப் பொது மருத்துவமனையில் சேர்த்து உள்ளனர். இதில் மண்ணச்சநல்லூர் போலீசார் வழக்குப் பதிவு செய்து (வழக்கு எண் 136/10) மருதையைச் சிறார் சீர்திருத்தப் பள்ளியில் சேர்த்துள்ளனர். இவ்வழக்கில் சாதி ரீதியாகச் சித்திரவதை நடைபெற்று உள்ளதால் தீண்டாமை வழக்கில் பதிவு செய்ய வேண்டும் என முதல்வர், ஆதி திராவிடர் நல அலுவலர், மாவட்ட ஆட்சியர், வருவாய்க் கோட்டாட்சியர், மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர், துணைக் கண்காணிப்பாளர், *ADGP, DGP, SC Commission,* மாநில மனித உரிமை ஆணையம் ஆகியோருக்குப் புகார் அனுப்பப்பட்டுள்ளது. இதில் தேசிய தாழ்த்தப்பட்டோர் ஆணைத்திலிருந்து திருச்சி எஸ்.பி. அலுவலகத்தில் விசாரணை நடைபெற்று வன்கொடுமைத்

தடுப்புச் சட்டத்தின் கீழ் மாற்றுவதாகக் கூறியுள்ளனர். பாதிக்கப்பட்ட சிறுவனுக்கு மக்கள் கண்காணிப்பகத்தின் பாதிக்கப்பட்டோர் மறுவாழ்வு மையத்தின் மூலம் மருத்துவ ரீதியான உதவி செய்யப்பட்டு வருகின்றது.

## தலித் இளைஞர்கள் மீது ஆதிக்க சாதியினர் தாக்குதல்

விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர் பேட்டை தாலுகா புதுக்கேணி காலனியில் வசிக்கும் தலித் சமூகத்தைச் சேர்ந்த பெண்கள் ஆசனூர் கிராமத்தில் உள்ள கல்குவாரியில் தினக்கூலியாக வேலைக்குச் சென்றுள்ளனர். குவாரியில் உள்ள லாரி உரிமையாளர்களும், ஆதிக்க சமூகத்தினரும் இப்பெண்களிடம் தகாத முறையில் நடந்துள்ளனர். இதனை அறிந்த இப்பெண்களின் குடும்பத்தினரும், உறவினர்களும் வேலைக்குச் செல்ல வேண்டாம் என்று கூறியுள்ளனர். இதனால் ஆத்திரமடைந்த புதுக்கேணி கிராம பொதுமக்கள் பெண்களை வேலைக்கு அனுப்பாததால் இதற்கு இளையபெருமாள் தான் காரணம் என ஆசனூர் பகுதி ஆதிக்க சாதியினர் முடிவு செய்து கடுமையாகத் தாக்கியுள்ளனர். இவ்வழக்கில் மக்கள் கண்காணிப்பகம் தலையிட்டு தேசிய மற்றும் மாநில மனித உரிமை ஆணையங்களுக்கு புகார் அனுப்பியதின் விளைவாக தேசிய மனித உரிமை ஆணையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை நிலுவையில் உள்ளது. *( NHRC 386,22,42,11 – 06.05.11)*

## பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த மாணவியை வன்னிய சமூகத்தைச் சேர்ந்த இளைஞன் பாலியல் பலாத்காரம்

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி தாலுகா, கொணலூர் கிராமம் இம்முகவரியில் வசிக்கும் ஏழுமலை என்ற இருளர் சமூகத்தைச் சேர்ந்த நபரின் மகளான சுகன்யா என்பவரை அதே பகுதியில் வசிக்கும் வன்னியர் சமூகத்தைச் சேர்ந்த முருகன் என்பவர் கடந்த 14.9.2010 அன்று பாலியல் பலாத்காரம் செய்துள்ளார். இச்சம்பவம் அடிப்படையில் மக்கள் கண்காணிப்பகம் தலையிட்டு பாதிப்பு ஏற்படுத்தியவர் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது. முருகன் மீது காவல் துறையினர் வழக்குப் பதிவு செய்து சிறையில் அடைத்தனர். பெயிலில் வந்த முருகன் வழக்கை வாபஸ் பெறச் சொல்லி சுகன்யாவின் குடும்பத்தை மிரட்டி வந்துள்ளார்.

இச்சம்பவத்தைக் காவல் துறையினரின் கவனத்திற்கு மக்கள் கண்காணிப்பகம் கொண்டு சென்று பாதிப்பு ஏற்படுத்தியவர் மீது மீண்டும் வழக்குப் பதிவு செய்தது. தற்போது வழக்கு நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது.

## கண்டறிந்தவைகள்

## தலித்துகள் மற்றும் பழங்குடியினர் மீதான வன்முறைகள்

1. மதுரை மாவட்டம் திருமங்கலம் தாலுகா எல்லைக்குட்பட்ட வில்லூர் கிராமத்தில் தலித் மக்களுக்கும், ஆதிக்க சாதியினருக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் காவல்துறைக் கண்காணிப்பாளரின் தலைமையில் வந்த காவல் துறையினர் உடனடியாகத் தலையிட்டு சாதிய மோதல் ஏற்படுவதைத் தடுத்து நிறுத்தி இச்சம்பவத்திற்குக் காரணமான ஆதிக்க சாதியினர் மீது தீண்டாமை வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் 9 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு தலித்துகளின் வாழ்வாதார உரிமையைப் பாதுகாத்துள்ளனர் என்பது கள ஆய்வின் மூலம் கண்டறியப்படுகிறது.

2. அருந்ததியருக்கான பொது மயானம் வேண்டி பல்வேறு குடிமைச் சமூக அமைப்புகள் போராடி வரும் வேளையில் தமிழக அரசு இன்றளவு கூட இப்பிரச்சினைக்கு சுமுகத் தீர்வு காண எந்தவிதமான முயற்சியும் எடுக்கவில்லை. உதாரணமாக தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டியில் வசிக்கும் அருந்ததியருக்கான பொது மயானம் பிரச்சினையில் இரு தரப்பினருக்கும் கைகலப்பு ஏற்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டு இன்றும் நீதிமன்றத்தின் முன் நிலுவையில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

3. பெரும்பாலான தீண்டாமை வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளில் பாதிக்கப்பட்டவருக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டவுடன் கொடுக்கப்படுகின்ற முதற்கட்ட நிவாரணத் தொகையை காவல் துறையினரும் வருவாய்த் துறையினரும் கொடுக்க மறுக்கிறார்கள் என்பது தெரிய வருகிறது.

4. தென் மாவட்டங்களில் சாதிக் கலவரங்கள் அதிகமாக நடைபெறுகின்றன. முதுகுளத்தூரில் தேவர் குரு பூசையை முன்னிட்டுத் தொடர்ந்து தேவர் சாதியினருக்கும், பள்ளர் சமூகத்தினருக்கும் இடையே சாதிக் கலவரம் நடைபெற்றுள்ளது. தலித்துகள் மீது மட்டும் தாக்குதல் நடத்தி, பொய் வழக்கு போட்டுள்ளனர்.

5. உயர் சாதியினர் பெரும்பான்மையாக உள்ள பகுதிகளில் தலித்துகள் கட்டப் பஞ்சாயத்து மூலமாக ஊரை விட்டு ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளனர்.

6. தலித்துகளின் சிறு சிறு உரிமைகள் பெறுவதைக் கூட பொறுத்துக் கொள்ள முடியாத உயர் சாதியினர் அவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். தலித்துகள் நாற்காலியில் அமர்ந்ததற்காகத் தாக்கப்பட்டுள்ளனர். இரு சக்கர வாகனங்களில் சென்றதற்காக அடித்துள்ளனர்.

7. தலித்துகள் மீதான தீண்டாமை வன்கொடுமைகள் இன்றளவும் குறையவே இல்லை. தலித்துகள் பொதுப் பாதைகளில் நடக்க மறுக்கப்பட்டுள்ளனர். கோயிலில் நுழைய தடை செய்யப்பட்டுள்ளனர். பொதுக் குழாயில் நீரெடுக்க தடுக்கப்பட்டுள்ளனர். பொதுச் சுடுகாட்டில் தலித்துகள் பிணம் எரிப்பதற்கும் கூட தடை விதிக்கப் பட்டுள்ளது.

8. தலித்துகள் மீதும் இருளர் சமூகத்தினர் மீதும் அதிகமான பொய் வழக்குகள் போடப்பட்டு காவல் துறையின் சித்திரவதை செய்துள்ளனர்.

9. தீண்டாமை வன்கொடுமை வழக்குகளைத் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்ய வலியுறுத்தும் தலித் செயல்பாட்டாளர்கள் மீது காவல் துறையினர் வேண்டுமென்றே எதிர் வழக்கு பதிவு செய்து அவர்களுடைய செயல்பாட்டை முடக்கும் போக்கு அதிகமாக உள்ளது.

10. கையால் மலம் அள்ளும் தொழில் மற்றும் பாதாளச் சாக்கடை சுத்தம் செய்யும் தொழில் போன்றவற்றில் போதுமான பாதுகாப்பு உபகரணங்கள் அளிக்கப்படாமல் விஷ வாயுத் தாக்கி அருந்ததியர் சமூகத்தினர் இறக்க நேரிட்டுள்ளது.

11. தலித்துகள் அரசு வேலை வாய்ப்பு பெறுவதைப் பொறுத்துக் கொள்ள முடியாத உயர் சாதியினர் அரசுப் பணியாளர் மீது வேண்டுமென்றே தாக்குதல் நடத்துதல்.

12. தலித் பஞ்சாயத்து தலைவர்கள் / உறுப்பினர்களை அவர்களுடைய பணிகளை செய்ய விடாமல் தடுப்பதும் அவர்களுடைய பதவிக்குரிய மரியாதை அளிக்காமல் சாதியைச் சொல்லி இழிவுப்படுத்தும் போக்கும் அதிகரித்துள்ளது.

## தலித்துகள் மற்றும் பழங்குடியினர் மீதான வன்முறை சாதிய வன்முறைகள் பொதுவான பரிந்துரைகள்:

1. மதுரை மாவட்டதில் வில்லூர் கிராமத்தில் நடைபெற்ற தீண்டாமை வன்கொடுமைச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட தலித் சமூகத்தைச் சேர்ந்த தங்கப்பாண்டியன் மற்றும் தலித் கிராமங்களுக்கு மாவட்ட ஆட்சியர் போதிய பாதுகாப்பு வழங்க வேண்டு மென்றும் இனி இது போன்ற தீண்டாமை வன்கொடுமைச் சம்பவங்கள் நடைபெறா வண்ணம் இரண்டு தரப்பினரையும் சுமுகப் பேச்சு வார்த்தைக்கு உட்பட வைத்து அமைதியான சூழல் ஏற்பட ஆவண செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

2. வில்லூர் கிராமத்தில் தொடர்ந்து பதட்டமான சூழ்நிலை இருந்துகொண்டிருப்பதால் மாவட்டக் காவல் துறையினர் அக்கிராமத்திற்குத் தொடர்ச்சியாகப் பாதுகாப்பு அளிக்க, சுமுகமான சூழ்நிலைய ஏற்படும் வரை அங்கேயே முகாமிட்டு பாதுகாப்பை உத்தரவாதப்படுத்த வேண்டும்.

3. கடந்த ஓராண்டில் தலித்துகள் மீதான வன்முறை அதிக அளவில் தமிழ்நாட்டில் நடைபெற்றிருப்பதால் மாநில அரசு உயர்சாதியினருடன் கை கோர்த்துக் கொண்டு தலித் மக்களின் வாழ்வாதார உரிமையைப் பறிப்பது மட்டுமில்லாமல் மற்ற அரசுத் துறையினருடன் கைகோர்த்துக் கொண்டு தலித் உரிமைகள் மறுக்கப்படுகின்றன. இது நடைபெறாவண்ணம் தலித்துகளுக்கான உரிமையை உத்தரவாதப்படுத்த வேண்டும்.

4. தீண்டாமை வன்கொடுமைச் சம்பவத்தால் பாதிக்கப்பட்ட நபர் நீதிமன்றத்தை அணுகும்போது நீதித் துறையினர் அந்த வழக்கின் முக்கியத்துவத்தை உணராமல் உரிய முறையில் விசாரிக்காமல் காலம் தாழ்த்துவதன் மூலம் நீதி வழங்குவதைத் தவிர்க்கிறார்கள். ஆகவே நீதித்துறை தீண்டாமை வன்கொடுமை வழக்குகளின் வழக்கின் உண்மைத் தன்மையை உணர்ந்து ஒரு இடைக்கால உத்தரவை உடனடியாக வழங்க வேண்டுமென்று கோரப்படுகிறது.

5. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் பிரிவு 17ல் சொல்லப்பட்டிருக்கும் தீண்டாமை ஒழிப்பு நடவடிக்கை முறையாகச் செயல்படுகிறதா என்பதைக் கிராம அளவில் மாநில அரசு கண்காணிக்க வேண்டும் என்றும், அவ்வாறு தீண்டாமைப் பழக்கவழக்கம் நடைமுறையில் இருக்கும் கிராமங்களின் மீது அரசு கடுமையான நடவடிக்கை எடுப்பதோடு தீண்டாமை வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் 1989ல் சொல்லப் பட்டிருக்கும் விதிகளை அமுல்படுத்த வேண்டும்.

6. தீண்டாமை வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் 1989ன் படி மாநில அளவில் விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழுக்களை அமைத்து தீண்டாமை வன்கொடுமை நடைபெறுகின்ற கிராமங்களைக் கண்காணிக்க மாநில அரசு ஆவண செய்ய வேண்டும்.

7. தீண்டாமை வன்கொடுமைச் சம்பவங்களில் பாதிக்கப்படும் நபருக்கு மாவட்ட நிர்வாகம் முழுமையான நிவாரணத் தொகையை வழங்க வேண்டும். மேலும் அவரது சொத்து மற்றும் பயிர்கள் சேதமாக்கப்பட்டிருந்தால் அதற்குண்டான சேத மதிப்பீட்டையும் கணக்கில் எடுத்துக் கொண்டு நிவாரணத் தொகை வழங்கப்பட வேண்டும்.

8. தேசிய அளவில் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் ஆணையம் இருப்பது போல் மாநில அளவிலும் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் ஆணையங்கள் அமைக்க மத்திய, மாநில அரசுகள் ஆவண செய்ய வேண்டும்.

9. தமிழ்நாட்டில் இன்றும் கூட கையால் மலம் அள்ளும் வழக்கம் நடைமுறையில் உள்ளது. கையால் மலம் அள்ளும் மற்றும் உலர் கழிப்பறைகள் தடுப்புச் சட்டம் 1993ஐ மாநில அரசு உடனடியாக அமலாக்கம் செய்வதுடன் அதைத் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும் என்றும் அவ்வாறு கண்காணிக்கத் தவறிய அரசு அதிகாரிகள் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறது.

10. தலித் குழந்தைகளின் கல்வி உரிமையை உத்தரவாதப்படுத்துவதுடன் அப்பள்ளியில் தீண்டாமை பழக்க வழக்கங்கள் இருப்பின் மேற்படி பள்ளியின் அங்கீகாரத்தை மாநில அரசு ரத்து செய்வதோடு அதற்குக் காரணமானவர்கள் மீது சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

11. தமிழகத்தில் தீண்டாமை வன்கொடுமை, சமூகப் புறக்கணிப்பு மற்றும் இதர தீண்டாமை வன்கொடுமைகள் தலித் மக்கள் மீது நடந்திருப்பின் அதைக் காவல் துறையினர் உரிய முறையில் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி பாதிப்பு ஏற்படுத்தியவர்கள் மீது வழக்குப் பதிவு செய்ய வேண்டும். அப்படித் தவறும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட காவல் துறையினர் மீது தீண்டாமை வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் பிரிவு 4ன் கீழ் குற்ற வழக்கு பதிவு செய்ய வேண்டும்.

12. நில உச்சவரம்புச் சட்டத்தின் அடிப்படையில் அளவுக்கு அதிகமாக நிலங்கள் வைத்திருக்கும் நிலச்சுவான்தாரர்களிடமிருந்து உபரியான நிலத்தைக் கையப்படுத்தி ஒவ்வொரு தலித் குடும்பத்திற்கும் வருகின்ற மூன்றாண்டுகளில் குறைந்த பட்சம் 5 ஏக்கர் நிலங்கள் கொடுப்பதை மாநில அரசு உத்தரவாதப்படுத்த வேண்டும்.

13. ஆதிக்க சமூகத்தினரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருக்கும் தலித் நிலங்களை மீண்டும் அந்த தலித் மக்களுக்கே மீட்டுத் தர மாநில அரசு ஆவண செய்ய வேண்டும்.

14. விவசாயத் தொழிலாளர் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிற வேலை வாய்ப்பு உத்தரவாதப்படுத்துதல், நல்ல பணிச் சூழலை உருவாக்குதல் மற்றும் நலத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதோடு தலித் பெண்களுக்கு விவசாயப் பணிகளில் வேலை வாய்ப்பு உறுதி செய்வதை மாநில அரசு உத்தரவாதப்படுத்த வேண்டும்.

15. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலித் ஊராட்சி மன்றத் தலைவர்களின் செயல்பாட்டைத் தடுக்காத வண்ணம் மாநில அரசு தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். மேலும் அக்கிராமத்தில் உள்ள மற்ற சமூகத்தைச் சேர்ந்தவர்கள் எவரேனும் இடையூறு செய்வது தெரியவரும்போது அவர்கள் மீது தீண்டாமை வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்ய வேண்டும்.

16. மாநில அரசு காவல் துறையினருக்கு தீண்டாமை வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் குறித்த பயிற்சியை ஆறு மாதத்திற்கு ஒரு முறை மாவட்ட அளவில் நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுகிறது.

17. தேசிய ஊரக வேலை வாய்ப்பு உத்தரவாதச் சட்டத்தின் கீழ் கிராமம் தோறும் பஞ்சாயத்துத் தலைவரின் கட்டுப்பாட்டில் நடைபெறுகின்ற 100 நாள் வேலை வாய்ப்புத் திட்டத்தில் தலித் மக்கள் புறக்கணிக்கப்படுவதோடு சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிற தினக் கூலியை விடக் குறைந்த அளவில் கொடுக்கும் ஊராட்சிமன்றத் தலைவர் மீது மீது தீண்டாமை வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்ய வேண்டும்.

18. ஐ.நா–வின் 49–வது அமர்வில் கொண்டு வரப்பட்ட இனப்பாகுபாட்டிற்கு எதிரான பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

19. தீண்டாமையானது, தலித் மக்களின் உயிர் வாழ்தலையே நேரடியாக பாதிக்கக் கூடியது என்பதால் இதை ஒரு தீவிர இனப் பாகுபாடாகவும், தீண்டாமையைக் கடைப்பிடித்தலை, ''இன ஒதுக்கம்'' என்று கருதும் அளவிற்கு பாவித்து அரசு தீவிர நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அதற்கான முதற்கட்ட நடவடிக்கைகளாக,

அ) தலித்துகளின் மீதான வன்முறைகள் பற்றிய உண்மை (வெள்ளை) அறிக்கையொன்றை மத்திய அரசும், தமிழக அரசும் வெளியிட வேண்டும்.

ஆ) தேசிய, தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் மற்றும் மலம் அகற்றும் தொழிலாளர்கள் ஆணையங்களின் ஆண்டறிக்கைகளை நாடாளுமன்றத்திலும் மாநில சட்டமன்றங்களிலும் விவாதிப்பதைக் கட்டாயமாக்க வேண்டும்.

இ) தாழ்த்தப்பட்டோர் வன்கொடுமை தடுப்பு விதிகளின் படி (1995) தலித் மக்கள் மற்றும் அவர்கள் உடமை பாதுகாப்பிற்கு உத்தரவாதம் தரும் வகையிலும் உயர் சாதியினரின் தாக்குதல்களிலிருந்து தம்மைக் காத்துக் கொள்ளவும் ஆயுதங்களை வைத்திருப்பதற்கான உரிமங்களைத் தலித் மக்களுக்கு வழங்க வேண்டும்.

ஈ) இதற்காக அனைத்து கிராமப் பகுதிகளிலும் தலித்துகள் பாதுகாப்புக் குழுக்கள் அமைப்பது கட்டாயமாக்கப்பட வேண்டும்.

20. சாதிய வன்முறைக்கு ஆளான கிராமங்களிலிருந்து சாதிக் கலவரத்தில் அடிக்கடி ஈடுபடுபவர்களை நிரந்தரமாக வெளியேற்ற இந்தச் சட்டத்தில் இடமுள்ளது. அதை முறையாகப் பயன்படுத்த வேண்டும்.

21. தலித் மக்கள் அளிக்கும் புகார் மீது நடவடிக்கை எடுப்பதைத் தவிர்த்து புகார் கொடுத்தவர்களின் மீதே எதிர்வழக்கு பதிவு செய்யும் காவல் துறை அதிகாரிகளைத் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4ன் கீழ் தண்டனைக்குள்ளாக்க வேண்டும்.

22. தலித் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள் 22 பிரிவுகளாக இச்சட்டத்தில் வகைப்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் பிரிவு 3(1)(x) இன் கீழ் மட்டும் தான் காவல்துறை வழக்குப் பதிவு செய்கிறது. சாதிப் பெயரைச் சொல்லி இழிவுபடுத்துதல் என்ற சாதாரண குற்றம் பற்றிய பிரிவு இது. எனவே, இந்திய அரசு தலித் மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் இந்தச் சட்டட்தின் மற்ற பிரிவுகள் குறித்து அனைவரும் அறியும்படி பிரச்சாரம் செய்ய வேண்டும்.

23. இந்தச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள நீதிமன்றங்கள், குற்றங்களைப் பதிவு செய்யும் அதிகாரம் கொண்ட நீதிமன்றங்கள் அல்ல என்று (*Not a Court of original Jurisdiction*) உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இதனால் காலதாமதம் ஏற்படும். எனவே, இச்சட்டத்தின் கீழ் அமைக்கப்படும் நீதிமன்றங்கள் குற்றங்களைப் பதிவு செய்யும் அதிகாரம் கொண்ட நீதிமன்றங்களாக, அமையும்படி இந்த சட்டத்தின் பிரிவுகள் திருத்தப்பட வேண்டும்.

24. உச்சநீதிமன்றம், உயர் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றங்களுக்கு இணையாக, தீண்டாமை பற்றி விசாரிக்க தனி நீதிமன்றங்களை அமைத்து அவை குறிப்பிட்ட காலத்திற்குள் நீதி வழங்க ஏற்பாடு செய்யவும் வேண்டும்.

25. பத்திரிக்கை, தொலைக்காட்சி போன்ற ஊடகச் சாதனங்கள் மூலம் அரசே சட்டப்பூர்வமாக தீண்டாமை தடைசெய்யப்பட்டது குறித்து, தலித் மக்கள் மீதான வன்முறைக்கு எதிரான பிரச்சாரங்களையும் மேற்கொள்ள வேண்டும்.

26. சாதிய வகுப்பு வாதத்தை வளர்க்கும் வகையில் செயற்படும் சாதியக் கட்சிகளைத் தடை செய்யும் வகையில் தேர்தல் சட்டங்களைத் திருத்த வேண்டும்.

27. இதுவரை மத்திய அரசும், மாநில அரசுகளும் இட ஒதுக்கீட்டை அமல்படுத்திய நிலை குறித்து உண்மையறிக்கை ஒன்றை கொண்டு வந்து பொதுமக்களின் விவாதத்திற்காக நாடாளுமன்றம் மற்றும் சட்டப் பேரவைகளில் தாக்கல் செய்ய வைக்க வேண்டும்.

28. ஒவ்வொரு தலித் மீதான வன்முறையின் போதும் முதலில் பாதிக்கப்படுவது தலித் பெண்களே. தலித் பெண்கள் அவர்கள் எவ்வயது உடையவராக இருப்பினும் அவர்கள் மீது கோரமான பாலியல் வன்முறையே கட்டவிழ்த்து விடப்படுகிறது. எனவே இந்நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்க,

அ) பெண்கள் என்ற பொதுவான வகைப்படுத்தலில் தலித் பெண்களை இணைக்காமல் அவர்கள் தனியான ஒரு சமூகக் குழுவாக அங்கீகரிக்கப்பட வேண்டும்.

ஆ) திட்டம் தீட்டும் போதும், நிதி ஒதுக்கீடு செய்யும் போதும் கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளில் இட ஒதுக்கீடு வசதிகளை பகிர்ந்தளிக்கும் போதும் தலித் பெண்களுக்கான சிறப்பு மற்றும் தனிப்பட்ட இடமளிக்க வேண்டும்.

இ) தேசியப் பெண்கள் ஆணையம், தேசிய மனித உரிமை ஆணையம், தேசிய தலித்–பழங்குடி மக்களுக்கான ஆணையம், கையால் மலம் அள்ளுவோர் துப்புரவுத் தொழிலாளர்களுக்கான ஆணையம் (சஃபாய் கர்மாச்சாரிஸ் ஆணையம்) ஆகியவற்றிற்கு சிறப்பாக தலித் பெண்களின் பிரச்சனைகளைக் கவனிப்பதற்கு அதிகாரமளிக்க வேண்டும்.

ஈ) தலித் பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகளைக் கண்காணிக்க தேசிய மற்றும் மாநில அளவிலான சட்டபூர்வ அமைப்பை ஏற்படுத்த வேண்டும்.

உ) தலித் பெண்களின் நிலைமை மற்றும் அவர்கள் மீது இழைக்கப்படும் வன்முறைகள் குறித்து நாடாளுமன்றத்திலும் சட்டப் பேரவைகளிலும் முறையான காலங்களில் வெள்ளை அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

ஊ) தலித் பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்கள், வன்கொடுமைகள் ஆகியவற்றுக்கு காவல்துறை அதிகாரிகளைப் பொறுப்பாக்க வேண்டும். அவர்கள் கடமை தவறும் பட்சத்தில் அந்தக் குற்றத்திற்காகக் கடுமையான தண்டனை நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

29. தலித் குழந்தைகளுக்கு எதிராகப் பள்ளிகளில் கடைபிடிக்கப்படும் பாகுபாட்டு செயல்களை தீண்டாமை குற்றமாகக் கருதி சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் மீது தாழ்த்தப்பட்டோர் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

30. சாதியக் கலவரங்கள் நடைபெறக்கூடிய இடங்களுக்கு ஆணையங்கள் தாமாக முன்வந்து விசாரணைகள் மேற்கொள்ள வேண்டும்.

31. தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்புச் சட்டட்தின் கீழ் துணைக் காவல் கண்காணிப்பாளர் விசாரணை அதிகாரியாக தங்களுடைய பணிகளை ஆற்றவில்லையெனில் அவர் மீது துறை வாரியான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

32. தாழ்த்தப்பட்டோர் ஆணையத்திற்கு அனுப்பப்படும் புகார்கள் மீது விசாரணை மேற்கொள்ளுமாறு மாவட்டக் காவல்துறைக்கு திருப்பி அனுப்புவதை தவிர்த்து ஆணையத்தின் விசாரணைக் குழுவே நேரடியாக விசாரணை மேற்கொள்ள வேண்டும்.

33. தலித்துகள் மீது பதிவு செய்யப்பட்டு தேக்க நிலையில் உள்ள வழக்குகளுக்கு விரைவு நீதி மன்றங்கள் மூலம் தீர்வு காண நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

34. கழிவுகளை அகற்றும் பணியிலும் மலம் அள்ளும் பணியிலும் தலித்துகள் ஈடுபடும்போது போதுமான பாதுகாப்பு உபகரணங்கள் அளிக்கப்படாமல் பணிகளில் ஈடுபடுத்தப்படுவதால் மரணங்கள் ஏற்படுகிறது. ஆகவே இவ்வாறு பணிகளில் ஈடுபடுத்தும் நிறுவனங்கள் கடுமையான தண்டனைக்குள்ளாக்கப்பட வேண்டும். அவற்றை கண்காணிக்கும் குழு ஒன்றை அரசு அமைத்திட வேண்டும்.

# பெண்கள் மீதான வன்முறைகள்

## வரதட்சணை கொடுமைகள்

### வரதட்சணை வாங்கி வராவிட்டால் சிவப்பு விளக்குப் பகுதியில் விற்றுவிடுவதாகக் கணவர் மிரட்டல்

கடலூர் மாவட்டம், இரண்ணாரப்பாளையம் ராமசாமி நகர் என்ற முகவரியில் வசிக்கும் தண்டபாணி என்பவரின் மகள் மஞ்சுளா என்பவருக்கும் திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த ராஜேந்திரன் என்பவர் மகன் சரவணன் என்பவருக்கும் கடந்த 10.11.2008 அன்று திருமணம் செய்து வைத்துள்ளனர். திருமணமான நாளிலிருந்து மஞ்சுளாவிடம் வரதட்சணை வாங்கி வரச் சொல்லி சரவணன் சித்திரவதை செய்து வந்துள்ளார். இந்நிலையில் மஞ்சுளாவை சரவணன் மும்பைக்கு அழைத்து சென்று குடும்பம் நடத்தியுள்ளார். மும்பையில் தினமும் மது அருந்தி விட்டு வந்து அடித்து உதைத்துள்ளார். வரதட்சணை வாங்கி வராமல் இருந்தால் மும்பை சிவப்பு விளக்குப் பகுதியில் விற்று விடுவதாகக் கூறியுள்ளார். மேலும் மஞ்சுளாவை கொலை செய்ய சரவணன் முயன்ற போது மஞ்சுளா சாமர்த்தியமாக தன்னுடைய அறைக்குள் புகுந்து கொண்டு கதவை தாளிட்டுக் கொண்டார். மேலும் தொலைபேசி மூலம் காவல் துறைக்கு தொடர்பு கொண்டு தன் கணவர் கொலை செய்ய முயற்சிப்பது தொடர்பான தகவலைத் தெரிவித்துள்ளார். காவல் துறையினர் மஞ்சுளாவை மிரட்டியுள்ளனர். அதன் பின்பு மஞ்சுளா நேரடியாக புகார் கொடுத்ததன் அடிப்படையில் இச்சம்பவம் தொடர்பாகச் சட்டதலையீடு செய்யப்பட்டு சரவணன் தற்பொழுது கைது செய்யப்பட்டுச் சிறையில் உள்ளார்.

### வரதட்சணை கேட்டு கல்லூரி விரிவுரையாளர் சித்திரவதை

வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம். ராஜீவ்காந்தி நகரை சேர்ந்தவர் தீபாவதி த/பெ. மகேஷ், நாயுடு சமூகத்தை சேர்ந்தவர்கள். தீபாவதி தனியார் பொறியியல் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றி வந்துள்ளார். இவர் கணவர் மகேஷ் தொடர்ந்து வரதட்சணையாகப் பணம் கேட்டு, உடல் ரீதியாகவும், மனரீதியாகவும் தொடர்ந்து

சித்திரவதை செய்து வந்துள்ளார். மகேஷின் சித்திரவதை காரணமாக தீபாவதி, நீதிமன்றம் மூலம் விவகாரத்து மனு செய்து, விவகாரத்தும் பெற்று உள்ளார். இந்நிலையில் கடந்த 28.08.2010 அன்று மகேஷ் தீபாவதியின் வீட்டு வாசலுக்கு சென்று தீபாவதியையும், அவரது குடும்பத்தையும் ஆபாசமாகப் பேசி இழிவுப்படுத்தியுள்ளார். தீபாவதி போலீசுக்கு தகவல் கொடுக்கவே இரண்டு தரப்பினைரயும் காவல்துறையினர் அழைத்துச் சென்று, புகார் கொடுத்த தரப்பினர் மீதே விருதாம்பட்டு காவல்துறையினர் வழக்குப் போட்டுள்ளனர்.

## பெற்றோர் வீட்டில் இருந்து பணம் வாங்கி வரச் சொல்லி பெண் சித்திரவதை

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, வேப்பூர் கிராமம் பஜனை கோவில் தெருவில் வசிப்பவர் லட்சுமி பிரியா. இவருடைய கணவர் முத்துக்குமார் லாரியில் கிளீனராகப் பணி செய்து வந்துள்ளார். இவர் இந்து நாயக்கர் சாதியைச் சேர்ந்தவர். கடந்த 06.06.2009இல் முத்துக்குமார் ஓர் விபத்து வழக்கில் ரூ 5 இலட்சத்து 20,000 நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என நீதிமன்றத்தில் இருந்து உத்தரவுப் பிறப்பிக்கப்பட்டிருந்தது. மேற்கண்ட பணத்தை லட்சுமிபிரியா தான் தர வேண்டும் என அவரது மாமியார் லெட்சுமி, நாத்தனார் தேவி ஆகியோர் லெட்சுமி பிரியாவை அடித்தும் திட்டியும் கொடுமை படுத்தியும் வந்துள்ளார்கள். இக்கொடுமை தாங்காமல் லெட்சுமி பிரியா தனது பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டார். தற்போது குடும்ப வன்முறைச் சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## இளம்பெண் வரதட்சணை கொடுமை

தேனி மாவட்டம், போடி தாலுகா, கோடங்கிபட்டியைச் சேர்ந்தவர் சாந்தி, இவருடைய கணவர் ரஜினிகாந்த் கடந்த 6 வருடங்களாக தனியார் மில்லில் வேலை பார்த்து வந்துள்ளார். தனக்கு அரசு வேலை வாங்க வேண்டும் அதற்கு ஒரு லட்சம் ரூபாயை சாந்தியின் பெற்றோர் வீட்டில் வாங்கி வருமாறு மனைவி சாந்தியைத் துன்புறுத்தியுள்ளார். இதனால் கணவன் மனைவி இருவரிடமும் அடிக்கடி தகராறு வந்துள்ளது. மனைவி என்று பாராமல் ரஜினிகாந்த் சாந்தியை இழிவாக பேசுவதும், அடிப்பதும் போன்ற சித்திரவதைகளைச் செய்து வந்துள்ளார். இதனால் மிகவும் மனவேதனையடைந்த சாந்தி 05.02.2010 அன்று போடி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் செய்யதததால் ரஜினிகாந்த் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டுள்ளார்.

## வரதட்சணைக் கொடுமையால் விஷம் குடித்து இளம் பெண் சாவு

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தாலுகா, பூதிபுரத்தை சேர்ந்தவர் தர்மராஜ் என்பவரின் மகள் தமிழ் செல்விக்கும், நல்லுதேவன்பட்டியைச் சேர்ந்த சின்ன கொடி என்பவருக்கும் 10 வருடங்களுக்கு முன் திருமணம் நடந்துள்ளது. இவர்களுக்கு 3 குழந்தைகள் உள்ளனர். திருமணத்தின் போது 37 பவுன் மற்றும் சீர் வரிசைகளுடன் கணவர் வீட்டிற்கு சென்றுள்ளார். மனைவியின் நகைகளை விற்று செலவு செய்து விட்டு மீண்டும் ஒரு இலட்சம் கேட்டு அவரது

கணவர் தகராறு செய்துள்ளார். கணவனின் கொடுமை தாங்காமல் தமிழ்ச்செல்வி விஷம் அருந்தியுள்ளார். உடனே உறவினர்கள் உசிலம்பட்டி மருத்துவமனையில் சேர்த்து காப்பாற்றி யுள்ளனர். வீடு திரும்பிய தமிழ்ச்செல்வியிடம் சில நாட்கள் கழித்து மீண்டும் சின்னக்கொடி வரதட்சணை பணம் கேட்டு தொந்தரவு செய்துள்ளார். இதனால் மனமுடைந்த தமிழ்ச்செல்வி இரண்டாவது முறையாக விஷ மருந்து அருந்தியுள்ளார். அவரது உறவினர்கள் உடனே தமிழ்ச் செல்வியை 25.02.2010 அன்று மதுரை அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்த்துள்ளனர். அங்கு சிகிச்சை பலனின்றி தமிழ்ச் செல்வி இறந்து போனார். காவல் துறையினர் வழக்குப் பதிவு செய்து நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

## வரதட்சணை கேட்டு பெண்ணைக் கொல்ல முயற்சி

நாகப்பட்டிணம் மாவட்டம், மயிலாடுதுறை தாலுகா, பூவாளை வழுவூர் கிராமத்தில் வசிப்பவர் சண்முகப்பிரியா. இவருக்கும் திட்டச்சேரி தண்டாளம் கே.எம். சிவகாமி மகன் சுகுமாறனுக்கும் 10.07.2005 அன்று திருமணம் நடந்துள்ளது. திருமணத்தின் போது 18 பவுன் நகையும், ரூ. 50,000 மதிப்புள்ள சீர் வரிசைப் பொருட்களும் கொடுத்து பெற்றோர் திருமணம் முடித்து வைத்துள்ளனர். திருமணம் செய்தது முதலே கணவரின் குடும்பத்தார் நகை, பணம் போதாது என இழிவாகப் பேசுவதும் ,அவரது கணவரும் சண்முகப் பிரியாவைப் பிடிக்கவில்லை என்றும் அவரது சகோதரி மகளை திருமணம் செய்யப் போவதாகவும் தொடர்ந்து சித்திரவதை செய்துள்ளனர். பின்னர் கிராம பஞ்சாயத்தார்கள் தலையிட்டுப் பேசியதன் விளைவாக கணவன் மனைவி இருவரும் திட்டச் சேரியில் தனிக்குடித்தனம் இருந்து வந்துள்ளனர். தனிக்குடித்தனம் இருக்கும்போது மனைவிக்கோ, குழந்தைகளுக்கோ செலவிற்குப் பணம் ஏதும் கொடுப்பதில்லை. இச்சூழலில் 23.12.2009 அன்று இரவு 9 மணி அளவில் கணவரின் குடும்பத்தார் சண்முகப்பிரியவை அடித்து தலையில் மண்ணெணை ஊற்றி கொளுத்த முயற்சித்துள்ளார்கள். பிறகு தண்ணீரில் அமுக்கிக் கொலை செய்ய முயன்றுள்ளார்கள். அவர்களிடமிருந்து சண்முகப்பிரியா தப்பித்து கார் பிடித்து மருத்துவமனைக்கு சென்று உயிர் பிழைத்துள்ளார்.

## வரதட்சணை கேட்டு மனைவியை கொடுமைப்படுத்திய கணவன் கைது

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, ஜோலார்பேட்டை, எம்.ஜி.ஆர். நகர் பகுதியைச் சேர்ந்தவர் தீபா. இவருக்கும் அப்பிரெட்டி புதூர் வீரமந்திர தெருவைச் சேர்ந்த ராமச்சந்திரன் என்பவரின் மகன் சம்பத் என்பவருக்கும் 20.01.2008ஆம் ஆண்டு திருமணம் நடந்துள்ளது. திருமணத்தின் போது 10 சவரன் தங்க நகையும் 90,000 ரொக்கமும் வரதட்சணையாகக் கொடுத்துள்ளனர். மேலும் சீர் வரிசையும் கொடுத்துள்ளனர். திருமணம் ஆகி 6 மாதம் வரை மகிழ்ச்சியாக வாழ்ந்திருக்கிறார்கள். பின்பு தினமும் குடித்துவிட்டு மனைவியைப் பெற்றோர் வீட்டில் பணம் வாங்கி வரச் சொல்லி அடித்தும், இழிவாக பேசியும் வந்துள்ளார். இதனால் தீபா தனது பெற்றோரிடம் போய் தனது கணவர் பணம் கேட்கிறார் என்று கேட்டதற்கு அவளது

பெற்றோர் தர முடியாத சூழலில் கணவர் வீட்டிற்கு திருப்பி அனுப்பியுள்ளனர். இந்நிலையில் தீபாவிற்கு ஆண் குழந்தை பிறந்துள்ளது. இச்சூழலில் சம்பத் தன் மனைவியை கோவையில் தனியாக வீடு பார்த்து தனிக்குடித்தனம் வைத்துள்ளார். பின்பு தினமும் குடித்துவிட்டு வீட்டிற்கு வருவதும், மனைவியை அடிப்பதுமாக இருந்துள்ளார். பின்பு வீட்டை விட்டு வெளியே சென்றவர் 10 நாட்களாகியும் வீடு திரும்பிவில்லை. தீபா தனது குழந்தையைத் தூக்கிக் கொண்டு பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டார். இந்நிலையில் சம்பத் விவாகரத்து கோரி வக்கீல் நோட்டீஸ் அனுப்பியுள்ளார். உடனே தீபா அவரதுப் பெற்றோரிடம் கூறி மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருக்கிறார். காவல் துறையினர் சம்பவத்தைக் கைது செய்து சிறையில் அடைத்து விட்டனர்.

## தொடரும் குடும்ப வன்முறை

விருதுநகர் மாவட்டம், சாத்தூர் நகர், பெருமாள் கோவில் தெரு தனலட்சுமிக்கும் (24), திருநெல்வேலி மாவட்டம், வீரவநல்லூர், காவல் நிலைய எல்லைக்கு உட்பட நரசிம்ம ஐயங்காரின் மகன் பார்த்தசாரதி (32) என்பவருக்கும் 04.11.2005 திருமணம் நடைபெற்றுள்ளது. வரதட்சணையாக மொத்தம் 10 பவுன் நகை சீர்வரிசையாக கொடுத்துள்ளார்கள். இருப்பினும் மாமியார் ராமலெட்சுமி சித்திரவதை செய்து வந்துள்ளார். இவருடைய கணவர் குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி உள்ளார். தனலெட்சுமி மிகவும் அழகாக இருப்பதால் கணவர் அவரை வீட்டை வீட்டு வெளியே விடுவதில்லை. ஏதாவது தேவைக்காக வெளியே வந்தால் சந்தேகப்பட ஆரம்பித்துள்ளார். கணவரும், மாமியாரும் தனலெட்சுமியன் பெற்றோர் மற்றும் உறவினர்கள் யாரும் அவர்களது வீட்டிற்கு வரக்கூடாது என நிபந்தனை விதித்துள்ளார்கள். இது போன்ற சித்திரவதைகளைப் பொறுத்துக் கொள்ள முடியாத தனலெட்சுமி வீரவநல்லூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார்.

## கூடுதல் வரதட்சணைக் கேட்டு கொடூரமாகச் சித்திரவதை செய்யும் கணவர்

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், கேட்டவரம்பாளையம் மகன் பிரதாப் என்பவருக்கும் அம்மு என்பவருக்கும் 16.06.2005 அன்று திருமணம் நடைபெற்றுள்ளது. திருமணம் முடிந்த நாள் முதல் கூடுதல் வரதட்சணையாக 10 பவுன் நகையையும், 20 ஆயிரம் ரொக்கமும் வாங்கி வரச் சொல்லி கணவனும் அவரது குடும்பத்தாரும் தொடர்ந்து அடித்துச் சித்திரவதை செய்து வந்துள்ளனர். வறுமையில் வாடிய முனியப்பன் மகள் அம்மு வீட்டிற்கு செல்லும் போதெல்லாம் ரூ1000,2000-எனக் கொடுத்து அனுப்பியுள்ளார். குழந்தை பிறந்த போது சீதனம் செய்ய வில்லை எனவும் தினமும் வார்த்தையாலும், அடித்தும் சித்திரவதை செய்துள்ளார்கள். கொடுஞ்சித்திரவதைகளுக்கு உள்ளான அம்மு செங்கம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார். தற்போது கணவனை விட்டுப் பிரிந்து குழந்தைகளோடு வசித்து வருகிறார்.

## கூடுதல் வரதட்சணைக்காக இரண்டாவது திருமணம் செய்த கணவன்

தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் அருகேயுள்ள கொடும்பூறார் நேதாஜி மகள் சந்திராவிற்கும், ஆலங்குடி- பூந்தோட்டம் நேதாஜிக்கும் 23.05.2004 அன்று திருமண நடந்துள்ளது. மேற்படி திருமணத்தின் போது 13 பவுன் நகை, சுமார் ஒரு லட்சம் மதிப்பிலான சீர்வரிசை என வரதட்சணையாக கொடுத்துள்ளார்கள். திருமணம் முடிந்து சில மாதங்களில் சொந்த நிலம் வாங்கித் தருவதாக ஆசை வார்த்தை கூறி சந்திராவின் நகைகளை ஏமாற்றி மாமியார் வாங்கி, அவரது இளைய மகன் பிரகாஷ் படிப்பதற்கு செலவழித்து விட்டு மேலும் பணம் போத வில்லை என கூடுதல் வரதட்சணையாக 50 ஆயிரம் வாங்கி வரச்சொல்லிச் சந்திராவை சித்திரவதை செய்துள்ளனர். இந்நிலையில் கர்ப்பமாக இருந்த சந்திராவை அடித்துச் சித்திரவதை செய்துள்ளனர் இச்சூழலில் 24.02.2005 அன்று சந்திராவிற்கு ஆண் குழந்தை பிறந்துள்ளது. குழந்தையை பார்க்க சென்ற மாமனார் மற்றும் மாமியார் அவரது கணவரைப் போல் குழந்தை இல்லை என்றும். வேறு யார் மூலமோ குழந்தைப் பெற்றுள்ளார் என்றும் சித்திரவதை செய்துள்ளார். பின்னர் குழந்தையுடன் கணவர் வீட்டிற்குச் சென்ற சந்திராவை, கணவர் நேதாஜி வேலைக்கு சென்றவுடன் சாப்பாடு கொடுக்காமல் சந்திராவையும், குழந்தையையும் பட்டினிப் போட்டுச் சித்திரவதை செய்துள்ளனர். தொடர் சித்திரவதையால் பாதிக்கப்பட்ட சந்திரா, அவரது தந்தை வீட்டிற்கு செல்லவே அதை சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு நேதாஜிக்கு திருமணம் ஆனதை மறைத்து சென்னையைச் சேர்ந்த மணி என்பவரது மகளை இரண்டாவது திருமணம் செய்துள்ளார்

## வரதட்சணை கொடுமையால் புதுப்பெண் சித்திரவதை

வேலூர் மாவட்டம், போளூர் தாலுகா சனிக்கவாடி கிராமத்தைச் சேர்ந்தவர் விசுவநாதன் இவரது மகள் திலகவதி. இவருக்கும், செங்குணம் கிராமத்தைச் சேர்ந்த குப்புராவ் என்பவருக்கும் 07.09.2009-ல் திருமணம் நடந்துள்ளது. திருமணத்தின் போது 20 சவரன் நகை மற்றும் சீர்வரிசை கொடுத்துள்ளனர். திருமணம் நடந்த ஒரு மாதத்திலேயே 30 சவரன் பேசி 20 சவரன் தான் போட்டுள்ளதாக கேவலமாக கணவர் வீட்டில் சித்திரவதை செய்து இன்னும் பெற்றோர் வீட்டிற்கு சென்று ரூ 20,000 வாங்கி வருமாறுக் கொடுமைப்படுத்தி யுள்ளனர். மேலும் கணவர் மாதவிடாய் கலத்திலும் வலுக்கட்டாயமாக உடலுறவு கொண்டுள் ளார். மறுத்தால் சிகரெட்டால் உடலிலும், பிறப்புறுப்பிலும் சூடு வைத்துள்ளார். கணவர் வீட்டுக் கொடுமை தாங்காமல் திலகவதி பெற்றோர் வீட்டிற்கு சென்று பின்பு போளூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் செய்துள்ளார்.

## மனைவியிடம் கூடுதல் வரதட்சணைக் கேட்டு குடும்பத்தினர் அனைவரும் சேர்ந்து சித்திரவதை

தருமபுரி மாவட்டம், கைலாயபுரம் கிராமத்தைச் சேர்ந்த கலைச்செல்விக்கும், தண்டபாணிக்கும் 16.04.2008 அன்று திருமணம் நடந்துள்ளது. வரதட்சனையாக திருமணத்தின்போது 25, பவுன் நகையும், 60ஆயிரம் ரொக்கப்பணமும், 40ஆயிரம் மதிப்பதிலான சீர்வரிசையும் கொடுத்துள்ளார்கள்.

ஒரு வருடம் கூட்டுக் குடும்பமாக இருந்து விட்டு தனிக்குடித்தனம் செல்ல ரூபாய் ஒருலட்சமும், டூவீலர் வாங்க 60ஆயிரம் கூடுதல் வரதட்சனையாக கலைச்செல்வியை வாங்கி வரச் சொல்லி கணவர் தண்டபாணி, குடும்பத்தினர் கொடூரமான முறையில் சித்திரவதை செய்து, சேலையைப் பிடித்து இழுத்து கிழித்து மானபங்கம் செய்துள்ளார்கள் . பாதிக்கப்பட்ட கலைச்செல்வியும், விதவை தாயான அல்லியும் 05.07.2009 அன்று அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார்கள். ஆனால் காவல்துறை அதிகாரிகள் விசாரணை செய்து, உண்மையை கண்டறிந்து, கண்டித்து சேர்ந்து வாழ அறிவுரை கூறியுள்ளார்கள். ஆனால் கூடுதல் வரதட்சணை கேட்டு சித்திரவதை தொடரவும் 21.12.2009 அன்று அரூர் அனைத்து மகளிர் காவல் துறையினர் கு.எண் 20/2009இல் வழக்கு பதிவு செய்துள்ளார்கள். அதன் பிறகு அவரது அம்மா வீட்டில் கலைச்செல்வி வசித்து வந்துள்ளார். ஆனாலும் கணவரின் குடும்பத்தார் 21.12.2009 அன்று இரவு 09.30 மணியளவில் வழக்கை வாபஸ் பெறச் சொல்லி மீண்டும் சித்திரவதை செய்துள்ளார்கள். இச்சம்பவம் தொடர்பாகவும் அரூர் காவல் நிலையத்தில் 04.01.2010 அன்று கு.எண் 07/2010இல் வழக்கு பதிவு செய்யப்பட்டு, நீதிமன்ற விசாரனையில் உள்ளது.

## கேட்ட வரதட்சணை கொடுக்க முடியாததால் முதல் இரவை தடுத்த மாமியார்

வேலூர் மாவட்டம், வாணியம்பாடி, இருதய ஆண்டவர்தெரு, லட்சுமி காட்டேஜ், முகவரியில் வசித்து வரும் சிறப்பு சார்பு ஆய்வாளர் முருகேசன் மகள் பவித்ரா(25) என்பவருக்கும், அதே பகுதி பாலசுப்பிரமணியம் த/பெ ஜெயராமன் என்பவருக்கும் 27.08.2009 அன்று திருமணம் நடைபெற்றுள்ளது. மேற்படி திருமணத்தில் தன் மகளுக்கு வரதட்சணை கொடுக்க வேண்டும் என்பதற்க்காக பவித்ராவின் தந்தை, சிறப்பு சார்பு ஆய்வாளர் பணியை, விருப்ப ஓய்வு திட்டத்தின் மூலம் ஓய்வு பெற்று அதன் மூலம் கிடைக்கப் பெற்ற பணத்தில் 20பவுன் நகையும், சீதனப்பொருட்களாக 2இலட்சம் ரூபாய் மதிப்பிலும் வரதட்சணையாகக் கொடுத்துள்ளார். திருமணமான அன்று வரதட்சணையாக கொடுக்க சம்மதித்த டூவீலர் வாங்கிக் கொடுக்காத நிலையில் தாலி கட்டும் முன்பு மாப்பிள்ளை வீட்டார் பிரச்சினையும் செய்துள்ளார்கள்.

அன்று இரவு புதுத்தம்பதியருக்கு நடக்க இருந்த முதல் இரவை அவரது மாமியார் விஜயலட்சுமி நடக்க விடாமல் தடுத்துள்ளார். மேற்படி தகவல் தெரிந்த பவித்ராவின் தந்தை ரூபாய் 50 ஆயிரம் கொண்டுவந்து கொடுத்த பிறகே திருமணம் முடிந்த 3வது நாள் மாமி யாரின் உத்தரவுப்படி முதல் இரவு நடந்துள்ளது. திருமணம் முடிந்த ஒரு மாதம் கழித்து பொங்கலுக்குப் புதுக்குடித்தனம் சென்றுள்ளார்கள். பாலசுப்பிரமணியம் பவித்ராவை ஒரு கம்பெனிக்கு வேலைக்கு அனுப்பியுள்ளார். தினமும் பவித்ரா வேலைக்குச் சென்றாலும் இரவு நேரங்களில் தனிமையில் படுக்கவைத்து, பிச்சைக்கார குடும்பம் எனவும் பேசி மனரீதியாக வும், உடல் ரீதியாகவும் சித்திரவதை செய்து, தூக்கு போட்டு சாகும்படி நிர்பந்தம் செய்துள்ளார். நீ செத்து விட்டால் தான் இரண்டாவது திருமணம் செய்து சந்தோசமாக இருப்பேன் என்று

தனது விருப்பத்தையும் அவரது கணவர் கூறிவந்துள்ளார். கணவர் குடும்பத்தினர், பவித்ராவின் தாலியையும், மெட்டியையும் வாங்கிக் கொணடு, அவரது நடத்தை சரியில்லை என பெற்றோர் வீட்டிற்கு விரட்டியடித்துள்ளார்கள். தற்போது வேலூர் மாவட்ட சமூக நலத்துறையில் – குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டத்தின் கீழ் புகார் கொடுத்து விசாரனை நடைபெற்றுள்ளது.

## திருமணமான 3 நாளில் வரதட்சணை கொடுமை

இராமநாதபுரம் மாவட்டம், கருவேப்பிலைக்கார தெருவைச் சார்ந்த ஆறுமுகம் மகள் அனிதாவுக்கும், மண்டபம் கேம்ப் மணி கூண்டு பகுதியை ஆறுமுகம் மகன் சரவணனுக்கும் 29.01.2010 அன்று இருவீட்டார் சம்மதத்துடன் திருமணம் நடந்துள்ளது. திருமணத்தின் போது அனிதாவுக்கு 11 பவுன் தங்க நகை போட்டுள்ளார். திருமணத்திற்கு பிறகு அனிதா கணவர் வீட்டில் இருந்துள்ளார். திருமணமான 3 நாள்களில் மேலும் 20 பவுன் நகையும் மோட்டார் பைக்கும் வரதட்சணையாக கேட்டுள்ளனர். அனிதா பெற்றோர்களிடம் வரதட்சணை வாங்கி வராததால் சரவணன் குடிபோதையில் கொன்று விடுவதாகவும் மிரட்டியுள்ளார். அதனால் அனிதா தந்தை வீட்டிற்கு சென்றுள்ளார். டிசம்பர் 21-ல் வரதட்சணைகேட்டு துன்புறுத்திய கணவர், மாமியார் மற்றும் கணவரின் அண்ணி ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என இராமநாதபுரம் மாவட்டம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் செய்துள்ளார். மகளிர் காவல் நிலையத்திலிருந்து நடவடிக்கை எடுக்கவில்லை. இதையடுத்து 22.08.2011 அன்று இராமநாதபுரம் மாவட்ட கலெக்டர் ஹரிகரனின் நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளருக்குப் பரிந்துரை செய்துள்ளார்.

## வரதட்சணை கேட்டு கொடுமைப்படுத்திய சம்பவம்

திருவாரூர் மாவட்டம், புதுப்பந்து வீராச்சாமி மகள் திலகவதிக்கும், நாகப்பட்டிணம் காடம்பாடி, சவேரியர் கோவில் தெருவைச் சேர்ந்த நாகப்பன் மகன் மணிமாறனுக்கும் கடந்த 04.06.2009 அன்று பெரியோர் முன்னிலையில் திருமணம் நடந்துள்ளது. திருமணத்தின் போது வரதட்சணையாக 5 பவுன் நகையும் கட்டில், பீரோ மற்றும் தளவாட சாமான்கள் அனைத்தும் வாங்கிக் கொடுத்தும் மற்றும் பெரிய வண்டியும் வாங்கிக் கொடுத்துள்ளனர். திருமணம் முடிந்து 1 மாதம் காலம் மட்டுமே இருவரும் சந்தோஷமாக வாழ்ந்துள்ளனர். அதன்பிறகு தினந்தோறும் குடித்துவிட்டு வந்து நகை வாங்கிக் கொண்டு வா என்று அடிப்பதும், சித்திரவதை செய்வதும் வாடிக்கையாக இருந்து வந்துள்ளது. அதனைத் தொடர்ந்து திலகவதியின் உறவினர்களை வைத்து பலமுறை பேசியும் எந்தவித மாற்றமும் இல்லாமல் தினந்தோறும் குடித்துவிட்டு வந்து அவரை குளத்திற்குச் செல்ல கூடாது, வாசலுக்கு சாணி கரைக்கப் போகக்கூடாது என்றும் அடிப்பதுமே வாடிக்கையாக இருந்துள்ளது. மேலும் கடந்த 10.03.2010 அன்று காலை சுமார் 7.00 மணியளவில் இரவு வாங்கி வைத்திருந்த பிராந்தியை குடித்துவிட்டு விளக்குமாற்றால் திலகவதியை அவரது கணவர் கீழே தள்ளி நெஞ்சில் குத்தி யுள்ளார். அன்றே அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள். அவரை அரசுத்தலைமை மருத்துவ மனையில் சிகிச்சைக்காக சேர்த்துள்ளனர். பின்பு திலகவதியின் புகாரின் பேரில் நாகை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

## வரதட்சணைக் கேட்டு மனைவிச் சித்திரவதை

திருவண்ணாமலை மாவட்டம், மங்கலம் அஞ்சல், மா.புதூர் கிராமம், சே. புஷ்பா என்பவருக்கு திருமணமாகி 21 வருடங்கள் ஆகின்றது. இவரது கணவர் லாரியில் லோடு மேனாக வேலை பார்த்து வந்துள்ளார். இவர் புஷ்பாவிடம் வரதட்சணை கேட்டு அடித்துச் சித்திரவதை செய்து வந்துள்ளார். இந்நிலையில் இவர் 9 மாத நிறைமாத கர்ப்பிணியாக இருக்கும்போது மீண்டும் அவரது கணவர் புஷ்பாவின் பெற்றோர் வீட்டில் இருந்து ரூ.10,000/– வரதட்சணை வாங்கிக் கொண்டு வருமாறு தடியால் அவரது தலையில் அடித்து மண்டையை உடைத்துள்ளார். அது மட்டுமல்லாமல் அவரது புடவை மற்றும் துணிகள் அவரது மூத்த மகளின் துணிகள் அனைத்தையும் மண்ணெண்ணெய் ஊற்றிக் கொளுத்தியுள்ளார். அப்போது வேதனை அடைந்த புஷ்பா வலி தாங்க முடியாமல் எரிந்த தீயில் தற்கொலை செய்து கொள்ளக் குதித்துள்ளார். அத்துடன் தனது இரண்டு குழந்தைகளையும் தீயில் தள்ளிவிட்டதில் இரண்டு குழந்தைகளின் கால்கள் தீயில் கருகிவிட்டது. இந்நிலையில் புஷ்பாவின் தலையில் ஏற்பட்ட காயத்திற்குத் தனியார் மருத்துவமனையில் 11 தையல் போடப்பட்டு வைத்தியம் செய்துள்ளார். மேலும் தலையில் ஏற்பட்ட காயத்தால் கண் நரம்பும், காது நரம்பும் பாதிக்கப்பட்டுள்ளது. சென்னை பொது மருத்துவமனையில் ஸ்கேன் எடுக்கப்பட்டு தற்போது எந்த வேலையும் செய்ய முடியாமல் தனிமையில் உள்ளார். இது தொடர்பாக புகார் மனு தயாரிக்கபட்டு கடந்த 05.07.2010 அன்று மாவட்ட ஆட்சியர், மாவட்ட சமூக நல அலுவலர், மாவட்ட பாதுகாப்பு நல அலுவலர் ஆகியோருக்கு புகார் கொடுத்து குடும்ப வன்முறைத் தடைச்சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடைபெற்று வருகிறது.

# வரதட்சணை மரணங்கள்

## வரதட்சணைக் கேட்டு கல்லூரி விரிவுரையாளர் மனைவி எரித்துக்கொலை

திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி வட்டம், திருநின்றவூர் அடுத்த பெரியார் நகரை சேர்ந்தவர் ரமேஷ். இவர் கூலி வேலை செய்து வந்துள்ளார். இவருக்கும் சென்னை தண்டையார்பேட்டை தமிழர் நகரைச் சேர்ந்த குமார்–கமலா தம்பதியினரின் மகள் பவானிக்கும் கடந்த 18.02.2010 அன்று திருமணம் நடந்துள்ளது. இந்நிலையில் வரதட்சணைக் கேட்டு ரமேஷ் மற்றும் அவரது தாயார் பொம்மி ஆகியோர் பவானி மீது மண்ணெணெய் ஊற்றி எரித்துக் கொலை செய்து விட்டதாகக் கூறப்படுகிறது. பவானி சாவில் சந்தேகம் உள்ளதாகப் பவானியின் பெற்றோர் திருநின்றவூர் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளனர். போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இவ்வழக்கில் திருவள்ளூர் மாவட்ட நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

## வரதட்சணைக் கொடுமையால் பெண் தற்கொலை

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, மேட்டு இடையம்பட்டி எம்.ஜி.ஆர். நகரைச் சேர்ந்த ஆனந்தன் மகன் ஞானம்பாள் என்பவரை அதே பகுதியில் வசிக்கும் கிருஷ்ணமூர்த்தி மகன் பாஸ்கரன் (23) என்பவர் காதலித்து 07.04.2009 அன்று யாருக்கும் தெரியாமல் ஞானம்பாளை பாஸ்கரன் சென்னைக்கு கூட்டிச் சென்று திருமணம் செய்து கொண்டார். வீட்டை விட்டு ஓடிய ஞானம்மாள் தாய் புவனேஸ்வரியிடம் திருமணம் முடிந்து விட்டது சீர் வாங்க பணம் வேண்டும் என்று கேட்கவே ஜனவரி 2010-ல் 10 ஆயிரம் ரூபாய் கடன் வாங்கி அனுப்பி யுள்ளார். அதன்பின்பு புவனேஸ்வரி அவரது தாயுடன் தொலைபேசி மூலம் தொடர்பு வைத்துள்ளார். அப்போதும் தாய் புவனேஸ்வரி மகளிர் சுய உதவிக் குழுவில் 9 ஆயிரம் அனுப்பியுள்ளார். இச்சூழலில் கர்ப்பமடைந்தை ஞானம்மாள் 03.06.2010 அன்று தாய் வீட்டிற்கு சென்றுள்ளார். அங்கு ஞானம்மாள், டூவீலர் வாங்க 50 ஆயிரம் வாங்கி வரச்சொல்லி கணவர் தினமும் குடித்துவிட்டு சித்திரவதை செய்யும் விபரத்தை கூறியுள்ளார். அதனால் அவருடைய தாயும் பணத்தை ஏற்பாடு செய்து கணவர் வீட்டிற்கு அனுப்பி வைத்துள்ளார். இந்நிலையில் ஞானம்மாள் கணவர் சென்ற மறு நாளே தூக்கு போட்டு இறந்துள்ளார். திருமணம் முடிந்து ஒரு ஆண்டு மட்டும் ஆனதால் உதவி கலெக்டர் விசாரணை நடந்துள்ளது. பெற்றோர்கள் நீதிக்காக பட்டியிலில் காத்திருக்கிறார்கள்.

## வரதட்சணை கேட்டதால் அவமானம் தாங்காமல் இளம் பெண் தீக்குளிப்பு

நாகப்பட்டிணம் மாவட்டம், சீர்காழி தாலுகா, கொள்ளிடம் தைக்கால் பள்ளிவாசல் தெருவில் வசித்து வருபவர் அப்துல் ஜலீஸ். இவரது மகன் ஜாகீர் உசேனுக்கும், சிதம்பரம் தாலுகா பரங்கி பேட்டை வாத்தியார் பள்ளி தெருவை சேர்ந்த கரீம் மகள் மதீனா பானு என்பவருக்கும் 2009 ஆம் ஆண்டு திருமணம் நடந்துள்ளது. திருமணமான ஒரு மாதத்திலேயே ஜாகீர் உசேன் வெளிநாடு சென்று விட்டார். அதனால் கணவரின் குடும்பத்தார் அடிக்கடி வரதட்சணை மற்றும் சீர்வரிசை பொருட்கள் கேட்டு மதீனா பானுவை பெற்றோர் வீட்டிற்கு அனுப்பியுள்ளனர். இப்படி ஒரு நாள் பிரிட்ஜ் கேட்டு வாங்கி வருமாறு அனுப்பி உள்ளனர். தனது பெற்றோரிடம் மதினா பானு கேட்டதற்கு தற்போது பணம் இல்லை பிறகு எடுத்து தருகிறேன் என தந்தை கரீம் கூறி தனது மகளை மருமகன் வீட்டில் கொண்டு போய் விட்டிருக்கிறார். அங்கு மீண்டும் மதினா பானுவின் மாமா, மாமியார் நாத்தனார் சித்திரவதை செய்துள்ளனர். இதனால் மனமுடைந்த மதினா பீவி 16.02.2010 அன்று நள்ளிரவு 12 மணியளவில் உடலில் தனக்குத் தானே மண்ணெண்ணையை ஊற்றித் தீ வைத்துக் கொண்டுள்ளார். உடனே அணைக்கப்பட்டு பாண்டிச்சேரி அரசு மருத்துவமனையில் சேர்த்துள்ளனர்.

## வரதட்சணைக் கொடுமையால் தீக்குளித்து இளம் பெண் சாவு

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை, மருள்பட்டியைச் சேர்ந்தவர் சுகந்தி இவருக்கும், பழனி மானூர் கிராமத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் மகன் கார்த்திக்கேயன் என்பவருக்கும் கடந்த 2 வருடங்களுக்கு முன்னர் திருமணம் நடந்துள்ளது. திருமணத்திற்கு பிறகு கார்த்திகேயன் தனது மனைவி மற்றும் தந்தை சுப்பிரமணியம், தாய் விஜயா ஆகியோருடன் திருப்பூரில் கே.டி.மில் பகுதியில் வசித்து வந்துள்ளார். சுகந்திக்கு ஒரு கால் ஊனம் உள்ளதால் திருமணத்தின்போது 30 பவுன் நகையையும் ரூ. 2 லட்சம் ரொக்கமும் வரதட்சணையாக கொடுத்துள்ளனர். இவர்களுக்கு சுவாதி என்ற 8 மாத பெண் குழந்தை உள்ளது. கார்த்திகேயன் தனது மனைவியிடம் தனியாக பனியன் கம்பெனி வைக்கப் பெற்றோரிடம் பணம் வாங்கி வருமாறு அனுப்பியுள்ளார். சுகந்தியும் தனது பெற்றோர் வீட்டிற்கு சென்று கணவர் பணம் கேட்கிறார் என்று கேட்டுள்ளார். அவரது பெற்றோர்களும் பிறகு தருகிறோம் என்று சுகந்தியை கணவர் வீட்டிற்கு அனுப்பி வைத்துள்ளனர். இதனால் கணவர் மனைவியிடையே பிரச்சினை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் கணவர் வீட்டில் இல்லாதபோது தனிமையில் இருந்த சுகந்தி மனமுடைந்து மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்துக் கொண்டார். அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் காப்பாற்றி மருத்துவமனையில் சேர்த் துள்ளனர். அங்கு சிகிச்சை பலனின்றி சுகந்தி இறந்துள்ளார். காவல்துறையினர் கார்த்திகேயன், மாமனார் சுப்பிரமணியம், மாமியார் விஜயா ஆகியோரைக் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர்.

## கூடுதல் வரதசட்ணைக்கேட்டு மனைவியை எரித்துக் கொன்ற கணவன்

வேலூர் மாவட்டம் (தாலுகா) பொய்சத்தியமங்கலம் அருகே உள்ள மேடு கிராமத்தைச் சேர்ந்த கோவிந்தசாமி மகள் ராதாவிற்கும், அரிஞ்சாபுரம் குமார் மகன் ரவிக்கும் 22.10.2007 அன்று திருமணம் நடந்துள்ளது. திருமணத்தின் போது வரதட்சணையாக 12 பவுன் நகையையும், டூவீலர் வாங்க 40 ஆயிரம் ரூபாயும், ரூபாய் ஒரு லட்சம் மதிப்புள்ள சீர் வரிசையும் கொடுத்துள்ளார்கள். திருமணம் முடிந்த மூன்றாவது நாள் கணவர் ரவி, மாமனார் சாந்தி, அவரது கணவரின் தாய்மாமா கோவிந்தசாமி அவரது மகள் துர்கா, ஆகியோர் வந்த சீர்கள் தரமில்லை என்றும், எல்லா தங்க நகைகளிலும் கல் உள்ளது. எனவே சுத்தமான நகையோடு வா எனச் சொல்லி அவரது வீட்டு அருகே விட்டு விட்டு வந்துள்ளார்கள். அதன்பிறகு 10 நாள் கழித்து முக்கிஸ்தர்கள் பஞ்சாயத்து பேசி கணவர் வீட்டிற்கு ராதாவை அனுப்பியுள்ளார்கள். இச்சூழலில் கர்ப்பமாக இருந்த ராதாவை தொடர்ந்து சித்திரவதை செய்துள்ளார்கள். அவ்வாறு 7 மாத கர்ப்பிணியாக இருந்த ராதாவை, கணவரும், அவரது குடும்பத்தாரும் ராதா மீது மண்ணெண்ணெய் ஊற்றியுள்ளனர். ராதா அலற பக்கத்து வீட்டுகாரர்கள்வந்து தடுக்கவே ராதா அன்று உயிர் தப்பியுள்ளார். அங்கிருந்து தப்பித்து சென்ற ராதா குழந்தை பிறந்த பிறகு மீண்டும் வரதட்சணைக் கொடுமை தொடரவே வேலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்து நீதிமன்ற விசாரணை நிலுவையில் உள்ளது.

## கூடுதல் வரதட்சணைக்காக மனைவி மகள் கொலை

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி தாலுகா, பல்லவாடா அருகேயுள்ள கண்ணம்பாக்கம் பெருமாள் கோவில் தெருவில் உள்ள செல்வநாதன் மகள் கவுதமி என்பவரை வேம்பேடு கிராமத்தைச் சேர்ந்த ஜெய்சங்கர் த/பெ. திருநாவுக்கரசு என்பவருக்கும் 26.02.2009 அன்று திருமணம் நடந்துள்ளது. திருமணத்தின் போது வரதட்சணைக்காக 70 பவுன் தங்க நகை, 1 கிலோ வெள்ளி 1,10,000 ரொக்கம் மற்றும் சுமார் 2 லட்சம் மதிப்பான சீர்வரிசைகள் கொடுத்துள்ளார்கள். ஜெய்சங்கர் வரதட்சணைக்காக கொடுத்த நகைகளை விற்று வந்துள்ளார். வண்டி வாங்கி ஆந்திராவில் தொழில் செய்து வந்துள்ளார். இந்நிலையில் தொழில் விசயமாக ஆந்திரா மாநிலம் சென்று வருவதால் மனைவி கவுதமியை அவரது தாயார் வீட்டில் விட்டு விட்டு வாரம் ஒரு முறை வந்து பார்த்துள்ளார். இச்சூழலில் கௌதமிக்கு டிசம்பர் கடைசி வாரம் பெண் குழந்தை பிறந்துள்ளது. குழந்தை பிறந்தவுடன் அடிக்கடி வீட்டிற்கு வந்த ஜெய்சங்கர்  அவரது மனைவியிடம் தொழிலில் நஷ்டம் ஏற்பட்டு விட்டதாக சொல்லி கூடுதல் வரதட்சணையாக 25 பவுன் நகை கேட்டுள்ளார். மேற்படி விசயத்தை தன் பெற்றோரிடம் சொல்ல தற்போது கஷ்டமானசூழல் உள்ளது. பிறகு தருவதாக கூறியுள்ளார்கள். கடந்த 04.02.2010 வந்து 5 மணிக்கு பெற்றோர் வீட்டிலிருந்த மனைவி கவுதமியையும் 40 நாள் பெண் குழந்தையும் ஜெய்சங்கர் கொன்று மனைவியைத் தூக்கில் தொங்கவிட்டுத் தப்பித்து ஒடியுள்ளார்.  ஊர் மக்கள் பிடித்து காவல்நிலையத்தில் ஒப்படைத்துள்ளார்கள்.

## கூடுதல் வரதட்சணைக் கேட்டு கர்ப்பமான பெண் அடித்துக் கொலை

கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக் கோட்டை வட்டம், இராயக் கோட்டை அருகே உள்ள எல்லப்பன் கொட்டாயை சேர்ந்தவர் சுலோச்சனா (21) த/பெ ஜெயராமன் என்பவருக்கும், அதே வட்டத்தில் உள்ள சிங்காரப் பேட்டை கிராமத்தைச் சேர்ந்த சென்ராயன் த/பெ சின்னையன் என்பவருக்கும் 08.03.2009ல் திருமணம் நடந்துள்ளது. மேற்படி திருமணத்தின் போது 12 1/2 பவுன் நகையும், டூவீலர் வாங்க 25ஆயிரமும் மற்றும் சீதனப் பொருட்களும், வரதட்சணையாக கொடுத்துள்ளார்கள். சில மாதங்கள் மட்டுமே சந்தோஷமாக வாழ்ந்தனர். இந்நிலையில் கூடுதல் வரதட்சணை கேட்டு சின்னையன் மாமியார் பெருமாயி ஆகியோர் சுலோச்சனாவிடம் கூடுதல்  நகையும், பணமும் வாங்கி வரச் சொல்லி அடித்து விரட்டியுள்ளார்கள். திருமணமான 8 மாதத்தில் 5மாத கர்ப்பிணியாக இருந்த சுலோச்சனாவின் பெற்றோர், ஒரு மாதத்தில் ஏற்பாடு செய்து தருவதாக கூறி ஆறுதல் சொல்லி மீண்டும் கணவர் வீட்டிற்கு அனுப்பியுள்ளார்கள். தயக்கத்துடன் கணவர் வீட்டிற்கு சென்ற சுலோச்சனா 09.02.2010 அன்று  உடம்பில் காயங்களுடன் தூக்கில் தொங்கிய நிலையில் இறந்துள்ளார். இச்சம்பவம் தொடர்பாக குற்றவியல் நடைமுறைச் சட்டபிரிவு 174  வழக்கு பதிவு செய்து உதவி கலெக்டர் செல்வராஜ் விசாரணை செய்துள்ளார்.

## மனைவியைச் சித்திரவதை செய்து தூக்கில் தொங்கவிடப்பட்ட சம்பவம்

வேலூர் மாவட்டம், குடியாத்தம் தாலுகா, கொல்ல கொட்டாய் அருகே உள்ள பாறைப்பட்டி ராஜேந்திரன்-லெட்சுமி தம்பதியின் மகள் லாவண்யா என்பவருக்கும், ராஜேந்திரன் என்பவருக்கும் 2009 ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்றுள்ளது. மேற்படி திருமணத்தின் போது 11 பவுன் நகையும், டுவீலரும் சுமார் 50 ஆயிரம் மதிப்பிலான சீர்வரிசையும் வரதட்சணையாக கொடுத்துள்ளார்கள். திருமணம் முடிந்து ஒரு மாதத்திலே மிக்சி, கிரைண்டர் வேண்டுமென லாவண்யாவைக் கூடுதல் வரதட்சணை கேட்டு சித்திரவதை செய்துள்ளார்கள். பின்னர் மாமியார் ராஜேஸ்வரி, மாமனார் நிலம் வாங்க பணம் வாங்கி வரச் சொல்லி சித்திர வதையைத் தொடங்கியுள்ளார்கள். இவையனைத்தையும் கணவர் ராஜேந்திரன் கண்டு கொள்ளாமல் இருந்துள்ளனர். மேலும் கர்ப்பமாக இருந்த லாவண்யாவை அதிகமாக வேலை செய்யச் சொல்லி சித்திரவதை செய்துள்ளனர். இந்நிலையில் 26.04.2010 அன்று கொடூரமாக தாக்கி உடம்பில் காயங்களுடன் லாவண்யா தூக்கில் தொங்க விடப்பட்டதாக காவல் துறைக்கு தகவல் கொடுத்து சடலக் கூறாய்வு செய்துள்ளனர். அதன் பிறகு வேலூர் உதவி கலெக்டர் விசாரித்துள்ளார்

# பாலியல் சீண்டல்கள் & கேலிகள்

## பள்ளி மாணவி கலா மீது ஈவ்டீசிங்

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், சொரக்கொளத்தூர் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் ஜெகதா-சுப்பிரமணி தம்பதியினர். கூலி வேலை செய்து வந்துள்ளனர். இவர்களுடைய மகள் கலா. அதே பகுதியில் உள்ள அரசுப் பள்ளியில் 12 ஆம் வகுப்பு படித்து வந்துள்ளார். அதே பகுதியைச் சேர்ந்த சில இளைஞர்கள் கலா பள்ளிக்கு போகும் போதும், வரும்போதும் கிண்டல் செய்துள்ளனர். கடந்த 24.09.2009 அன்று மாணவி கலா வழக்கம் போல் பள்ளிக்குச் சென்று வீடு திரும்பி உள்ளார். வரும் வழியில் அதே பகுதியைச் சேர்ந்த சிவக்குமார், ராம்குமார், ஜெய்பிரகாஷ், வினோத்குமார் ஆகிய இளைஞர்கள் ஆபாசமாக கிண்டல் செய்து கலாவின் துப்பாட்டவை படித்து இழுத்து ஈவ்டீங் செய்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக கலசப்பாக்கம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்து, விசாரணை நடைபெற்று வருகிறது.

## பள்ளி மாணவி கேலி கிண்டல் சம்பவம்

தர்மபுரி மாவட்டம், அரூர் வட்டம் கிராமத்தில் டீக்கடை நடத்தி வரும் சின்ன கன்னு மகன் மணி வன்னியர் சமூகத்தைச் சார்ந்தவர். இவரது மகள் நிவேதா அரசுப் பள்ளியில் பயின்று வந்துள்ளார். இந்நிலையில் கடந்த 29.07.2010 அன்று மாலை 7 மணி அளவில் வீட்டில் இருந்து டீக்கடை வழியாக வீட்டிற்குச் சென்றுள்ளார். அங்கு தெரு விளக்கு எரியவில்லை இருட்டான இடத்தில் மறைந்து இருந்த சிவா திடீரென நிவேதாவின் துப்பாட்டாவை இழுத்துள்ளார். அவன் போதையில் இருந்ததால் அவனைத் தள்ளிவிட்டு கலா வேகமாக

வீட்டிற்கு சென்று அவரது அப்பாவிடம் தகவலைக் கூறியுள்ளார். மேலும் பள்ளிக்குச் செல்லும் போதும் சிவா நிவேதாவை கேலி, கிண்டல் செய்துள்ளார். உடனே அங்கிருந்த பொதுமக்கள் அவனைக் கட்டி இழுத்துச் சென்று காவல் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர். காவல் துறையினர் நாங்கள் பார்த்துக் கொள்கிறோம் என்று சிவாவை நிறுத்திக்கொண்டு பொதுமக்களை வீட்டுக்கு அனுப்பிவிட்டனர். அதன்பின்பு சிவா தன்னைத் தாக்கியதாகத் தர்மபுரி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சேர்ந்துள்ளான். அடுத்த நாள் கேலி கிண்டல் செய்தவன் மீது நடவடிக்கை எடுக்காமல் இருந்த காவல் துறையினரைக் கண்டித்து பொதுமக்கள் முற்றுகையிட்டு போராட்டம் நடத்தியுள்ளனர். அதனால் உடனடியாக காவலர்கள் மருத்துவமனைக்கு சென்று சிவாவைக் கைது செய்துள்ளனர்.

## ஈவ்டீசிங் செய்ததால் மாணவி தற்கொலை

கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் தாலுகா பாகலூர், அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பயின்று வந்தவர் மாணவி சசிகலா. இவர் பள்ளிக்கு செல்லும்போது மாணவர்கள் கேலி, கிண்டல் செய்துள்ளனர். அதனால் மனமுடைந்த சசிகலா பள்ளி வளாகத்திற்குள்ளேயே கடிதம் எழுதி வைத்து விட்டு விஷ மருந்து அருந்தி தற்கொலைக்கு முயன்றுள்ளார். சசிகலா மயக்க நிலையில் இருக்கும்போது மற்ற மாணவிகள் பார்த்து அவரை அருகில் உள்ள மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றுள்ளனர். செல்லும் வழியிலேயே சசிகலா இறந்துள்ளார். இது குறித்து பாகலூர் காவல் நிலையத்தில் சந்தேக மரணம் (174) என வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

## பணிபுரிந்த இடத்தில் பாலியல் வன்கொடுமை

தருமபுரி மாவட்டம், பிடமனேரி அண்ணாநகர், இராயப்பா தெருவில் தனது பெற்றோர்களுடன் வசித்து வரும் 30வயதுடைய திலகவதி த/பெ துரைராஜ் என்பவருக்கு 11 ஆண்டுகளுக்கு முன்பே திருமணமாகியுள்ளது. திருமணமான ஒரு ஆண்டிலேயே கருத்து வேறுபாட்டின் காரணமாக விவாகரத்து பெற்றுள்ளார். தற்போது அவரது விடா முயற்சியில் படித்து முடித்துவிட்டு தருமபுரி துரைச்சாமி நாயுடு தெருவில் உள்ள ஸ்ரீவிஸ்பாரதி மெட்ரிக் பள்ளியில் உடற்கல்வி ஆசிரியராகப் பணிபுரிந்து வந்துள்ளார். திலகவதி வேலைக்கு சேர்ந்த நாள் முதல் அப்பள்ளியின் தாளாளர் சுதாகரன் தவறான செயலுக்கு உட்படுத்த வேண்டு மென்று செயல்பட்டுள்ளார். ஆனால் சுதாகரனின் வக்கிர புத்தியை அறியாத திலகவதி அவரிடம் மிகவும் இயல்பாகவும், மரியாதையுடனும் பணிபுரிந்து வந்துள்ளார்.

கடந்த 03.12.2011 அன்று மேற்படி பள்ளியில் அன்றைய தருமபுரி மாவட்ட ஆட்சியர் திருமிகு. அமுதா தலைமையில் உடல் தானம் பற்றிய விழிப்புணர்வு கருத்தரங்கு நடைபெற்றுள்ளது. அந்த நிகழ்ச்சியின் பொறுப்பாளராக திலகவதி செயல்பட்டுள்ளார். விழா முடிந்தவுடன் மற்ற ஆசிரியர்கள் வீட்டுக்குச் செல்ல, விழா பொறுப்பாளரான திவகவதி பொருட்களை எல்லாம் பள்ளியில் வைத்துக் கொண்டிருந்தபோது தாளாளர் சுதாகரன் வேலை செய்து களைத்து விட்டாய் எனக் கூறி பானம் கொடுத்துள்ளார்.

குளிர்பானம் குடித்த நேரத்தில் மயங்கி விட்ட திலகவதி அங்குள்ள கம்ப்யூட்டர் ஆய்வக அறையில் வைத்து நினைவில்லாமல் இருந்த திவகவதியை கொடூரமான முறையில் பாலியல் வன்புணர்ச்சியில் ஈடுபட்டுள்ளார். மயக்கம் தெளிந்து பார்த்தபோது பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டதை அறிந்து கதறி அழுதுள்ளார். அதற்கு சுதாகரன் உணர்ச்சி வேகத்தில் தவறாக நடந்து கொண்டேன். இதை யாரிடமும் சொல்லாதே உன்னை சீரழித்த நானே திருமணம் செய்து கொள்கிறேன் எனக் கூறி திலகவதியின் கரம் பிடித்து கெஞ்சியுள்ளார்.

ஆனால் ஏற்கனவே திருமணமான சுதாகர் திலகவதியை திருமணம் செய்யாமல் ஏமாற்றி வந்துள்ளாார். ஒரு கட்டத்தில் முடியாது என மறுக்கவே திலகவதி கண்ணாடியில் கையை கிழித்து தற்கொலைக்கு முயன்றுள்ளார். அதன் பின்னரே தனது பெற்றோருக்கு விபரம் தெரிவித்துள்ளார். ஆனால் அவர் திலகவதியை ஏற்றுக் கொள்ள தயாராக இல்லை.

பின்னர் சுதாகர் வீட்டிற்கு சென்று நியாயம் கேட்டபோது அவரும், அவரது மனைவியும் அவமானப்படுத்தியதால் மண்ணெண்னெய் ஊற்றி தற்கொலைக்கு முயலவும், இருவரும் தடுத்துள்ளார்கள். அதன்பிறகு சுதாகரன் மற்றும் அவரின் மனைவி மிரட்டலை பொருட்படுத் தாமல், தருமபுரி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து நடவடிக்கை எடுக்காத நிலையில் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்து மனு 27.01.2010 யில் வழக்கு பதிவு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## கடன் தொகையைத் திருப்பி செலுத்துவதற்குப் பாலியல் உறவுக்கு அழைத்து சித்திரவதை

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், இராஜகம்பீரம் அருகேயுள்ள உடையான்பட்டி ராமமூர்த்தி என்பவரது மனைவி செல்வி, இந்து-நாடார் வகுப்பை சேர்ந்த அருணாசலம் மகன் மாணிக்கம் என்பவரிடம் ரூ. 30,000 வட்டிக்கு பணம் வாங்கியுள்ளார். பணம் வாங்கும் போது இடம் மற்றும் வீட்டுமனை பத்திரங்களையும் எழுதப்படாத 3 புரோ நோட்டும் கொடுத்துள்ளனர். வாங்கிய கடனில் செல்வியும் ராமமூர்த்தியும் 7 வருடங்களுக்கு மேல் வட்டியும் அசலையும் கட்டிவிட்டனர். அதன்பிறகு புரோநோட்டையும் அடமான பத்திரைத்தையும் செல்வி திருப்பிக் கேட்டுள்ளார். ஆனால் மாணிக்கம் மேலும் பணம் தர வேண்டியுள்ளது. பணத்தை திருப்பி தந்தால் தான் புரோ நோட்டையும், பத்திரத்தையும் தருவதாகக் கூறி மிரட்டியுள்ளார். பணம் தரவில்லை என்றால் 'நீ என்னிடம் படுக்க வேண்டும்' என வற்புறுத்தியுள்ளார். 04.03.2010 அன்று காலை சுமார் 7.30 மணிக்கு மாணிக்கம் 3 அடியாட்களை அனுப்பி செல்வியை அடித்துச் சேலையை உருவி மானபங்கப்படுத்தி காதில் கிடந்த தோடை அடித்து காதை கிழித்து எடுத்துள்ளனர். அதனை பார்த்துக் கொண்ட பக்கத்து வீட்டுக்காரர்கள் 3 அடியாட்களையும் விரட்டியுள்ளனர். அதன்பிறகு செல்வி காவல் துறையிடம் புகார் கொடுத்துள்ளார்.

## பள்ளி மாணவியை கேலி செய்த சம்பவம்

திருவள்ளூர் மாவட்டம் வெள்ளத்துக் கோட்டை நடுத்தெரு இந்து-ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த மாடசாமி (எ) சுந்தரத்தின் மகள் கோகிலா. இவர் திருவள்ளூரில் உள்ள லெட்சுமி மெட்ரிக் பள்ளியில் 8-ம் வகுப்பு படித்து வந்துள்ளார். அவர் தினமும் பள்ளிக்கூடம் செல்லும் போது ரெட்டியார் சமூகத்தைச் சேர்ந்த முனியாண்டி மகன் முத்துச்சாமி மற்றும் அவரது நண்பர்களும் கேலி செய்ய ஆரம்பித்துள்ளார்கள். இதை அறிந்த ஜோதியின் தாயார் தனது கணவன் மூலம் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவே முத்துச்சாமியின் தந்தை முனியாண்டி தனது மகனுக்காக தான் மன்னிப்புக்கோரி இனிமேல் தவறு நடக்காமல் பார்த்துக் கொள்வதாக உறுதியளித்துள்ளார். அதன் விளைவாக கோகிலாவின் தந்தை புகாரை வாபஸ் பெற்றுள்ளார்.

## நர்சிங் மாணவியை காரில் கடத்தி பலாத்கார முயற்சி கட்டப்பஞ்சாயத்து செய்து வழக்கை வாபஸ் பெற வைத்து கொடுமை

அரியலூர் மாவட்டம், செந்துறை தாலுகா, கீழப்பட்டி மருதூர் காசிநாதன் அஞ்சலை தம்பதியரின் மகள் மலர்க்கொடி. செந்துறையில் உள்ள தனியார் நர்சிங் கல்லூரியில் இரண்டாம் ஆண்டு படித்து வந்துள்ளார். இவர் செய்முறை வகுப்பிற்காக குமிமியம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சைக்கிளில் சென்று வந்துள்ளார். கடந்த 25.01.2010 அன்று மாலை 4.45 மணியளவில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு வீடு திரும்பிய மலர்க் கொடியை தொடர்ந்து கண்காணித்த வடக்குப்பட்டியை சேர்ந்த சேகர் (24), டிரைவர் ரகு (21) என்பவரும் குடிபோதையில் வழிமறித்து சைக்கிளில் வீடு திரும்பிய மலர்கொடியை பலவந்தமாகக் கீழே தள்ளிவிட்டு வலுக்கட்டாயமாக காரில் ஏற்றி மருதூர் வழியாக கடத்திச் சென்றுள்ளார்கள். டிரைவர் ரகுபதி கார் ஓட்டும்போது சேகர் காருக்குள் வைத்து மலர்க்கொடியை பாலியல் பலாத்கார செய்ய முயன்றுள்ளார். தன்னை பாதுகாக்காக போராடியபோது கார் கதவு திறக்கவே கிராம மக்கள் சத்தம் கேட்டு, ஓடி வர பதட்டத்தில் டிரைவர் காரை ஓட்டியதில் கார் நிலைதடுமாறி நின்றுள்ளது. உடனே காவல்துறைக்கு தகவல் தெரிவிக்கவே இருவரையும் கைதுசெய்து சிறையிலடைத்துள்ளனர். வழக்கு நீதிமன்ற விசாரணைக்கு சென்ற பின் ஊராட்சி மன்றத்தலைவர் மற்றும் ஊர் நாட்டாமைகள் கட்டப் பஞ்சாயத்து செய்து மலர்க்கொடியின் பெற்றோரை மிரட்டி வழக்கை வாபஸ் பெற வைத்துள்ளார்கள்.

## ஆசைக்கு இணங்க மறுத்த பெண்ணை ஊரை விட்டு ஒதுக்கி வைப்பு

இராமநாதபுரம் மாவட்டம், திருவாடாணை வட்டம், தொண்டி அருகே உள்ள முள்ளிமுனைக் காலனி தெரு பஞ்சகல்யாணி (30), க/பெ. செட்டி என்பவரின் கணவர் வெளிநாடு சென்ற நிலையில் 25.03.10. இரவு சுமார் 12.30 மணியளவில் பக்கத்து வீட்டு பாண்டி என்பவர் வீட்டிற்குள் நுழைந்து பஞ்ச கல்யாணியை பாலியல் பலாத்காரம் செய்ய முயன்றுள்ளார்.

கணவன் வெளிநாடு சென்ற நிலையில் தனக்கு ஏற்பட்ட நிலையை எண்ணிய பஞ்ச கல்யாணி தனது குழந்தைகளுடன் சென்று தொண்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார். பாண்டி மீது புகார் கொடுத்ததால் ஆத்திரமடைந்த பாண்டி அவர்களது பெற்றோர்கள் சுப்பையா, கல்யாணி மற்றும் சிலர் சேர்ந்து பஞ்சகல்யாணி மற்றும் அவரது குழந்தைகளை கொடூரமாகத் தாக்கியுள்ளார்கள். பின்னர் பஞ்சகல்யாணி கொடுத்த புகாரை வாபஸ் பெறச் சொல்லி மிரட்டியுள்ளார்கள். வாபஸ் பெற மறுத்ததால் பஞ்சகல்யாணி மற்றும் அவரது குடும்பத்தினரை ஊரை விட்டு ஒதுக்கி வைத்து ஊரில் யாரும் பேசக்கூடாது கடைகளில் பால் உள்பட எந்த பொருளும் வழங்கத் தடை, குடிதண்ணீர் பிடிக்கத் தடை, ஊர் பொதுவிழா மற்றும் திருவிழாக்களில் பங்கேற்க தடை விதித்தனர். 02.09.10 அன்று நடைபெற இருந்த பூக்குளி இறங்கும் நேர்த்திகடன் இருந்தபோது அதற்கு முதல்நாள் 01.07.2010 அன்று பிரபு உள்ளிட்ட மூவர் பஞ்சகல்யாணியை செருப்பால் அடித்துச் சித்திரவதை செய்துள்ளார்கள். அதேபோல் 28.07.10அன்று கொடூரமான முறையில் அடித்துச் சித்திரவதை செய்துள்ளார்கள். அனைத்து சம்வங்களுக்கும் சேர்த்து தொண்டி காவல் நிலையத்தில் பஞ்சகல்யாணி புகார் கொடுத்ததும் காவல் துறையினர் நடவடிக்கை எடுக்க மறுத்து வந்துள்ளனர். தொடர்ச்சியான சித்திரவதைகளுக்கு காவல் துறையினர் நடவடிக்கை எடுக்காத நிலையில் தொண்டி காவல் ஆய்வாளர் முதல் முதலமைச்சர் வரை 9 உயர்அதிகாரிகளுக்குப் பதிவு தபால் மூலம் 29.07.2009 அன்று புகார் அனுப்பியுள்ளார். புகார் மனுக்கள் சென்றது. நடவடிக்கை மட்டும் இல்லை. பாதிக்கப்பட்ட பஞ்சகல்யாணி நீதிமன்றத்தில் தனிநபர் வழக்கு பதிவு செய்துள்ளார்.

## இளம் பெண்ணைத் திருமணம் செய்வதாகக் கூறி ஏமாற்றிய இளைஞன்

அரியலூர் மாவட்டம், வட்டம், கீழப்பழூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட மேலவண்ணம், நடுத்தெருவைச் சேர்ந்த மருதமுத்து மகன் கார்த்திக் கண்ணன், மேற்படி முகவரியைச் சேர்ந்த ரவி மகள் பானுப்பிரியா என்ற 11ம் வகுப்பு படிக்கும் மாணவியைக் காதலித்து வந்தார். இந்நிலையில் கடந்த 24.12.2010 அன்று பானுப்பிரியாவைக் காணவில்லை என்று அவரது பெற்றோர் அவரது உறவினர்களுடன் தேடிச் சென்றபோது வயல்வெளியில் பானுப்பிரியாவும் கார்த்திக் கண்ணனும் இருவரும் தகாத முறையில் இருந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந் துள்ளனர். இருந்தபோதும் இருவரின் எதிர்காலத்தைக் கருதி நடந்த நிகழ்வை வெளியில் யாரிடமும் சொல்லாமல் இருவருக்கும் திருமணம் செய்து வைக்க முடிவு செய்தனர். இது தொடர்பாகக் கார்த்திக் கண்ணனின் அப்பாவிடம் கூறியபோது அவர்கள் தகாத வார்த்தைகளால் சண்டையிட்டு திருமணம் செய்து வைக்க முடியாது என்று கூறிவிட்டார். அதன் பின்னர் பானுப்பிரியா அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்ததின் பேரில் காவல் ஆய்வாளர் கார்த்திக் கண்ணன், அவருடைய அப்பா, அம்மா போன்றோர் மீது வழக்குப் பதிவு செய்து அரியலூர் குற்றவியல் நீதிமன்றத்தில் ஆஜர் செய்து சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள்.

## பாலியல் பலாத்காரங்கள் & ஏமாற்றங்கள் பணித் தளத்தில் இளம்பெண் தூக்கிட்டு தற்கொலை

நாகப்பட்டினம், சீர்காழி தாலுகா, வைத்தீஸ்வரன் கோவில், சன்னதி தெருவில் வசிப்பவர் ஜானகிராமன் இந்து வன்னியர் சமூகத்தைச் சேர்ந்தவர். இவரது மகள் பவித்ரா திருக்கடையூரில் உள்ள *DMI* என்ற நிறுவனத்தில் பணி புரிந்துள்ளார். இவருக்கு பழனி என்பவரால் பிரச்சினை இருந்துள்ளது. அதனால் நிர்வாகத்தினர் பிரச்சினைக்கு காரணமான பழனியை வேலையை விட்டு நிறுத்தியுள்ளனர். இதனால் மீண்டும் ஜானகிராமன் தனது மகளை வேலைக்கு அனுப்பியுள்ளார். ஆனாலும் பழனி தொடர்ந்து பவித்ராவைத் தொந்தரவு செய்துள்ளார். இதனால் மனம் வெறுத்துப்போன பவித்ரா சுமார் 15 நாட்களாக சக பணியாளர்களிடமோ, பெற்றோரிடமோ சரியாக பேசவில்லை. இந்நிலையில் கடந்த 14.03.2010 அன்று *DMI* அலுவலக மின் விசிறியில் தூக்கு போட்டுத் தற்கொலை செய்துள்ளார். தனது மகள் சாவில் மர்மம் இருப்பதாக ஜானகிராமன் புகார் அளித்துள்ளார். காவல் துறையும் வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

## ஏமாற்றிய காதலன் கைது செய்யக்கோரி இளம்பெண் தர்ணா போராட்டம்

திருப்பூர் மாவட்டம், பொள்ளாச்சி தாலுகா, பொன் மலையூர் கிராமத்தைச் சேர்ந்தவர் வாசு இவரது இரண்டாவது மகள் அனிதா (22). இவர் திருப்பூர் பல்லடத்தில் பனியன் கம்பெனியில் வேலை செய்து வருகிறார். அனிதாவிற்கும் சசிக்குமார் என்பவருக்கும் கடந்த நான்கு வருடங்களாக காதல் ஏற்பட்டுள்ளது. சசிக்குமார் அடிக்கடி அனிதாவிடம் பேச வேண்டும் என்பதற்காக செல்போன் வாங்கி கொடுத்திருக்கிறார். இந்நிலையில் விடுமுறையில் வீட்டிற்கு வந்த அனிதாவிடம் உன்னை பார்க்க வேண்டும் தோட்டத்திற்கு வா என அழைத்திருக்கிறார் அவர் மறுக்கவே நான் தற்கொலை செய்து கொள்வேன் என மிரட்டவும் அனிதா தனியாக தோட்டத்தில் சசிக்குமாரைச் சந்தித்துள்ளார் அங்கு திருமணம் செய்வதற்காகச் சசிக்குமாரிடம் திருமணம் பற்றிய பேச்சை எடுத்தவுடன் ‘ நீ பணத்திற்காக பல பேருடன் செல்பவள்’ எனக் கூறி திருமணத்திற்கு மறுத்திருக்கிறார். உடனே அனிதாவும் உறவினர்களுடன் பொள்ளாச்சி சப் கலெக்டர் அலுவலகம் முன்பு தர்ணா போராட்டம் நடத்தியிருக்கிறார். காவல் துறையினரும் நேரில் சென்று சசிக்குமார் மீது உறுதியாக நடவடிக்கை எடுப்பதாகக் கூறிய பிறகுஅனிதா போராட்டத்தைக் கைவிட்டுள்ளார்.

## திருமணம் செய்வதாக கூறி இளம் பெண் ஏமாற்றம்

திருவள்ளூர் மாவட்டம், மங்கலாபுரம் மாரியத்தம்மன் கோவில் தெரு கண்ணன் மகள் சீதா 10-ம் வகுப்பு வரை படித்து விட்டு திருத்தணியில் உள்ள தட்சணாமூர்த்தி என்பவருக்கு சொந்தமான ஷிபா டிரைவிங் ஸ்கூலில் பணி செய்துள்ளார். மேற்படி தட்சிணாமூர்த்தியின் மகன் பிரதீப் என்பவர் மேற்படி டிரைவிங் ஸ்கூல் மேற்பார்வையாளராக இருந்துள்ளார். ஆரம்பத்தில் சீதாவும்-பிரதீப்பும் நண்பர்களாக பழகி நாளாடைவில் காதலாக மாறியுள்ளது.

பின்னர் பிரதீப் சீதாவைத் திருமணம் செய்துகொள்வதாக ஆசை வார்த்தைக் கூறி கட்டாயப்படுத்தி பலமுறை உடலுறவு கொண்டுள்ளார். மேற்படி விபரம் பிரதீப் பெற்றோர் களுக்கு தெரிய சீதாவின் வீட்டிற்குச் சென்று அடித்து சித்திரவதை செய்துள்ளார்கள். தற்போது பிரதீப்பை தலைமறைவாக்கிவிட்டார்கள். பாதிக்கப்பட்ட சீதா தற்கொலைக்கு முயன்று பலமுறை காப்பாற்றியுள்ளார்கள். பாதிக்கப்பட்ட சீதா திருத்தணி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

## பெண் எரித்துக் கொலை

நாகப்பட்டிணம் மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், வாய்கறவை பகுதியைச் சேர்ந்தவர் ராஜேந்திரன் மல்லிகா தம்பதியருக்கு மூன்று குழந்தைகள் உள்ளன. குடும்ப வறுமையின் காரணமாக கடன் வாங்கி ராஜேந்திரன் வெளிநாடு சென்றுள்ளார். இந்நிலையில் வீட்டில் வளர்த்து வந்த பசு மாட்டிற்குப் புல் அறுக்கச் சென்ற மல்லிகா அயல் காட்டில் உடல் எரிந்த நிலையில் பிணமாக கிடந்துள்ளார். உடனே குத்தாலம் காவல் துறையினர் உடலைக் கைப்பற்றி விசாரித்து சடலக் கூறாய்வு செய்ததில் வயரால் கழுத்தை இறுக்கி கொலை செய்த செய்து பின்னர் தடயத்தை மறைக்க உடலை எரித்துள்ளதைக் கண்டறியப்பட்டுள்ளது. அதனால் காவல்துறையினர் தனிப்படை அமைத்து குற்றம் புரிந்தவர்களை தேடி வருகின்றனர்.

## கர்ப்பமாக்கியவனை திருமணம் செய்ய சொன்னதால் கொலை

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி தாலுகா, கௌசப்பாளையம் களத்து மேட்டுத் தெரு, பலராமன் மகள் தேவி கைத்தறி வேலை செய்து வந்துள்ளார். அவரது வீட்டில் பரவி இல்லை என்பதால் பக்கத்து வீடுகளுக்கு சென்று பரவி பார்ப்பதை வழக்கமாக கொண்டிருந் துள்ளார். இச்சூழலைப் பயன்படுத்திக்கொண்டு அதே பகுதியைச் சேர்ந்த வெள்ளை ரவிக்குமார் என்பவர் தேவியிடம் திருமணம் செய்வதாக ஆசை வார்த்தைகூறி அவரை கட்டாயப்படுத்தி பலமுறை உறவு கொண்டுள்ளார். இதன் காரணமாக தேவி 5 மாத கர்ப்பிணியானார். தான் 5 மாத கர்ப்பமாக இருக்கும் விசயத்தை தேவி வெள்ளை ரவிக் குமாரிடம் கூறியுள்ளார். இதனால் 05.02.2010 அன்று மாலை 5 மணிக்கு மேல் தேவியை காட்டு பகுதிக்கு அழைத்துச் சென்று கொடூரமான முறையில் கத்தியால் தேவியின் உடல் முழுவதும் குத்தி கொலை செய்து கிணற்றில் உடலை போட்டு விட்டு வெள்ளை ரவிக்குமார் தலைமறைவாகியுள்ளார். கிணற்றில் மிதந்த உடலை போலீசார் கண்டுபிடித்து கொலை யாளியைப் பிடித்து சிறையில் அடைந்துள்ளார்கள்.

## வயதான முதியவரால் சிறுமி பலாத்காரம்

கடலூர் மாவட்டம் கடலூர் தாலுகா துறைமுகம் எல்லையம்மன் கோவில் தெருவில் வசிப்பவர் விஜயலெட்சுமி நல்ல தம்பி தம்பதியினர் இவர்களுக்கு கௌசல்யா, கஸ்தூரி என்ற இரண்டு மகள்கள் உள்ளனர். இவர்களில் கஸ்தூரி துறைமுக உயர் நிலைப்பள்ளியில் 5வது வகுப்பு பயின்று வருகிறார். இந்நிலையில் கடந்த 02.03.2010 கஸ்தூரி தனது வீட்டருகே

விளையாடிக் கொண்டிருக்கும் போது எதிர்வீட்டில் வசிக்கும் வயதான லெட்சுமணன் என்பவர் அவரது வீட்டு மாடிக்கு அழைத்துச் சென்று பாலியல் பலாத்காரம் செய்துள்ளார். பின்பு வலி தாங்காமல் கஸ்தூரி பெற்றோரிடம் கூறவே அவர்களும் காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளனர். காவல் துறையினர் லெட்சுமணனைக் கைது செய்து நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

## காதலித்து கர்பமாக்கிவிட்டு திருமணம் செய்ய மறுப்பு

தர்மபுரி மாவட்டம், அரூர் வட்டம், சிந்துல்வாடி கிராமம் காளியப்பன் மகள் ரஷ்யா(20) ஆதிதிராவிடர் சமூகத்தைச் சேர்ந்த இவர் சேலம் சௌடேஸ்வரிக் கல்லூரியில் இளம் அறிவியல் 2 வது வருடம் படித்து வந்தார். இவர், மேட்டூர் இரயில்வே துறையில் வேலை செய்து வரும் அதே கிராமத்தைச் சேர்ந்த குமார்(27) த/பெ வேலு என்பவரை கடந்த 5 வருடங்களாக காதலித்து வந்துள்ளனர்.

இந்நிலையில் திருமணம் செய்து கொள்வதாக ஆசைவார்த்தை காட்டி ரஷியாவை பலமுறை கட்டாயப்படுத்திப் பாலியல் உறவு மேற்கொண்டதன் விளைவாக ரஷியா கர்ப்பமாகியுள்ளார். 5மாத கர்ப்பிணியான தன்னை விரைவாக அவசரமாக தன்னைத் திருமணம் செய்து கொளும்படி வற்புறுத்தியுள்ளார். ஆனால் குமார் மற்றும் அவரது குடும்பத்தினர் திருமணம் செய்ய மறுக்கவே, அரூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் ரஷியா புகார் கொடுத்துள்ளார். காவல் துறையினர் இரு தரப்பினரையும் அழைத்துப் பேசி இருவரும் பழகியது உண்மை என தெரிந்த பின்பு ஒரு வாரத்தில் திருமணம் செய்து கொள்ளச் சொல்லி, எச்சரித்து அனுப்பி உள்ளார்கள். ஆனால் குமாரோ வேறு ஒரு பெண்னை திருமணம் செய்து கொண்டு தலைமறைவாகியுள்ளார். அதன் பிறகே காவல்துறையில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

## 50 வயது குப்பம்மாள் பாலியல் பலாத்காரம் செய்து படுகொலை

திருவண்ணாமலை மாவட்டம், சேத்துபட்டு வட்டம், பழம்பேட்டை, பிள்ளையார் கோவில் தெருவில் கணவனை இழந்த 50 வயது குப்பம்மாள் என்பவர் டீக்கடை ஒன்றை நடத்தி வந்துள்ளார். கடந்த 05.03.2010 அன்று அதிகாலை சுமார் 02.30 மணியளவில் டீ குடிக்கச் சென்ற மோகன் என்பவர் 50 வயது குப்பம்மாளை வலுக்கட்டாயமாகப் பாலியல் பலாத்காரம் செய்துள்ளார். அதற்கு உடன்படாத நிலையில் மோகன் குப்பம்மாளை கொடூரமான முறையில் கொலை செய்துள்ளார். இக்கொலை சம்பவம் தொடர்பாக சேத்துபட்டு காவல் துறையினர் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

## 40 வயது வண்ணார் சமூக பெண் பாலியல் பலாத்காரம் செய்து கொலை

திருவண்ணாமலை மாவட்டம், வேட்ட வலம் காவல் நிலையம் எல்லைக்கு உட்பட்ட ஆவூர் வண்ண சமூகத்தைச் சேர்ந்த 40 வயது நிரம்பிய சாந்திக்கும் சுமார் 20 ஆண்டுகளுக்கு முன் சுரேஷ் என்பவருடன் திருமணம் நடந்துள்ளது. அவர்களுக்கு மணிகண்டண்,

மதிவாணன் ஆகிய இரண்டு மகன்கள் உண்டு இருவரும் தற்போது வெளியூரில் தங்கி படித்து வருகின்றார். சாந்தியின் கணவர் சுமார் 10 ஆண்டுக்கு முன் வீட்டை விட்டு வெளியேறியவர் தற்போது எங்கே இருக்கிறார் என கூட தெரியவில்லை. சாந்திக்கு அவரது தந்தை அழகப்பன் (70) தான் துணையாக இருந்துள்ளார். அவர் சலூன் கடை வைத்து வேலை செய்து வந்துள்ளார். இந்நிலையில் 2010 பிப்ரவரி மாதம் சாந்தி அருகே உள்ள ஏரிக்கரை மரத்தடியில் ஆடைகள் முழுவதும் கிழிக்கப்பட்டு உடலில் சிராய்ப்புக் காயங்களுடன் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டு கிடந்துள்ளார். இவ்வளவு பெரிய கொடூரசம்பவத்தை கிராம நிர்வாக அலுவலர் கூட காவல் நிலையத்திற்குத் தகவல் தெரிவிக்காமல் இருந்துள்ளார்.

## பெண்ணை கர்ப்பமாக்கி விட்டு திருமணம் செய்ய மறுப்பு

தஞ்சை மாவட்டம், திருவையாறு தாலுகா, திருவையாறு பங்களா தெருவைச் சேர்ந்த காமராஜ் மகள் சுகுணா (19 ) திருமணம் ஆகாதவர் 5வது வகுப்பு வரை படித்துள்ளார். தனபால் மகன் செந்தில் என்பவரும் கூலி வேலைக்கு போகும்போது சுகுணாவைத் தான் காதலிப்பதாகச் சொல்லி வற்புறுத்தியுள்ளார். பின்னர் நாளடைவில் இருவரும் உடலுறவில் ஈடுபட்டு சந்தோஷமாக இருந்துள்ளனர். இந்த சந்திப்பு அக்கம்பக்கம் உறவினர்களுக்கு பெற்றோர்களுக்கும் தெரிந்து சுகுணாவின் அப்பா அம்மாவையும் சுகுணாவையும் கேவலமாக உறவினர்கள் பேசியுள்ளனர். அதனால் சுகுணாவும், அவருடைய அப்பாவும் திருமணம் செய்து கொள்ளுமாறு செந்திலிடம் கேட்ட போது 10 பவுண் நகை தந்தால் உடனே திருமணம் ஏற்பாடு செய்வோம் செய்து கொள்ளுவதாக கூறியுள்ளார். இருக்கிறார்கள். இதனால் வேதனை அடைந்த சுகுணாவும் அப்பா காமராஜூம் காவல்துறை மற்றும் கலெக்டரிடம் புகார் கொடுத்துள்ளனர். காவல்துறை விசாரணை செய்ததில் செந்தில் திருமணத்திற்கு ஒப்பு கொண்டுள்ளார்.

## இயற்கை உபாதை கழிக்க சென்ற மாணவியை பாலியல் பலாத்காரம் செய்த கொடூரம்

வேலூர் மாவட்டம், வாணியம்பாடி தாலுகா, செக்குமேடு வன்னிபட்டு சதாசிவம் என்பவரது மகள் கலையரசி 10-ம் வகுப்பு படித்து வந்துள்ளார். கடந்த 16.11.2009 மாலை சுமார் 6 மணிக்கு பள்ளி சென்று வீடு திரும்பிய கலையரசி, வீட்டில் கழிவறை இல்லாத நிலையில், அவரது வீட்டிற்கு மேற்கு புறம் உள்ள கரும்புத் தோட்ட பறையில் இயற்கை உபாதை கழித்துக் கொண்டிருந்தபோது, அதே பகுதி வினோத்குமார் (18) த/பெ.பரமசிவன் என்பவர் வலுக்கட்டாய மாகக் கொடூரமான முறையில் பாலியல் பலாத்காரம் செய்துள்ளார். மேற்படி விசயத்தை வெளியில் சொன்னால் கலையரசியையும், வீட்டில் உள்ள மற்றவர்களையும் கொலை செய்து விடுவதாக மிரட்டியுள்ளார். ஆனால் வலி தாங்க முடியாமல் அவரது கலையரசி பெற்றோ ரிடம் வேதனைகள் துடித்த அவர் பெற்றோரிடம் சொல்லி வாணியம்பாடி அரசு மருத்துவ மனைக்குச் சென்று மருத்துவ பரிசோதனை செய்து சிகிச்சைப் பெற்றுள்ளார். மருத்துவ மனையிலிருந்து பெற்ற தகவலின் அடிப்படையில் வாணியம்பாடி காவல்துறையினர் வழக்குப் பதிவு செய்து வினோத்குமாரைச் சிறையிலடைத்துள்ளனர்.

## பள்ளி சென்ற மாணவியை கடத்திச் சென்று பாலியல் பலாத்காரம்

அரியலூர் மாவட்டம், செந்துரை தாலுகா விழுப்பணங்குறிச்சியில் வசிக்கும் செந்தில் வேதவள்ளி தம்பதியரின் மகள் அபிநயா செந்துரை அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் 8ம் வகுப்பு படித்து வந்துள்ளார். அதே பகுதியைச் சேர்ந்த செல்வராஜ் மகன் செல்வகுமார் (23) என்பவர், பழநி ஆகியோர் 26.01.2010 அன்று பள்ளிக்கு சென்ற அபிநயாவை செல்வகுமார் கடத்திச் சென்று பாலியல் பலாத்காரம் செய்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பாகச் செந்துரை காவல் துறையினர் கு.எண். 64/2010 - ல் வழக்கு பதிவு செய்து (366-ஏ, 376) செல்வகுமார் உட்பட 6 நபர்களை கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர். தற்போது வழக்கு நீதிமன்ற விசாரணை நிலுவையில் உள்ளது

## சிறுமி பாலியல் பலாத்காரம்

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், ஜோலார்பேட்டை, ஜோடியூர் பகுதியைச் சேர்ந்தவர் சுஜாதா, இவரது மகள் விஜயலட்சுமி அதே பகுதியில் உள்ள பள்ளியில் 7ம் வகுப்பு படித்து வந்துள்ளார். அதே பகுதியில் ஓய்வு பெற்ற ரயில்வே ஊழியர் இஸ்மாயில் என்பவர் டீக்கடை நடத்தி வந்துள்ளார். கடந்த 4.12.2010 அன்று சுஜாதா குழந்தையை வீட்டில் விட்டுவிட்டு சித்தாள் வேலைக்குச் சென்றுள்ளார். சிறுமி விஜயலட்சுமி வீட்டில் தனியாக இருந்ததைப் பார்த்த இஸ்மாயில் சுஜாதா வீட்டிற்குச் சென்று தனியாக இருந்த சிறுமி விஜயலட்சுமியைப் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கியுள்ளார். பின்னர் சிறுமி சத்தம் போடவே அக்கம் பக்கத்தினர் வந்துள்ளனர். உடனே இஸ்மாயில் தப்பிச் சென்றுள்ளார். பின்னர் மாலை வீட்டிற்கு வந்த சுஜாதாவிடம் சிறுமி விஜயலட்சுமியும், அக்கம்பக்கத்தில் உள்ளவர்களும் நடந்தவற்றைக் கூறவே சுஜாதா ஜோலார்பேட்டை காவல் நிலையத்திற்குச் சென்று புகார் கொடுத்து, வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது.

## பெண்ணை ஏமாற்றி பாலியல் மோசடி

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், குன்னத்தூர் ரோடு, 23 முகமத்தியர் தெருவைச் சேர்ந்தவர் பி.ராஜேஸ்வரி. இவர் இந்து மருத்துவர் சமூகத்தைச் சேர்ந்தவர். இவர் பெருந்துறை சிப்காட்டில் உள்ள *Nature Clothing Company* யில் பணிபுரிந்து வருகிறார். அதே கம்பெனியில் பணிபுரியும் ரவிக்குமார் என்பவருடன் பழக்கம் ஏற்பட்டு இருவரும் கணவரும் மனைவியுமாக வாழ்ந்து வந்திருக்கின்றனர். இவ்வாறு இவர்கள் இருவரும் 5 வருடங்களாகக் கணவன் மனைவியாக வாழ்க்கை நடத்தியிருக்கின்றனர். பின்னர் ரவிக்குமார் தனக்கு வேறு ஒரு பெண்ணைத் திருமணம் செய்ய விரும்புவதாகக் கூறி மறுத்திருக்கிறார். பின்னர் ராஜேஸ்வரி ஈரோடு மாவட்டம் சமூகநலத்துறையை அணுகி புகார் செய்திருக்கிறார்.

## உறவினர் பெண்ணை பாலியல் பலாத்காரம்

விழுப்புரம் மாவட்டம், நிலமங்கலம் வட்டம், மாரியம்மன்கோவில் தெரு, பழைய காலனி, ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த ராஜா என்பவரின் மனைவி ரூபி (24) என்பவர் கணவருடன் பெங்களுருவில் வேலை செய்து கொண்டிருந்தார். இவர்கள் காதல் திருமணம் செய்து கொண்டவர்கள். இவர்களுக்கு இரண்டு ஆண் குழந்தைகள் உள்ளனர். கணவரும் மனைவியும் நீலமங்கலம் வந்தனர். அந்த சமயம் கணவர் கள்ளக்குறிச்சி சென்றபோது

கணவரின் சித்தப்பா மகன் சக்திவேல் (32) ரூபியை பாலியல் பலாத்காரம் செய்து காயப்படுத்தியுள்ளார். ரூபி கள்ளக்குறிச்சி காவல் நிலையத்தில் புகார் செய்ததால் சக்திவேலை பெண்கள் வன்கொடுமைச் சட்டத்தின் கீழ் கைது செய்துள்ளனர்.

### பலாத்கார முயற்சி, விஷம் குடித்து பெண் தற்கொலை முயற்சி

அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டம், மாத்தாயி தெருவைச் சேர்ந்த தில்லை கோவிந்தன் என்பவரது மகள் புஷ்பா (17) என்பவரை சேட்டு மகன் அண்ணாதுரை (54) என்பவர் புஷ்பா கடைக்குச் சென்று பொருட்கள் வாங்கிக் கொண்டு வீடு திரும்பியபோது அண்ணாத்துரை புஷ்பாவை டூவீலரில் வீட்டுக்கு அழைத்துச் செல்வதாகக் கூறி கடை வீதியிலிருந்து சிறிது தூரம் காட்டுப் பகுதிக்குச் சென்றபோது தனது டூவீலரை நிறுத்திவிட்டு புஷ்பாவை பாலியல் பலாத்காரம் செய்ய முயற்சித்துள்ளார். அதிர்ச்சியடைந்த புஷ்பா கூச்சல் போட்டு தப்பி ஓடவே ஊராருக்குத் தகவல் சென்றுவிட்டன. உடனே அண்ணாத்துரை தலைமறைவாகிவிட்டார். இந்த பலாத்கார முயற்சியினால் அவமானம் அடைந்த புஷ்பா வீட்டிலிருந்த விஷ மருந்தை எடுத்துக் குடித்து தற்கொலை முயற்சியில் ஈடுபட்டுள்ளார். இதையறிந்த பெற்றோர்கள் மருத்துவமனையில் அனுமதித்து சிகிச்சை அளித்துள்ளனர்.

### திருமணம் செய்வதாக ஏமாற்றிய வாலிபன் கையில் குழந்தையுடன் பிச்சை எடுக்கும் அபலைப் பெண்

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் ஒன்றியம் பிரமனூர் அருகே வசித்து வந்துவா காட்டுராணி (28) த.பெ. மாரிமுத்து என்பவரை இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி தாலுகா, பாம்பூர் அருகே உள்ள தென் புதுக்குடியைச் சேர்ந்த குமார் சம்பளத்திற்கு செம்மறி ஆடு மேய்த்தபோது காட்டுராணியுடன் காதல் வயப்பட்டு பின்னர் திருமண ஆசை காட்டி வற்புறுத்தி பாலுறவில் ஈடுபட்டதால் காட்டுராணி கர்ப்பமாகியுள்ளார். அதன்பின்பு குமார் திருமணம் செய்யாமல் ஏமாற்றியுள்ளார். அதனால் காட்டுராணியின் பெற்றோரும் கைவிட்டுள்ளனர். இந்நிலையில் தனக்குப் பிறந்த ஒரு ஆண் குழந்தையுடன் அதே ஊரில் பிச்சை எடுத்து வாழ்ந்து வருகிறார்.

## குடும்ப வன்முறைகள்

### கருக்கலைப்பு செய்யததில் பிரச்சினை ஏற்பட்டதால் இளம் பெண் தற்கொலை

வேலூர் மாவட்டம், ஆற்காடு வட்டம், வணக்கம்பாடி கிராமத்தை சேர்ந்தவர் திருவள்ளுவன். இவருக்கு மாலா என்ற மனைவியும் இரண்டு குழந்தைகளும் உள்ளது. திருவள்ளுவர் கூலி வேலை செய்து குடும்பத்தைக் காப்பாற்றி வந்துள்ளார். மாலா 3வது முறையாகக் கருவுற்றுவுள்ளார். பிள்ளைகள் வளர்க்கப் போதுமான வசதி இல்லை என்பதால் கருக்கலைப்பு செய்ய முடிவு செய்து அதன்படியே கருக்கலைப்பும் செய்துள்ளார். அன்று முதல் வயிற்று வலி ஆரம்பாகி உள்ளது. இந்நிலையில் கடந்த 09.09.2010 அன்று இரவு வயிற்றுவலி அதிகமானதால் வலி தாங்க முடியாமல் நிலத்திற்கு போட பூச்சிக் கொல்லி மருந்தைக் குடித்துள்ளார். பின்பு வேலூர் அரசுப் பொது மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சிகிச்சை பலன் அளிக்காமல் மாலா மரணம் அடைந்து உள்ளார்.

## மனைவி எரித்துக் கொலை

திருப்பூர் மாவட்டம், திருப்பூர் வட்டம், பாக்சம்பாளையம் கிருஷ்ண தெருவில் வசித்து வருபவர் மாயகிருஷ்ணன், பாப்பாத்தி தம்பதியினர். இவர்களது மகள் கவிதாவை ரெட்டிபட்டியைச் சேர்ந்த சுப்பையா மகன் அண்ணாமலை சுமார் 10 வருடங்களுக்கு முன் காதல் திருமணம் செய்துள்ளார். கணவன் மனைவி இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்துள்ளது. அவ்வாறு தகராறு ஏற்படும் போதெல்லாம் கவிதாவின் பெற்றோர் சமரசம் செய்து வைப்பார்கள். 02.08.2010 அன்று திடீரென கவிதா இறந்துவிட்டார் என தகவல் கிடைத்துள்ளது. சம்பவத்தை விசாரிக்கும்போது மருந்து குடித்துவிட்டார், எரித்துவிட்டோம் என்று தெரிவித்துள்ளனர் ஆனால் சம்பவத்தில் மனைவியை அடித்து எரித்துக் கொலை செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

## இரண்டாவது திருமணம் செய்து கொண்டு முதல் மனைவியை அடித்துச் சித்ரவதை

சேலம் மாவட்டம், ஆத்தூர் தாலுகா, வெள்ளாப்பட்டி கணேசாபுரம் கிராமத்தில் வசிப்பவர் மலர் அவரது கணவர் சீரங்கன் இந்நிலையில் சீரங்கன் இரண்டாவதாக திருமணம் சங்கீதா என்பவரை மணம் முடித்துள்ளார். இரண்டாவது திருமணம் முடித்துள்ள சங்கீதா மலரை எப்படியாவது விரட்டிவிட வேண்டும் என்று நினைத்துத் தனது கணவர் சீரங்கனிடம் பேசியிருக் கின்றனர். மலர் தனது கணவரிடம் ஏன் கணவரிடம் இரண்டாவது திருமணம் முடித்துள்ளீர் என்று கேட்டதற்கு அவருடைய கணவர் மலரையும் அவரது மகன் கார்த்தி மகள் பவித்ரா ஆகியோரை தினமும் மது குடித்துவிட்டு அடித்து சித்திரவதை செய்து வந்துள்ளார். மேற்கண்ட சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட மலர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார்.

## இளம் பெண்ணை விபச்சாரத்திற்கு அழைத்துச் சித்திரவதை

திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் வட்டம், வலங்கைமான் காவல் எல்லைக்குட்பட்ட கொட்டையூர் மெயின் ரோட்டைச் சேர்ந்த இரவி என்பவரின் மனைவி சித்ராவை ரவியின் அண்ணன் மகன் மற்றும் ரவியின் அப்பா போன்றோர் விபச்சாரத் தொழிலில் ஈடுபடச் சொல்லி கட்டாயப்படுத்தியும் சித்திரவதை செய்துள்ளனர். ரவியின் மனைவி சித்ரா குளிக்கச் செல்லும் போது ரவியின் அண்ணன் மகன் பார்த்திபன் என்பவர் பின் தொடர்ந்து செல்லுவதும் ஆற்றங்கரைக்குச் (மலம் கழிக்க) செல்லும்போது பின் தொடர்வதும் ரவியின் அண்ணன் சேகர் சித்ராவின் கையைப் பிடித்து இழுப்பதும் சித்ராவின் முன் நிர்வணமாக நின்றுகொண்டு பார்ப்பதும் போன்ற சேட்டைகளைச் செய்துள்ளனர். ரவிக்கு கிட்னி பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அவனால் ஒன்றும் செய்ய முடியாது அதனால் நீ என்னோடு வந்து படுத்துக்கொள் என்று அழைத்து தொந்தரவு செய்து வருகிறார். தன்னோடு தொடர்பு வைக்க வில்லை என்றால், குழந்தைகளைக் கொன்று விடுவதாகத் தொடர் சித்திரவதைகளைச் செய்து வருகிறார்.

## பெண் தூக்குப் போட்டுத் தற்கொலை

தர்மபுரி மாவட்டம், அரூர் தாலுகா, திப்பம்பட்டி, கோணாம்பட்டி கிராமம், கட்டிட மேஸ்திரி வேலை செய்து வரும் முருகவேல், தர்மபுரி மாவட்டம் அரூர் வட்டம் கொன்றம்பட்டி மகள் ராணியை 7 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் செய்துள்ளார். ராணிக்கு மரகதவேலுவின் நடவடிக்கையில் சந்தேகம் எழுந்து அடிக்கடி சண்டை போட்டுள்ளார். அதனை மரகதவேல் கண்டுகொள்ளாமல் இருந்துள்ளார். மனைவியிடம் வீணாக என் மீது சந்தேகம் கொள்ளாதே குடும்பம் சீரழிந்துவிடும் என்று கூறிவிட்டு வேலைக்குச் சென்றுவிட்டார். ராணி கணவன் மீது ஏற்பட்ட சந்தேகத்தால் 15.11.2010 அன்று வீட்டில் யாருமில்லாத சமயத்தில் வீட்டில் தூக்குப் போட்டுத் தற்கொலை செய்து கொண்டுள்ள ராணியின் தகப்பனார் மகளின் சாவில் மர்மம் உள்ளதாகக் கம்பைநல்லூர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார். காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்து நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

## மாமியாரை கழுத்தை அறுத்த மருமகன்

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தாலுகாவில் வசித்து வந்தவர் அம்மாயி. இவரது கணவர் நாராயணன் இறந்துவிட்டார். இவர் இந்து குறவர் சமுதாயத்தைச் சேர்ந்தவர். இவரது இரண்டாவது மகள் சுகந்தியின் கணவன் கோபி டி.வி.எஸ்.50 மொபட்டில் பொருட்கள் விற்பனை செய்யும் தொழில் செய்து வந்துள்ளார். தனது மனைவியிடம் தொழில் செய்ய பணம் கேட்டுள்ளார். முதலில் ரூ. 3000 சுய உதவிக்குழுவில் கடன் வாங்கிக் கொடுத்துள்ளார் கடனை முறையாக திருப்பி செலுத்த முடியவில்லை. இந்நிலையில் மீண்டும் ரூ.1000 கேட்டு கொடுமை செய்துள்ளார். பணம் தர மறுக்கவே கோபி கத்தியைக் கொண்டு மாமியார் அம்மாயி கழுத்தை அறுத்துள்ளார். அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் சத்தம் போடவே ஓடியுள்ளார் அக்கம்பத்தினர் அம்மாயியை அரசு மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர்.

## வேறு பெண்ணைத் திருமணம் முடித்து மனைவியைக் கொடுமைப்படுத்தும் கணவன்

வேலூர் மாவட்டம், கணியம்பாடி ஒன்றியம், நாக நிதி கிராமம் பஜனை கோவில் தெருவில் வசிப்பவர் சாந்தி. இவரது கணவர் அவருடன் பணி புரியும் ஒரு பெண்ணை சேர்த்துக் கொண்டு மனைவி சாந்தியைச் சித்திரவதை செய்து வந்துள்ளார். இந்நிலையில் சாந்தியின் கணவர் குணசீலன் கள்ளக்குறிச்சியில் தான் பழகிய பெண்ணுடன் தனிக்குடித்தனம் நடத்தியுள்ளார். அதனால் சாந்தி தனக்கு நிவராணமாக ஜீவானம்சம் வழங்க மாவட்ட சமூக நலத்துறையிடம் முறையிட்டுள்ளார்.

## இராணுவத்திற்கு சென்ற கணவர் குடும்பத்தினரால் பெண் சித்திரவதை

வேலூர் மாவட்டம், ஆரணி தாலுகா டாக்டர் அம்பேத்கார் நகர் பிள்ளையார் கோவில் தெருவில் வசிப்பவர் லெட்சுமி, இவருக்கும் காமக்கூர் பாளையத்தைச் சேர்ந்த இராணுவத்தில் பணிபுரியும் வேலன் என்பவருக்கும் 5 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடந்துள்ளது. திருமணம் முடிந்து ஒரு வருடம் மகிழ்ச்சியாக இருந்துள்ளார். பின்னர் கணவர் வேலன்

இராணுவத்திற்கு சென்றபிறகு அவரது நாத்தனார் ஜானகி, வேலம்மாள் ஆகியோர் லெட்சுமியை அடித்தும் அவமானபடுத்தியும் உணவுகூட கொடுக்காமல் சித்திரவதை செய்துள்ளனர். மேற்கண்ட சித்திரவதைகளைத் தாங்க முடியாமல் ஆரணி மகளிர் காவல் நிலையத்தில் 21.10.10 அன்று புகார் கொடுத்துள்ளார். மகளிர் காவல் நிலையத்தில் லெட்சுமியின் கணவரை அழைத்து விசாரணை செய்து சமாதானம் பேசி அனுப்பி வைத்துள் ளனர். அன்று இரவு வேலன் அவரது அம்மா, சகோதரி, லெட்சுமியைக் காவல்நிலையம் வரை கொண்டு போய்விட்டு என இரும்புக் கம்பியால் அடித்து சித்திரவதை செய்துள்ளார். உடல் முழுவதும் காயம் ஏற்பட்டு வலியால் துடித்து வேலூர் அரசு மருத்துவமனையில் 10 நாட்கள் உள் நோயாளியாக சிகிச்சை பெற்றுள்ளார் காவல்துறையினர் வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுத்து வந்துள்ளனர்.

## வரதட்சணை நகைகளைப் பறித்து கொண்டு வேறு பெண்ணுடன் குடும்பம் நடத்தும் கணவர்

இராமநாதபுரம் மாவட்டம், நகர் கோட்டை காலனி சங்கமுத்து நகர் முனியாண்டி காம்பவுண்ட் நாகலெட்சுமிக்கும் கிளிபூரைச் சேர்ந்த மகேந்திரன் த/பெ. முனியாண்டி என்பவருக்கும் திருமணம் நடந்தபோது வரதட்சணையாக கொடுத்த 25 பவுன் நகையும் 75 ஆயிரம் மதிப்புள்ள சீர் வரிசை கொடுத்துள்ளார்கள். நகை 25 பவுனை விற்று கணவன் மகேந்திரனின் தந்தை முனியாண்டி வீடு கட்டி முடித்துள்ளார். கொடுத்த நகையை நாக லெட்சுமி திருப்பிக் கேட்டபோது 2 ஏலம் கடத்தி வந்துள்ளார்கள் நகையைக் கேட்டதற்கு கணவன் மகேந்திரன் மாமனார், முனியாண்டி மாமியார் முத்து ஆகியோர் உறவினர்களுடன் சேர்ந்து நாகலெட்சுமியைக் கொடூரமாகத் தாக்கி வீட்டிற்குள் அடைத்து வைத்து சித்திரவதை செய்துள்ளார்கள். மேலும் நாகலெட்சுமிக்கு சொந்தமான 4 செண்டு வீட்டு மனையை எழுதித் தர வற்புத்தி அவர் மறுக்கவே, அடித்து கொடுமை செய்து 16.12.2009அன்று மிரட்டி எழுதி வாங்கியுள்ளார்கள். நகையையும், இடத்தையும் மனைவியிடம் இருந்து அபகரித்த கணவன் மகேந்திரன் தனது அத்தை மகள் செல்லம் என்பவருடன் தனியாக குடும்பம் நடத்தியுள்ளார் இவை அறிந்த நாகலெட்சுமி அங்கு சென்று நியாயம் கேட்கவே மிகவும் அசிங்கமாகப் பேசி சப்பாத்திக் கட்டையில் இடது காலில் அடித்து தள்ளிவிட்டு மயக்கமாகும் அளவுக்கு சித்திரவதை செய்துள்ளார். உடனே இராமநாதபுரம் அரசு மருத்துவமனையின் உள்நோயாளியாகச் சேர்ந்து சிகிச்சை பெற்றதும் இராமநாதபுரம் அரசு மருத்துவமனையின் இராமநாதபுரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் அடிப்படையில் *FIR* 01/2010 வழக்கு பதிவு செய்துள்ளனர். தற்போது நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

## குடும்ப வன்முறையில் தீக்குளித்துப் பெண் தற்கொலை

கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் தாலுகா, ஒசூர் நகர் கதவு எண் 15/30-ல் வசித்து வந்த கார்த்திகேயன்-சங்கீதா தம்பதியனருக்குத் திருமணமாகி ஒரு ஆண் குழந்தை உள்ளது. கார்த்திக்கேயன் ஒசூரில் உள்ள லுக் இண்டியா லிமிடெட் நிறுவனத்தில் ஆப்ரேட்டராகப் பணிபுரிந்து வந்துள்ளார். திருமணம் முடிந்து மூன்று ஆண்டுகள் வரை பிரச்சினை இல்லாமல்

இருந்த சங்கீதா குடும்பத்தில் அதன்பிறகு அவரது கணவர் குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி, குடிபோதையில் மனைவி சங்கீதாவை சித்திரவதை செய்து வந்துள்ளார். ஆனால் சங்கீதா சித்திரவதைகளை தாங்கிக் கொண்டுள்ளார். ஆனால் கணவர் கார்த்திகேயன் திருந்தவே யில்லை. கடந்த 21.11.2009 அன்று இரவு வேலை முடித்து வீட்டிற்கு வந்த கணவன் அளவுக்கு அதிகமாக குடித்து இருந்ததால் சங்கீதா தனக்குத் தானே தீ வைத்துள்ளார். உடனே அவரை சிகிச்சைக்காக தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றுள்ளார். அப்போது காவல் துறையினரிடம் தானே தீ வைத்துக் கொண்டதாக வாக்குமூலம் கொடுத்துள்ளனர்.

## மனைவி சுதாவை, கணவர் கணேசன் தொடர்ந்து சித்திரவதை

சேலம் மாவட்டம், ஆத்தூர் தாலுகா திட்டசன் நகர் காலனியில் வசிக்கும் கணேசன் என்பவருக்கும், சுதா என்பவருக்கும் 04.07.2001 திருமணம் நடந்துள்ளது. மேற்படி தம்பதியருக்கு சீனிவாசன் என்ற மகனும், சந்திரலேகா(3) என்ற மகளும் உள்ளனர். அவரது கணவர் கணேசன் லாரி டிரைவராக வேலை செய்கிறார். கணேசன் நண்பர்களை வீட்டிற்கு அழைத்துச் சென்று அவரது மனைவி சுதாவை அசிங்கமாகவும், கேவலமாகவும் தரக்குறைவாகவும் பேசி வந்துள்ளார். இதே நிலை தொடரவே மனரீதியாக அவமானப்பட்ட சுதா 03.09.2008 அன்று வீட்டை விட்டு வெளியேறி ரோட்டின் ஓரத்தில் தற்கொலைக்கு முயன்றபோது சென்னையைச் சேர்ந்த ஒரு பெண்மணி அவரைக் காப்பாற்றி ஆறுதல் கூறி ஒரு வீட்டில் வேலைக்குச் சேர்த்துவிட்டுள்ளார். அங்கு சுதாவிற்குக் குழந்தைகள் ஞாபகம் வரவே, தன் தாயிடம் செல்போனில் தனக்கு நடந்த சித்திரவதைகளைக் கூறி அழுதுள்ளார். காவல் நிலையத்திற்கு தகவல் கொடுத்து காவல் நிலையத்தில் கணவன் மனைவி இருவருக்கும் புத்திமதி சொல்லி அனுப்பி உள்ளார்கள். ஆனால் மனைவி வீட்டை விட்டு வெளியேறிச் சென்ற சம்பவத்தை மனதில் வைத்துக் கொண்டு தொடர்ந்து கணவரும் அவரது தாயும், அவரது உறவினர்களும் சித்திரவதைகளை செய்து வந்த வண்ணம் உள்ளார்கள். சித்திரவதையின் உச்ச கட்டமாக மனைவி சுதாவை வீட்டை விட்டு வெளியே தள்ளி வீட்டை பூட்டிக் கொண்டுள்ளார்.

## பெண்ணின் சம்மதம் இல்லாமல் மனநிலை பாதிக்கப்பட்டவருக்குத் திருமணம் செய்து வைத்த கொடுமை

நாகப்பட்டிணம் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், தலைஞாயிறு காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட வேதபதி அரக்கரை கிராமத்தைச் சேர்ந்த அப்பாவு மகள் சாந்தி என்பவரை, நாகப்பட்டிணம் மாவட்டம் கீவளூர் தாலுகா நாகராஜ் என்பவர் மனநலம் பாதிக்கப்பட்டவர் என்ற விபரத்தை மறைத்து சாந்தியைத் திருமணம் செய்து வைத்துள்ளார் கள். திருமணம் ஆன ஒரு சில நாட்களிலேயே நாகராஜ் மன நலம் பாதிக்கப்பட்டவர் என்பதை அறிந்து சாந்தி, தனக்கு விவகாரத்து கேட்டு நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார்.

## இளம் பெண் உயிரோடு எரித்துக் கொலை

வேலூர் மாவட்டம் வாலாஜா வட்டம், தேவசங்கீதம் என்பவரது மகள் அனிதாகுளோரி சென்னை அப்போலோ மருத்துவமனையில் செவிலி வேலை செய்துள்ளார். அவருடன் வேலை செய்து வந்த கன்னிமேரியை அடிக்கடி பார்க்க சென்ற அவரது சகோதரர் சுதாகருக்கும் அனிதாகுளோரியும், ஆரம்பத்தில் நண்பர்களாக பழகி, பின்னர் காதலர்களாக மாறியுள்ளனர். சுதாகர் திருமண ஆசை காட்டி தனிமையில் அனிதாகுளோரியை அடிக்கடி சந்தித்து உடல் ரீதியாக உறவு வைத்து அதன் பலனாக அனிதா குளோரி கர்ப்பமடைந்துள்ளார். அனிதாகுளோரி கர்ப்படைந்த செய்தி அறிந்து அவரது உறவினர்கள் சுதாகர் மற்றும் அவரது உறவினர்களுடன் பேசியதில் கருவை கலைத்தால் மட்டுமே திருமணம் செய்வதாக சுதாகர் கூறியுள்ளார். அதற்கு அனிதா குளோரி மறுக்கவே வேண்டா வெறுப்பாக சுதாகர் குடும்பத்தினர் திருமணத்திற்கு ஒப்புக் கொண்டனர். ஆனால் வரதட்சணை கொடுத்து திருமணம் நடந்தும் திட்டமிட்டு சுதாகர் குடும்படுத்தினர் மண்ணெண்ணெய் ஊற்றி எரித்து விட்டனர். ஆபத்தான நிலையில் வேலூர் மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தவரிடம் மரண வாக்குமூலம் பெற்று உயிரோடு எரித்துக் கொலை செய்த கணவர் சுதாகர் மாமனார் சுந்தரம் மாமியார் நாத்தனார் கன்னிமேரி ஆகிய நால்வர் மீதும் வழக்குப் பதிவு செய்து கைது செய்துள்ளனர். வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

## மனைவி அடித்து சித்திரவதை

வேலூர் மாவட்டம், ஆம்பூர் வட்டம், திருமலைக்குப்பம் கிராமத்தில் வசிக்கும் லூர்து சண்முகம் தம்பதியருக்கு கருணாகிரி, கார்த்திகா (20) என்ற இரண்டு மகன்கள் உள்ளனர். கடந்த 16 வருடங்களாக லாரி டிரைவராக வேலைப் பார்க்கும் சண்முகம், சம்பாதிக்கும் பணம் முழுவதையும் ஊதாரித்தனமாகச் சுற்றிச் செலவழித்து வந்துள்ளார். இதனால் பல்வேறு சித்திரவதைகளுக்கு உள்ளான மனைவி லதா தனது இரண்டு பெண் குழந்தைகளை கடந்த 16 வருடமாக கூலி வேலை செய்து மகள்களை படிக்க வைத்தும் பராமரித்தும் வந்துள்ளார். இந்நிலையில் பல வருடங்களாக கண்டு கொள்ளாத கணவர் சண்முகம், மகள் திருமணம் தொடர்பாக கேட்க வந்த போது கணவர் மனைவிக்கிடையே வாக்குவாதம் ஏற்படவே கணவரும் அவரது உறவினர்களும் சேர்ந்து லதாவை கொடூரமாக தாக்கி சித்திரவதை செய்துள்ளார்கள்.

## கர்ப்பத்தைக் கலைக்க நாட்டு மருந்து கொடுத்ததால் இளம் பெண் சாவு

தர்மபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம் கோவிலூர் தாழ்த்தப்பட்ட பைரவர் சமூகத்தைச் சேர்ந்த செல்வம் மகள் மணிமேகலை (19) .இந்து வன்னியர் சமூகத்தை சேர்ந்த நகுலன் (எ) குஞ்சிப்பையன் மகன் சுரேஷ் வயது (30). என்பவர் கொடூரமான முறையில் வலுக்கட்டயமாகப் பாலியல் பலாத்காரம் செய்துள்ளார். இச்சம்பவம் தொடர்பாக மதிகோண்பாளையம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்த நிலையில் காவல் துறையினரும், ஊர் பஞ்சாயத்தினர்களும் பேசி 16 வயது மணிமேகலைக்குக் கட்டாய திருமணம் செய்து வைத்துள்ளார்கள். பாலியல்

பலாத்காரம் செயலுக்கு உள்ளான மணிமேகலை கர்ப்பமடைந்து ஒரு குழந்தை பிறந்துள்ளது அதன் பின்னர் மீண்டும் கர்ப்பமானதால் உடனே இரண்டாவது குழந்தை வேண்டாம் என எண்ணிய கணவர் வீட்டார் நாட்டு மருந்து கொடுத்து கர்ப்பத்தை கலைக்க முயன்ற போது பரிதாபமான முறையில் இறந்து விட்டார். 16 வயது தலித் பெண்ணைப் பாலியல் பலாத்காரம் செய்த வன்னியர் சாதி சுரேஷ் மீது எவ்வித சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை 16 வயது பெண்ணைப் பலாத்காரம் செய்தவருக்கு கட்டாய திருமணம் செய்து வைத்தவர்கள் மீது எடுக்க நடவடிக்கை என்ன? காவல் துறைக்கு தெரிந்தும் நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை கர்ப்பத்தை கலைக்க சட்டம் இருக்கும் போது சட்டத்திற்கு புறம்பாக நாட்டு மருந்து கொண்டு கலைத்து கொலை செய்தவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## மனைவியை கொல்ல முயன்ற கணவர்

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தாலுகா, மாங்கொட்டை கிராமத்தில் வசிப்பவர் சர்புதீன் இவரது மனைவி குரோஹியாபீவி இவர்களுக்கு திருமணமாகி 15 வருடங்கள் ஆகிறது. இவர்களுக்கு இரண்டு மகள்கள் உள்ளனர். இந்நிலையில் தனது மனவைி குரோஹியா பீவி மீது கணவர் சர்புதீனுக்கு நடத்தையில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் கணவன் மனைவி இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் கடந்த 14.04.2010 அன்று சர்புதீன் வீட்டிலிருந்த மண்ணென்ணையை மனைவியின் உடலில் ஊற்றி தீ வைத்துள்ளார். அப்போது குரோஹியா அலறி துடித்துள்ளார் அவரது அலறல் சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் ஒடி வந்து எரிந்து கொண்டிருந்த குரேஷியா பீவியை காபாற்றி ஆலங்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்துள்ளனர். பின்னர் தீவிர சிகிச்சைக்காக புதுக்கோட்டை அரசு மருத்துவமனையில் சேர்த்துள்ளனர். மேற்கண்ட சம்பவத்தில் காவலர்கள் கணவன் சர்புதீனை கைது செய்து சிறையிலடைத்துள்ளனர். இதற்கு முன்னே கிணற்றில் விழுந்தும், விஷ மருந்து அருந்தியும் இருமுறை தற்கொலை முயற்சி செய்துள்ளார். குரோஹியா பீவி..

## பெண் தூக்குப் போட்டு தற்கொலை

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா இந்திராநகர் வசந்தபுரத்தில் வசிப்பவர் முருகன். இவர் சினிமா தியேட்டரில் வேலை செய்கிறார். இவர் இந்து ஆதி திராவிட சமுதாயத்தைச் சேர்ந்த இவரது மனைவி கன்னியம்மாள் இவர் மருத்துவமனையில் துப்பரவயாளராகவும், நகராட்சியில் வார்டு உறுப்பினராகவும் உள்ளார். கணவன் மனைவிக்கு இடையே ஏற்பட்ட பிரச்சினையால் 31.01.2010 அன்று கன்னியம்மாள் வீட்டில் தூக்கு மாட்டி தற்கொலை செய்துள்ளார். மேற்கண்ட சம்பவத்தில் காவல் துறையினர் வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

## கணவனின் குடிப்பழக்கத்தால் மனமுடைந்த மனைவி தற்கொலை

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை காமராஜன் நகர் தர்மலிங்கம் மகன் முருகன் என்பவருக்கும், சேலம் மாவட்டம் செம்மேடு சக்திவேல் மகள் கலைவராணி என்பவருக்கும் ஒராண்டுக்கு முன் திருமணம் நடந்துள்ளது. திருமணத்திற்குப் பிறகு காமராஜ் நகரில் வாழ்ந்து வந்துள்ளார்கள். முருகன் தினமும் குடித்து விட்டு வந்ததால் கணவன் மனைவிக்குமிடையே தினமும் சண்டை நடந்துள்ளது. கடந்த 24.01.2010 அன்று இரவு அளவுக்கு அதிகமான போதையில் முருகன் வீட்டிற்கு வந்துள்ளார். அப்போது சொல்வதைக் கேட்க மாட்டாயா எனச் சொல்லி சண்டை வீட்டு இரவு 10 மணிக்கு மேல் வீட்டை விட்டு வெளியேறிய கலைவாணி, ஊருக்கு ஒதுக்குப் புறத்தில் உள்ள கிணற்றில் விழுந்து தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

## நாத்தனார்கள் திட்டியதால் மனமுடைந்த பெண் தற்கொலை

திருவள்ளுர் மாவட்டம், ஊத்தக்கோட்டை வட்டம், குபேரண்டூர் மாரிமுத்து ஜோதி தம்பதியினர் தனது குழந்தைகளான சந்தோஷ், சலிம், சவ்மியா ஆகிய குழந்தைகள் மற்றும் மாமனார் ஆகியோருடன் விவசாயக் கூலி வேலை செய்து வாழ்ந்து வந்துகின்றனர். கணவன் மனைவிக்கு இடையே ஏற்படும் சிறிய பிரச்சினைகளுகாக ஜோதி 6 முறை தூக்க மாத்திரை சாப்பிட்டும், 2 முறை தூக்குபோட்டும் தற்கொலைக்கு முயன்றுள்ளார். கடந்த 21.03.2010 அன்று ஜோதியின் நாத்தினார்கள் கன்னியம்மாள், சுஜாதா இருவரும் சென்னையிலிருந்து வந்து அவர்களது தந்தையைப் பார்த்து விட்டு உடல் மிகவும் மெலிந்து இருந்ததால், தனது தந்தையை ஜோதி பராமரிக்கவில்லை என மூவரும் என கண்டப்படி திட்டியுள்ளார்கள். அதில் மனவேதனை அடைந்த ஜோதி ஒரு அறைக்குள் சென்று தாழ்ப்பாள் போட்டு மண்ணென்ணெய் ஊற்றி தீ வைத்துக் கொண்டுள்ளார். தீக்காயங்களுடன் உயிருக்கு போராடிய ஜோதியை மருத்துவமனையில் சேர்த்துள்ளார்கள். ஜோதியிடம் பெற்ற வாக்குமூலத்தின் அடிப்படையில் ஊத்துக்கோட்டை காவல்துறையினர் நாத்தனார் மீது வழக்கு பதிவு செய்து சிறையிலடைத்துள்ளார் பின்னர் சிகிச்சை பலனின்றி ஜோதி இறந்துள்ளார்.

## கணவன் அடித்ததால் மனைவி தற்கொலை

திருச்சி மாவட்டம், மண்ணாச்சநல்லூர் வட்டம், சமயபுரம் அருகே திருநாவுக்கரசு (30). இவரது மனைவி முத்துலெட்சுமி, இவர் சத்திரம் பேருந்து நிலையம் அருகே உள்ள கார் கம்பெனியில் வேலை பார்த்து வருகிறார். 25.12.2010 அன்று திருநாவுக்கரசு வேலைக்கு சென்றபோது, தனது மகன் முய்கினுக்கு காய்ச்சல் அடித்துள்ளது. தனது மனைவியிடம் மகனை மருத்துவமனை அழைத்து போகச் சொல்லி உள்ளார். ஆனால் இரவு வீட்டிற்கு வந்து பார்க்கும் போது குழந்தை காய்ச்சலால் இருந்ததைத் பார்த்த திருநாவுக்கரசு மனைவியை அடித்து உள்ளார். இதில் கோபப்பட்ட முத்துலெட்சுமி உடலில் மண்ணென்ணெய் ஊற்றி தற்கொலை செய்து உள்ளார்.

## மனைவி மீது சந்தேகப்பட்டு கணவர் அடித்துக்கொலை

திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டம், ஊர்காடு, பூனாம்பாளையம் சேர்ந்த கிருத்திகா (27) அவரது கணவர் செல்வன் (32) கிருத்தகா செயற்கை நகை பட்டறை கடையில் பணி செய்து வருகிறார். இவர்களுக்கு சிநேகா என்ற பெண் குழந்தை உள்ளது. கிருத்திகா வேலைக்கு சென்ற இடத்தில் வேறொரு நபருடன் தொடர்பு வைத்திருப்பதாகச் சந்தேகப்பட்டு அவரது கணவர் அடித்து சித்ரவதை செய்துள்ளார். காவல் நிலையத்தில் புகார் செய்யப்பட்டு இருவருக்கும் கவுன்சிலிங் கொடுக்கப்பட்டது.

## குழந்தையில்லாததால் மனைவியை சித்திரவதை செய்த கணவர்

பெரம்பலூர் மாவட்டம், பாடலூர்அருகே கலா (35) இவரது கணவர் குமார் (எ) முத்து இருவருக்கும் திருமண ஆகி 5 வருடம் ஆகிறது. இவர்களுக்கு குழந்தை இல்லாததால் தினமும் மது அருந்தி குடித்து விட்டு வந்து குமார் கலாவை அடித்துள்ளார். குழந்தை இல்லாத விரக்தியில் அடித்துள்ளார். ஆனால் சம்பவ நாளன்று ஏண்டி மலட்டு முண்டை, உனக்கெல் லாம் குழந்தை பெத்துக்க துப்பு கிடையாது, வாய் பேசாதே என்று கூறி அடிப்பார். வலிதாங்க முடியாமல் பக்கத்து வீட்டிற்கு போய் ஒழிந்து கொண்டு மறுநாள் வேப்பம்பட்டு காவல் நிலையம் சென்று புகார் கொடுத்து உள்ளார். போலீசார் விசாரணை செய்து நடவடிக்கை எடுத்துள்ளார்.

## தூக்குப்போட்டு தற்கொலை

சென்னை, திருவொற்றியூர், காலடிப்பேட்டை, பாலகிருஷ்ண நாயுடு காலனியை சேர்ந்தவர் மகாகவி பாக்கியலெட்சுமி இவர்களின் மகன் பிரதீப் (1) கூலி வேலை செய்து குடும்பத்திதைக் காபாற்றி வந்துள்ளார். குடும்ப சண்டையில் இருவரும் பிரிந்து பாக்கிய லெட்சுமி அவரது அம்மா வீட்டில் இருந்துள்ளார்.கடந்த 12.07.2010 அன்று மகாகவி பாக்கிய லட்சுமியின் அம்மா வீட்டிற்குச் சென்று பிள்ளையும், மனவையியும் அழைத்தபோது இரவு என்பதால் மறுநாள் வருவதாகப் பாக்கியலெட்சுமி சொல்லவே கோபமாகச் சென்றுள்ளார். பின்னர் அடுத்த நாள் 18.07.2010 அன்று காலை பாக்கியலெட்சுமி அவரது அம்மா வீட்டில் தூக்கிட்டு தற்கொலை செய்துக் கொண்டுள்ளார். இது தொடர்பாக திருவொற்றியூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## பெண் சிசுவைக் கொல்ல முயற்சி

தர்மபுரி மாவட்டம், கோயிலூர் அருகேயுள்ள சின்னச்சாமி மகள் சித்ராவுக்கும் (19), தர்மபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், கீழ் சவுளுப்பட்டி செல்லியம்மன் கோவில் சி.செல்வம் (லாரி டிரைவர்) என்பவரும், காதலித்ததின் விளைவாக சித்ரா 6 மாத கர்மமாக்கப்பட்டாள் பின்பு அவசரஅவசரமாக 01.011.2009 அன்று காரிமங்கலம், மலைக்கோவிலில் திருமணம் நடந்துள்ளது. 6 மாத கர்ப்பிப் பெண்ணான சித்ராவைச் செல்வம் திருமணம் செய்தார். கணவர் செல்வம் குடும்பத்தினர் சித்ராவை மருமகளாக ஏற்க மறுத்துள்ளார்கள்.

இச்சூழலில் 4 மாதம் கழித்து சித்ராவுக்குப் பெண் குழந்தை பிறந்துள்ளது. பெண் குழந்தை பிறந்தவுடன் கணவர் செல்வம், சனியன் பிறந்து விட்டதா என குழந்தையைப் பார்க்கவோ, தூக்கவோ தவிர்த்து வந்துள்ளார். இந்நிலையில் குழந்தை பிறந்த 10 நாள் கழித்து அவரது

கணவர், அவசர அவசரமாக தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றுள்ளார். அவரது மாமியார் உண்ணாமலை, கணவர் செல்வம் ஆகியோர் பெண் குழந்தை பிறந்ததை இழிவாகப் பேசி திட்டியும், அவருடைய கணவர் குழந்தை தனக்குப் பிறக்கவில்லையெனவும், வேறு யாருக்கோ பிறந்துள்ளது. எனவும் சித்திரவதை செய்துள்ளார் மேலும் சித்ராவின் பெற்றோர் வீட்டிலிருந்து டுவீலர் பல்சர் வாங்கி வர வேண்டும் என சித்திரவதை செய்துள்ளனர்.

கடந்த 07.04.2010 அன்று சித்ராவின் கணவர், மாமியார், நாத்தனார் மூவரும் சேர்ந்து இரும்பு பைப்பை வைத்து அடித்தும், தூக்கி வயிற்றில் மிதித்தும், தலைமுடியைப் பிடித்து இழுத்துப் போட்டு சித்திரவதை செய்துள்ளார்கள். மேற்படி சித்திரவதையால் மயக்கமான பின்பு அவரது பெண் குழந்தையைத் தூக்கி வைக்கோல் படப்பின் உள்ளே போட்டு மூடிவைத்து கொலை செய்ய முயன்றுள்ளார்கள். மயக்கம் தெளிந்து எழுந்த சித்ரா, குழந்தையின் அழுகுரல் கேட்டு காப்பாற்றி, உறவினர் மூலம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார்.

## கணவர் மனைவியைத் தொடர் சித்திரவதை மனம் உடைந்த மனைவி தற்கொலை

வேலூர் மாவட்டம், குடியாத்தம் தாலுகா, மீனூர் மலைக்கோவில் தெரு, விநாயகம் என்பவரின் மகள் ரேகாவிற்கும், அதே பகுதியை சேர்ந்த முருகன் என்பவருக்கு சுமார் மூன்று ஆண்டுகளுக்கு முன் திருமணம் நடந்துள்ளது. தினமும் ரேகாவின் கணவர் குடிபோதையில் வந்து அவரை அடித்துச் சித்திரவதை செய்துள்ளார். தான் 4மாத கர்ப்பிணியாக அன்று இருந்தபோதிலும் தொடர்ச்சியாக கணவர் சித்திரவதையும் செய்ததால் மன உளைச்சலடைந்த ரேகா 19.03.2010 அன்று மாலை சுமார் 4மணியளவில் தூக்கு போட்டு தற்கொலை செய்து செய்து கொண்டதாக கூறப்படுகிறது. ஒருவேளை அவர் தற்கொலை செய்து கொண்டாலும் அவர் அந்த முடிவுக்குச் செல்ல காரணமான சூழல் ஆராயப்பட்டு அதற்குச் காரணமான வர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென ரேகாவின் பெற்றோர்கள் புகார் கொடுத்துள் ளார்கள். இச்சம்பவம் தொடர்பாக வருவாய் கோட்டாசியர் விசாரனை நடத்தியுள்ளார்.

## கள்ளத் தொடர்பு வைத்துக் கொண்டு மனைவியைச் சித்திரவதை செய்யும் கணவர்

திருவள்ளூவர் மாவட்டம், திருத்தணி வட்டம், கேபுரமங்களம் காலனி, பெரியதெரு வெங்கடேசன் என்பவருக்கும், திருவள்ளூர் அருகே உள்ள கே. ஜி. கண்டிளை அருகே உள்ள ஒட்டர் காலனியைச் சேர்ந்த தேன்மொழிக்கும் சுமார் 8 ஆண்டுகளுக்கு முன் திருமணம் நடந்துள்ளது. அவர்களுக்குப் பெண் குழந்தை ஒன்று உள்ளது. இந் நிலையில் விபத்து ஒன்றில் வெங்கடேசன் ஒரு காலை இழந்துவிட்டார். இச்சூழலில் தனக்குத் தெரிந்த டெய்லர் தொழில் செய்து பிழைத்து வந்துள்ளார்கள். டெய்லர் கடைக்கு அடிக்கடி சென்று வந்த கோபுரமங்களம் காலனி மூர்த்தி என்பவரின் மகள் அமுல்(20) என்பவருடன் கள்ளத் தொடர்பு ஏற்பட்டு சம்பாதிக்கும் பணம் முழுவதையும் அவரிடம் கொடுத்துவிட்டு வந்து, தேன்மொழியையும், அவரது குழந்தையையும் சித்திரவதை செய்து அவரது பெற்றோர் வீட்டிலிருந்து பணம் வாங்கி வரச் சொல்லியுள்ளார்.

கடந்த 30.03.2010 வெங்கடேசனும், கள்ளக் காதலி அமுல் என்பவருடன் உடல் ரீதியான உறவு வைத்திருந்ததை பார்த்த தேன்மொழி அவரது பெற்றோர்களுக்கு தகவல் கூறி நடந்த சம்பவத்தைக் கூறி அழைத்துள்ளார். இதனால் ஆத்திரமடைந்த வெங்கடேசன் 01.04.2010 மதியம் சுமார் 2 மணியளவில் தேன்மொழியின் பெற்றோர்கள் முன்பே தேன்மொழியை இரும்பு ஊதுகோலால் தலையில் அடித்து மண்டையை உடைத்துவிட்டார். உடனே தேன்மொழி திருத்தணி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாகச் சேர்ந்து சிகிச்சைப் பெற்றுள்ளார். திருத்தணி காவல்துறை வழக்கு பதிவுசெய்து நடவடிக்கை எடுத்துள்ளார்கள்.

## கணவருடன் சேர்ந்து வாழச் சொன்னதால் மனைவி தற்கொலை

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர், டி.கே.கொண்டசமுத்திரம் வடக்குத் தெருவில் வசிக்கும் பரணி என்பவரது மனைவி சுந்திரி, ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் செய்துள்ளார். இரண்டு பெண் குழந்தைகள் உள்ளனர். இரண்டு ஆண்டுகள்தான் சந்தோஷமாக குடும்பம் நடத்தியுள்ளார். அடிக்கடி சுந்தரி சண்டை போட்டுத் தாய் வீட்டுக்கு வந்துள்ளார். பிறகு பெற்றோர் சொன்னதால் கணவருடன் வீட்டிற்குச் சென்று இரவு 12 மணியளவில் மண்ணெண்ணெய் ஊற்றித் தற்கொலை செய்துள்ளார். திருப்பனந்தாள் காவல் நிலைய அதிகாரியால் வழக்குபதிவு செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## பெற்றோர்களின் தொடர் சண்டையில் மன உளைச்சல் அடைந்த சிறுமி தற்கொலை

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தாலுகா ஏ.கே. படவேடு ஒத்தவாடை தெருவைச் சேர்ந்த அஸரப் அலி ஷகிலா (35) தம்பதியினருக்கு இரண்டு மகள்களும் ஒரு மகனும் உள்ளனர். கணவன் மனைவிக்கிடையே தினமும் இரவு சண்டை போட்டுக் கொள்வதை பார்த்துக் கொண்டிருந்த மூத்தமகள் யாஸ்மீன் (15) தினமும் சண்டையை விலக்கி விட்டுள்ளார். பெற்றோர்கள் சண்டை தொடர்ந்து நடைபெறவே மன உளைச்சல் அடைந்த யாஸ்மீன் 15.03.2010 அன்று வீட்டிலிருந்த மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்துக் கொண்டாள். உடனே அடுக்கம் பாறை அரசு மருத்துவமனையில் சேர்த்துள்ளனர். சிகிச்சையிலிருந்த யாஸ்மீன் சிகிச்சை பலனின்றி 16.03.2010 நள்ளிரவு சுமார் 1 மணியளவில் இறந்து விட்டார்.

## கணவன் மதுப் பழக்கத்தைத் தவிர்க்க மனைவி தற்கொலை முயற்சி

பெரம்பலூர் மாவட்டம், வட்டம், 1/65 கக்கன் தெரு, தம்பிரான் பட்டியில் வசிப்பவர் பூங்கொடி யின் கணவர் இராஜேந்திரன், தம்பிரான்பட்டியில் வாட்ச் கடை வைத்துள்ளார். இவர் தினமும் இரவு வீட்டிற்கு செல்லும்போது மது அருந்திவிட்டுச் செல்வது வழக்கம். இந்நிலையில் 24.12.2010 அன்று இரவு இராஜேந்திரன் மிக அதிகமாக மது அருந்திவிட்டு தள்ளாடிக் கொண்டு நடந்து சென்றுள்ளார். அதனால் கோபம்கொண்ட பூங்கொடி வீட்டிலிருந்த மண் ணெண்ணெயை ஊற்றி உடலில் தீ வைத்துக்கொண்டார். அவர் அலறிய சத்தம் கேட்டு பக்கத்து வீட்டில் உள்ளவர்கள் சென்று காப்பாற்றி 108 ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவ மனைக்கு அழைத்துச் சென்றுள்ளனர். அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப் பட்டுள்ளது.

## கூடுதல் வரதட்சணைக்காக ஏழு வருடமாகச் சேர்ந்து வாழ மறுக்கும் கணவர்

சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் ஒன்றியம், புலியடித்தம்பம் ராயர் மகள் ஆரோக்கிய மேரிக்கும், தேவகோட்டை தாலுகா பாகாடி வேதமுத்து நகர் செபஸ்தியான் (எ) பன்னீர் செல்வத்துக்கும் 12.2.2003 அன்று கிறிஸ்தவ முறைப்படி அருட்தந்தை அந்தோனி தலைமையில் வேதமுத்துநகர் புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் திருமணம் நடைபெற் றுள்ளது. திருமணத்தின்போது வரதட்சணையாக 30பவுன் நகையும், 50,000ரூபாயும் ஒரு இலட்சம் ரூபாய் மதிப்புள்ள சீர்வரிசையும் கொடுத்துள்ளார்கள். திருமணம் முடிந்த 2வது மாதத்தில் கூடுதல் வரதட்சணை கேட்டும், கர்ப்பமான ஆரோக்கியமேரியைக் கர்ப்பத்தைக் கலைக்கச் சொல்லி சித்திரவதை செய்துள்ள நிலையில் அவர் மறுக்கவே கணவர் பன்னீர் செல்வம் மனைவியை வீட்டைவிட்டு விரட்டியுள்ளார். பிறந்த ஆண் குழந்தை ஏழு வயதைக் கடந்துவிட்ட நிலையிலும் கணவர் சேர்ந்துவாழ மறுப்பதால் மனைவி ஆரோக்கியமேரி சிவகங்கை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து விசாரணையில் கணவர் வெளிநாடு சென்றுவிட்டதாக மட்டும் கூறும்படி பன்னீர் செல்வத்தின் தாயார் கூறியுள்ளார். மகளிர் காவல்துறையினரும் மாவட்ட சமூக நலத்துறையினரும் ஒன்று சேர்ந்து இவ்வழக்கை முடிக்க முயற்சி செய்து கெண்டுள்ளனர்.

## செலவுக்குப் பணம் தர மறுத்த மனைவிக்குக் கத்தி வெட்டு

வேலூர் மாவட்டம், ஆற்காடு வட்டம், ராணிப்பேட்டை அடுத்த வானம்பாடியைச் சேர்ந்தவர் தமிழரசன். இவரது மனைவி அலமேலு. குடிக்கு அடிமையான தமிழரசன் சரிவர வேலைக்குச் செல்லாமல் அடிக்கடி மனைவி அலமேலுவிடம் சண்டை போட்டு வந்துள்ளார். இந்நிலையில் கடந்த 7.9.2010அன்று தமிழரசன் ரூ.30,000-த்தை வீட்டிற்குச் சென்று வாங்கிவரக் கூறியுள் ளார். மறுத்த மனைவி அலமேலுவைக் கல்லாலும், கத்தியாலும் கொடூரமாகத் தாக்கியுள்ளார். காயமடைந்த அலமேலு வாலாஜா அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்றுள்ளார். சிப்காட் காவல் துறையினர் வழக்குப் பதிவு செய்து தமிழரசன் கைது செய்யப் பட்டுள்ளார்.

## தகாத உறவைத் தட்டிக் கேட்ட மனைவியைக் கணவர் மற்றும் அவரது குடும்பத்தார் அடித்துச் சித்திரவதை

திருச்சி மாவட்டம், முசிறி வட்டம், கணக்கப் பிள்ளைத் தோட்டம், பொன்னம்மாள் இல்லத்தில் வசிக்கும் ஆசிரியை ஜான்சிராணி. இவரது கணவர் ஜான்சன், மாலதி என்ற பெண்ணுடன் கல்லூரி மாணவியுடன் கள்ள உறவு வைத்துள்ளார். இதனைத் தட்டிக் கேட்டதால் கணவர் ஜான்சன், அவரது குடும்பத்தார் ஆசிரியை ஜான்சிராணியை 4.9.2010 அன்று தலைமுடியைப் பிடித்து இழுத்து, தெருவில் வைத்து அடித்துச் சித்திரவதை செய்துள்ளனர். இது குறித்து முசிறி காவல் நிலையத்தில் புகார் செய்துள்ளார். அங்கு சரியான நடவடிக்கை எடுக்காததால் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் 6.9.2010 அன்றும், மாவட்ட ஆட்சியரிடமும் புகார் செய்துள்ளார். இப்புகாரின் பேரில் காவலர்கள் விசாரணை செய்து வருகின்றனர்.

## மூன்றாவது குழந்தையைக் கருக்கலைப்பு செய்ததில் பிரச்சினை ஏற்பட்டதில் பெண் மரணம்

வேலூர் மாவட்டம், ஆற்காடு வட்டம், வணக்கம்பாடி கிராமத்தைச் சேர்ந்தவர் திருவள்ளுவன். இவருக்கு மாலா என்ற மனைவியும் இரண்டு குழந்தைகளும் உள்ளனர். திருவள்ளுவன் கூலி வேலை செய்து குடும்பத்தைக் காப்பாற்றி வந்துள்ளார். மாலா 3வது முறையாகக் கருவுற்று உள்ளார். வறுமை காரணமாக பிள்ளைகளை வளர்க்கப் போதுமான வசதி இல்லை என்பதால் கருக்கலைப்பு செய்ய முடிவு செய்து, அதன்படியே கருக்கலைப்பும் செய்துள்ளார். அன்று முதல் மாலாவிற்கு வயிற்று வலி ஆரம்பமாகி உள்ளது. இந்நிலையில் கடந்த 9.9.2010 அன்று இரவு வயிற்று வலி அதிகமானதால் வலி தாங்க முடியாமல் நிலத்திற்குப் போட வைத்திருந்த பூச்சிக் கொல்லி மருந்தைக் குடித்துள்ளார். பின்பு வேலூர் அரசு பொது மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சிகிச்சை அளித்துள்ளனர். அங்கு சிகிச்சை பலனின்றி மாலா மரணம் அடைந்துள்ளார்.

## முதல் மனைவி இருக்கும்போதே இரண்டாவது திருமணம் செய்த கணவன்

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டம், ஆனந்தவல்லிபுரம் இருளர் காலனி அனுமந்தன் என்பவரின் மகள் ஸ்ரீதேவிக்கும், அந்தக் காலனி அருகே உள்ள உட்டால் கிராம இருளர் காலனி வெங்கடேசன் மகன் பாஸ்கர் என்பவருக்கும் கடந்த 5 ஆண்டுகளுக்கு முன் பெரியோர்கள் முன்னிலையில் திருமணம் நடைபெற்றுள்ளது. இவர்களுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்த நிலையில் கர்நாடக மாநிலம் சென்று தனிக்குடித்தனம் இருந்துகொண்டு தனியார் கம்பெனியில் வேலை பார்த்துச் சந்தோசமாக வாழ்ந்துள்ளனர். இந்நிலையில் 2009ம் ஆண்டு மீண்டும் மனைவியுடைய சொந்த ஊருக்கு குடும்பத்துடன் வந்த பாஸ்கர் ஒரு நாள் தன் பெற்றோரைப் பார்த்து வருவதாகக் கூறிச் சென்றவர் 6 மாதமாகியும் வீடு திரும்பவில்லை.

பிறகு 20.3.2010 அன்று ஸ்ரீதேவியின் கணவர் பாஸ்கர் அவரது கிராமமான உட்டாலில் 17 வயது பெண்ணை இரண்டாவது மனைவியாகத் திருமணம் செய்த தகவல் கிடைத்தவுடன் ஸ்ரீதேவி தனது குழந்தையுடன் கணவர் ஊருக்குச் சென்றுள்ளார். எதிர்பாராத பாஸ்கருக்கு முதல் மனைவியான ஸ்ரீதேவி குழந்தையுடன் வந்து நியாயம் கேட்கவே கொடூரமான முறையில் மனைவியையும் குழந்தையையும் அடித்துச் சித்திரவதை செய்துள்ளார். பாதிக்கப்பட்ட ஸ்ரீதேவி குழந்தையுடன் சென்று 24.3.2010 அன்று திருத்தணிகை காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார்கள். நடவடிக்கைதான் எடுக்கவில்லை.

## எச்.ஐ.வி. நோயைத் தொற்றுவித்து மனைவியை சித்திரவதை

கிருஷ்ணகிரி மாவட்டம், அரசம்பட்டி அஞ்சல், முருகம்பட்டி காலனி முரளி மனைவி சரசு. இவர்கள் ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர். முரளி முதல் மனைவி இறந்துவிட்டதால் இரண்டாம் தாரமாக முறைப்படி பெண் பார்த்து சரசுவை திருமணம் செய்து கொண்டார். ஒரு ஆண் குழந்தையும் ஒரு பெண் குழந்தையும் உள்ளது. குழந்தை பேறுகாலம் அரசு

மருத்துவமனையில் நடைபெறும்போது சரசுவிற்கு எச்.ஐ.வி. தொற்றுநோய் இருப்பதாக மருத்துவர் கூறியுள்ளார். கணவர் லாரி டிரைவராக வேலை செய்துவரும்போது தவறான பெண்களுடன் பழகியுள்ளதை மறைத்துள்ளார். அவர்மூலம் எச்.ஐ.வி. தொற்றுநோய் சரசுக்கு ஏற்பட்டுள்ளது. எச்.ஐ.வி. தொற்றுநோய் இருப்பதையறிந்த கணவர், மாமியார், நாத்தனார் ஆகியோர் வீட்டில் உணவு, தண்ணீர் கொடுக்காமல் சித்திரவதை செய்துள்ளனர். இதனால் சரசு இரண்டு குழந்தைகளையும் நல்ல முறையில் வளர்க்க கணவரிடம் விவாரத்து கேட்டு காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார்.

## மனைவிமேல் சந்தேகப்பட்டு அடித்துச் சித்திரவதை

திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் பூனாம்பாளையத்தைச் சேர்ந்த கிருத்திகா கணவர் செல்வன். இவர் 10ம் வகுப்பு வரை படித்துள்ளார். செயற்கை வைரம் பட்டை தீட்டும் தொழில் செய்கிறார். இவரது கணவர் செல்வம் டீக்கடையில் வேலை செய்து வருகிறார். இவர்களுக்கு 9 வயதில் சிநேகா என்ற பெண் குழந்தை உள்ளது.

செல்வன் கல்யாணம் ஆனது முதல் கொஞ்ச நாட்களிலேயே கிருத்திகாவை சந்தேகப்பட ஆரம்பித்துவிட்டார். பின்னர் அவரை உடல்ரீதியாக அடித்துத் துன்புறுத்தியுள்ளார். இதில் மனம் வெறுத்துப்போன கிருத்திகா மண்ணச்சநல்லூர் காவல் நிலையத்தில் புகார் செய்துள்ளார். புகாரை விசாரணை செய்த சார்பு ஆய்வாளர் திரு கவிதா, செல்வனை காவல் நிலையம் அழைத்து உன் மனைவியை உடல்ரீதியாக அடித்துத் துன்புறுத்தக்கூடாது. அவ்வாறு இனிமேல் செய்தால் உன் மீது சட்டப்படி நடவடிக்கை எடுப்பேன் என மிரட்டி வழக்கு பதிவு செய்யாமல் அனுப்பி வைத்துள்ளார்.

## பெற்ற தாயை வீட்டை விட்டுத் துரத்திய காவலர்

சேலம் மாவட்டம், ஏற்காடு தாலுகா, வெள்ளைக்கடை அஞ்சல், வெள்ளையன் (லேட்) மனைவி உண்ணாமலைச்சி (60) பழங்குடி இனத்தைச் சார்ந்தவர். தனது ஒரே மகன் சந்திரன் கோவையில் அதிரடிப்படையில் பணிபுரிந்து வருகிறார். இந்நிலையில் நிலம் முழுவதையும் தாயை மிரட்டி தன் பேரில் எழுதி வாங்கிக் கொண்ட மகன் தாயைத் தனியாக தவிக்க விட்டுள்ளார். மக்கள் கண்காணிப்பகத்தின் சார்பாக மாவட்ட ஆட்சியருக்குப் புகார் அளித்ததி னால் உடனடியாக நடவடிக்கை எடுத்து மாதம் இரண்டாயிரம் வழங்க உத்தரவிட்டுள்ளார். தற்போது நல்ல நிலையில் வாழ்ந்து வருகிறார்.

## காதலித்து இளம் பெண்ணை ஏமாற்ற முயற்சி

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம், பனையப்பட்டியைச் சேர்ந்த அரசப்பன் மகள் முத்துலட்சுமி (24) இந்து பள்ளர் சாதியைச் சார்ந்தவர். அதே ஊரைச் சார்ந்த கணேசன் வயது (30), த.பெ. ஆண்டியப்பன் கடந்த 7 வருடமாக இருவரும் காதலித்து வந்துள்ளனர். இருவருக்கும் ஏற்பட்ட உறவின் காரணமாக முத்துலெட்சுமி 5 மாதம் கர்ப்பமடைந்து உள்ளார். இந்நிலையில் கணேசன் பெற்றோரின் பேச்சைக் கேட்டு முத்துலெட்சுமியைத் திருமணம் செய்ய மறுத்துள்ளார். அதனால் முத்துலெட்சுமி திருமயம் மகளிர் காவல் நிலையத்தில்

11.8.2010 அன்று புகார் செய்துள்ளார். 12.8.2010 அன்று கணேசனை காவலர்கள் நேரடியாக விசாரணைக்கு அழைத்து சென்று இருவரும் திருமணம் செய்ய ஒப்புக் கொண்ட பின்பு எழுதி வாங்கிக் கொண்டு இந்துக் கோவிலில் திருமணம் செய்து வைத்துள்ளனர்.

## கட்டாயத் திருமணம் - மனைவி கொலை

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி தாலுகா மேல்சாமண்டபப்பட்டியைச் சார்ந்த முருகன் லாரி டிரைவர். இவரின் வேலை பெங்களூருவில் மணல் லாரி ஓட்டுவது. முருகனுக்குத் தனியாக லாரி வாங்கி ஓட்ட வேண்டும் என்ற ஆசை இருந்துள்ளது.

தனது சகோதரி பானுவிடம் நான் லாரி வாங்க வேண்டும் எனக்குப் பணம் உதவி செய் என 6 மாதத்திற்கு முன்பு கேட்டு இருக்கிறார். பானுவும் தனது நகை மற்றும் ஒரு லட்சம் பணம் கொடுத்திருக்கிறார்.

கடந்த வாரம் பானுவின் மகள் புனிதா (19) என்பவரைப் பெண் பார்க்க வந்துள்ளனர். உடனே சம்மந்தம் முடிவான சமயத்தில் என் மகளுக்குத் திருமணம் ஏற்பாடு நடந்துள்ளது. உடனே பணம் கொடு என்று பானு கேட்டிருக்கிறார். உடனே தன்னால் தர முடியாது என்று முருகன் சொல்லியிருக்கிறார். அதற்கு பானு உன்னால் எனது மகளின் திருமணம் நின்று விடும்போல் இருக்கிறது. மேலும் எங்கள் வீட்டில் பிரச்சினையாக உள்ளது என்று கூறியிருக்கிறார்.

சரி நானே உனது மகளைத் திருமணம் செய்து கொள்கிறேன் என்று கூற அவசரமாக ஒரு கோவிலில் திருமணம் நடந்துள்ளது. பின்னர் மனைவியைக் கூட்டிக்கொண்டு பெங்களூர் சென்றுள்ளார். அதன் பின்பு 20நாள் கழித்து மனைவியுடன் வீட்டுக்கு லாரியுடன் வந்துள்ளார். சீர் சடங்குகளுடன் மீண்டும் பெங்களூருக்கு மனைவியுடன் சென்று உள்ளார். சென்ற சில மணி நேரத்தில் விபத்தில் இறந்துவிட்டதாகப் புனிதாவை எடுத்து வந்துள்ளார். சாவில் சந்தேகம் உள்ளது எனப் பெற்றோர் புகார் கொடுக்க முருகன் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு வழக்கு விசாரணை தொடர்ந்துநடைபெற்று வருகிறது.

## மாற்றுத் திறனாளி சமிளா மீது தாக்குதல்

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம் வடமாதிமங்களத்தை சேர்ந்தவர் பிரபு தாஸ். இவர் மனைவி சமிளா மாற்று திறனாளி ஆவார். அதே பகுதியில் வசித்துவரும் மனோகர் என்பவர் சமிளாவின் கணவர் பிரபுதாஸ் ஊரில் இல்லாத நேரத்தைப் பார்த்து முன் விரோதம் காரணமாகச் சமிளாவிடம் வம்புசெய்து, கடந்த 28.06.2010 அன்று வீடு புகுந்து அடித்து துன்புறுத்தி உள்ளார். இதை தடுக்கச் சென்ற அக்கம்பக்கத்தினரையும் தாக்கியுள்ளார். பலத்தகாயம் அடைந்த சமிளா போளூர் அரசு பொதுமருத்துவமனையில் உள் நோயாளியாக அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வந்துள்ளார். புகார் கொடுத்தும் போலீசார் வழக்குப் பதியமால் அலைக்கழித்துள்ளனர். புகார் கொடுத்ததைத் தெரிந்த மனோகர், சமிளாவையும் அவரது குழந்தைகளையும் தீயிட்டு கொளுத்துவதாகக் கூறி கொலை மிரட்டல் விடுத்துள்ளார்.

## மனநலம் குன்றிய தலித் சிறுமியை பஞ்சாயத்து உறுப்பினர் பாலியல் சித்திரவதை

இராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை தாலுகா தண்டலக்குடியைச் சேர்ந்த அன்னபுஷ்பம் என்பவரின் மகள் விஜிதா, மனநலம் பாதிக்கப்பட்டவர் மற்றொரு மகள் அஜிதா (15) 10ஆம் வகுப்பு படித்து வருகிறார். அன்ன புஷ்பத்தை கணவர் கைவிட்டு வெளியூர் ஓடிவிட்ட நிலையில் தனது இரண்டு மகள்களைத் தனியாக பராமரித்து வருகிறார். தனது இரண்டாவது மகன் விஜிதாவிற்கு மனநலம் சரியில்லாதோடு அரிப்பு நோயும் உள்ளது. அதற்காகவும் சிகிச்சையளித்து வருகின்றனர். இந்நிலையில் மேற்படி தண்டலக்குறிஞ்சி வார்டு உறுப்பினரும் பக்கத்துவீட்டுகாரருமான நாகூர் கனி (42) வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் 04.09.2010அன்று விஜிதாவை அவரது வீட்டிற்கு கூட்டிச் சென்று கொடூரமான முறையில் பாலியல் சித்திரவதை செய்துள்ளார். அதன் விளைவாக கொடுக்கப்பட்ட புகாரில் சிறையில் அடைக்கப்பட்டார். சில நாட்கள் சிறையிலிருந்து வந்த நாகூர் கனி தான் திமுக கட்சி என்றும் தனக்கு நெருக்கமான நாடாளுமன்ற உறுப்பினர் ரித்திஸ் என்ற சிவகுமார் மூலம் வழக்கை உடைத்து விடுவதாகவும் பேசி அவர்களை மிரட்டிவந்துள்ளார்.

## மாற்றுதிறனாளியினரிடம் பண மோசடி

கிருஷ்ணகிரி மாவட்டம், அவையூர் அஞ்சல், நடுப்பையூர் கிராமம், சின்னச்சாமி மகள் மங்கை இவர் மாற்றுதிறனாளி. இவர் கிருஷ்ணகிரி மாவட்டம் உடல் ஊனமுற்றோர் மறுவாழ்வு மையம் தலைமை அலுவலர் மணிமாறன் தலைமையில் மாற்றுத்திறனாளிகள் கூட்டம் பையூரில் நடந்துள்ளது. அப்போது அந்த அமைப்பை சார்ந்த அசோக் என்பவர் மாற்றுதிறனாளிகள் 21 உறுப்பினர்களைச் சேர்த்து நடத்தி வந்துள்ளார். சுய உதவிக்குழு அமைத்து அசோக் என்பவர் அந்த குழுவிற்கு மங்கையை குழுத் தலைவியாக தேர்வு செய்துள்ளார். சங்கத்தை 05.11.2007 முதல் 05.07.2009 நடத்தி அசோக் ரூ.40,000 மோசடி செய்துவிட்டு தலைமறைவாகி யுள்ளார். குழு உறுப்பினர்களுடன் மங்கை காவேரிபட்டினம் காவல் நிலையத்தில் புகார் செய்துள்ளார். அந்த பணத்தைக் கட்டவேண்டி மங்கையிடம் அசோக் திருப்பித் தருவதாகக் கூறி ரூ.28,000 வாங்கிய கடன் பணத்தையும், நகையையும் கொடுக்க முடியாமல் இருந்துள்ளார். இதனால் மங்கையிடம் 21 சுய உதவி குழு உறுப்பினர் களும் சேர்ந்து பணம் கட்டக்கோரி சண்டை போட்டுள்ளனர். கடன் கொடுத்த முருகனும் பணம் கேட்டுத் தொல்லை கொடுத்துள்ளனர். மங்கை மனம் உடைந்து மக்கள் கண்காணிப்பகம் இயக்குநருக்கு நடவடிக்கை எடுத்து பணத்தையும் நகையையும் மீட்டி தர வேண்டி புகார் கொடுத்துள்ளனர்.

## விவசாயி- பெண்களை அடித்துச் சித்திரவதை

கோவை மாவட்டம், கொண்டல்சாமி, நாயுடு நகர். பன்னிமடை சிவகுமார் என்பவரது மனைவி கவிதாவும் துளசிமணி தெய்வானை ஆகிய மூன்று பேரும் கீரை பறித்து வரலாம் என்று கோபால் என்ற இராஜகோபாலன் தோட்டத்திற்குச் சென்று கீரை பறித்துள்ளனர். அப்போது தோட்ட உரிமையாளர் ராஜகோபால் தோட்டத்திற்கு வந்து மூன்று பேரையும் கம்பால் அடித்து இரத்தக் காயம் ஏற்படுத்தியுள்ளார். மூன்று பெண்களும் திருடவரவில்லை. கீரை தான் பறிக்க வந்திருக்றோம் என்று அவர்களை விட்டுவிடக் கேட்டிருக்கிறார்கள். ஆனால் இராஜகோபால் மூவரையும் கடுமையாகக் கம்பால் தாக்கியுள்ளார். அதனால் கடும் பாதிப்புக்குள்ளான கவிதாவும் துளசிமணியும் தெய்வானையும் கோவை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளனர். அதனை காவல்துறையினர் அறிந்து கொண்டு வாக்குமூலம் வாங்கி ராஜகோபால் மீது வழக்கு பதிவு செய்து கைது செய்துள்ளார்கள்.

## இளம் பெண் கடத்தல்

இராமநாதபுரம் மாவட்டம், சித்தூர் கோட்டை அருகே உள்ள வாமூன் பானுமதி த/பெ. ராஜா தனது குழந்தைகளுடன் வசித்து வந்துள்ளார். அவரது கணவர் கோவை தனியார் கம்பெனியில் வேலைப் பார்க்க சென்றுள்ளார். இச்சூழலை பயன்படுத்தி கோரவள்ளி தர்மராஜ் மகன் சுரேந்திரன் என்பவர் அடிக்கடி அவர்களது வீட்டிற்கு சென்றுள்ளார். திடீரென பானுமதியின் மகள் பிரியாவையும், 10 பவுன் நகையும் ரூபாய் 20 ஆயிரமும் எடுத்துச் சென்றுள்ளார்கள். 17 வயது மகளை கடத்திச் சென்றதாக பானுமதி சுதேந்திரன் மீது புகார் அளிக்கவே சுரேந்திரனின் குடும்பத்தார் பானுமதியிடம் அவரது மகளின் வாழ்க்கை சீரழிந்து விடும் என மிரட்டியுள்ளனர். அதையும் மீறி பானுமதி தமிழக முதல்வருக்கு புகார் மனு அனுப்பி விட்டு நடவடிக்கைக்காக காத்திருக்கிறார்.

## பள்ளி மாணவியை கடத்திக் கட்டாயத் திருமணம் செய்ய முயற்சி

தர்மபுரி மாவட்டம் பெண்ணாகரம் காவல் நிலையம் எல்லைக்கு உட்பட்ட சின்ன அள்ளி கிராமத்தைச் சேர்ந்த ஜெயவேல் மகள் தமிழ்மொழி (17). பண்ட அள்ளி அரசு மேல்நிலைப் பள்ளியில் பனிரெண்டாம் வகுப்பு படித்து வந்துள்ளார். கடந்த 16.01.2010-ம் தேதி மாலை சுமார் 05.30மணிக்கு ஜெயசீலன் முத்தம்மாள் தம்பதியரின் மகன் அருள் தமிழ்மொழியைக் கட்டாயப்படுத்திக் கடத்திச் சென்றுள்ளார். 22.01.2010 பென்னாகரம் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் அடிப்படையில் பதிவு செய்து பின்னர் 52/2010 பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்து கடத்தப்பட்ட தமிழ் மொழியை மீட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்து பின்னர் பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளா்

## தவறான சிகிச்சையால் பெண் மரணம்

திருச்சி மாவட்டம், துறையூர் விஸ்வாம்பாள் சமுத்திரத்தைச் சேர்ந்த கூலித் தொழிலாளி சுப்பிரமணியன் என்பவரது மனைவி மகேஸ்வரி. இவரை திருச்சி அரசு மருத்துவமனையில் இரண்டாவது பிரசவத்திற்கு 18.02.2010 அன்று சேர்த்துள்ளனர். அன்று மாலை சுமார் 6 மணியளவில் அறுவை சிகிச்சை மூலம் பெண் குழந்தை பிறந்துள்ளது. அன்றே அவருக்கு குடும்பக் கட்டுபாட்டு அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. மேற்படி மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்த போது 21.02.2010 அன்று மகேஸ்வரி இறந்துள்ளார். ஆனால் மகேஸ்வரியின் கணவர் தவறான சிகிச்சையால் தான் தன் மனைவி இறந்து விட்டதாக கூறவே சடலக் கூறாய்வு செய்யப்பட்டுள்ளது. சுப்பிரமணியத்திடமும், அவர்களது உறவினர்களிடமும் மருத்துவமனை ஊழியர்கள் உடலை எடுத்து செல்லுமாறு தொடர்ந்து வற்புறுத்தி கூறியுள்ளனர்.

## கட்டப்பஞ்சாயத்து செய்து பெண்ணைச் சித்திரவதை

இராமநாதபுரம் மாவட்டம், தொண்டி வட்டம், முள்ளி முனை காலனித் தெரு, செட்டி மனைவி பஞ்சகல்யாணியை வீட்டின் அருகில் வசித்துவரும் பாண்டி என்பவர் வீட்டிற்குள் வந்து அடித்துள்ளார். அதனால் பாண்டி மீது பஞ்சகல்யாணி தொண்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார். பாண்டி மீது ஏண்டி புகார் கொடுத்தாய் எனக் கேட்டு பாண்டியின் பெற்றோர் சுப்பையா மற்றும் கல்யாணி மற்றும் சிலரும் பஞ்சகல்யாணியையும் அவரது மகன் இராஜகுமாரனையும் அடித்துத் தாக்கி யுள்ளனர். அப்போதும் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார். ஆனால் காவல் துறை நடவடிக்கை எடுக்கவில்லை. மேலும் ஊர் பொதுமக்கள் அனைவரும் ஒன்று கூடி பஞ்சகல்யாணியை ஊரை விட்டு நீக்கிக் கொடுமைப்படுத்தியுள்ளனர். திருவிழாவில் கலந்து கொள்ளக்கூடாது. குடிநீர் குழாயில் தண்ணீர் எடுக்கக் கூடாது. பொதுக் கடைகளில் சாமான் வாங்கக் கூடாது என கட்டப்பஞ்சாயத்து செய்து சித்திரவதை செய்துள்ளனர். அப்போதும் காவல் நிலையத்தில் புகார் செய்துள்ளனர். ஆனால் நடவடிக்கை எடுக்கவில்லை. பஞ்சகல்யாணியை ஊரைவிட்டு விரட்ட வேண்டும் என நினைத்து பாண்டி, சுப்பையா, முருகன் ரெட்டி, ரெங்கு, சிங்கிப்பாண்டி, சேது, பிரபு, இரட்டை இலை, கார்த்திக், ஆகியோர் சேர்ந்து வீட்டை அடித்து உடைத்து விட்டனர். அதனால் பஞ்ச கல்யாணி அரசு அதிகாரிகளுக்குப் புகார் அனுப்பி நடவடிக்கை எடுக்கக் கேட்டுள்ளார்.

## அரசு மருத்துவமனையில் கட்டாய வேலையினால் கர்ப்பிணி செவிலியர் மரணம்

நாகப்பட்டிணம் மாவட்டம், கீவளூர் வட்டம், கீழையூர் காவல் எல்லைக்குட்பட்ட காமேஸ்வரம் பாலாஜி என்பவருடைய மனைவி சித்ரகலா என்பவர் பிரசவ நேரத்தில் திருப்பூண்டி அரசு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்களால் அதிகநேரம் வேலை வாங்கியதாலும், அதே மருத்துவமனையில் தவறான சிகிச்சை அளித்ததின் விளைவாக தாய், சேய் இருவரும் பலியாயினர். இதில் பாலாஜி தனது மனைவி சித்ரகலா என்பவரை 25.3.2010 அன்று மாலை மருத்துவமனையில் விட்டுச் சென்றுள்ளார். அன்று இரவு முழுவதும் சித்ரகலா (நர்ஸ்) கண் விழித்து வேலை பார்த்துள்ளார். பின்னர் விடியற்காலை அவருக்கு பிரசவ வலி எடுக்கவே, துடிதுடித்துள்ளார். இதில், மருத்துவர் வெற்றிச் செல்வி மற்றும் செவிலியர்களான காந்திமதி, ஜானகி ஆகியோர் பிரசவம் பார்த்தபோது தவறான சிகிச்சையால் சித்ரகலா தனது வயிற்றுக்குள் குழந்தையுடன் பிரசவ அறையிலேயே இறந்துள்ளார். பின்னர் தகவலை வீட்டுக்குத் தெரிவித்துவிட்டு உடனடியாக ஆம்புலன்ஸ் மூலம் வீட்டுக்கு எடுத்துச் சென்றுவிட்டனர். மருத்துவரின் அலட்சியப் போக்கின் காரணமாகத்தான் இந்த சம்பவம் நடந்துள்ளது.

# கண்டறிந்தவைகள்
# பெண்கள் மீதான வன்முறை

1. குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்கள் காவல் நிலையம் சென்று புகார் கொடுக்கும்போது அப்புகார் மனுவை விசாரணை செய்யும் விசாரணை அதிகாரி குடும்ப வன்முறைத் தடுப்புச் சட்டம் 2005ன் கீழ் வழக்குப் பதிவு செய்யாமல் வெறும் இந்தியத் தண்டனைச் சட்டத்தின் கீழ் மட்டும் வழக்குப்பதிவு செய்து வருகிறார்கள் என்பது தெரியவருகிறது.

2. சுமங்கலித் திட்டத்தின் கீழ் கோவை மாவட்டத்தில் பஞ்சாலைகளில் வேலை பார்க்கும் இளம்பெண்கள் பணியிடங்களில் நடக்கின்ற பாலியல் பலாத்காரச் சம்பவத்தை உரிய காவல் நிலையத்தில் சென்று புகார் கொடுக்கும்போது அப்புகார் மனுவைக் காவல் துறையினர் சட்ட ரீதியாக வழக்குப் பதிவு செய்யாமல் பஞ்சாலை முதலாளிகளிடம் கையூட்டுப் பெற்றுக்கொண்டு அவர்கள் மீதே பொய் வழக்குப் பதிவு செய்கிறார்கள் என்பது கண்டறியப்படுகிறது.

3. கோவை மாவட்டத்தில் உள்ள பஞ்சாலைக்குள் நடக்கின்ற சில கொலைகளைக் காவல்துறையினர் மேற்படி பஞ்சாலை முதலாளிகளிடம் கையூட்டுப் பெற்றுக் கொண்டு தற்கொலை வழக்காகப் பதிவு செய்து உண்மைச் சம்பவங்களை வெளிகொண்டு வராமல் மூடி மறைக்கின்றனர் என்பது தெரிய வருகிறது.

4. குடும்ப வன்முறையால் பாதிக்கப்படும் பெண்ணுக்கு சமூக நலத்துறையின் பாதுகாப்பு அலுவலர் உரிய முறையில் அவ்வழக்கை விசாரிக்காமல் பாதிக்கப்பட்ட பெண்ணை ஆற்றுப்படுத்துதல் இன்றி வழக்கை சமரசம் செய்து முடித்து வைக்கின்றனர். இவ்வாறு சமரசம் செய்யப்படும் வழக்குகளில் பெரும்பாலான பெண்கள் கணவர் வீட்டில் தற்கொலை செய்தோ அல்லது கொலை செய்யப்பட்டோ இறக்கும் போக்கு தான் அதிகமாக உள்ளது.

5. பெண் குழந்தைகளுக்குக் குறிப்பாக வீட்டில் தனியாக இருக்கும் சிறுமிகளுக்கு அக்கம் பக்கத்தினர், உறவினர்களால் பாலியல் தொந்தரவு ஏற்படுகிறது. இதனால் அவர்களுக்குப் பாதுகாப்பற்ற சூழல் உள்ளது.

6. குடும்ப வன்முறைத் தடுப்புச் சட்டம் மற்றும் வரதட்சணைத் தடுப்புச் சட்டம் போன்ற பெண்களுக்கான பாதுகாப்புச் சட்டங்கள் இருந்தாலும் கூட இன்னும் தமிழகத்தில் வரதட்சணைக் கொடுமையால் பெண்கள் தாக்கப்படுதல், தற்கொலைக்குத் தூண்டப்படுதல், கொலை செய்யப்படுதல் போன்ற சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன.

7. தமிழகத்தில் கிராமப்புறங்களில் இன்றும் கூட பெண் குழந்தைகள் கருக்கொலை மற்றும் சிசுக் கொலை செய்யப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன என்பது தெரிய வருகிறது.

8. பெண்கள், குறிப்பாகத் தாழ்த்தப்பட்டோர் மற்றும் இருளர் பெண்கள் ஆதிக்க சாதியினரால் பாலியல் வல்லுறவுக்கு அதிகமாக உட்படுத்தப்படுகின்றனர்.

9. ஆண்கள் சைக்கோ மனநிலையில் காரணமேயின்றி தொடர்ந்து பெண்களை சித்திரவதை செய்கின்ற காரணங்களால் பெண்கள் மீதான வன்முறைகளும் அதிகரித்துக் கொண்டே உள்ளது என்பதை இவ்வறிக்கைகளில் காண முடிகிறது.

10. மருத்துவமனை, மருத்துவர்கள், செவிலியர்களின் அலட்சியத்தால் அதிகளவில் கர்ப்பிணி பெண்களும், பிறந்த குழந்தைகளும் இறக்க நேரிட்டுள்ளது.

11. குடும்ப வன்முறையில் கணவன் மனைவியை மதுபோதையிலோ, சந்தேகத்தின் பெயரிலோ அடித்தல், சிகரெட் துண்டுகளால் சுடுதல், எரித்தல் போன்ற பல்வேறு சித்திரவதைகளை செய்கின்ற சம்பவங்கள் அதிகமாக இவ்வறிக்கையில் இடம் பெற்றுள்ளன.

12. இளம் பெண்கள் காதல் , பாலியல் உறவுகளுக்கு ஆட்பட்டு கைவிடப்படுதல் அல்லது கொலை

## பொதுவான பரிந்துரைகள்

1. பெண்கள் மீதான குடும்ப வன்முறைகள் நடைபெறும்போது பாதிக்கப்பட்ட பெண் காவல் நிலையத்திற்குச் சென்று புகார் கொடுக்கும்போது அந்த வழக்கைச் சம்மந்தப்பட்ட காவல் துறையினர், குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம் 2005ன் உரிய சட்டப் பிரிவின் கீழ் வழக்குகள் பதிவு செய்ய வேண்டும்.

2. குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு சமூக நலத்துறையில் உள்ள பாதுகாப்பு அலுவலர் அப்பெண்ணுக்கு உரிய பாதுகாப்பும் ஆற்றுப்படுத்துதலும் அளிக்க வேண்டும்.

3. குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கும்போது அவ்வழக்கு நீதிமன்ற நிலுவையில் இருக்கும்போது குடும்ப நல ஆலோசகரின் உதவியைக் கோர வசதிகள் செய்ய வேண்டும். அப்பெண்ணுக்கு மேலும் வன்முறைகள் நடைபெறாத வண்ணம் சமரசத் தீர்வு மையத்தை அணுகி பாதுகாப்பான சூழலில் இருக்க மாநில அரசு ஆவண செய்ய வேண்டும்.

4. நீதிமன்றங்கள் பெண்கள் மீதான வன்முறை வழக்கில் குடும்ப வன்முறைத் தடுப்புச் சட்டத்தில் சொல்லப்பட்டுள்ளது போல் ஒரு வேளை அப்பெண் மிகத் தீவிரமான சூழ்நிலையை எதிர்நோக்கும் சூழலில் நீதிமன்றமானது இடைக்கால உத்தரவைப் பிறப்பித்து அதன் பிறகு விசாரணைக்கான மறு தேதியை அறிவிக்கலாம். மேலும் அந்த நீதிமன்றமானது அந்த சூழலிலிருக்கும் பெண்ணுக்கு பிரிவு 23(1)படி சாதகமாக இடைக்கால உத்தரவையும் அளிக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது. அதை நடைமுறைப்படுத்த வேண்டும்.

5. பெண்களின் மீதான வன்முறைகள் மற்றும் குற்றங்கள் நடைபெறும்போது காவல் துறையினர் புலனாய்வைத் தாமதமின்றி துரிதப்படுத்த வேண்டும். அச்சம்பவங்களில் கிடைக்கும் முக்கியமான ஆதாரங்கள், தடையங்கள் ஆகியவற்றைக் குற்றவாளிகள் அழிப்பதற்கு முன்பு காவல் துறையினர் அவற்றைக் கைப்பற்ற வேண்டும்.

6. சுமங்கலித் திட்டத்தில் ஒருங்கிணைந்த கோவை மாவட்டட்தில் பஞ்சாலைகளில் வேலை பார்க்கும் இளம் பெண்கள் பணியிடங்களில் பாலியல் பலாத்காரத்திற்கு ஆளாகின்ற பெண்கள் பெரும்பாலும் தற்கொலை செய்து கொள்கின்றனர். அவ்வழக்கை காவல் துறையினர் 174 *Cr.P.C.*யின் கீழ் வழக்குப் பதிவு செய்கின்றனர். இதை எதிர்த்து சிவில் சமூக அமைப்புகளும், தொழிற்சங்கங்களும் போராடி வருகின்றனர். அவர்களது நீண்டநாள் கோரிக்கையாக அவ்வாறு நடைபெறுகின்ற வழக்குகளில் குற்றவியல் நடைமுறைச் சட்டம் 174 *(a)*ன் கீழ் தற்கொலைக்குத் தூண்டியதாக வழக்குப் பதிவு செய்ய வேண்டும் என்று பரிந்துரை செய்யப்படுகிறது.

7. ஒருங்கிணைந்த கோவை மாவட்டத்தில் உள்ள 1,100 பஞ்சாலைகளில் 40ரூ இளம்பெண்கள் சுமங்கலித் திட்டத்தின் கீழ் வேலை செய்கின்றனர். அவ்வாறு வேலை செய்யும் பெண்கள் பெரும்பாலும் குடும்பச் சூழல் காரணமாகவும், வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களும் இந்தப் பஞ்சாலைகளில் 3 ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் செய்து கொள்கிறார்கள். ஆனால் 3ம் ஆண்டு இறுதியில் ஒப்பந்தத்தில் சொல்லப்பட்டிருக்கும் தொகையை முதலாளிகள் தருவதற்கு மறுத்து இரண்டரை ஆண்டு காலத்திலேயே ஏதாவது ஒரு காரணத்தைக் கூறி அப்பெண் களை பஞ்சாலைகளில் இருந்து வெளியே அனுப்பி அவர்களது வாழ்வாதாரத்தைப் பாதிப்புக் குள்ளாக்கி விடுகின்றனர். இந்தச் சுமங்கலித் திட்டத்தை முறைப்படுத்த வேண்டும் என்று மாநில அரசுக்குக் கோரிக்கை வைக்கப்படுகிறது.

8. சுமங்கலித் திட்டத்தால் பாதிக்கப்படும் பெண்கள் காவல் நிலையத்திற்குச் சென்று புகார் கொடுக்கும்போது அப்புகார் மீது உரிய வழக்குப் பதிவு செய்யாமல் மில் முதலாளிகளிடம் கையூட்டுப் பெற்றுக் கொண்டு பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு உரிய நீதி கிடைக்காமல் செய்து விடுகின்றனர். இதுவரை எந்தவொரு வழக்கிலும் மில் முதலாளிகளைக் காவல்துறை கைது செய்து நீதிமன்றக் காவலுக்குக்கூடக் கொண்டு சென்றது கிடையாது. இதனால் மாநில அரசு இது போன்ற வழக்குகளில் அரசு காவல் துறையின் நடவடிக்கையைக் கூர்ந்து

கவனித்து அவ்வாறு ஒருதலைப் பட்சமாக நடந்து கொள்ளும் காவல் துறையினர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

9. ஒரு பெண்ணின் மரணம் (திருமணமாகி 7 ஆண்டுகளுக்குள் அப்பெண் மரணமடைந்திருந்தால் மட்டுமே) அல்லது அவர் பாலியல் பலாத்காரத்திற்கு உள்ளாக்கப்படுதல் போன்றவற்றை புலனாய்வு செய்யும் கோட்டாட்சியரோ அல்லது காவல் துணைக் கண்காணிப்பாளரோ இத்தகைய வழக்குகளை கையாளும்போது அவற்றை சரியான பாலியல் கண்ணோட்டத்துடன் அணுகி விசாரிக்க வேண்டும். அவ்வாறு விசாரணை செய்யும் காவல்துறை அதிகாரிகளுக்கு மாநில அரசு முறையான பயிற்சிகள் அளிக்க வேண்டும்.

10. குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவுகள் 154 மற்றும் 155ன் படி போலீஸ் நிலையத்தில் புகார் கூறுபவர்களின் கூற்றை முழுமையாக பதிவு செய்ய வேண்டும். ஆனால் நடைமுறையில் அவ்வாறு செய்யப்படுவதில்லை. மேலும் காவல் துறையினர் ஒரு சாராரிடம் பணம் வாங்கிக் கொண்டு அவர்களுக்குச் சாதகமாகவே செயல்படு கின்றனர். பெரும்பாலான மகளிர் காவல் நிலையங்களில் கூட இதே நடைமுறை தான் காணப்படுகின்றது. இதற்கு காரணம் இவர்களிடம் பாலியல் கண்ணோட்டம் இல்லாததே. எனவே, அரசே அனைத்து மட்டங்களிலும் உள்ள போலீசாருக்குப் பாலியல் கண்ணோட்டம் மற்றும் பெண்களின் உரிமைகள் குறித்தும் முறையான பயிற்சிகள் திட்டமிட்டு நடத்த வேண்டும். இம்முயற்சியில் பெண்களின் அமைப்புகளும் அரசு சாரா நிறுவனங்களும் ஈடுபடுத்தப்பட அரசே ஆவண செய்ய வேண்டும்.

11. பெண்களின் மீதான வன்முறை என்பது அவர்கள் கருவில் இருக்கும் போதே துவங்கி விடுகிறது. மேற்படி வாழ்வுரிமையை பறிக்கும் வன்முறைகள் தமிழகத்தில் இல்லை என்ற முடிவுக்கு வர இயலாது என்பது நாம் அறிந்ததே. பரவிவரும் இவ்வன்முறை குறித்தும் அதற்கான தீர்வுகள் குறித்து தெளிவு பெறுவதற்காகவே கருக்கொலை மற்றும் சிசுக்கொலைகளைத் தடுப்பதற்கான பரிந்துரைகள் தரப்படுகின்றன.

12. பிறக்கப்போவது ஆணா, பெண்ணா என்பதை தொழில்நுட்பங்களின் மூலம் கண்டறிந்து பெண் குழந்தையாக இருந்தால் கருவிலேயே கொலை செய்துவிடும் போக்கு அதிகரித்து வருகிறது. கருக்கொலைக்கு *(Foeticide)* உடந்தையாக ஸ்கேன் மையங்களும் செயல்பட்டு வருகின்றன. மாநில அரசு இதைக் கண்டறிவதற்கான தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். உண்மை என்ற தெரிய வரும்போது அந்த மருத்துவமனையில் அங்கீகாரத்தை அரசு ரத்து செய்ய வேண்டும்.

13. கருக்கொலையைத் தடுத்திட மத்திய அரசு பிறக்கப் போகும் குழந்தைகளின் குறைபாடுகளைக் கண்டறிய உதவும் தொழில் நுட்பம் (முறைப்படுத்துதலும், தவறாக உபயோகப்படுத்துவதைத் தடுத்தலும்) சட்டம் 1994ஐ *(Pre-Natal Diagnostic Techniques Regulation & Prevention of Misuse Act)* நிறைவேற்றியது. இச்சட்டத்தின் படி அனைத்து ஸ்கேன் மையங்களும் பதிவு செய்யப்பட வேண்டும். ஆனால், சட்டம் இயற்றப்பட்டு 5 ஆண்டுகளுக்கு மேலாகியும் பதிவு செய்யாமல் இருப்பது என்பது மிகவும் மந்தமாகவே இருந்து வருகிறது. மக்கள் இயக்கங்களின் பல்வேறு நிர்ப்பந்தங்களுக்குப் பின்னர் ஸ்கேன் மையங்களை மே 31, 1999க்குள் பதிவு செய்யும்படி தமிழக அரசு அறிவித்திருந்தது. தமிழகத்திலுள்ள 5000 ஸ்கேன் மையங்களில் 318 நிலையங்கள் மட்டுமே பதிவு செய்துள்ளன. 706 பதிவுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. இதுவரை பதிவு செய்யாமல் இருக்கும் 3500க்கும் மேற்பட்ட மரபணுகூடங்கள், ஸ்கேன் மையங்கள் தடை செய்யப்பட வேண்டும். (ஆதாரம்: பெண் கருக்கொலைக்கு எதிரான பிரச்சார அமைப்பின் துண்டறிக்கை – தமிழ்நாடு)

14. அனைத்து தனியார் மருத்துவமனைகளும், அரசுக்கும், பொதுமக்களுக்கும், பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பாலினம் குறித்த தகவல்களையும் கருக்கலைப்பு மற்றும் அவற்றின் பாலினம் குறித்த தகவல்களையும் மாத வாரியாக, அரசு அறிக்கை *(Notification)* வெளியிட வேண்டும்.

15. பெண் கருக்கொலை சட்டத்தினை மீறும் மருத்துவர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களின் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

16. ஆண் குழந்தை பிறப்பதற்கு முன்னுரிமை அளிக்கும் ஊடகச் சாதனங்களின் பிரச்சாரங்கள் தடுத்து நிறுத்தப்பட, மாநில அரசு பொதுமக்களிடம் இது தொடர்பான விழிப்புணர்வுப் பிரச்சாரத்தை மேற்கொள்ள வேண்டும்.

17. பெண்களின் வாழ்வுரிமையைப் பறிக்கும் கொடூரமான சிசுக்கொலை *(Infanticide)* தமிழகத்தில் சில மாவட்டங்களிலும் கிராமங்களிலும் பரவி வருகிறது. இக்கொடூரத்தை நிறுத்த சிசுக்கொலைத் தடுப்புச் சட்டத்தை முறையாக அமல்படுத்த வேண்டும். இது தொடர்பாக மாநில அரசு பொதுமக்களிடம் விழிப்புணர்வுப் பிரச்சாரத்தை மேற்கொள்ள வேண்டும்.

18. இக்கொலையில் ஈடுபடும் குற்றவாளிகளைத் தண்டிக்கும்போது இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 302–ம் பயன்படுத்தப்படுகிறது. அப்படி சட்டத்தை பயன்படுத்தி தண்டிக்கும் போது கொலையாளியைவிட சிசுக்கொலைக்குத் தூண்டுதலாக இருந்தவர்களையே *(Abettors)* தண்டிப்பதற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

19. வரதட்சணை தடுப்புச் சட்டம் 1961 ல் அமுலுக்கு வந்து 50 ஆண்டுகள் ஆகியும் இதுவரை வரதட்சணைக் கொடுமை முற்றிலும் குறையவில்லை. இதற்குச் சமூகம்தான் அடிப்படைக் காரணமாக இருப்பினும் இச்சட்டம் வலிமை இல்லாமல் இருப்பது வரதட்சணைக் கொடுமை மேலும் வலிமை பெறுவதற்கான சாத்தியக் கூறுகளை உருவாக்கி வருகிறது. இதைத் தடுப்பதற்கு மாநில அரசு, இது தொடர்பான வழக்குகள் வரும்போது காவல் துறையினர் வரதட்சணைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவுசெய்து பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு உரிய பாதுகாப்பும் நீதியும் வழங்க ஆவண செய்ய வேண்டும்.

20. வரதட்சணை தடுப்புச் சட்டத்தைத் திருத்தும்போது இக்குற்றங்கள் அரசுக்கு எதிரான குற்றங்களாகப் பாவிக்கப்பட்டு பிரிவு 3, 4 ஆனது இச்சட்டத்திலிருந்து எடுக்கப்பட்டு இந்திய தண்டனைச் சட்டத்திலும் குற்றவியல் நடைமுறைச் சட்டத்திலும் முறையான இடங்களில் சேர்க்கப்பட வேண்டும். சட்டத்தின் பிரிவு 2, 8 இந்திய தண்டனைச் சட்டத்திலும், குற்றவியல் நடைமுறைச் சட்டத்திலும் சேர்க்கப்படவேண்டும். பிரிவு 8(அ) ஆனது இந்திய சாட்சிய சட்டத்தில் முறையான இடத்தில் சேர்க்கப்பட வேண்டும்.

21. இச்சட்டத்தின்படி வரதட்சணை வாங்குவதும் கொடுப்பதும் தண்டனைக்கு உரியதாகும். வரதட்சணை கொடுப்பவர் சமூகத்தின் நிர்பந்தத்தினாலும், கட்டாயத்தினாலுமே கொடுக்கிறார். இவரையும் தண்டிப்பது நீதியாகாது. இவரையும் குற்றமிழைத்தவர்களாகச் சட்டத்தில் இணைத்திருப்பதும் சட்டத்தின் தோல்விக்கான காரணங்களின் ஒன்று. எனவே, இச்சட்டத்தின் உட்பிரிவு (3) ஐ சட்டத்திலிருந்து விலக்கு பெறும் பாதிக்கப்பட்ட நபர்களை விவரிக்கும் பிரிவான 7ல் சேர்க்க வேண்டும்.

22. வரதட்சணை வாங்குவதற்காகப் பேரம் பேசுவதும், அப்படிப்பட்ட பேரங்களில் பங்கேற்பதும் வரதட்சணை கேட்பது அல்லது வாங்குவதற்கு சமமாகவே பாவிக்கப்பட வேண்டும். இக்குற்றமானது பிடியாணை வேண்டாக் குற்றமாக மாற்றப்படவேண்டும்.

23. ஒரு திருமணமான பெண்ணை (மனைவியை) வரதட்சணைக் கேட்டு குரூரமாகச் சித்திரவதை செய்யும் கணவனுக்கோ அல்லது கணவரது உறவினருக்கோ 3 ஆண்டுகளிலிருந்து 7 ஆண்டுகள் வரை தண்டனை அளிக்கும்படி இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 498 ஆனது திருத்தப்படவேண்டும்.

24. வரதட்சணை குற்றங்கள் அல்லது வாங்குவது குறித்த தகவல் அளிப்பது பொதுமக்களின் கடமை என்கின்ற ரீதியில் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 39 ஆனது திருத்தப்படவேண்டும்.

25. இப்போது வரதட்சணைத் தடுப்புச் சட்டத்தின் பிரிவு 3 குறைந்த தண்டனையை அளிப்பதால் இந்தியத் தண்டனைச் சட்டத்தின் பிரிவு 498(அ) ஐ இதில் சேர்த்து அதிகபட்ச தண்டனையாக 10 ஆண்டுகள் அளிக்கப்பட உள்ளது. இந்தியத் தண்டனைச் சட்டத்தின் பிரிவு 53ன் படி ஆயுள் தண்டனை என்பது சில குறிப்பிட்ட காலத்திற்கு சிறைத்தண்டனை அளிப்பதிலிருந்து மாறுபட்டது என்று கூறுகிறது. அதற்கேற்றாற்போல் பிரிவு 304ஐ இந்தியத் தண்டனைச் சட்டத்தின் கீழ் வரதட்சணை மரணங்கள் என்ற புதிய பிரிவு சேர்க்கப்பட்டுள்ளது. எனினும், இப்பிரிவின் (2)ல் வரதட்சணை தடுப்புச் சட்டத்துடன் இணைந்து அமல்படுத்தப்படும் போது குற்றமிழைப்பவருக்குத் தண்டனை அளிப்பது ஆயுள் தண்டனை அல்லது 7 ஆண்டுகளிலிருந்து பத்து ஆண்டுகள் வரை என்று திருத்தப்படவேண்டும்.

26. இப்போதுள்ள நடைமுறைபோலன்றி, இந்து திருமணச் சட்டட்தின் 1955 கீழ் நடைபெறும் திருமணங்கள் அவசியம் பதிவு செய்யப்படுவதற்கேற்ப இச்சட்டமானது திருத்தப்படவேண்டும்.

27. வரதட்சணை தடுப்புச் சட்டத்தின் பிரிவு 8 (ஆ)ன் விதிகள் கடுமையாக அமல்படுத்தப்பட வேண்டும். அதற்காக ஆலோசனை வாரியங்களுக்கு பொறுப்பானவர்களாக முழுநேர வரதட்சணைத் தடுப்பு அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டும்.

## தேசிய மகளிர் ஆணையத்தின் பரிந்துரைகள்

பாலியல் பலாத்கார வழக்குகளின் விசாரணைகளில் மிக முக்கிய பரிந்துரைகளாகக் கீழ்க்கண்ட மாற்றங்கள் செய்யப்பட வேண்டும்.

1. பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட பெண்ணின் வாக்குமூலம் அல்லது சாட்சியமானது அவர் கடந்தகால பாலியல் நடத்தையைக் காரணம் காட்டி மறுக்கப்படுகிறது. இந்திய சாட்சியச் சட்டத்தின் பிரிவு 155(அ) ஆனது இதற்காகப் பயன்படுத்தப்படுகிறது. இப்பிரிவே நீக்கப்பட வேண்டும்.

2. பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு கொலை செய்யப்பட்ட பெண்ணின் உறவினர்கள் மரணம் அல்லது பலாத்காரம் நடந்த இடத்தை நேரில் சென்று பார்க்க அனுமதிக்க வேண்டும். எந்த ஒரு அதிகாரியும் என்ன காரணத்திற்காகவும் மேற்படி கோரிக்கையை நிராகரிக்கக்கூடாது.

3. ஒரு பெண் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டார் எனும் போது அவரை பெண் மருத்துவரே பரிசோதிக்க வேண்டும். அப்பெண் மருத்துவர் யார் எனத் தீர்மானிப்பதில் அப்பகுதிப் பெண்கள் அமைப்பு மற்றும் மனித உரிமை அமைப்புகளின் ஆலோசனையைப் பெற வேண்டும்.

4. பாதிக்கப்பட்டவர் 12 வயதிற்குட்பட்டவராக இருந்தால் அவருக்கு நடத்தப்படும் மருத்துவப் பரிசோதனையை அவர் வீட்டிலோ அல்லது அவர் விரும்பும் இடத்திலோ உறவினர் அல்லது நண்பர் முன்னிலையில் பெண் அதிகாரி அல்லது சமூகப் பணியாளர் ஒருவரால் பதிவு செய்யப்பட வேண்டும். இம்முறையை மீறுபவர்களுக்கு ஒரு ஆண்டு காலமாவது சிறைத்தண்டனை விதிக்க வேண்டும். இதே போன்று பாலியல் வன்முறையை மருத்துவ ரீதியாக பதிவு செய்யாத பதிவு பெற்ற மருத்துவருக்கும் தண்டனையை அளிக்க வேண்டும்.

5. பதிவு பெற்ற மருத்துவர் ஒருவரால் உடனடியாக பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்டவர் பரிசோதனை செய்யப்பட வேண்டும். அவருடைய அறிக்கையில் அவர் வந்தடைந்த முடிவுகளுக்கு தெளிவான காரணமும் பாதிக்கப்பட்டவரின் முகவரியும் அவரைக் கொண்டு வந்தவரின் முகவரியும் எழுதப்படவேண்டும். இப்பரிசோதனையை ரகசியமாக *(In camera)* மேற்கொள்ள வேண்டும்.

6. பெண்களை கேலி செய்வதை தடைச் செய்யும் சட்டம், பணியிடங்களில் பாலியல் தொந்தரவுக் குறித்து விசாகா நீதிமன்ற வழிகாட்டுதல்கள், குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம் போன்ற சிறப்பு சட்டங்களை பாலின புரிதலோடு முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும். இச்சட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டிய அதிகாரிகளுக்கு பாலின சமத்துவம் குறித்த பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்.

7. மேற்கண்ட கள ஆய்வுகளில் பத்திரிக்கை செய்திகளாக வெளிவந்துள்ள செய்திகள் பாதிக்கப்பட்ட பெண்களின் பாதிப்புகள் அனைத்தையும் பெண்களுடைய தவறுகளால் நடந்தவை போல சித்திரிக்கின்றன. ஆகவே பத்திரிக்கையாளர்கள் பெண்கள் மீதான வன்முறை குறித்த செய்திகள் வெளியிடும் போது பாலின சமத்துவ உணர்வுடன் வெளியிட வேண்டியது அவசியம். பெண்களை இழிவுப்படுத்துகின்ற வகையில் செய்திகளை பிரசுரிக்கும் பத்திரிக்கையாளர்கள் மீது பத்திரிக்கை நெறியின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

# வகுப்பறை வன்முறைகள்

## பள்ளி மாணவி விஷம் குடித்துத் தற்கொலை

நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம், தலைஞாயிறு, வானவன் மாதேவியில் வசித்து வரும் நாராயணசாமி என்பவரின் மகள் சாந்தப்பிரியா. இவர் வெள்ளப்பள்ளம் அரசு மேல்நிலைப்பள்ளியில் பன்னிரெண்டாம் வகுப்பு பயின்று வந்தார். வழக்கம்போல் பள்ளிக்குச் சென்ற சாந்தப்பிரியா மதியம் வயிற்று வலி என்று விடுப்பு எடுத்துக்கொண்டு வீட்டிற்குச் சென்றுள்ளார். சாந்தப்பிரியாவின் வீட்டில் விவசாயத்திற்காக வைக்கப்பட்டிருந்த என்டோசல்பான் பூச்சிக்கொல்லி மருந்தைக் குடித்துள்ளார். இதையறிந்த பெற்றோர் சாந்தப் பிரியவை நாகப்பட்டினம் அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றுள்ளனர். மருத்துவ மனைக்கு கொண்டு செல்லும் முன்பே சாந்தப்பிரியா இறந்துள்ளார். சக மாணவர்களிடம் விசாரித்தன் அடிப்படையில் பள்ளியில் ஆசிரியர்கள் திட்டியதாகக் கூறப்படுகிறது.

## பள்ளி ஆசிரியர் திட்டியதால் மனமுடைந்த மாணவர் தற்கொலை

காரைக்கால் மாவட்டம், நெருங்காடு, கொம்யூன் மேலகாசாகுடி, நடுத்தெருவை சேர்ந்தவர் தெட்சிணா மூர்த்தி என்பவரது மகன் நிவாசன். இவர் நெடுங்காடு டான்போஸ்கோ உயர்நிலைப்பள்ளியில் 10-ஆம் வகுப்பு பயின்று வந்துள்ளார். நிவாசனின் வகுப்பு ஆசிரியர் கணேசன் அவருடைய வீட்டிலேயே டியூசன் எடுத்துள்ளார். இந்த டீயூசனில் டான்போஸ்கோ பள்ளி மாணவர்கள் 40 பேர் படித்து வந்துள்ளனர். நிவாசனும் ஆசிரியர் கணேசனிடம் டியூசன் சென்றுள்ளார். இந்நிலையில் ஆசிரியர் கணேசன் டியூசனில் அடித்ததால் மனமுடைந்த நிவாசன் 02.01.2010 அன்று மாலை வீட்டின் பின்புறம் உள்ள பனைமர சாரத்தில் தூக்கிட்டுத் தொங்கியுள்ளார். இதைப் பார்த்த நிவாசின் பெரியம்மாவும், பெரியப்பாவும், அவரைத் தூக்கிலிருந்து இறக்கி, காரைக்கால் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றபோது வழியிலேயே நிவாசன் இறந்துள்ளார். அதன் பின்பு காரைக்கால் அரசு மருத்துவமனையில் பிரேதப் பரிசோதனை செய்யப்பட்டு உடல் அவரது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## மூன்று வயது சிறுமி விளையாடியதற்காகக் கம்பால் அடித்த ஆசிரியை

கடலூர் மாவட்டம், பண்ருட்டி தாலுகா, தாகூர் வீதியை சேர்ந்தவர் முஸ்தபா பராக் என்பவரின் மகள் தன்சிரா பெல்லா (3). இவள் புனித அன்னாள் மேல்நிலைப்பள்ளியில் எல்.கே.ஜி படித்து வருகிறாள். கடந்த 01.07.2010 அன்று தன்சிராபெல்லா பள்ளிக்கூடத்தில் விளையாடியுள்ளார். அதற்கு அவளுடைய வகுப்பு ஆசிரியை ரோசி என்பவர் தன்சிரா பெல்லாவைக் கம்பால் அடித்துள்ளார். மாணவி தன்சிராபெல்லாவின் அம்மா மதியம் குழந்தையை வீட்டிற்கு அழைத்துச் செல்ல பள்ளிக்குச் சென்றுள்ளார். அப்போது தன்சிரா பெல்லா அழுதுகொண்டு இருந்துள்ளார். ஏன் என்று கேட்டதற்கு ஆசிரியர் அடித்தாகக் கூறியுள்ளார். ஆகவே மாணவி தன்சிராபெல்லாவின் அப்பா மறுநாள் (02.07.2010) பள்ளித் தலைமையாசிரியரிடம் சென்று முறையிட்டுள்ளார். குழந்தையைப் பள்ளியில் சேர்க்க நன்கொடையாக அளித்த ரூ. 2,800/- பணத்தை திருப்பிக் கேட்டுள்ளார். நடந்த சம்பவத்திற்குத் தலைமை ஆசிரியர் மன்னிப்புக் கேட்டுள்ளார். நன்கொடை பணமும் திருப்பி அளிக்கப்பட்டுள்ளது. மாணவி தன்சிராபெல்லா வேறு பள்ளியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

## மாணவிகளைக் கழிவறையைச் சுத்தம் செய்ய கட்டாயப்படுத்திய ஆசிரியர்

இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம், கரையூர் யூனியன் நடுநிலைப்பள்ளியில் 8ஆம் வகுப்பு பயின்று வந்த மாணவிகள் தீபா (13) மற்றும் நம்புதேவி. இவர்களுடைய வகுப்பு ஆசிரியை ஷோபியா என்பவர் தீபா, நம்புதேவி ஆகிய இரு மாணவிகளையும் அழைத்துக் கழிவறையைச் சுத்தம் செய்ய வைத்துள்ளார். மாணவிகள் அன்று மாலை வீட்டிற்கு சென்று அவர்களது பெற்றோரிடம் இது குறித்து கூறி அழுதுள்ளனர். ஆகவே மாணவிகளின் பெற்றோர் மறுநாள் பள்ளிக்குச் சென்று தலைமையாசிரியரிடம் புகார் தெரிவித்துள்ளனர். கோவில் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளனர். அதன் அடிப்படையில் உதவி தொடக்க கல்வி அலுவலர், மாவட்ட கல்வி அலுவலர் ஆகியோர் விசாரணை செய்துள்ளனர். அப்போது அந்த அதிகாரிகள் ‘உங்கள் வீட்டுக் கழிவறை என்றால் நீங்கள் சுத்தம் செய்ய மாட்டீங்களா?‘ இந்த விசயத்தைப் பெரிதுபடுத்த வேண்டாம் என்று கூறியுள்ளனர். அதற்கு அப்பள்ளித் தலைமையாசிரியர் கண்டித்துள்ளார். ஆகவே கழிவறையைச் சுத்தம் செய்ய வற்புறுத்திய ஆசிரியை ஷோபியாவைத் தற்காலிகப் பணி நீக்கம் செய்துள்ளனர்.

## ஏழாம் வகுப்பில் தேர்ச்சி பெறாததால் மாணவன் தற்கொலை முயற்சி

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர், கலைஞர் நகரைச் சேர்ந்த கலிக் கண்ணன் என்பவரது மகன் துர்கைவேந்தன். இவர் திருப்பத்தூரில் உள்ள இராமகிருஷ்ணா மேல்நிலைப் பள்ளியில் 7-ஆம் வகுப்பு பயின்று வந்துள்ளார். அப்பள்ளி நிர்வாகம் துர்கைவேந்தனை 2009-2010ஆம் கல்வியாண்டில் முழு ஆண்டு தேர்வில் தேர்ச்சியடையவில்லை. பள்ளியில் இருந்து அனுப்பப்பட்ட தேர்ச்சி பெறவில்லை என்ற கடிதத்தைப் பார்த்தவுடன் துர்க்கை வேந்தன் மனமுடைந்து வீட்டு மாடியில் இருந்து குதித்து தற்கொலை செய்ய முயற்சித்துள்ளார்.

துர்க்கை வேந்தனுடைய அம்மா உடனடியாகத் தலையிட்டு தடுத்துள்ளார். துர்கைவேந்தனின் அப்பா கலிக்கண்ணன் கல்வி உரிமைச்சட்டம் 2009-ன் படி 7-ம் வகுப்பில் தோல்வியுறச் செய்தீர்கள் எனக் கேட்டபோது பள்ளி தலைமையாசியர் மாவட்டக் கல்வி அலுவரைச் சந்திக்குமாறு கூறியுள்ளார். மாவட்டக் கல்வி அதிகாரியும் முதன்மைக் கல்வி அதிகாரி யிடமிருந்து இது குறித்து எந்த அறிவிப்பும் வரவில்லை. ஆகவே மாணவனை தேர்ச்சியாக்க முடியாது என்று கூறியுள்ளார். கல்வி அதிகாரிகள் கல்வி உரிமைச் சட்டம் குறித்த விழிப்புணர்வு இல்லாமல் இருக்கிறார் என்பதைப் பார்க்க முடிந்தது. இவ்வழக்கு தேசிய குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் 2010-நவம்பரில் நடத்திய பொது விசாரணையில் விசாரிக்கப்பட்டு மாணவரை பள்ளியில் சேர்க்க பரிந்துரைக்கப்பட்டது.

## பள்ளி மாணவிகள், ஆசிரியைகளிடம் பள்ளி ஆசிரியர் பாலியல் தொந்தரவு

கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக் கோட்டை, ஜான் பிரிட்டோ மேல்நிலைப்பள்ளியில் ஏழாம் வகுப்பு பிரிவு வகுப்பு ஆசிரியர் உள்ளத்தரசு. இவர் அப்பள்ளியில் பயிலும் மாணவிகளிடமும் ஆசிரியைகளிடமும் பாலியல் தொந்தரவு செய்துள்ளார். அப்பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர் இந்துமதியை பாலியல் உறவுக்கு அழைத்துள்ளார். பள்ளி மாணவிகளிடம் செல்போனில் உள்ள ஆபாச படங்களைக் காண்பிப்பதும், மாணவிகளை வேண்டுமென்றே அடிப்பதும், அழுகின்ற மாணவிகளுக்கு முத்தம் கொடுப்பதும், மாணவிகளின் உடல்களில் அங்காங்கே தொடுவதுமான தொந்தரவுகளை செய்துள்ளார். இது குறித்து மாணவிகள் அளித்த தகவலின் படி 22.02.2010 அன்று கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியருக்கு புகார் அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் அவர் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மக்கள் கண்காணிப்பகத்தின் உண்மையறியும் குழு அந்த ஆசிரியரிடம் விசாரித்த போது உண்மையை ஒப்புக் கொண்டதோடு இனிமேல் செய்ய மாட்டேன் என்று மன்னிப்பு கோரியுள்ளார். ஆனாலும் அவர் தொடர்ந்து இச்செயலை செய்து வந்துள்ளார். ஆகவே இது குறித்து உயர் கல்வி அதிகாரிகளுக்கு புகார் மனுக்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## வெயிலில் முழங்காலிடச் செய்ததால் மயங்கி விழுந்த மாணவி

சேலம் மாவட்டம், ஏற்காடு அடிவாரம் பகுதியில் வசிக்கும் தலித் சமூகத்தை சேர்ந்த காமராஜ் என்பவரது மகள் கிரேஸ் அரசுப்பள்ளியில் 10-ஆம் வகுப்பு பயின்று வந்துள்ளார். கிரேஸ் பள்ளிக்கு ஒரு நாள் விடுப்பு எடுத்துள்ளார். மறுநாள் பள்ளிக்குச் செல்லும் போது கிரேஸை ஆசிரியர் முழங்காலிடச் சொல்லியுள்ளார். வெகுநேரம் வெயிலில் முழங்காலிட்டி ருந்ததால் கிரேஸ் மயக்கமடைந்துள்ளார் அதன் பின்பு மாணவி கிரேஸை அரசு மருத்துவ மனைக்கு அழைத்துச் சென்று சிகிச்சையளித்துள்ளனர். மாணவி கிரேஸின் பெற்றோர் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளனர். ஆனால் பள்ளித் தலைமை ஆசிரியர் ரூ. 1,25,000/- கொடுத்து வழக்கை வாபஸ் பெறச் செய்துள்ளார்.

## சிறுமியை தலைமை ஆசிரியர் கொடூரமாகப் பாலியல் பலாத்காரம்

தர்மபுரி மாவட்டம், மொரப்பூர் ஊராட்சி ஒன்றியம், ஒடசல்பட்டியை சேர்ந்த ராம கிருஷ்ணன் என்பவரது மகள் ஜெயந்தி (8). இவர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் 3-ஆம் வகுப்பு பயின்று வந்துள்ளார். இப்பள்ளியின் தலைமை ஆசிரியர் ஜெயராமன் (57) இவர் 02.04.2010 அன்று மதிய உணவு இடைவேளையின்போது சிறுமி ஜெயந்தியை அழைத்துச் சென்று பாலியல் உறவில் ஈடுபட்டுள்ளார். அதனால் சிறுமியின் பிறப்புறுப்பில் காயங்கள் ஏற்பட்டுள்ளது. வலி தாங்க முடியாத சிறுமி பெற்றோரிடம் முறையிட்டு கடத்தூர் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டது. சிறுமிக்கு மருத்துவ பரிசோதனை செய்து பாலியல் பலாத்காரம் உறுதி செய்யப்பட்டு தலைமை ஆசிரியர் சேலம் மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இவ்வழக்கு சம்மந்தமாக பாதிக்கப்பட்ட ஜெயந்தியின் பெற்றோர் வழக்கை தொடராமல் வழக்கில் சமரசமாகி விட்டனர்.

## மாணவனைச் செருப்புக் காலால் உதைத்த ஆசிரியர்

திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் காலனியில் வசித்து வரும் தமிழ்ச்செல்வன் என்பவரது மகன் சத்ரபதி. இவர் கண்ணனூர் உள்ள அரசு உயர்நிலைப்பள்ளியில் படித்து வருகிறார். ஆசிரியர் வகுப்பில் பாடம் நடத்தியபோது சத்ரபதி சேட்டை செய்துக் கொண்டிருந் ததால் ஆசிரியர் கோபடைந்து செருப்புக் காலால் சத்ரபதியை எட்டி உதைத்துள்ளார். அதனால் மாணவர் சத்ரபதிக்கு காயம் ஏற்பட்டுள்ளது. அவருக்கு அரசு மருத்துவமனையில் சிகிச்சையளிக்கப்பட்டது. சத்ரபதியின் அப்பா கூலி வேலை செய்பவர் என்பதால் ஆசிரியர் அவரிடம் மன்னிப்பு கேட்டும் பணம் கொடுத்தும் வழக்கு தொடாராமல் சமரசம் ஆகியுள்ளார்.

## திருட்டுப் பட்டம் கட்டியதால் மாணவி மனமுடைந்து தற்கொலை

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு, கீழப்புலியூர் பகுதியில் வசிக்கும் கணேசன் என்பவரது மகள் கிருத்திகா (12). இவர் திருவையாறு அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 7ஆம் வகுப்பு பயின்று வந்துள்ளார். பள்ளியில் பொருட்கள் திருட்டு போயுள்ளது. மற்ற மாணவிகள் பொருட்களைத் கிருத்திகா தான் திருடியது என்று கூறியுள்ளனர். இதனால் ஆசிரியர் மற்ற மாணவிகள் மத்தியில் கிருத்திகாவை திட்டியுள்ளார். இச்சம்பவத்தில் மன உளைச்சலுக்கு ஆளான கிருத்திகா வீட்டிற்குச் சென்று தற்கொலை செய்துள்ளார்.

## ஆதி திராவிடர் நலத்துறை விடுதி கூரை இடிந்து மாணவர்கள் காயம்

திருச்சி மாவட்டம், ரேஸ்கோர்ஸ் சாலையில் அரசு ஆதி திராவிடர் விடுதி உள்ளது. இந்த விடுதியில் 24.09.2009 அன்று மேற்கூரை இடிந்து விழுந்ததில் 3 மாணவர்கள் காயமடைந் துள்ளனர். இதனால் பாதிக்கப்பட்ட விடுதி மாணவர்கள் சாலை மறியலில் ஈடுபட்டுள்ளனர். மறியலில் ஈடுபட்ட மாணவர்கள் மீது காவல் துறையினர் தடியடி நடத்தி கூட்டத்தைக் கலைக்க முயற்சித்துள்ளனர். இத்தகவலை அறிந்து மாவட்ட ஆட்சியர் திரு. சவுண்டையா அவர்கள் சம்பவ இடத்தை நேரடியாகப் பார்வையிட்டு அனைத்து வசதிகளையும் செய்து தர உத்தரவிட்டுள்ளார்.

## ஆசிரியர் அடித்ததால் மாணவர் தூக்கிட்டுத் தற்கொலை

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி கீரமங்கலம் அரசு நடுநிலைப்பள்ளியில் பயின்று வந்த மாணவர் ராம். இவர் பள்ளிக்கு ஒழுங்காகச் செல்லாததாலும், சரியாகப் படிக்காததாலும் ஆசிரியர் அடித்துள்ளார். இதனால் மன உளைச்சலுக்கு ஆளாகி மரத்தில் தூக்குப்போட்டுத் தற்கொலை செய்துள்ளார்.

## தேர்வு அறையில் பேசிக் கொண்டிருந்த மாணவனைப் பிரம்பால் அடித்த ஆசிரியர்

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு, ராயர் தெருவில் வசித்து வரும் ஞானப்பிரகாசம் என்பவரது மகன் தெய்வராசு. இவர் ஒரத்தராடு அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் மேல்நிலை இரண்டாமாண்டு பயின்று வந்துள்ளார். கடந்த 28.01.2010 அன்று பள்ளியில் மாதிரித் தேர்வு நடைபெற்றுள்ளது. அப்போது தெய்வராசு சக மாணவனிடம் பேசியுள்ளார். அதைப் பார்த்த தேர்வு அறைப் பொறுப்பாளர் ஆசிரியர் ஜெயமணி மாணவர் தெய்வராசுவை பிரம்பால் காலில் அடித்துள்ளார். அப்போது தெய்வராசு அந்த அடியைத் தடுக்கவே பிரம்படி கண்ணில் விழுந்தது. அதனால் தெய்வராசுவின் கண் சிவந்து இரத்தம் கட்டி வலி ஏற்பட்டுள்ளது. மற்ற சக மாணவர்கள் தெய்வராசுவை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்ற சிகிச்சையளித்துள்ளனர். மாணவனை அடித்த ஆசிரியர் ஜெயமணி அவர்களிடம் மன்னிப்புக் கேட்டுள்ளார். அதனால் பாதிப்பு ஏற்படுத்திய ஆசிரியர் மீது வழக்கு எதுவும் பதிவு செய்யவில்லை.

## மாணவர்களைத் தோப்புக்கரணம் போடச் சொல்லி சித்திரவதை

திருச்சி மாவட்டம், துறையூர், பெருமாள்பட்டியில் உள்ள ஆர்.சி. நடுநிலைப்பள்ளியில் கடந்த 26.08.2009 அன்று தலைமையாசிரியர் 8-ஆம் வகுப்பு வகுப்பறைக்குள் சென்றுள்ளார். அப்போது மாணவர்கள் எழுந்து வணக்கம் சொல்லாததால் தலைமையாசிரியர் மிகவும் கோபமடைந்துள்ளார். ஆகவே வணக்கம் சொல்லாத காரணத்தால் மாணவர்களைத் தோப்பு கரணம் போடச் சொல்லித் தண்டனை வழங்கியுள்ளார்.

## தேர்வில் தேர்ச்சி பெறாததால் இளம்பெண் தற்கொலை

திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் குணசீலம் தெற்குத் தெருவில் வசித்து வந்தவர் கங்காதேவி இவர் ஆசிரியர் பயிற்சி வகுப்பில் பயின்று வந்துள்ளார். ஆசிரியர் பயிற்சி வகுப்பில் தேர்வு நடைபெற்றுள்ளது. அதில் கங்காதேவி தேர்ச்சி பெறவில்லை. அதனால் மன உளைச்சலுக்கு ஆளான கங்காதேவி தன் உடலில் தீ வைத்துத் தற்கொலை செய்துள்ளார்.

## பள்ளி மாணவி தீக்குளித்து சாவு

திண்டுக்கல் மாவட்டம், குமரன் திருநகரில் உள்ள குறிஞ்சி நகரைச் சேர்ந்தவர் ராஜ லெட்சுமி என்பவரின் மகள் சரண்யா (13) நீதிமன்றம் எதிர்புறம் உள்ள பள்ளியில் ஜீலை மாதம் நடைபெற்ற தேர்வின் மதிப்பெண் பட்டியல் கொடுக்கப்பட்ட போது சரண்யா 3 பாடங் களில் தேர்ச்சி பெறவில்லை என்பதால் ஆசிரியர் திட்டியுள்ளார். சரண்யா வீட்டிற்குச் சென்று அவரது அப்பாவிடம் மதிப்பெண் பட்டியலைக் கொடுத்த போது சரண்யாவின் அப்பாவும் திட்டி யுள்ளார் அதன் பின்பு வேலை செய்வதற்காக சரண்யாவின் பெற்றோர் வெளியில் சென்ற வுடன் சரண்யா தன்னுடன் வீட்டிலிருந்த தனது தங்கையை விளையாட செல்லுமாறு அனுப்பி விட்டு வீட்டின் உள்புறம் தாழிட்டு சரண்யாவின் உடலில் தீயீட்டுத் தற்கொலை செய்துக் கொண்டாள் விளையாடச் சென்ற தங்கை வீட்டிற்கு வந்த போது வீடு பூட்டியிருந்தால் அவளது பாட்டியுடன் வந்து வீட்டை உடைத்துப் பார்த்துள்ளனர் இது குறித்து திண்டுக்கல் வடக்கு காவல் நிலையத்தில் புகார் செய்யப்பட்டுள்ளது.

## ஒய்வு பெற்ற தலைமை ஆசிரியர் சிறுமியிடம் பாலியல் தொந்தரவு

திருச்சி மாவட்டம், திருவறும்பூர், அண்ணாநகர் நவல்பட்டு ஞானசேகரன் என்பவரது மகள் எல்.கே.ஜி பயின்று வந்துள்ளார் (மாணவியின் பெற்றோர் கேட்டு கொண்டதால் பெயர் வெளியிடவில்லை) அதே பகுதியைச் சேர்ந்த ஒய்வு பெற்ற தலைமையாசிரியர் ஞானசேக ரனின் மகள் அவரது வீட்டில் டீயூசன் எடுத்துள்ளார். அப்போது டியூசனுக்கு செல்லும் சிறுமி களிடம் அந்த ஆசிரியர் பாலியல் தொந்தரவுகள் செய்துள்ளார். இது குறித்து மாணவிகள் அவர்களுடைய பெற்றோர்களிடம் கூறியதால் ஞானசேகரன் மீது நவல்பட்டு காவல் நிலையத்தில் புகார் செய்துள்ளனர்.

## பள்ளி மாணவியை வெயிலில் நிற்க வைத்து சித்திரவதை

நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், சந்தானம் தெருவில் வசித்து வரும் தமிழ் செல்வன் என்பவரது மகள் தாட்சாயிணி (15) இவர் நீர்முளை என்ற ஊரில் உள்ள புனித சவேரியர் மேல்நிலைப்பள்ளியில் பத்தாம் வகுப்பு பயின்று வந்துள்ளார். இப்பள்ளியின் தலைமையாசிரியர் ஆனந்த் அமிர்தராஜ் மாணவர்கள் விடுப்பு கடிதம் கொடுத்து விடுமுறைக் கேட்டால் கொடுப்பதில்லை. தாட்சாயினி உள்ளிட்ட மாணவ, மாணவிகள் 20 பேரை மட்டும் தனியாக விளையாட்டு மைதானத்தில் அமர வைத்துப் பாடம் நடத்தியுள்ளனர் மற்றொரு பிரிவு மாணவ, மாணவிகளை வகுப்பறையில் வைத்து பாடம் நடத்தியுள்ளனர். கடந்த 16.01.2010 அன்று பொங்கல் விழாவிற்காக விடுப்புக் கடிதம் கொடுக்காமல் தாட்சாயிணி விடுப்பு எடுத்துள்ளார் அதனால் பள்ளித் தலைமை ஆசிரியர் ஆனந்த் அமிர்தராஜ் 18.01.2010-ம் தேதியன்று தாட்சாயிணி பள்ளிக்கு சென்ற போது 15 நாட்களாக தாட்சா யிணியை வகுப்பறைக்கு வெளியில் நிற்க வைத்து சித்திரவதை செய்துள்ளனர். இந்த பிரச் சினை தொடர்பாக தாட்சாயிணியின் பெற்றோர் பள்ளிக்குச் சென்று தலைமை யாசிரியிடம் கேட்டபோது இது போன்ற சம்பவம் இனி நடக்காது என்று மன்னிப்புக் கேட்டுள்ளார் ஆகவே இது குறித்துப் பாதிக்கப்பட்டவர் தரப்பில் மேல் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை.

## தேர்வில் தேர்ச்சி பெறாததால் மாணவி தூக்கிட்டுத் தற்கொலை

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம், சஞ்சீவிராயன் பேட்டை பகுதியில் வசித்து வருபவர் அமுதாவின் மகள் இந்துமதி (13) இந்துமதி திண்டிவனத்தில் உள்ள அரசு உதவி பெறும் புனித பிலோமினாள் மேல்நிலைப்பள்ளியில் 6-ம் வகுப்பிலிருந்து பயின்று வந்துள்ளாள். இந்நிலையில் 2010-ம் ஆண்டு இந்துமதி 7-ஆம் ஆண்டுத் தேர்வு எழுதியுள்ளாள். அத்தேர்வின் தேர்ச்சி விபரம் 10.05.2010 அன்று கடிதம் மூலம் இந்துமதியின் வீட்டிற்கு அனுப்பப்பட்டிருந்து அப்போது அமுதாவும் அவருடைய கணவரும் வீட்டில் இல்லை இந்துமதியும் அவருடைய இளைய சகோதரர்கள் மட்டும் வீட்டில் இருந்துள்ளனர். அப்போது இந்துமதியின் தலைமையாசிரியரிடமிருந்து அவரின் பெற்றோருக்கு அனுப்பிய கடிதத்தை இந்து மதி படித்தார். இந்தக் கடிதத்தில் தங்கள் மகள் 5 பாடங்களிலும் தேர்ச்சி பெற வில்லை. அதனால் டி.சி.யை பெற்று செல்லுமாறு எழுதப்பட்டிருந்தது. இக்கடிதத்தைப் படித்த இந்துமதி மன உளைச்சலுக்கு ஆளாகி வீட்டுக் கதவை தாளிட்டுக் கொண்டு தலைக்கு அணியும் ரிப்பன்களை கொண்டு தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இந்துமதியின் தம்பி மற்றும் அருகாமை வீட்டார் கதவை தட்டி திறக்காத நிலையில் கடப்பாறையில் கதவை உடைத்து இந்துமதியின் உடலைத் தூக்கில் இருந்து இறக்கியுள்ளனர். இத்தகவல் இந்துமதியின் பெற்றோர் உடனடியாக வீட்டிற்குச் சென்றுள்ளனர். பெண் பிள்ளை என்பதால் காவல் துறையினருக்குத் தகவல் சொல்லாமல் உறவினர்களுக்கு மட்டும் தகவல் அளித்து இந்துமதியின் பிரேதத்தை எரித்துள்ளனர். இந்துமதியின் தாயார் அமுதா பள்ளியிலிருந்து அனுப்பப்பட்ட கடிதத்தால் தான் இந்துமதி இறந்துள்ளார். என்பதால் புனித பிளோமினாஸ் பள்ளி 02.06.2010 திறக்கப்பட்டவுடன் 07.06.2010-ல் அமுதா அவரது உறவினருடன் சென்று தலைமையாசிரியரை சந்தித்துள்ளார். தலைமையாசிரியர் சந்திக்க மறுத்துள்ளார். புனித பிளோமினாஸ் மேல்நிலைப்பள்ளியில் குழந்தைகளின் இலவச கட்டாய கல்வி உரிமைச் சட்டத்தை சிறிதளவும் கடைபிடிக்காமல் 2010-ம் ஆண்டு மட்டும் 8-ம் வகுப்பு வரை பயின்ற மொத்தம் 30 மாணவர்களைத் தேர்ச்சியாக்காமல் பள்ளியிலிருந்து விலக்கியுள்ளனர். பள்ளியின் இத்தகைய நடவடிக்கையே மாணவர் இந்துமதியின் இறப்புக்குச் காரணமாக அமைந்தது ஆனாலும் பள்ளி நிர்வாகம் இது குறித்து சிறிதும் சலனப்படவில்லை எந்த வகையிலும் பொறுப்பேற்கத் தயாராகவும் இல்லை.

## தாழ்த்தப்பட்ட பள்ளி மாணவனைச் சக மாணவர்கள் சாதிய ரீதியாகத் தாக்குதல்

சிவகங்கை மாவட்டம், இளையான்குடி, கண்ணமங்கலம், தேவாத்தக்குடி பகுதியில் வசித்து வருகின்ற முனியாண்டி என்பவரது மகன் சதீஷ் (17) . இவர் தாழ்த்தப்பட்ட பள்ளர் சமூகத்தை சேர்ந்தவர் இவர் மில்லில் ஆதி திராவிட நலத்துறைப் பள்ளியில் பன்னிரெண்டாம் வகுப்பு பயின்று வந்துள்ளார். அங்குள்ள ஆதி திராவிட நலத்துறை விடுதியில் தங்கி பள்ளிக்குச் சென்று வந்துள்ளார். சதீஷ் தங்கியுள்ள அறையில் மானாமதுரை நாடார் சாதியைச் சேர்ந்த முத்துக்குமார் என்பவரும் தங்கி பயின்று வந்துள்ளார். விடுதியில் தங்கியிருப்பவர்கள்

அவர்களுடைய அறையை ஒரு நாளைக்கு ஒரு மாணவர் சுத்தம் செய்ய வேண்டும் ஆனால் நாடார் சாதியைச் சேர்ந்த முத்துக்குமார் அறையை சுத்தம் செய்வதற்கு தொடர்ந்து மறுப்பு தெரிவித்துள்ளனர். மாணவர் சதீஷ் முத்துக்குமாரை அறையை சுத்தம் செய்யுமாறு கூறியதால் அவர் மீது கோபடைந்துள்ளார். இந்நிலையில் 08.01.2010 அன்று மாலை சுமார் 4 மணியளவில் சதீஷ் கழிப்பறைக்கு சென்ற போது முத்துக்குமார் மானாமதுரை பள்ளியில் +1 பயிலும் அவரது நண்பர்களுடன் சென்று கத்தி, சைக்கிள் செயின், உருட்டுக் கம்பி போன்ற ஆயுதங்களைக் கொண்டு அவர்மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். இதை பார்த்த மற்ற மாணவர்கள் பயந்து ஒடியுள்ளனர். மாணவர் சதீஷின் அலறல் சத்தம் கேட்டு பள்ளியில் உள்ள மாணவர்கள், கிராமமக்கள் கூடுவதை அறிந்து சம்பவ இடத்திற்கு சென்றுள்ளார். அனைவரும் தப்பித்து ஒடியுள்ளனர். அருளானந்தம், துரைபாண்டி ஆகிய இரண்டு நபர்களை மட்டும் பொது மக்கள் பிடித்துள்ளனர். காயம்பட்ட சதீஷ் மற்றும் பிடிப்பட்ட அருளானந்தம் துரைப்பாண்டி ஆகியோரை சிப்காட் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றுள்ளனர். அங்கு பாதிக்கப்பட்ட மாணவர் சதீஷ் ஒரு புகார் மனுவும் பள்ளியின் உதவி தலைமை ஆசிரியர், சின்னம்மாள் அவர்கள் ஒரு புகார் மனுவும், பொதுமக்கள் சார்பாக ஒரு புகார் மனுவும் கொடுக்கப்பட்டது ஆனால் தாக்குதல் நடத்தியவர்கள் இந்து சேர்வை சாதியினர் என்பதால் அவர்களுடைய உறவினர்கள் ஆளுங்கட்சியனராக இருப்பதாலும் காவல் நிலையத்தில் மிரட்டி வழக்குப் பதிவு செய்ய விடாமல் தடுத்துள்ளனர். பாதிக்கப்பட்ட சதீஷீக்கு தலையின் பின் பக்கம் கத்திக் குத்தும் வலது கையில் மோதிர விரலில் காயமும் நெஞ்சு எலும்பில் உடல் முழுவதும் இரத்தக் கட்டாகவும் ஊமைக் காயங்களாகவும் ஏற்பட்டுள்ளது. சதீஷின் தலையில் இருந்து இரத்தம் தொடர்ந்து வந்ததால் காவல் நிலையத்தில் மெடிக்கல் மெமோ கொடுத்து மானாமதுரை அரசு மருத்துவமனையில் சேர்த்துள்ளனர். தலையில் காயம் அதிகமாக இருந்ததால் மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனையில் உள் நோயாளியாகச் சேர்த்து ஸ்கேன்-எக்ஸ்ரே எடுத்து சிகிச்சை அளித்துள்ளனர். காவல் துணைக்காணிப்பாளர் பாதிப்பு ஏற்படுத்தியவருக்கு ஆதரவாக செயல்பட்டு மாணவர் சுரேஷை மிரட்டி வழக்கை வாபஸ் பெறச் செய்துள்ளார்.

## சத்துணவு சாப்பிட்ட பள்ளிக் குழந்தைகள் வாந்தி, மயக்கம்

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம், மேலப்பனையூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் 5-ஆம் வகுப்பு வரை மாணவர்கள் பயின்று வருகின்றனர். கடந்த ஏப்ரல் 13, 2010 அன்று மதிய உணவு சாப்பிட்ட 7 குழந்தைகளுக்கு மாலை 4 மணியளவில் திடீரென வாந்தி, மயக்கம் ஏற்பட்டுள்ளது. உடனடியாகப் பாதிக்கப்பட்ட மாணவர்களைஅரசு பேருந்தில் ஏற்றி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அழைத்துச் சென்றுள்ளனர். அங்கு மருத்துவர்கள், மருந்து இல்லாததால் புதுக்கோட்டை அரசு மருத்துவமனையில் அனுமதித்து சிகிச்சையளித்துள்ளனர். புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் சுகந்தி, சுகாதார துணை இயக்குனர் உமாதேவி, திருமயம் தாசில்தார் உள்ளிட்டோர் பாதிக்கப்பட்ட மாணவர்களை நேரடியாகச் சென்று சந்தித்துள்ளனர்.

## பள்ளி மாணவி லீனா தற்கொலை

வேலூர் மாவட்டம், ஆற்காடு வட்டம், கொல்லப்பாளையம் பகுதியை சேர்ந்தவர் ஜெயராஜ். இவர் மகள் லீனா (15) இராணிப்பேட்டை காரைப் பகுதியில் உள்ள அரசு ஆதிதிராவிடர் மேல்நிலைப்பள்ளியில் 10ஆம் வகுப்பு படித்து வந்துள்ளார். கடந்த 30.08.2010அன்று லீனா பள்ளிக்குச் செல்ல விருப்பமில்லாமல் வீட்டிலேயே இருந்துள்ளார். வீட்டில் அந்த சமயம் யாரும் இல்லை. வாட்ச்மேன் வேலைக்கு சென்றுவிட்டு வீட்டிற்கு வந்த ஜெயராஜ் லீனாவை ஏன் பள்ளிக்குப் போகவில்லை என்று கேட்டு கண்டிப்பு செய்துவிட்டு கோபமாக வீட்டை விட்டு வெளியே சென்றுள்ளார். தந்தை கண்டித்து பேசியதால் மனமுடைந்த லீனா, வீட்டில் தாழ்ப்பாள் போட்டுக் கொண்டு புடவை துணியால் மின்விசிறியில் தூக்குபோட்டுத் தற்கொலை செய்துக் கொண்டு உள்ளார்.

## பள்ளி மாணவி கலா மீது ஈவ்டீசிங்

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், சொரக் கொளத்தூர் கிராமத்தைச் சேர்ந்தவர்கள், ஜெகதா-சுப்பிரமணி தம்பதியினர் கூலி வேலை செய்து வந்துள்ளனர். இவர்களுடைய மகள் கலா அதே பகுதியில் உள்ள அரசு பள்ளியில் 12ஆம் வகுப்பு படித்து வந்துள்ளார். அதே பகுதியை சேர்ந்த சில இளைஞர்கள் கலா பள்ளிக்குப் போகும் போதும், வரும் போதும் கிண்டல் செய்துள்ளனர். கடந்த 24.09.2009 அன்று மாணவி கலா வழக்கம் போல் பள்ளிக்கு சென்று வீடு திரும்பி உள்ளார். வரும் வழியில் அதே பகுதியைச் சேர்ந்த சிவக்குமார், ராம்குமார், ஜெய்பிரகாஷ், வினோத்குமார் ஆகிய இளைஞர்கள் ஆபாசமாக கிண்டல் செய்து கலாவின் துப்பபட்டாவை பிடித்து இழுத்து ஈவ்டீங் செய்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக கலசப்பாக்கம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்து, விசாரணை நடைபெற்றது.

## புத்தகத்தை மாற்றி வாங்கியதால் மாணவியை அடித்த ஆசிரியர்

வேலூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், கோவிந்தாபுரம் பகுதியைச் சேர்ந்தவர் சுதர்சன் இவரது மகள் நோபல் சௌரியா அதே பகுதியில் உள்ள டி.வி.கே.வி. உயர்நிலைப்பள்ளியில் 7 ஆம் வகுப்பில் வந்து உள்ளார். இந்து ஆதிதிராவிடர் சமூகத்தைச் சேர்ந்தவர். கடந்த 19.08.2010 அன்று பள்ளி ஆசிரியை ஜோதி என்பவர் பிள்ளைகளை நோட்டுப் புத்தகம் வாங்கி வந்துள்ளனரா என்று பார்வையிட்டு வந்துள்ளார். அப்போது பள்ளி மாணவி நோபல் சௌரியா நோட்டுப் புத்தகத்தை மாற்றி வாங்கியதால் ஆத்திரமடைந்த ஆசிரியை ஜோதி மாணவியை அடித்துள்ளார். இதனால் மாணவிக்கு காய்ச்சல் ஏற்பட்டு வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் அனுமதித்து சிகிச்சை அளித்து வந்தனர். அதன்பின்பு நோபல் சௌரியா பெற்றோர் ஆசிரியை மீது வாணியம்பாடி நகர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளனர். ஆனால் பள்ளி நிர்வாகம் சமசரம் செய்து வழக்கு முடித்துக்கொள்ளப்பட்டுள்ளது.

## ஆசிரியைத் தாக்கியதில் மாணவன் காயம்

கோவை மாவட்டம், கோவை தாலுகா, கவுண்டம்பாளையம் டி.வி.எஸ். நகரில் உள்ள அவிலா கான்வெண்ட் பள்ளியில் 3ம் வகுப்பு படித்துவரும் மாணவன் பாலகுரு. கடந்த 26.07.2011 அன்று வகுப்பில் குறும்பு செய்துள்ளான். எனவே மாணவன் பாலகுருவை வகுப்பு ஆசிரியை அம்சவள்ளி கம்பால் அடித்ததில் மாணவன் கையில் வீக்கமும் காய்ச்சலும் ஏற்பட்டுள்ளது. பின்னர் வீடு திரும்பியவுடன் மாணவன் வீட்டில் பெற்றோர்களிடம் நடந்தவை களைக் கூறியுள்ளான். உடனே பாலகுருவைத் தனியார் மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை அளித்துள்ளனர்.

## மாணவர்களுக்கு மாற்றுச் சான்றிதழ் வழங்க மறுத்த கல்லூரி நிர்வாகம்

திருச்சி மாவட்டம், கே.கே.நகரில் ஜெய்சாய் கல்வியியல் கல்லூரியில் திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த மணிக்குமார், ஏ.செல்வகுமார், டி.செல்வகுமார், ஆர்.கல்யாணம், என்.ராமச்சந்திரன், எம்.ராஜா ஆகியோர் கடந்த 2008ம் ஆண்டு அசல் சான்றிதழ் மற்றும் 85 ரூபாய் செலுத்தி கல்லூரியில் சேர்ந்துள்ளனர். அவர்களுக்கு நிர்வாகம் பணம் கட்டிய தற்கான எவ்வித ரசீதும் தரவில்லை. மேற்கண்ட மாணவர்கள் பரீட்சை எழுதவில்லை. அதனால் நிர்வாகத்திடம் பணம் மற்றும் மாற்றுச் சான்றிதழைக் கேட்டதற்கு பணம் அதிகமாகத் தந்தால்தான் மாற்று சான்றிதழ் தருவதாக மிரட்டியுள்ளனர். அதன் அடிப்படையில் மனித உரிமைக்கான குடிமக்கள் இயக்கம் தலையிட்டு மாவட்ட ஆட்சித் தலைவரைச் சந்தித்துப் புகார் கொடுத்ததின் அடிப்படையில் மாணவர்களுக்கு மாற்று சான்றிதழ் திருப்பிக் கொடுக்கப்பட்டது.

## ஈ.வெ.ரா. அரசு மேல்நிலைப் பள்ளியில் மாணவர்களைக் கழிவறையைச் சுத்தம் செய்யச் சொல்லி வற்புறுத்தல்

கரூர் மாவட்டம், கரூர் வட்டம், நொய்யலில் உள்ள ஈ.வெ.ரா. அரசு மேல்நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியை திருமதி ஜெயலட்சுமி விடுதியில் தங்கிப் படிக்கும் தலித் மாணவர்களைக் கழிப்பறை சுட்தம் செய்யச் சொல்லி நிர்பந்தித்துள்ளார். மறுப்பு தெரிவித்த த. தினேஷ்குமார் (12ம் வகுப்பு), வெ. சக்தி (10ம் வகுப்பு) ரஞ்சித் (8ம் வகுப்பு) ஆகியோரைச் சாதியைச் சொல்லி திட்டியுள்ளார். இது குறித்து கல்வி அதிகாரிகளுக்குப் புகார் கொடுத்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதன்பிறகு சென்னையில் நடந்த தேசிய குழந்தைகள் ஆணையத்தின் பொதுவிசாரணைக்கு இவ்வழக்கு மக்கள் கண்காணிப்பகம் சார்பாக விசாரணைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. இவ்வழக்கை விசாரணை செய்த ஆணையம் இவ்வழக்கு குறித்த பரிந்துரைகளை அரசுக்கு அளித்துள்ளது.

## பள்ளி மாணவன் ஆசிரியரால் தாக்கப்பட்ட சம்பவம்

திருச்சி மாவட்டம், செல்வராஜ் மகன் கிருஷ்ணமூர்த்தி ஆதி திராவிடர் நல மேல்நிலைப் பள்ளியில் 8ஆம் வகுப்பு படித்து வந்துள்ளார். வகுப்பு ஆசிரியர் திருமதி வாசுகி அவர்கள் கடந்த 18.10.2010 அன்று பிரம்பால் தலையில் அடித்ததால் மேற்படி மாணவனுக்குத்

தலையில் கடுமையான காயங்கள் ஏற்பட்டதால் உடல் நிலை பாதிக்கப்பட்டு மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளார். இப்புகார் குறித்து திருச்சி கண்டோன் மெண்ட் காவல் சார்பு ஆய்வாளர் கலையரசி விசாரணை செய்துள்ளார்.

## பள்ளி மாணவன் மர்மமான முறையில் தற்கொலை

நீலகிரி மாவட்டம், பந்தலூர் வட்டம், கொள்ளச்சால் அஞ்சல், கப்பாலா பகுதியைச் சேர்ந்த கே.ஜி. பரதன் என்பவரின் மகன் ஷியாம் கோவிந்த், கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், காரமடையில் உள்ள வித்யா விகாஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் +2 படித்து வந்தார். கடந்த 27.10.2010 அன்று காலை 11.00 மணியளவில் கண் வலிப்பதாகக் கூறி விடுதிக்குச் சென்றவர் அறையில் தூக்குப்போட்டு தற்கொலை செய்துகொண்டார். விடுதிக் காப்பாளர் கதவு மூடியிருப்பதைப் பார்த்து சன்னலை உடைத்து செக்யூரிட்டி 3 பேர் உதவியுடன் காரில் ஏற்றி தனியார் மருத்துவமனைக்குச் சென்றுள்ளார். ஏற்கனவே மாணவன் இறந்து விட்டதாக டாக்டர் சொல்ல அரசு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு சடலக்கூறாய்வு செய்யப்பட்டது.

## பள்ளி மாணவியைப் பாலியல் பலாத்காரம் செய்த சம்பவம்

காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் தாலுகா, விட்லாபுரம் அஞ்சல் முத்து மாரியம்மன் கோவில் தெரு எனும் முகவரியில் வசிக்கும் சுமதி என்பவரின் மகள் ஆர்த்தி (11) என்பவர் அதே கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் 6ம் வகுப்பு படித்து வந்துள்ளார். 18.10.2010 அன்று வகுப்பு ஆசிரியர் தண்ணீர் கொண்டு வரும்படி ஆர்த்தியிடம் கூறியுள்ளார். பள்ளியின் அருகே உள்ள அவரது வீட்டில் தண்ணீர் கொண்டு வரச் சென்ற ஆர்த்தியை, குமார் என்பவர் வாயைப் பொத்தி வீட்டிற்குள் அழைத்துச் சென்று பாலியல் பலாத்காரம் செய்துள்ளார். இச்சம்பவம் தொடர்பாகக் காவல் துறையினர் வழக்குப் பதிவு செய்து பாதிப்பு ஏற்படுத்தியவரை கைது செய்துள்ளனர். வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

## +2 மாணவி மதிவதனி தற்கொலை

வேலூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், புதூர் கிராமத்தைச் சேர்ந்தவர் விஸ்வநாதன், இவரது மகள் மதிவதனி, இவர் இதே பகுதியில் அமைந்துள்ள வாணி மெட்ரிகுலேசன் பள்ளியில் +2 படித்து வந்தார். இவர் நன்றாகப் படிக்கும் மாணவி. கடந்த 10ம் வகுப்பில் 469 மதிப்பெண்கள் பெற்றிருந்தாள். +2வில் அந்த அளவிற்கு மதிப்பெண் எடுக்கமுடியாது என்பதால் பள்ளிக்குப் போக மறுத்துள்ளாள். இந்நிலையில் கடந்த 13.10.2010 அன்று மாலை சிறப்பு வகுப்பு நடந்து கொண்டிருக்கும்போது பாத்ரூமுக்குப் போவதாகக் கூறிவிட்டு வெளியே சென்ற மதிவதனி மூன்றாவது மாடியிலிருந்து கீழே குதித்துத் தற்கொலை செய்து கொள்ள முயன்றுள்ளார். குதித்தில் காலெல்லாம் நொறுங்கிப் போயுள்ளது. பள்ளி முதல்வர் மற்றும் ஆசிரியர்கள் உடனே மருத்துவமனைக்கு வேனில் கொண்டு சென்றுள்ளார்கள். ஆனால் வேலூர் சி.எம்.சி. மருத்துவமனைக்குப் போகும் முன்னே மாணவி இறந்துள்ளார். இது குறித்து வாணியம்பாடி கிராமியக் காவல் நிலையத்தில் குற்ற எண் 608/10, பிரிவு 174 குற்றவியல் நடைமுறைச்சட்டத்தின் கீழ் 13.10.2010யின் உரிமைகள் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து மக்கள் கண்காணிப்பகம் சார்பாக தேசிய குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் நடத்திய பொது விசாரணைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. அதில் இவ்வழக்கை மறுவிசாரணை செய்ய பரிந்துரைக்கப்பட்டுள்ளது..

## பள்ளி மாணவன் விஷம் குடித்துத் தற்கொலை

தர்மபுரி மாவட்டம், பாலக்கோடு தாலுகா, காரிமங்கலம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட முக்குளம் கிராமத்தைச் சேர்ந்த சிவலிங்கம் மகன் ஜலபதி காரிமங்கலம் அரசு மேல் நிலைப்பள்ளியில் 7 ஆம் வகுப்பு படித்து வந்துள்ளான். இந்நிலையில் 5.12.2010 அன்று ஜலபதி பள்ளித்தேர்வில் குறைந்த மதிப்பெண் பெற்று இருந்ததினால் பெற்றோர்கள் திட்டியுள்ளனர். இதனால் மனம் வெறுத்து வீட்டில் இருந்த பூச்சிக்கொல்லி மருந்து குடித்து இறந்து உள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

## பள்ளியில் கழிப்பிட வசதியில்லாததால் மாணவ மாணவிகளைத் தண்ணீர் குடிக்கத் தடை விதித்த ஆசிரியர்கள்

திருப்பூர் மாவட்டம், பொங்கலூர் தாலுகா, பெருந்தமுவு பஞ்சாயத்தில் உள்ள பெருந்தொமுவு கிராமப் பள்ளியில் மாணவ மாணவிகள் மற்றும் ஆசிரியர்கள் இயற்கை உபாதைகளைக் கழிப்பதற்குக் கழிப்பிட வசதி இல்லை. அதனால் மாணவ மாணவிகள் அடிக் கடி கழிப்பிடம் செல்ல வேண்டிய காரணம் இருக்கும் என்பதால் மாணவர்களிடம் இனி யாரும் தண்ணீர் குடிக்கக்கூடாது என்று ஆசிரியர்கள் கூறியதால் மாணவ மாணவிகள் மிகவும் உடல் உபாதை ஏற்பட்டு துன்பத்திற்கு ஆளாகியிருக்கின்றனர். மேற்கண்ட சம்பவத் தைத் தொடர்ந்து மாணவர்கள் பொது நல அமைப்புகளோடு இணைந்து மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட கல்வித்துறை அதிகாரிகளிடம் புகார் மனு அளித்து முறையிட்டுள்ளனர்.

## ஆசிரியர்கள் பள்ளிக்கு வராமல் மாணவர்கள் தவிப்பு

திருநெல்வேலி மாவட்டம், நான்குனேரி தாலுகா, மூன்றடைப்பு அருகே உள்ள கிராமம் வாகைக்குளம். இக்கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி உள்ளது. இப்பள்ளியில் தலைமை ஆசிரியை மற்றும் வகுப்பாசிரியை லிசி மற்றும் இடைநிலை ஆசிரியர் செல்வம் ஆகியோர் சொந்த விருப்பத்தின் காரணமாக இருவரும் ஒரே நேரத்தில் விடுப்பு எடுத்திருக்கின்றனர். அவர்களுக்கு விடுப்பு வழங்கிய கல்வித்துறை அதிகாரிகள் மாற்று ஆசிரியரை ஏற்பாடு செய்யவில்லை. இதனால் மாணவ மாணவிகள் ஆசிரியர் இன்றி 18.10.2010, 19.10.2010 ஆகிய இரு நாட்களும் தவித்துள்ளனர். உடனே கிராமத்தைச் சேர்ந்தவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மனு கொடுத்திருக்கின்றனர். உடனே கல்வித் துறை அதிகாரிகள் 12.10.2010 அன்று கிராமத்திற்குச் சென்று பள்ளியைப் பார்வையிட்டுக் கொண்டு இருக்கும்போது கிராம மக்கள் அவரைச் சூழ்ந்து பள்ளியைவிட்டு வெளியே செல்ல விடாமல் தடுத்துள்ளனர்

## மாணவியைப் பள்ளியை விட்டு நீக்கிய சம்பவம்

நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தைச் சேர்ந்த, அந்தோனி செபாஸ்டின் என்பவரது மகள் ஷீபா தூய இருதய ஆண்டவர் மேல்நிலைப்பள்ளியில் 9ஆம் வகுப்பு பயின்று வந்துள்ளார். அப்பள்ளியில் உடற்கல்வி ஆசிரியராகப் பணிபுரிந்து வரும் சாம்சன் என்பவர் மாணவி ஷீபாவை உடலைத் தொட்டுப் பேசுவது, தகாத வார்த்தைகளைப் பேசுவது போன்ற தொந்தரவு களைச் செய்து வந்துள்ளார். இது தொடர்பாகப் பெற்றோர்களும் பள்ளி நிர்வாத்திடம் நேரில் சென்று புகார் அளித்துள்ளனர். பள்ளித் தலைமை ஆசிரியர் மற்றும் நிர்வாகத்தினர் விசாரிப்பதாகக் கூறி இது போன்ற தவறுகள் இனி நடக்காது என மாணவியிடமும் கூறியதோடு பின்னர் மாணவி மற்றும் பெற்றோரைச் சமாதானப்படுத்தி வீட்டிற்கு அனுப்பியுள்ளனர். பின்னர் மறுநாள் அவருக்கோ அவர் குடும்பத்துக்கோ எந்தவித தகவலும் தெரிவிக்காமல் மாணவி ஷீபாவை பள்ளியை விட்டு நீக்கியுள்ளனர்.

## அடிப்படை வசதியில்லாமல் அரசு கல்லூரியின் அவலம்

தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் தாலுகா, பாப்பாரப்பட்டி அரசுக் கலைக் கல்லூரியில் 2010ம் வருடம் அவசர அவசரமாக திமுக ஆட்சியில் பெண்ணாகரம் இடைத் தேர்தலுக்குள் புதிய கல்லூரி திறக்கப்பட்டுள்ளது. இக்கல்லூரியில் மொத்தம் 167 மாணவர்கள் பி.ஏ (தமிழ்) 65 பேர், பி.காம் 60 பேர், பி.காம் (கம்ப்யூட்டர் சயின்ஸ்) 42 பேர் அடங்குவர். இக்கல்லூரியில் எவ்வித அடிப்படை வசதியும் இல்லை. குறிப்பாக கழிப்பறை மற்றும் குடிநீர் பிரச்சினை அதிகமாக உள்ளது. 3 வகுப்பறை மட்டும் உள்ளது. விரிவுரையாளர்கள் குறைபாடு உள்ளது. பி.காம் (கம்ப்யூட்டர் சயின்ஸ்) பிரிவில் கம்ப்யூட்டர் சாதனமே இல்லை. மக்கள் கண்காணிப்பகத்தின் சார்பில் புகார் அனுப்பிய பிறகு ஓரளவுக்குப் பிரச்சினை சரி செய்யப் பட்டுள்ளது. இந்நிலையில் தற்போது இரண்டாம் ஆண்டு சேர்க்கை நடைபெற்று வருகிறது.

## பள்ளிக் கூட மேற்கூரை ஓடு சரிந்து விழுந்ததில் 5 மாணவ மாணவிகள் காயம்

தர்மபுரி மாவட்டம், பாப்பிரெட்டிபட்டி தாலுகா கடத்தூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட தாளநத்தம் என்ற கிராமத்தில் அரசு நடுநிலைப்பள்ளி உள்ளது. இதில் 250 மாணவ மாணவிகள் படித்து வருகின்றனர். பள்ளியில் தலைமை ஆசிரியர் அசோகன் என்பவர் பணிபுரிந்து வருகிறார். இந்த பள்ளியில் உள்ள ஒரு கட்டிடத்தில் மேற்கூரை ஆஸ்பெஸ்டாஸ் அட்டைகளால் மாற்றி ஓடுகளால் வேயப்பட்டு இருந்தது. நேற்று பகல் இந்தக் கட்டிடத்தில் சத்துணவு சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். அப்போது யாரும் எதிர்பாராத வகையில் மேலே வேயப்பட்டு இருந்த ஓடுகள் மளமளவென்று கீழே சரிந்து விழுந்தது. இதில் கீழே அமர்ந்திருந்து சாப்பிட்டுக்கொண்டு இருந்த 5ஆம் வகுப்பு மாணவர்கள் தீபா (11) சுவாதி (10), ஹரிணி மற்றும் அபி, சக்திவேல் படுகாயம் அடைந்தனர். உடனடியாக மாணவர்களை தர்மபுரி அரசு மருத்துவமனையில் சேர்த்துள்ளனர். காவல் நிலையத்தில் வழக்கு ஏதும் பதிவு செய்யப்படவில்லை. பெற்றோர்கள் புகார் தர முன்வரவில்லை.

## குடிநீரில் விஷம் கலந்து மாணவர்கள் வாந்தி, மயக்கம்

தர்மபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி தாலுகா பொம்மிடி அருகிகல் உள்ள ஜாலியூர் கிராமத்தில் சுமார் 350 குடும்ப உறுப்பினர்கள் வசித்து வருகின்றனர். இவர்களின் குடிநீர் தேவைகளுக்கு இருப்பது திறந்தவெளி கிணறு மட்டுமே மற்றும் ஆழ் துளைக் கிணறு மூலம் குடிநீர் மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்குத் கொண்டுவரப்படுகிறது. இதைப் பராமரித்து நீர் ஏற்றுவது சுந்தரம் (56) எனும் *OHT* ஆபரேட்டர் தினமும் காலை 6.00 முதல் 8.00 மணி வரை பொது மக்கள் பயன்பாட்டிற்குத் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பள்ளி மாணவ மாணவிகள் அனைவரும் இந்த நீரைப் பயன்படுத்தி உள்ளனர். 10.00 மணியளவில் அஜித்குமார் என்ற மாணவன் மயங்கிக் கீழே விழுந்துள் ளார். அதைத் தொடர்ந்து 30க்குமேற்பட்ட மாணவி, மாணவர்கள் பாதிக்கப்பட்டோர் 108 மூலம் தர்மபுரி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டுள்ளனர். காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். தாசில்தார், மாவட்ட வருவாய் அலுவலர் நேரில் விசாரணை நடத்தி குடிநீரைப் பரிசோதனைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

## பள்ளி மாணவன் மர்மமான முறையில் இறப்பு

திண்டுக்கல் மாவட்டம், கிழக்கு ஆரோக்கிய மாதா கோவில் தெருவில் வசித்து வரும் ஜோசப், லதா ஆகியோரின் மகன் ஜார்ஜ் கௌதம் (13/11) என்பவர் திண்டுக்கல்லில் உள்ள செயிண்ட் மேரீஸ் மேல்நிலைப்பள்ளியில் 8ம் வகுப்பு படிக்கும் மாணவன் கடந்த 7.8.2010 அன்று இந்த மாணவன் நந்தவனப்பட்டி என்றும் இடத்தில் கல்குவாரியில் மர்மமான முறையில் இறந்து கிடந்தார்.

## ஆசிரியர்களிடையே மோதலால் மாணவர்களின் படிப்பு பாதிப்பு

திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல்-குஜிலியம்பாறை சாலையில் உள்ள கோவிலூர் அருகே கே. இராமலிங்கபுரம் அரசு மேல்நிலைப்பள்ளி இயங்கி வருகிறது. சுமார் 1,200க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் பயின்று வரும் இப்பள்ளியில் சுமார் 10 ஆண்டு காலமாக வி. பாலகிருஷ்ணன் என்பவருக்கும் பி. முனியப்பன் என்பவருக்கும் நடைபெற்ற மோதலால் சமீபத்தில் நடைபெற்ற அரையாண்டு தேர்வின்போது மேல்நிலைக்கல்வி பயிலும் மாணவர்கள் வேதியியல் பாடத்திற்கு ஆசிரியர் வராததால் பதில் தெரியவில்லை என 40 மாணவர்களுக்கு மேல் விடைத்தாளில் எழுதியிருந்தனர். விஷயத்தைக் கேள்விப்பட்ட அப்பகுதி *DYFI* தோழர்கள் மாணவர்களை இணைத்துப் போராட்டம் நடத்தியுள்ளனர்.

## ஐந்து பள்ளி மாணவிகள் ஆசிரியரால் பாலியல் தொந்தரவு

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், மார்க்கம்பட்டி மேல்நிலைப்பளியில் அறிவியல் பாட ஆசிரியரான துரைச்சாமி மாணவ, மாணவிகளிடம் பாடம் நடத்தும்போது மாணவிகளிடம் சிறப்புக் கவனம் செலுத்தியுள்ளார். சக ஆசிரியர்கள் தொடர்பும் சரிவர இல்லை. சில்மிஷம் செய்யும் மாணவிகளிடம் உள்மதிப்பீட்டுத் தேர்வில் கை வைத்து விடுவேன். யாரிடமும் சொல்லக்கூடாது என்று மிரட்டியுள்ளார்.

## மாணவன் ஜெயக்குமார் விஷம் குடித்து சாவு

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டம், விளாம்பட்டியில் உள்ள அரசு கள்ளர் பள்ளியில் கடந்த 13.9.2010ல் அன்று கம்ப்யூட்டரைக் காணவில்லை. ஆனால் 16.10.2010ல் சுமார் 10 கம்ப்யூட்டர் காணவில்லை என்று பள்ளி நிர்வாகி புகார் தந்துள்ளார். சம்மந்தப்பட்ட காவல் அதிகாரி குற்றவாளிகள் பட்டியலில் உள்ள நபரை ஆராயாமல் பள்ளி மாணவன் ஜெயக்குமாரை மீது சந்தேகத்தின் பேரில் விசாரணைக்கு அழைத்துச் சென்று 13.10.2010 அன்று சனிக்கிழமை காலை 10.00 மணி முதல் இரவு 9.00 வரை தனி அறையில் உள்ளே வைத்துள்ளனர். 18.10.2010 அன்று பள்ளிக்குச் சென்று வீடு வந்து சேர்ந்த மாணவன் மனக் கவலையுடன் இருந்து வந்துள்ளான். அன்று இரவு சுமார் 1.00 மணிக்கு அவரது உடலில் மண்ணெண்ணெய் ஊற்றித் தீ வைத்துக்கொண்டார். பின்பு திண்டுக்கல் அரசு மருத்துவ மனைக்குச் சென்று உள் நோயாளியாகச் சிகிச்சை பெற்று சிகிச்சை பலனின்றி 19.10.2010 செவ்வாய்க் கிழமை அன்று இறந்துவிட்டார்.

## அரசு கட்டிக் கொடுத்த பள்ளிக்கூடத்திற்கு அங்கீகாரம் கொடுக்காத நிலை

சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் தாலுகா, எஸ். புதூர் ஊராட்சி ஒன்றியத்தில் அமைந் துள்ளது தேனாம்பட்டி கிராமம். இது சிவகங்கை மாவட்டத்தில் உள்ள மலையடி கிராமமாகும். ஊரிலிருந்து மாவட்ட ஆட்சியர் உள்ள சிவகங்கைக்கு வந்து செல்ல வேண்டுமென்றால் 6 மணி நேரம் பஸ்ஸில் பயணம் செய்து வர வேண்டுமென பலமுறை மனு கொடுத்துள்ளனர். தேனாம்பட்டிக்கு தொடக்கபள்ளி வேண்டும் என்று, சட்டமன்ற உறுப்பினரும் தமிழக அமைச் சருமான பெரியகருப்பனிடம் நேரில் சென்று வலியுறுத்தி உள்ளனர். 5 வருடத்திற்கு முன் பள்ளிக்கு அனுமதி கிடைக்காத நிலையில் ஆர்.எஸ்.வி.ஒய் திட்டத்தில் பள்ளிக்கூட கட்டிடம் 3.25 லட்சம் ரூபாய்க்கு கட்டிடம் கட்டப்பட்டது. ஆனால் ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை.

# கண்டறிந்தவைகள்

## வகுப்பறை வன்முறைகள்

1) இலவசக் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009ன் படி அரசு நிதி உதவி பெறும் பள்ளிகள் மற்றும் நிதி பெறாத பள்ளிகளில் ஆசிரியர்கள், மாணவர்களின் விகிதாச்சாரம் மேற்படி சட்டத்தில் கூறப்பட்டுள்ளதை விட மிகக் குறைவாகவே ஆசிரியர்களின் எண்ணிக்கை இருக்கிறது என்பது தெரிய வருகிறது. அதிலும் அரசு ஆதி திராவிடர் உண்டு உறைவிடப் பள்ளிகளில் பெரும்பாலும் மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை என்பது கண்டறியப்படுகிறது.

2) அரசு ஆதி திராவிடர் நலப் பள்ளிகளில் 5 வகுப்புக்கும் சேர்த்து ஒரு ஆசிரியர் பணியாற்றுவதும் சில நேரங்களில் அங்குள்ள படித்த இளைஞர்களை வைத்து மாணவர்களுக்குப் பாடம் நடத்தி வருவதும் தெரிய வருகிறது. உதாரணமாக வேலூர் மாவட்டட்தில் உள்ள ஜவ்வாது மலையில் உள்ள அரசு ஆரம்பப் பள்ளியில் இப்போக்கு நிலவுகிறது. அந்த மலையில் உள்ள மற்ற அரசு ஆரம்பப் பள்ளிகளிலும் ஆசிரியர்கள் தினசரி வருவதற்குச் சுணக்கம் காட்டுகிறார்கள் என்றும் அறிய வருகிறது.

3) நீதிபதி கோவிந்தராஜன் மற்றும் நீதிபதி ரவிராஜபாண்டியன் ஆகியோரின் தனியார் பள்ளிக் கல்விக் கட்டண அறிக்கையின் படி தமிழகத்தில் உள்ள பெரும்பாலான தனியார் பள்ளிகள் மேற்குறிப்பிட்டுள்ள அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள கல்விக் கட்டணத்தைப் பெற்றோரிடமிருந்து வசூலிக்காமல் கூடுதல் கல்விக் கட்டணத்தை வசூல் செய்கின்றன. உதாரணமாக மதுரை மேரி ஆன் மெட்ரிக் பள்ளி, டி.வி.எஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி போன்றவை உள்ளன.

4) அரசுப் பள்ளிகள் மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் போதுமான கட்டிட வசதியின்றியும், கழிப்பறை வசதியின்றியும் மற்றும் அடிப்படை சுகாதார வசதியின்றி காணப்படுகின்றன. இது தொடர்பாகக் கடந்த 28, 29 நவம்பர் 2010 ஆகிய தினங்களில் சென்னையில் நடந்த தேசிய குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் நடத்திய பொது விசாரணையில் சுமார் 200 பள்ளிகளில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளின்றி இருந்துள்ளன என்பது அந்த விசாரணை மூலம் தெரிய வருகிறது.

5) மாணவர்களை மற்ற மாணவர்கள் முன்னிலையில் அடித்தும், இழிவுப்படுத்தியும் அவர்களது மாண்புரிமையைக் குலைக்கச் செய்வதன் மூலம் அவர்கள் மன உளைச்சலுக்கு ஆளாகின்றனர். இதனால் ஆசிரியர்கள் திட்டியதால் மாணவர்களுடைய தற்கொலைகள் நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டே வருகின்றன.

6) ஆசிரியர்கள் மாணவர்களை உடல் ரீதியாக துன்புறுத்துவது என்பது தவறானதாகவே கருதப்படாத நிலை சமுதாயத்தில் உள்ளது, மாணவர்களை தண்டிக்கின்ற நோக்கில் பிரம்பால் அடித்தல், மற்ற வகைகளில் சித்திரவதைக்குள்ளாக்குதல் மாணவர்களுடைய உடல் உறுப்புகளையே பாதித்து விடுகிறது. மாணவர்களுடைய கைகள், கால்கள் உடைதல், பார்வை பறிபோதல் போன்ற கொடூர நிகழ்வுகளும் நடந்துள்ளன என்பது கள ஆய்வுகளிலிருந்து கண்டறிய முடிகிறது.

7) கல்வி வியாபாரமாகிவிட்ட இச்சூழலில் மாணவர்களின் கல்வி, எதிர்காலம் மீது அக்கறையற்ற கல்வி நிறுவனங்கள் தான் அதிகரித்துள்ளன. கட்டணத்தை மட்டுமே பிரதானமாகக் கொண்டு இயங்கும் கல்வி நிறுவனங்கள் கட்டணத்திற்காக மாணவர்களை கடுமையாக தண்டிக்கவும் தயங்குவதில்லை.

8) பள்ளி மாணவர்களிடையே சாதிய பாகுபாடு மேலோங்கி இருப்பதை காண முடிகிறது. தாழ்த்தப்பட்ட மாணவர்களை உயர் சாதி மாணவர்கள் இழிவுப்படுத்துவதும், தாக்குவதும், அதை பள்ளி, கல்லூரி நிர்வாகத்தினர் கண்டுக் கொள்ளாத சூழலும் உயர் சாதி மாணவர்களுக்கு ஆதரவாக செயல்படும் சூழலும் காணப்படுகிறது.

9) ஆதி திராவிடர் மாணவர் விடுதிகள் மிக மோசமான நிலையில் உள்ளன. உள் கட்டமைப்பு வசதிகள் ஏதும் அற்ற நிலையிலும், விடுதிகள் சரியான முறையில் பராமரிக்கப்படாமலும் உள்ளன. மாணவர்களுக்கு தரமற்ற உணவுகள் வழங்கப்படுகின்றன, கழிவறை, தண்ணீர் வசதி அற்று உள்ளன. விடுதி காப்பாளர்களின் முறையற்ற அணுகு முறைகளும் மாணவர்களை கட்டாய வேலை வாங்குவது, அடிப்பது போன்ற சம்பவங்களும் காணப்படுகின்றன. மேலும், தலித்மாணவர்கள் விடுதிகளில் மர்மமான முறையில் இறக்கும் சம்வங்கள் அதிகமாக உள்ளன.

10) பள்ளி மாணவிகளிடம் ஆசிரியர்கள் பாலியல் தொந்தரவு சம்பவங்கள் அதிகமாக நடைபெறுகின்றன. மாணவிகள் அச்சம்பவங்களை வெளியில் சொல்லத் தெரியாமலும், வெளியில் சொல்ல அஞ்சுகின்றனர். பாதிப்புக்கும் உள்ளாகின்றனர்.

11) பள்ளி நிர்வாகம் மாணவர்களைப் பராமரிப்பு வேலைகளுக்கு உட்படுத்துவதாலும் நிர்வாகத்தினரின் கவனக் குறைவாலும் மாணவர்கள் நீர் நிலைகளில் மூழ்கி இறக்கும் சம்பவங்களும் நடைபெறுகின்றன.

12) பள்ளி நிர்வாகத்தின் தவறான செயல்பாட்டைக் கண்டித்து மாணவர்கள் கோரிக்கை விடுத்தால் நிர்வாகத்தினர் காவல்துறையினரை வைத்து அடித்து பொய் வழக்கு போடுவதும், ரௌடிகளை வைத்துச் சித்திரவதை செய்து உயிர் மீதான அச்சுறுத்தலை ஏற்படுததுவதுமான நடவடிக்கைகளை செய்கின்றனர்.

# பொதுப் பரிந்துரைகள்:

## கல்விக்கான உரிமைச் சட்டம் 2009

1. கல்வி உரிமைச் சட்டத்தின் படி அரசு நிதி பெறாத தனியார் பள்ளிகள் அருகில் வாழும் வாய்ப்பற்ற, சமூக, பொருளாதார. கலாச்சார ரீதியாகப் புறம் தள்ளப்பட்ட, கல்வியில் இதுவரை ஒதுக்கப்பட்ட, வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழும் குழந்தைகளுக்கு 25சூ பள்ளிச்சேர்க்கையைக் கட்டாயமாக உத்தரவாதப்படுத்த வேண்டும்.

2. அனைத்துப் பள்ளிகளிலும் ஆசிரியர் பள்ளி நேரம் முழுதும் பள்ளியில் இருப்பதும் அதற்கு அப்பால் பின்தங்கிய மாணவர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கவும் கூடுதல் நேரம் செலவிடுவதும் உறுதி செய்யப்பட வேண்டும்.

3. பொதுப் பள்ளி முறையை வலுப்படுத்தும் வகையில் அருகாமைப் பள்ளிகளை அமைத்து இப்பள்ளிகளில் குழந்தைகள் சேர்வதை உத்தரவாதப்படுத்த வேண்டும்.

4. ஆசிரியர் பற்றாக்குறை அனைத்து அரசு, அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளைக் கடுமையாகப் பாதித்துள்ளது. இதனைப்போக்க குறிப்பிட்ட ஆசிரியர்–மாணவர் விகிதம் மட்டுமின்றி, ஒரு வகுப்பிற்குக் குறைந்த பட்சம் ஒரு ஆசிரியர், ஒவ்வொரு பாடத்திற்கும் அதில் தனிப் பயிற்சி பெற்ற ஆசிரியர் நியமனம் செய்யப்பட வேண்டும். எல்லா நிலைகளிலும் இன்று காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்களை முழுமையாக நிரப்ப வேண்டும்.

5. மாணவர் சேர்க்கையின்போது நேர்காணலோ, மற்ற தேர்வு செய்யும் முறைகளோ அனுமதிக்கப்படக் கூடாது.

6. 8ஆம் வகுப்பு வரை மாணவர்கள் இடை நிறுத்தம் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

7. நீதிபதி கோவிந்தராஜன் கமிட்டி அறிவித்துள்ள பள்ளிக் கட்டணத்தைத் தவிர கூடுதல் கட்டணம் வசூலிக்கும் பள்ளிகளை அடையாளம் கண்டுபிடித்து அப்பள்ளியின் அனுமதியை ரத்து செய்ய வேண்டும்.

8. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் அனைவருக்கும் கல்வி என்பது உறுதி செய்யப்பட்டிருந்தும் நம் நாடு சுதந்திரம் பெற்று 64 ஆண்டுகளுக்குப் பின் கல்வி உரிமைச் சட்டம் 2009இல்தான் நிறைவேறியிருக்கிறது. 2010ல்தான் நடைமுறைக்கு வந்திருக்கிறது. சமத்துவ ஜனநாயக சமூகத்திற்கான கல்வியை இச்சட்டம் நிலைபெறச் செய்யும் வாய்ப்பே இல்லையெனினும் முழுமையாக நிறைவேற்றப்பட்டால், அடிப்படைத் தேவைகள் பல லட்சக்கணக்கான குழந்தைகளுக்குக் கிடைக்கும் சாத்தியக் கூறு உள்ளது.

## வகுப்பறை வன்முறை - சட்டரீதியான பரிந்துரைகள்:

9. ஒவ்வொரு மாணாக்கரும் ஆசிரியரின் சித்திரவதையின் காரணமாகத் தற்கொலை செய்ய நேரிடும்போது அவ்வழக்கை தற்கொலை வழக்காகக் காவல்துறை பதிவு செய்கிறது. ஆனால் அது 'தற்கொலைக்கு தூண்டிய' வழக்காகப் பதிவு செய்யப்பட வேண்டும். அதற்கு சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனத்தின் நிர்வாகம் பொறுப்பாக்கப்பட வேண்டும்.

10. ஒரு மாணாக்கர் தற்கொலை செய்து கொள்ள முயல்கிறபோது, அதை சட்டப்படி 'தற்கொலை முயற்சி' வழக்காக எடுத்துக்கொள்ளக் கூடாது. அது குழந்தையை இரண்டு முறை தண்டிப்பதாகிவிடும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

11. ஒரு ஆசிரியர் அல்லது ஆசிரியர்களின் செயலால் ஒரு மாணாக்கர் தற்கொலை செய்து கொண்டால்/பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டால் அந்த மாணாக்கர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு குற்றம் சாட்டப்பட்டவர்(கள்) விசாரணை முடியும் வரையில் பணியிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட வேண்டும்.

12. ஒரு குழந்தை சந்தேகத்திற்குரிய காயங்கள்/உடல் நலக்குறைவுடன் மருத்துவமனையில் சேர்க்கப்படும் போதெல்லாம், மருத்துவமனை அதை மருத்துவ சட்ட வழக்காக பதிவு செய்ய வேண்டும். மேலும் குழந்தையின் வாக்குமூலத்தையும் சேர்த்து பதிவு செய்ய வேண்டும்.

13. விடுதியில் தங்கியிருக்கும் குழந்தைக்கு எப்போது உடல் நலக் குறைவு ஏற்பட்டாலும், அதைக் கண்காணிக்கவும், குழந்தையை எவ்வாறு மருத்துவமனைக்குக் கொண்டு செல்வது என்பது தொடர்பாகவும் (அதற்கான நிதி ஒதுக்கீடு உட்பட) பெற்றோர் பள்ளிக்குச் சென்று குழந்தையை வீட்டுக்கு அழைத்துச் செல்லத் தேவையான போக்குவரத்து செலவை வழங்கவும்உரிய வழிமுறைகளை கல்வித்துறை அல்லது சமூக நல மற்றும் நீதித்துறைஉருவாக்க வேண்டும்.

14. அரசு பள்ளி விடுதிகளில் மாணாக்கருக்கு உடல் நலக் குறைவு ஏற்படும்போது உடனடி மருத்துவ உதவிக்கான உபகரணங்கள் இருப்பதை மாநில அரசு ஒரு குழு அமைத்து கண்காணித்து அதை உறுதி செய்ய வேண்டும்.

15. அரசு பள்ளி விடுதிகளில்/அரசு ஆதி திராவிடர் நலப் பள்ளி விடுதிகளில் மாணாக்கர்களுக்கு வழங்கப்படுகின்ற உணவின் தரத்தை அரசு கண்காணித்து அதை மேம்படுத்த வேண்டும்.

16. தனியார் குழந்தை பராமரிப்பு/கல்வி நிறுவனங்களுக்கு உரிமம் வழங்குவது தொடர்பான நடைமுறைகள் நெறிப்படுத்தப்பட வேண்டும். இந்த தனியார் நிறுவனங்களை முறைப்படுத்தல் மற்றும் கண்காணித்தல் தொடர்பான நடைமுறைகளை உருவாக்க வேண்டும்.

# தேசியக் குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்தின் பரிந்துரைகள்

1. பள்ளியில் சேர்க்கப்படும் குழந்தைகளின் நலன்களுக்கு சம்மந்தப்பட்ட கல்வி நிறுவனமே (பள்ளி/விடுதி/பாலர் இல்லம்) பொறுப்பேற்க வேண்டும். குழந்தைகளுக்குக் காயமோ/உடல் நலக் குறைவோ/மரணமோ நிகழுமானால் அதற்குக் காவல் நிலையத்திலோ சிறையிலோ கைதிகளுக்கு இவ்வாறு நிகழும்போது காவல்துறை பொறுப்பாக்கப்படுவது போல், சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனமே பொறுப்பாக்கப்பட வேண்டும்.
2. கல்வி நிறுவனத்திற்குள் நடைபெறும் எந்த ஒரு சம்பவத்தாலும் ஒரு குழந்தைக்கு மரணமோ/காயமோ ஏற்படுமானால் அல்லது மருத்துவமனையில் சேர்க்கப்பட வேண்டிய நிலை ஏற்படுமானால் அதற்கான செலவை கல்வி நிறுவன நிர்வாகமே ஈடுகட்ட வேண்டும்.
3. குழந்தைகளுக்கு எதிராக நடைபெறக்கூடிய ஒவ்வொரு வன்முறை தொடர்பாகவும் சம்பந்தப்பட்ட கல்வித்துறை/வாரியம் ஓர் இணையான விசாரணையை மேற்கொள்ள வேண்டும். அத்தகைய விசாரணைகளில் பெற்றோர்–ஆசிரியர் கழகங்கள் ஈடுபடுத்தப்பட வேண்டும்.
4. குழந்தைகள் பாலியல் அத்துமீறலுக்கு உட்படுத்தப்படுவது தொடர்பான வழக்குகளில், பெற்றோர் புகாரை விலக்கிக் கொள்வார்களானால், நடந்ததகுற்றத்தை அரசு கவனத்தில் எடுத்துக் கொண்டு, குழந்தைக்கு பாதிப்பு ஏற்படாமல் வழக்கைத் தொடர்ந்து நடத்த வேண்டும். குற்றம் சாட்டப்பட்டவர் மீது கறாரான நடவடிக்கை எடுக்க வேண்டும்.
5. பாகுபாடுகள் காட்டப்படுவதாக ஒரு குழந்தை எப்போது தெரிவித்தாலும், எஸ்.சி/எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு) சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட வேண்டும்.
6. உடல் ரீதியான தண்டனைகள் அளிக்கப்பட்டிருக்குமானால், உடல்ரீதியான தண்டனை தொடர்பாக குழந்தைகளும் பங்கேற்கிற ஒரு சமூகத் தணிக்கையை கல்வித்துறை/வாரியம் நடத்த வேண்டும்.
7. குழந்தைகளின் நலன்களைப் பாதுகாக்க ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள குழந்தை நலக் குழுக்கள் ஆதரிக்கப்பட வேண்டும்.
8. அரசு மாவட்ட வாரியாக குழந்தைத் தொழிலாளர்களை கணக்கெடுக்க வேண்டும். அந்த கணக்கெடுப்பை பஞ்சாயத்துக்கள் மூலம் செய்ய வேண்டும். குழந்தைத் தொழிலாளர்களை அடையாளம் கண்டு கல்வி உரிமைச் சட்டம் 2009–ன் படி அவர்களை அருகாமைப் பள்ளிகளில் சேர்த்து கல்வியை தொடரச் செய்ய வேண்டும். அவர்களுக்கான மறுவாழ்வுக்காகவும் மேம்பாட்டிற்காகவும் சிறப்புத் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும்.
9. அனைத்து பஞ்சாயத்துக்களிலும் உள்ள பள்ளிகளில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் முறையாக செய்யப்பட்டுள்ளதா என பஞ்சாயத்து வாரியாக ஆய்வு மேற்கொண்டு அப்பள்ளிகளுக்கான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை பஞ்சாயத்துகள் மூலம் உத்தரவாதப்படுத்த வேண்டும்.
11. தமிழகத்தில் மாநில குழந்தைகள் உரிமை பாதுகாப்பு ஆணையம் கொண்டு வரப்பட வேண்டும்.

# பல்வகை மீறல்கள்

## குடும்ப அட்டை வழங்குவதில் கால தாமதம்

தர்மபுரி மாவட்டம், திம்மி ரெட்டி,ஹன்சி கிராமத்தை சேர்ந்த தனகோடி மனைவி சித்தம்மாள். கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பு ரேசன் கார்டை தொலைத்து விட்டார். ரேசன் கார்டு இல்லாததால் உணவு பொருள்கள் வாங்க முடியாமல் கஷ்டப்பட்டுள்ளார். அதனால் சித்தம்மாள் மக்கள் கண்காணிப்பகம் மனித உரிமைக்கான குடிமக்கள் இயக்கத்தில் முறையிட்டுள்ளார். அதன் அடிப்படையில் இயக்கம் தலையிட்டு உணவு பொருள் வழங்கும் அதிகாரியைச் சந்தித்து ரேசன் கார்டு வாங்கி கொடுக்கப்பட்டுள்ளது.

## குமுதம் ரிப்போர்ட்டர் நிருபர் மீது வன்முறை

சேலம் மாவட்டம், சத்துவாச்சேரி வட்டம், பகுதி 2 -ல் வசித்து வரும் கெஜராஜ் அவர்கள் குமுதம் ரிப்போர்ட்டரில் நிருபராக உள்ளார்.திருவண்ணாமலை, ஆந்திரம் மற்றும் கர்நாடக செய்திகளைச் சேகரித்து எழுதி வரும் பணியைக் குமுதம் ரிப்போர்ட்டர் பக்கம் 34-35-ல் நிழல் மனிதர்களின் அட்டகாசம், அதிகாரிகள் அதிரடி மாற்றம் என்ற தலைப்பில் கட்டுரை எழுதியுள்ளார். இந்த செய்தியை பார்த்த கட்ட பஞ்சாயத்துச் செய்தவர்களுக்கு தொழில் செய்ய முடியாமல் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இதற்கு ஜெகராஜ் தான் காரணம் என நினைத்து எதிரிகள் ஆத்திரமடைந்து கெஜராஜனைக் கொலை செய்ய முயன்றுள்ளனர். நடைப்பயிற்சிக்கு போகும் போதும், காரில் செல்லும் போதும் மர்மமனிதர்கள் பின் தொடர்ந்து மிரட்டியுள்ளனர். லாரியைக் கொண்டு ஏற்றியும் கொலை செய்ய முயன்றுள்ளனர். இதனால் கெஜராஜன் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் தமிழக முதலமைச்சர் ஆகியோர்களுக்குப் புகார் மனு கொடுத்துள்ளார். உண்மையை வெளிக்கொணர்ந்த பத்திரிக்கையாளருக்கு உயிர் மீதான அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளனர் ஊழல்வாதிகள்.

## பாதிக்கப்பட்டவரின் மனைவி கொடுத்த புகாரை வாங்க மறுத்த போலீசார்

இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம், பொன்ராஜ் என்பவர் மகாசக்தி மாரியம்மன் கோவில் திருவிழாவிற்கான வரவு- செலவு கணக்கை கேட்டதால் காண்ட்ராக்டர் தொழில் செய்து வரும் சுந்தரம் அவரது மகன் ரவியை விட்டுக் கொலை வெறித்தாக்குதல் நடத்தியுள்ளார். கொடூரமான தாக்குதலுக்கு உள்ளான பொன்ராஜ், இராமேஸ்வரம் அரசு மருத்துவமனையில் உள் நோயாளியாகச் சிகிச்சை பெற்றுள்ளார். மருத்துவமனை மூலம் தகவல் கிடைக்கப் பெற்றும் இராமேஸ்வரம் கோவில் காவல் துறையினர் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதனால் பாதிக்கப்பட்டவரின் மனைவி நேரடியாக சென்று புகார் கொடுக்க சென்ற போது காவலர்கள் வாங்க மறுத்துள்ளனர்.

## மருத்துவரின் கவனக் குறைவால் தலித் மாணவி பார்வை இழப்பு

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் தாலுகா, முக்கூடல் காவல் சரகம், கலியன் குளம் கிராமத்தில் வசிப்பவர் சிவநாதன். இவர் இந்து பள்ளர் சமூகத்தைச் சேர்ந்தவர். இவரது மூத்த மகள் மாலதி, வயது (6). சிங்கம் பாறையிலுள்ள புனித பவுல் மேல்நிலைப்பள்ளியில் 1 ஆம் வகுப்பு படித்து வந்துள்ளார். பள்ளியில் வைத்து ஒரு நாள் மாலதிக்குத் தலைவலி, காய்ச்சல் வந்துள்ளது. உடனே அவரது தந்தைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு சிவநாதனும் முக்கூடலில் உள்ள அரசு மருத்துவமனையில் மாலதியைச் சேர்த்துள்ளார். மருத்துவர் ஊசி போட்டு மருந்து கொடுத்துள்ளார் பல நாட்கள் ஊசி போட்டு மருந்து வழங்கியுள்ளனர். குணமடையாததால், திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சேர்த்துள்ளனர். அங்கு சிகிச்சை பலனளிக்காமல் மாணவிக்குப் பார்வை இழப்பு ஏற்பட்டுள்ளது. புதிய தமிழகம் கட்சியினர் தவறான மருத்துவ சிகிச்சை செய்த மருத்துவர் மீது நடவடிக்கை எடுக்க கோரி மாவட்ட ஆட்சித்தலைவரிடம் புகார் மனு அளித்துள்ளனர்.

## மருத்துவர்களின் தவறான சிகிச்சையால் இளம் பெண் இறப்பு

திருவாரூர் மாவட்டம், நன்னிலம் தாலுகா, கொட்டூர் கிராமத்தை சேர்ந்தவர்கள் செல்லப்பா மகாலெட்சுமி இவர்களின் மகள் பராசக்திக்கு மூல நோய் இருப்பதால் விநாயகா மிஷன் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உள்நோயாளியாக சேர்த்துள்ளனர். அங்கு பரிசோதித்த மருத்துவர்கள் அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என தெரிவித்ததால் 15.04.2010 அன்று மருத்துவர்கள் ரூ.30,000 கேட்டதற்கு முதலில் ரூ. 10,000 கொடுத்துள்ளனர். 16.04.2010 அன்று ஆபரேஷன் நடந்துள்ளது. மீண்டும் 20.04.2010 அன்று மற்றொரு ஆப்ரேஷன் செய்ய வேண்டும் என்று மருத்துவர்கள் கூறியுள்ளனர். பின்பு அன்று ஒரு நாள் முழுவதும் பராசக்தியைப் பார்க்க யாரையும் அனுமதிக்கவில்லை உறவினர்கள் கேட்டதற்கு பெரிய டாக்டர்கள் வந்து சிகிச்சையளிப்பார்கள் என்று

கூறியுள்ளார்கள். பின்பு உறவினர்கள் மூலம் பராசக்தி இறந்தத் தகவலைத் தெரிவித்து மருத்துவ செலவுகளை வாங்கி கொண்டு பிரேதத்தை பெற்றுக் கொள்ளுமாறு கூறியுள்ளனர். மருத்துவர்களின் கவனக் குறைவாலும் தவறான சிகிச்சையாலும் பராசக்தி இறந்துள்ளார்.

## ஏழைப் பெண்ணின் கிட்னியைத் திருடிய சம்பவம்

கரூர் மாவட்டம், கிருஷ்ணராயாபுரம் வட்டம், வயலூர் ஊராட்சி, பாம்பன்பட்டியைச் சேர்ந்த தங்கவேல் என்பவரின் மனைவி பானுமதி, கர்ப்பபை ஆப்ரேஷனுக்கு மணப்பாறை தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அங்கு அறுவை சிகிச்சையின் போது மருத்துவர்கள்பானுமதியின் அனுமதியில்லாமல் சட்ட விரோதமாகக் கிட்னியைத் திருடியுள்ளனர்.

## மறுமணம் செய்ததற்காக ஊரை விட்டு பெண்ணை ஒதுக்கி வைத்தல்

திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டம், மூவராயம்பாளையம் குணசீலம் மனைவி செல்லத்தாயி முத்துராஜா சாதியைச் சேர்ந்தவர் .இவருடைய முதல் கணவர் ஜெயசீலன் உடல் நலக் குறைவால் இறந்து போனார். இதனால் செல்லத்தாயி குணசீலனை மறுமணம் செய்து கொண்டார். இதனால் கோபம் கொண்ட கிராம மக்கள் செல்லத்தாயியை ஊரை விட்டு ஒதுக்கி வைத்துள்ளனர். இது குறித்து செல்லத்தாயி மாவட்ட அதிகாரிகளிடம் புகார் கொடுத்து எவ்வித நடவடிக்கையும் எடுக்கததால், மதுரை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். அதன்படி வழக்கு நடைபெற்று வருகிறது.

## குழந்தைகளை பிச்சை எடுக்க அனுப்பும் பெற்றோர்கள்

ஈரோடு மாவட்டம், பவானிதாலுகா, லட்சுமி நகர் பகுதிகளில் நாடோடிகளாக வசிக்கும் சமூக மக்கள் வறுமை காரணமாக தங்கள் குழந்தைகளை அப்பகுதிகளில் தினமும் பிச்சை எடுக்க ஒவ்வொரு ஊராக அனுப்புகின்றனர். அவ்வாறு பிச்சை எடுக்கும் மணிமேகலை என்ற பெண் குழந்தை தனக்கு படிக்க விருப்பம் இருப்பதாகவும் ஆனால் அவர்களுக்கு சொந்த வீடுகள் இல்லாததால் அவரது பெற்றோர் அவரைப் பள்ளியில் சேர்க்கவில்லை எனத் தெரிவித்துள்ளார். இன்று ஒவ்வொரு நகரத்திலும் இது போன்ற பிச்சை எடுக்கும் போக்கு அதிகரித்துக் கொண்டே வருகிறது.

## கட்டப்பஞ்சாயத்து செய்து ஊரை விட்டு ஒதுக்கி வைத்தல்

நாகப்பட்டினம் மாவட்டம், ஆலமழை, ஜீவா நகர்ப் பகுதியில் வசித்து வருபவர் டேவிட். இவர் தலித் சமூகத்தை சேர்ந்தவர், டேவிட்டுக்கும், அவருடைய அண்ணன் பக்கிரி சாமிக்கும் இடையே நிலப்பிரச்சினை இருந்து வந்துள்ளது. இப்பிரச்சினையில் ஊர்ப் பஞ்சாயத்து

தலையிட்டு டேவிட் குடும்பத்தார் ஊரில் எந்தக் கடைகளிலும் பொருட்கள் வாங்கக் கூடாது, என்றும் குடிநீர் பிடிக்க தடை, பொது குளங்களில் குளிக்க கூடாது. சமுதாய சடங்குகளில் கலந்து கொள்ளத் தடை என்று பல்வேறு தடைகள் விதித்துச் சித்திரவதை செய்துள்ளனர். மேலும் ரூ. 10,000/- அபராதம் விதித்துள்ளனர். மேலும் கிராமத்தில் உள்ள அனைவருடைய காலிலும் விழுந்து மன்னிப்பு கேட்க வேண்டும் என்று தண்டனை விதித்துள்ளனர்.

## சமூகப் புறக்கணிப்பு செய்து சித்திரவதை

நாகப்பட்டினம் மாவட்டம், திருக்குவளை தாலுகா, சொர்ணகுடி கிராமத்தைச் சேர்ந்தவர் செந்தில்குமார் இவர் இந்து பறையர் சமுதாயத்தைச் சேர்ந்தவர். இவர் மற்றும் இவரது குடும்பத்தினர் கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்துள்ளனர். தற்போது தி.மு.க வில் இருக்கிறார்கள்.இக்கிராமத்திலுள்ள பலர் அ.தி.மு.க கட்சிக்கு மாறியுள்ளார்கள். இவர்கள் மற்றவர்களுடன் அதிமுக கட்சிக்கு மாறாததால் இவர்கள் குடும்படுத்தினரை மற்ற குடும்பத்தினர் ஊர் விலக்கம் செய்து தனிமைபடுத்தி வருகிறார்கள். ஊரில் உள்ளவர்கள் பைப்பில் தண்ணீர் பிடிக்க கூடாது என்று தடை விதித்துள்ளனர். சமீபத்தில் இவரது தந்தை எஸ்.ஆர். சுப்பிரமணியம் இறந்த போது ஊரில் உள்ளவர்கள் யாரும் இறுதிச்சடங்கில் கலந்து கொள்ளவில்லை. செந்தில்குமாரின் பெரியப்பா சுப்பிரமணியன் இறப்புக்கு சென்றதனால் அவரையும் ஊர் விலக்கம் செய்து கொடுமைப்படுத்தி வந்துள்ளார்கள். அரசு அதிகாரிகளுக்கு புகார் அனுப்பியும் இது வரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

## சிறுமியை நரபலி கொடுக்க முயற்சி

சேலம் மாவட்ட, ஆத்தூர் தாலுகா, சூலுக்கனூர் கிராமத்தில் உள்ள வசிஷ்ட நதி குறுக்கே நரசிங்கபுரம் இணைப்பு புறவழிச்சாலை மேம்பாலம் கட்டும் பணிகள் நடக்கிறது. இப்பணியில் ஆந்திரா, மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் இரவு பகலாக கட்டுமான பணிகளை செய்து வருகிறார்கள். இந்நிலையில் கடந்த 20.02.2010 அன்று சூலுக்கனூர் கிராமத்தைச் சேர்ந்த அர்ஜீனன் மகள் ரம்யா (12) அந்த பாலம் வழியாக தனியாக சென்றுள்ளார். அப்போது அங்கு கட்டுமான பணி செய்த நபர்கள் சிறுமியை ஏமாற்றி அழைத்து பாலம் கட்டுவதற்கான குழியில் பணம் கிடைக்கிறது இறங்கி எடு என்று கூறவும் கீழே இறங்கிய சிறுமியை மண்ணைக் கொட்டி உயிரோடு மூட முயற்சித்திருக்கிறார்கள். அப்போது சிறுமி ரம்யா கத்தியிருக்கிறார். அலறல் சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் ஒடிவந்து சிறுமி ரம்யாவைக் காப்பாற்றியிருக்கிறார்கள். அதே போல் மாதேஸ்வரன் என்ற முதியவரையும் நரபலி கொடுக்க முயற்சித்திருக்கிறார்கள். இது குறித்து காவல்துறையில் புகார் கொடுத்தும் இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

## கம்யூனிஸ்ட் கிளைச் செயலாளர் வெட்டிக்கொலை

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம் பள்ளிப்பாளையம் அக்ரகாரம் தெருவைச் சேர்ந்தவர் வேலுச்சாமி. இவர் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பள்ளிப்பாளையம் கிளைச் செயலாளராக உள்ளார். பள்ளிப்பாளையம் பகுதியில் தள்ளுவண்டிகாரர்களுக்கும் கூலித் தொழிலாளர்களுக்கும் ஏழைத்தறி தொழிலாளர்களுக்கும் கந்து வட்டிக்கு பணம் கொடுப்பார்கள். வட்டியை ஒழுங்காக கட்டாதவர்களிடம் மீட்டர் வட்டி போட்டு வசூலிப்பார்கள். மேலும் ரவுடிகளை வைத்து மிரட்டுவார்கள் இவ்வாறு கந்துவட்டிகாரர்களிடமும் ரவுடிகளிடமும் மாட்டிக் கொண்ட ராஜா, வெங்கடஷ், சுரேஷ், மீசை என்ற மணி ஆகியோர் சி.பி.எம். கிளைச் செயலாளர் வேலுச்சாமி அவர்களின் துணையோடு பள்ளிப்பாளையம் காவல் நிலையத்தில் புகார் செய்துள்ளனர். எனவே பள்ளிப்பாளையம் காவல் துறையினரும் கடந்த 08.04.2010 அன்று சரவணன், முருகேசன், செல்வன் ஆகியோரைக் கைது செய்துள்ளனர். இதனால் ஆத்திரமடைந்த கந்து வட்டி கும்பல் வேலுச்சாமி மீது வன்மம் கொண்டுள்ளனர். அதே போல் ஷகீலா என்ற பெண்மணி சிவகுமார் என்ற கந்து வட்டிக்காரரிடம் பணம் வாங்கியுள்ளார். அதனால் அவரது மகளை கடத்திச் சென்று பாலியல் பலாத்காரம் செய்து புளுபிலிம் எடுத்துள்ளார். மேற்கண்ட சம்பவம் சன் டி.வி. நிஜம் நிகழ்ச்சியில் வெளிவர வேலுச்சாமி காரணமாக இருந்துள்ளார். இதனால் ஆத்திரமடைந்த ரவுடி கும்பல் 11.03.2010 அன்று வேலுச்சாமிகாவல் நிலையத்தில் புகார் செய்து விட்டு வீடு திரும்பும் போது புதன் சந்தை அருகே வழி மறித்து படுகொலை செய்துள்ளனர்.

## பிள்ளைகள் கவனிக்காத தந்தை தற்கொலை

விருதுநகர் மாவட்டம். ராஜபாளையம் நகர், பேட்டை ராமசாமி ராஜா தெருவில் வசிப்பவர் சண்முகத்தாய் இவரது கணவர் தங்கவேலு. இவர் ஏகாலி சாதியைச் சேர்ந்தவர் .சண்முகத்தாய்க்கும் தங்கவேலுக்கும் கருத்து வேறுபாடு காரணமாகத் தங்கவேலு தனது மகன் குமாருடன் திருநெல்வேலி மாவட்டம் புண்ணையாபுரத்தில் வசித்து வந்துள்ளார். இந்நிலையில் திடீரென தங்கவேலுக்கு உடல் நிலை சரியில்லாததால் அவரது மகனும், மருமகளும் இராஜபாளையம் மருத்துவமனையில் உள் நோயாளியாகச் சேர்த்துள்ளனர். அதன் பின்பு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் தந்தையை பார்க்க யாரும் செல்லவில்லை. இதனால் மனமுடைந்த தங்கவேலு தன்னை யாருமே பார்க்க வரவில்லை என்று மருத்துவமனைக்கு வெளியே ரோட்டில் சென்று கொண்டிருந்த லாரி முன் விழுந்து தற்கொலை செய்துள்ளார். காவல் துறையும் மூன்று நாள்கள் பிரேதத்தை மருத்துவமனையில் வைத்திருந்தும் யாரும் வாங்க வராததால் அனாதை பிணம் என்று வழக்கு பதிவு செய்து புதைத்துள்ளனர்.

## மீனவக் குடும்பத்தினரைச் சமூகப்புறக்கணிப்பு செய்து சித்திரவதை

நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி தாலுகா, மருதம்பள்ளம் சின்னக்குடி வடக்குத்தெருவில் வசிப்பவர் பொன்னுச்சாமி இவர் இந்து மீனவர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் அதே கிராமத்தைச் சேர்ந்த கருப்புராமன் என்பவரது வீட்டில் 18 பவுண் நகை திருட்டு போயுள்ளது இத்திருட்டை பொன்னுசாமி 1 லட்சமும் சரத்குமார் 80,000 அபராதமாக விதித்துள்ளார். மேற்கண்ட அபராத தொகையை கட்டத் தவறியதால் பொன்னுச்சாமி குடும்பத்தினரை ஊர் பஞ்சாயத்தார்கள் சமூக கட்டுபாடு விதித்து விலக்கி வைத்துள்ளனர். கடல் தொழிலுக்கு செல்லக் கூடாது தண்ணீர் பிடிக்கக் கூடாது யாருடனும் பேசக் கூடாது கடைகளில் சாமான்கள் வாங்க கூடாது திருமணம் ஊரில் யாருடனும் பேசினால் ரூ.500 அபராதம் விதிக்கப்படும் என்று கட்டுபாடு விதித்துள்ளனர். பொன்னுச்சாமி காவல் நிலையத்தில் புகார் செய்துள்ளனர். காவல் துறை விசாரிக்கும் போது ஊர் பஞ்சாயத்துக்கள் யாரையும் விலக்கி வைக்கவில்லை. இனிமேல் யாரையும் விலக்கியும் வைக்க மாட்டோம் என்று கூறுயிருக்கின்றன. பின்னர் வீடு சென்றவுடன் மீண்டும் விலக்கி வைத்து கொடுமைபடுத்தியுள்ளனர். மீண்டும் பொறையார் காவல் நிலையத்தில் புகார் செய்ய போயிருக்கிறார் அப்போது புகார் செய்த பொன்னுசாமி மற்றும் அவரது மகன் சரத்குமார் ஆகியோரை கைது செய்து சிறையிவடைத்திருக் கின்றனர்.

## சமூகக் கட்டுபாடு விதித்து தண்டனை

காரைக்கால் மாவட்டம், காரைக்கால் வட்டம், கோட்டூர் காவல் சரகம் காளி குப்பம் காலனித் தெருவை சேர்ந்தவர் பாக்கியம் இவரது கணவர் மாணிக்கவேல் இறந்து விட்டார். கணவர் இன்றி குழந்தைளுடன் தனிமையில் வசித்து வருகிறார். இச்சூழலில் காளிகுப்பம் மூர்த்தி என்பவரது மகள் கல்பனா என்ற 5 வயது சிறுமியை பாக்கியம் மகன் குமார் பாலியல் பலாத்காரம் செய்ததாக அதே கிராமத்தைச் சேர்ந்த குமார், மூர்த்தி, முருகேசன், செல்வமணி, சுப்பிரமணி குப்புரத்தினம் போன்றோர் குமாரை அடித்துச் சித்திரவதை செய்துள்ளனர். அதே கிராமத்தைச் சேர்ந்த வேலுவின் மகன் சிவலிங்கம் என்பவரது வீட்டில் குமார் மீன்பிடி தொழிலுக்குப் போய் வந்துள்ளார். அப்போது அவரது வீட்டில் நகைகள், தாலி போன்றவைகள் திருடியதாகவும் மேற்கண்ட இரு காரணங்களுக்காகவும் பாக்கியம் குடும்பத்தினரை யாரும் இவர்களோடு பேசக் கூடாது தொழிலுக்கு அழைக்கக்கூடாது. கடைகளில் சாமான்கள் வாங்க கூடாது என கட்டுப்பாடுகள் விதித்துள்ளனர். இதனால் பாதிக்கப்பட்ட பாக்கியம் காவல்துறை, மாவட்ட ஆட்சியர் போன்றவரிடத்தில் புகார் மனு கொடுத்துள்ளார். ஆனால் ஊர் பஞ்சாயத்தார் காளி குப்பம் கிராமத்திற்கு ரூ. 1,50,000 கட்ட வேண்டும் என பாக்கியம் குடும்பத்தினருக்கு அபராதம் விதித்துள்ளனர்.

## அரசு மருத்துவர் அலட்சியத்தால் பிரசவத்தின் போது இளம் பெண் இறப்பு

வேலூர் மாவட்டம், வாணியம்பாடி தாலுகா, காஜாநகர் முதல் தெருவில் வசிப்பவர் அபுபக்கர் இவர் இஸ்லாமிய லப்பை சமூகத்தை சேர்ந்தவர். இவர் யாசின் மசூதியில் காவலராகப் பணி செய்து வருகிறார். இவரது மகன் முகம்மது உசேன். இவர் தனியார் கார் டிரைவராக உள்ளார். இவரது மனைவி வாஜிதா தபசுவை நான்காவது பிரசவத்திற்காக வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் 27.02.2010 காலை 8 மணிக்கு சேர்த்துள்ளர். கணவன் வெளியூரில் இருந்ததால் வாஜிதா பசுவின் தாயார் மற்றும் சகோதரிகள் மருத்துவமனையில் உடனிருந்துள்ளனர். மருத்துவமனையினுள் நர்சுகள் மருந்து வாங்க வேண்டுமென ரூ. 700 வாங்கியுள்ளனர். மதியம் சுமார் 10.05 மணிக்கு ஆண் குழந்தை பிறந்ததாகக் கூறிய பின் குழந்தையைக் காண்பித்து எடை போட்டு கொண்டு சென்று விட்டனர். பின்னர் 2.30 மணிக்கு பெண்கள் உள்ளே சென்று பார்த்துள்ளனர்.அப்போது அதிகம் இரத்தப்போக்கு உள்ளது என வெளியே இருந்தவர்களிடம் தெரிவித்துள்ளனர். பின் மருத்துவர்களும், நர்சுகளும் சிறிது நேரத்தில் சரியாகி விடும் என்று தெரிவித்துள்ளனர். ஆனாலும் தொடர்ந்து இரத்தப்போக்கு அதிகமாகவே இருந்துள்ளது. மருத்துவர்களோ நர்சுகளோ கண்டு கொள்ளவேயில்லை. பின்னர் சுமார் 4.30 மணியளவில் மருத்துவர் வாஜிதாவின் உறவினர்களிடத்தில் இங்கு மருத்துவம் செய்ய முடியாது என வாஜிதாவை அழைத்துச் செல்லுமாறு கூறியுள்ளனர். அதனால் மருத்துவமனை ஊழியர்களுக்கும் வஜிதா தபசு உறவினர்களுக்கும் இடையே வாக்குவாதம் நடந்துள்ளது. வாக்குவாதம் நடந்து கொண்டிருக்கும் போதே வாஜிதா இறந்துள்ளார்.அதனால் மருத்துவமனையில் இருந்து பிணத்தை வாங்க மறுத்து வாஜிதாவின் உறவினர்கள் போராட்டம் நடத்தியிருக்கின்றனர். காவல் துறையினர் மருத்துவமனை ஊழியர்கள் மீது நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்த பிறகு பிணத்தை பெற்று அடக்கம் செய்துள்ளனர்.

## ரேஷன் கடையில் நடந்த முறைகேட்டைத் தட்டிக் கேட்ட மனித உரிமைக் காப்பாளர் மீது கொலை மிரட்டல்

திருச்சி மாவட்டம், பாலக்கரை காவல் நிலையத்திற்கு உட்பட்ட திரு ராமதாஸ் மனித உரிமைக்கான குடிமக்கள் இயக்கத்தின் திருச்சி வட்டார அமைப்பாளராக சமூகப் பணி செய்து வருகிறார். இவர் திருச்சி நகர் பகுதியில் நடைபெறும் மனித உரிமை மீறல்களைக் கண்காணிப்பு செய்வது மற்றும் ரேஷன் கடையில் நடைபெறும் முறைகேடுகளைத் தொடர்ந்து மாவட்ட நிர்வாகத்தின் கவனத்திற்குக் கொண்டு சென்றுள்ளார்.இந்நிலையில் கடந்த 8.1.2011 அன்று காலை 11.00 மணியளவில் (22வது வார்டு) எடத் தெரு எண் 2 ரேசன் கடையில் பொருட்கள் வாங்கும்போது *extra* பொருள் உப்பு வாங்கினால்தான் பொருட்கள் வழங்கப்படும் என எடையாளர் தொந்திமணி, விற்பனையாளர் திருமதி வெண்ணிலா ஆகியோர்

வற்புறுத்துகின்றனர் எனப் பொது மக்கள் புகார் கூறியுள்ளனர்.அதனால் ராமதாஸ் உடனே சம்பவ இடத்திற்குச் சென்று பொது மக்களிடம் பேசிவிட்டு விற்பனையாளரிடம் நியாயம் கேட்டுள்ளார். அவரது கைபேசி மூலம் மாவட்ட வழங்கல் அலுவலரிடம் புகார் தெரிவித்துள்ளார். உடனே மாவட்ட வழங்கல் அலுவலர் விற்பனையாளர் தொந்திமணியிடம் போனைக் கொடுக்கச் சொல்ல தொந்தி மணி அதிகாரியிடம் பேசியுள்ளார். அந்த கோபத்தில் ராமதாஸை விற்பனையாளர்கள் மிகவும் ஆபாசமாகத் திட்டியும், அரிசி மூடைத் தூக்கும் கம்பியால் குத்தி விடுவதாகவும் மிரட்டியுள்ளனர். இது குறித்து மாவட்ட ஆட்சியருக்கு 10.1.2011 அன்று ராமதாஸ் புகார் கொடுத்துள்ளார்.அதன் அடிப்படையில் எடையாளர் தொந்திமணி பணியில் இருந்து நிறுத்தப்பட்டுள்ளார். விற்பனையாளர் வெண்ணிலா வேறு இடத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு உள்ளார்

## கொடுத்த கடனைத் திருப்பிக் கேட்டதால் பெண்ணைக் குடும்பத்துடன் ஊரை விட்டுஒதுக்கி வைத்த சம்பவம்

இராமநாதபுரம் தேவிபட்டினம் வடக்குத் தெரு உலகநாதன் மனைவி குப்பம்மாள் அதே ஊரைச் சேர்ந்த மாரிமுத்து மகன் ரெத்தினம் என்பவருக்கு மீன்பிடி வலை வாங்கக் கொடுத்த கடனைத் திருப்பிக் கேட்டுள்ளார். அதற்கு ரெத்தினம் வாங்கிய கடனைத் தரமுடியாது எனக் கூறியும், ஊர் முக்கியஸ்தர்களில் சில கட்டப் பஞ்சாயத்துப் பேர்வழிகள் ஒன்று சேர்ந்து குப்பம்மாளை அடித்துச் சித்திரவதை செய்துள்ளனர். பாதிக்கப்பட்ட குப்பம்மாள் தேவி பட்டிணம் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவும், ஆத்திரமடைந்த கட்டப்பஞ்சாயத்துப் பேர்வழிகள் குப்பம்மாள் மற்றும் அவரது குடும்பத்தை ஊரை விட்டு ஒதுக்கி வைத்தும், ஊர் மக்கள் பேசக் கூடாது, கடைகளில் பொருட்கள் வழங்கத் தடை, பொதுக் குழாயில் குடிநீர் பிடிக்கத் தடை போன்ற வகையில் சமூகப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர். மேற்படி சமூகப் புறக்கணிப்பு தொடர்பாகப் பாதிக்கப்பட்ட குப்பம்மாள் இராமநாதபுரம் மாவட்ட மனித உரிமைக்கான குடிமக்கள் இயக்கத்தில் புகார் கூறியதன் விளைவாக மேற்படி இயக்கம் காவல் துறை உள்பட அனைத்து உயர் அதிகாரிகளுக்கும் பாதிக்கப்பட்டவர் மூலம் புகார் அனுப்பியதன் விளைவாக பாதிப்பு ஏற்படுத்தியவர்கள் சமூகப் புறக்கணிப்பைக் கைவிட்டு பின்னர் சமரசம் செய்து கொண்டார்கள்.

## ஜான் ஜேக்கப் எம்.எல்.ஏவைத் தாக்கிய பாரதிய ஜனதாக் கட்சியினர்

கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் சட்ட மன்ற உறுப்பினர் ஜான் ஜேக்கப் (50). ஜான் ஜேக்கப் எம்.எல்.ஏ. 29.11.2010 அன்று காலை 9.30 மணியளவில் மத்திகோடு எல்.எம்.எஸ். மேல்நிலைப் பள்ளி மாணவ மாணவிகளுக்கு தமிழக அரசின் இலவச சைக்கிள் வழங்கும் விழாவில் கலந்து கொண்டும் சுமார் 10.15 மணிக்கு மிடாலம் கானாவூர் பாடசாலையில் தமிழக அரசின் வரும் முன் காப்போம் திட்டத்தைத் துவக்கி வைத்து விட்டு, தேங்காய்ப்

பட்டணம் அரசு மேனிலைப் பள்ளி தமிழக அரசின் இலவச சைக்கிள் வழங்கும் திட்டத்தில் சைக்கிள் வழங்கிவிட்டு தேங்காய்ப் பட்டணம் சந்திப்பில் விழுந்தயம்பலம் வழியாக நாகர்கோவிலுக்குப் புதிய பேருந்து வாகனத்தைக் கொடி அசைத்துத் தொடங்கி வைத்து புதிய பேருந்துக்குப் பின்னர் சுமோ வாகனத்தில் விழுந்தயம்பலம் புனித ஜோசப் மேல்நிலைப் பள்ளி அருகே வரும்போது கீழ்குளம் பேரூராட்சி மன்றத் தலைவர் விசுவநாதன் சுளுளு அமைப்பைச் சார்ந்த மணிகண்டன், கிருஷ்ணமணி ஆயர்விளை தங்கப்பன் மகன் செல்வம் மற்றும் 12க்கும் மேற்பட்டவர்கள் கொடிய ஆயுதங்களுடன் எம்.எல்.ஏவின் காரை வழி மறித்து தடுத்து கெட்ட வார்த்தைகளால் திட்டி அரிவாளால் வெட்ட வந்துள்ளனர். கருங்கல் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் ரமேஷ்குமாரும் *S.I.* சின்ன பீர் முகமதுவும் *MLA* வை க் காப்பாற்றி பாதுகாப்புடன் அழைத்துச் சென்றுள்ளனர். ஆடுஹன் புகாரின் படி பாதிப்பு ஏற்படுத்தியவர்கள் மீது வழக்குப் பதிவு செய்து நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

## இறப்புச் சான்றிதழ் வழங்காத வட்டாச்சியர்

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி தாலுகா, சங்கராபுரம் ஊராட்சி, சங்கம் திடலில் மாற்றுத்திறனாளி அடைக்கன் என்பவர் தாய் தெய்வானையின் இறப்புச் சான்றிதழ் கேட்டுள்ளார். காரைக்குடி வட்டாட்சியர் அலுவலக ஊழியர் அடைக்கனை அலையவிட்டுக் கொடுமைப்படுத்தியுள்ளார். அரசு உதவிக்கு இறப்புச் சான்றிதழ் தேவை என்பதால் கிராம நிர்வாகி வருவாய் ஆய்வாளர் ஆகியோரிடம் கையெழுத்து வாங்கிக் கொடுத்தும் பல தடவை அலட்சியமாக வட்டாட்சியர் இருந்துள்ளார். மக்கள் கண்காணிப்பகம் தலையீட்டின் பேரில் வட்டாட்சியர் இறப்புக் சான்றிதழை அடைக்கன் வீடு தேடி வந்து கொடுத்துள்ளனர்.

## கந்துவட்டிக் கொடுமையால் பெண் தற்கொலை

வேலூர் மாவட்டம், வேலூர் வட்டம், கொணவட்டம் பகுதியைச் சேர்ந்த மும்தாஜ் என்பவர் மஜீத் என்பவரிடம் வட்டிக்குப் பணம் வாங்கியுள்ளார். கந்து வட்டி, மீட்டர் வட்டி என அதிகமாக வட்டி கேட்டு பணத்தைத் திருப்பித் தருமாறு மஜீத் என்பவர் மும்தாஜ் வீட்டிற்குச் சென்று அவமானப்படுத்தி தரக்குறைவாகப் பேசி இழிவுபடுத்தியதால் அவமானம் தாங்காமல் மும்தாஜ் எலி மருந்து சாப்பிட்டு வேலூர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலன் இன்றி இறந்துவிட்டார். மேற்படி நபர் கந்து வட்டிக் கொடுமையால் தற்கொலை செய்து கொண்டார் என வேலூர் கிராமியக் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தும் மேற்படி காவல் நிலையத்தார் 174 *Cr.P.C.* வழக்குப் பதிவு செய்துள்ளனர். இவ்வழக்கு மக்கள் கண்காணிப்பகத்தால் தேசிய மற்றும் மாநில மனித உரிமை ஆணையங்களுக்கு புகார் அனுப்பி வைக்கப்பட்டதில் தேசிய மனித உரிமை ஆணையத்தில் வழக்கு பதிவு *(NHRC : 510/22/10/2011/MC)* செய்யப்பட்டுள்ளது விசாரணை நிலுவையில் உள்ளது.

## தாளாளர் சித்ரவதை தாங்காமல் காவலாளி தற்கொலை

தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் தாலுகா, ஸ்ரீவைகுண்டம், 47/5 மகாதேவர் கோவில் தெருவை சேர்ந்த மாரிமுத்து என்பவரின் மகன் பொன் இசக்கி வயது 51/10, இந்து மறவர் வகுப்பை சார்ந்தவர். இவர் ஸ்ரீகுமரகுருபரர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் இரவு காவலாளியாக பணி புரிந்து வருகின்றார். அப்பள்ளியின் தாளாளர் திரு. சண்முகநாதன் என்பவர் பொன் இசக்கி தாளாளர் வீட்டு வேலைகள் அனைத்தையும் செய்வார். அந்த சமயத்தில் தாளாளர் தான் வளர்க்கும் நாய்களை கூட குளிப்பாட்ட கூறியுள்ளார். மேலும் நாய்கள் சாப்பிட்ட எச்சில் பாத்திரங்களை கூட கழுவி சுத்தம் செய்ய சொல்லியுள்ளார். இந்நிலையில பொன் இசக்கி தாளாரிடம் எனது பிள்ளைகள் காலேஜ்க்கு படிக்க சென்ற பின்பு வீட்டு வேலைக்கு செல்ல மிகவும் சிரமமாக இருப்பதாகவும் இனிமேல் அங்கு வேலைக்கு செல்ல முடியாது என்றும் கூறியதால் தாளாளர் சண்முகநாதன் பொன் இசக்கியை தொடர்ந்து சித்திரவதை செய்ய ஆரம்பித்துள்ளார். இது குறித்து உயர் அதிகாரிகளுக்கு புகார் கொடுத்ததினால் பொன் இசக்கிக்கு விடுப்புக் கொடுப்பது இல்லை. அரசு விடுமுறை கூட கொடுப்பது கிடையாது. கடந்த 29.09.2010 அன்று மாலை வழக்கம் போல் பணிக்குச் சென்றவர் காலை 6.00 மணிக்கு வீட்டிற்கு வராமல் பள்ளியில் தூக்கில் தொங்கி இறந்துள்ளார். அவரது சட்டைப் பாக்கெட்டில் என் சாவிற்கு காரணம் பள்ளி தாளாளாரர்தான் என்று எழுதிவைத்து இறந்துள்ளார். இது குறித்து மக்கள் கண்காணிப்பகம் பாதிக்கப்பட்டவரின் பெயரில் அனைத்து அதிகாரிகள் மற்றும் ஆணையங்களுக்கு புகார்கள் அனுப்பி வைக்கப்பட்டதில் கடந்த 29.09.10 அன்று ஸ்ரீவைகுண்டம் காவல் நிலையட்தில் இறந்து போன பொன் இசக்கியின் மனைவி முத்துப்பேச்சி கொடுத்த புகாரின் அடிப்படையில் குற்ற எண்.319/10 பிரிவு 309 IPC ல் வழக்கு பதிவு செய்யப்பட்டு தாளாளாரர் கைது செய்யப்பட்டுள்ளார்.

# சிறுமி மீதான பாலியல் வன்முறை

தர்மபுரி மாவட்டத்தைச் சேர்ந்த 8 வயது சிறுமி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் 3–ஆம் வகுப்பு பயின்று வந்துள்ளார். 57 வயதான பள்ளித் தலைமை ஆசிரியர் 02.04.2010 அன்று மதிய உணவு இடைவேளையின் போது சிறுமியை அழைத்துச் சென்று வலுக்கட்டாயமாகப் பாலியல் உறவில் ஈடுபட்டுள்ளார். அதனால் சிறுமியின் பிறப்புறுப்பில் காயங்கள் ஏற்பட்டுள்ளன. வலி தாங்க முடியாத சிறுமி பெற்றோரிடம் முறையிட்டுப் பின்னர் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. சிறுமிக்கு மருத்துவ பரிசோதனை செய்து பாலியல் பலாத்காரம் உறுதி செய்யப்பட்டு தலைமை ஆசிரியர் கைது செய்யப்பட்டு சேலம் மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

மக்கள் கண்காணிப்பகம்